பக்கங்கள்

**4. அறிவிப்பு—**

மானியக் கோரிக்கைகள், 2007–2008, முன்மொழிதல் (ஆ.செ.) 74

**5. மானியக் கோரிக்கைகள், 2007–2008, விவாதமும் வாக்கெடுப்பும்—**

(அ) கோரிக்கை எண் 11–எரிசக்தித் துறை
(ஆ) கோரிக்கை எண் 35–பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை } 74–166

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி 74–75, 120–121, 124–128, 131–132, 137, 146

திரு. இரா. விசுவநாதன் 121–138

*திரு. என்.கே.ஆர். சூரியகுமார் 139–144

திரு. து. அமரமூர்த்தி 145–152

*டாக்டர் க. நெடுஞ்செழியன் 152–158

*திரு. ஞா. ஜாண் ஜோசப் 158–162

திரு. தி. இராமசாமி 163–166

**6. அரசினர் தீர்மானம்—**

விதி 32–ஐத் தளர்த்துதல் 166–167

**7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்** 167–168



## ஆளுநரும் அமைச்சரவையும்

### ஆளுநர் – திரு. சுர்ஜித் சிங் பர்னாலா

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்

**1. முதலமைச்சர்** .. **மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:**

பொது, பொது நிருவாகம், இந்திய ஆட்சிப் பணி, இந்தியக் காவல் பணி, ஏனைய அனைத்திந்தியப் பணிகள், இலஞ்ச ஒழிப்பு, மாவட்ட வருவாய் அலுவலர்கள், உள் துறை, காவல், தொழில்கள், தகவல் தொழில் நுட்பவியல், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை, கருப்பஞ்சாற்றுக் கசண்டு, சிறுபான்மையினர் நலன், தமிழ் ஆட்சி மொழி, தமிழ்ப் பண்பாடு, கடவுச் சீட்டுகள் மற்றும் சிறப்பு முயற்சிகள்

**2. நிதி அமைச்சர்** .. **மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:**

நிதி, திட்டமிடல், சட்டமன்றப் பேரவை மற்றும் தேர்தல்கள்

**3. மின்சாரத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:**

மின்சாரம், மரபுசாரா எரிசக்தி மேம்பாடு மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தம்

4. ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:

நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி, ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள், வறுமை ஒழிப்புத் திட்டங்கள், ஊரகக் கடன்கள், நகர்ப் பகுதி மற்றும் ஊரகக் குடிநீர் வழங்கல்

5. புள்ளியியல் மற்றும் முன்னாள் இராணுவத்தினர் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. கோ.சி. மணி:

புள்ளியியல் மற்றும் முன்னாள் இராணுவத்தினர் நலன்

6. வேளாண்மைத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:

வேளாண்மை, வேளாண்மைப் பொறியியல், வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், தோட்டக் கலை, கரும்புத் தீர்வை, கரும்பு மேம்பாடு மற்றும் தரிசு நில மேம்பாடு

7. பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. துரைமுருகன்:

பொதுப் பணிகள், சிறு பாசனம் உள்ளிட்ட பாசனம், செயற்திட்டப் பணிகள், சட்டம் மற்றும் நீதிமன்றங்கள்

8. உயர் கல்வித் துறை அமைச்சர் .. மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:

தொழில்நுட்பக் கல்வி உள்ளிட்ட உயர் கல்வி, மின்னணுவியல், அறிவியல் தொழில்நுட்பவியல், சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள்

தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
227563
சென்னை-600 008
நூலகம்



9. போக்குவரத்துத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. கே.என். நேரு:

போக்குவரத்து, நாட்டுடைமை யாக்கப்பட்ட போக்குவரத்து மற்றும் இயக்கூர்திகள் சட்டம்

10. பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:

பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர் மரபினர் நலன், வெளிநாடுவாழ் இந்தியர்கள், அகதிகள் மற்றும் வெளியேற்றப்பட்டவர்கள், பத்திரப் பதிவு மற்றும் முத்திரைத் தாள் சட்டம்

11. ஊரகத் தொழில் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:

குடிசைத் தொழில்கள் உட்பட ஊரகத் தொழில்கள் மற்றும் சிறு தொழில்கள்

12. வருவாய் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:

வருவாய், மாவட்ட வருவாய்த் துறைப் பணியாளரமைப்பு, துணை ஆட்சியர்கள், சிறைச்சாலைகள், எடைகள்-அளவைகள், கடன் கொடுத்தல் குறித்த சட்டம் உள்ளிட்ட கடன் நிவாரணம், சீட்டு நிதிகள் மற்றும் நிறுவனங்களைப் பதிவு செய்தல்

13. சுற்றுலாத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்:

சுற்றுலா மற்றும் சுற்றுலா வளர்ச்சிக் கழகம்

**14. செய்தித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி:**

செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில்நுட்பவியல் மற்றும் திரைப்படச் சட்டம், எழுதுபொருள் மற்றும் அச்சு, அரசு அச்சகம், நகரமைப்புத் திட்டமிடல், நகர்ப் பகுதி வளர்ச்சி மற்றும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்

**15. உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. எ.வ. வேலு:**

உணவு, நுகர்பொருட்கள் வழங்கல், நுகர்வோர் பாதுகாப்பு, விலைக் கட்டுப்பாடு மற்றும் கூட்டுறவு

**16. வீட்டு வசதி மற்றும் குடிசை மாற்றுத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. சுப. தங்கவேலன்:**

வீட்டு வசதி, ஊரக வீட்டு வசதி மற்றும் வீட்டு வசதி மேம்பாடு, குடிசை மாற்று வாரியம் மற்றும் இட வசதிக் கட்டுப்பாடு

**17. மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:**

மக்கள் நல்வாழ்வு, மருத்துவக் கல்வி மற்றும் குடும்ப நலன்

**18. தொழிலாளர் நலத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன்:**

தொழிலாளர் நலன், மக்கள் தொகை, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி, எஃகுக் கட்டுப்பாடு, செய்தித்தாள் கட்டுப்பாடு, மக்கள் தொகைக் கணக்கெடுப்பு மற்றும் நகர மற்றும் ஊரக வேலைவாய்ப்பு



**19. இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்:**

இந்து சமய மற்றும் அறநிலையங்கள்

**20. கைத்தறித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. என்கேகே.பி. ராஜா:**

கைத்தறி மற்றும் துணித் தொழில்

**21. பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:**

பள்ளிக் கல்வி மற்றும் தொல் பொருளியல்

**22. வணிக வரித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. சி.நா.மீ. உபயதுல்லா:**

வணிக வரிகள்

**23. சுற்றுச்சூழல் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான்:**

விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலன், சுற்றுச்சூழல் மற்றும் மாசுக் கட்டுப்பாடு மற்றும் இஸ்லாமிய அறக்கட்டளைகள் (வக்ஃபு)

**24. வனத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. என். செல்வராஜ்:**

வனங்கள் மற்றும் சின்கோனா

**25. நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்:**

நெடுஞ்சாலைகள் மற்றும் துறைமுகங்கள்

**14. செய்தித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி:**

செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில்நுட்பவியல் மற்றும் திரைப்படச் சட்டம், எழுதுபொருள் மற்றும் அச்சு, அரசு அச்சகம், நகரமைப்புத் திட்டமிடல், நகர்ப் பகுதி வளர்ச்சி மற்றும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்

**15. உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. எ.வ. வேலு:**

உணவு, நுகர்பொருட்கள் வழங்கல், நுகர்வோர் பாதுகாப்பு, விலைக் கட்டுப்பாடு மற்றும் கூட்டுறவு

**16. வீட்டு வசதி மற்றும் குடிசை மாற்றுத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. சுப. தங்கவேலன்:**

வீட்டு வசதி, ஊரக வீட்டு வசதி மற்றும் வீட்டு வசதி மேம்பாடு, குடிசை மாற்று வாரியம் மற்றும் இட வசதிக் கட்டுப்பாடு

**17. மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:**

மக்கள் நல்வாழ்வு, மருத்துவக் கல்வி மற்றும் குடும்ப நலன்

**18. தொழிலாளர் நலத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன்:**

தொழிலாளர் நலன், மக்கள் தொகை, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி, எஃகுக் கட்டுப்பாடு, செய்தித்தாள் கட்டுப்பாடு, மக்கள் தொகைக் கணக்கெடுப்பு மற்றும் நகர மற்றும் ஊரக வேலைவாய்ப்பு



**19. இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்:**

இந்து சமய மற்றும் அறநிலையங்கள்

**20. கைத்தறித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. என்கேகே.பி. ராஜா:**

கைத்தறி மற்றும் துணித் தொழில்

**21. பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:**

பள்ளிக் கல்வி மற்றும் தொல் பொருளியல்

**22. வணிக வரித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. சி.நா.மீ. உபயதுல்லா:**

வணிக வரிகள்

**23. சுற்றுச்சூழல் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான்:**

விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலன், சுற்றுச்சூழல் மற்றும் மாசுக் கட்டுப்பாடு மற்றும் இஸ்லாமிய அறக்கட்டளைகள் (வக்ஃபு)

**24. வனத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. என். செல்வராஜ்:**

வனங்கள் மற்றும் சின்கோனா

**25. நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்:**

நெடுஞ்சாலைகள் மற்றும் துறைமுகங்கள்

**26. சமூக நலத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை:**

மகளிர் மற்றும் குழந்தைகள் நலன் உள்ளிட்ட சமூக நலன், மதிய சத்துணவு, ஊனமுற்றோர் நலன், அனாதை இல்லங்கள் மற்றும் குற்றவாளிகள் சீர்திருத்த நிருவாகம், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம் மற்றும் இரவலர் காப்பு இல்லங்கள்

**27. கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்:**

கால்நடை பராமரிப்பு

**28. ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி:**

ஆதி திராவிடர் நலன், மலைவாழ் பழங்குடியினர் மற்றும் கொத்தடிமைத் தொழிலாளர்கள் நலன்

**29. மீன்வளத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி:**

மீன்வளம் மற்றும் மீன் வளர்ச்சிக் கழகம்

**30. பால் வளத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. உ. மதிவாணன்:**

பால் மற்றும் பால் பண்ணை வளர்ச்சி

**31. கதர்த் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. கா. ராமச்சந்திரன்:**

கதர் கிராமத் தொழில் வாரியம், பூமிதானம் மற்றும் கிராமதானம்



## GOVERNOR AND COUNCIL OF MINISTERS

## GOVERNOR -- THIRU SURJIT SINGH BARNALA

## MEMBERS OF THE COUNCIL OF MINISTERS

**1. Chief Minister** .. **The Hon. Kalaignar M. Karunanidhi:**

Public, General Administration, Indian Administrative Service, Indian Police Service, Other All India Services, Prevention of Corruption, District Revenue Officers, Home, Police, Industries, Information Technology, Prohibition and Excise, Molasses, Minorities Welfare, Tamil Official Language & Tamil Culture, Passports and Special Initiatives

**2. Minister for Finance** .. **The Hon. Prof. K. Anbazhagan:**

Finance, Planning, Legislative Assembly and Elections

**3. Minister for Electricity** .. **The Hon. Thiru Arcot N. Veerasamy:**

Electricity, Non-Conventional Energy Development and Personnel and Administrative Reforms

**4. Minister for Rural Development and Local Administration** .. **The Hon. Thiru M.K. Stalin:**

Municipal Administration, Rural Development, Panchayats and Panchayat Unions, Poverty Alleviation Programmes, Rural Indebtedness, Urban and Rural Water Supply

**5. Minister for Statistics and Ex-Servicemen** .. **The Hon. Thiru Ko.Si. Mani:**

Statistics and Welfare of Ex-Servicemen

6. **Minister for Agriculture** .. **The Hon. Thiru Veerapandi S. Arumugam:**

Agriculture, Agricultural Engineering, Agro Service Co-operatives, Horticulture, Sugarcane Cess, Sugarcane Development and Wasteland Development

7. **Minister for Public Works and Law** .. **The Hon. Thiru Duraimurugan:**

Public Works, Irrigation including Minor Irrigation, Programme Works, Law and Courts

8. **Minister for Higher Education** .. **The Hon. Dr. K. Ponmudi:**

Higher Education including Technical Education, Electronics, Science and Technology, Mines and Minerals

9. **Minister for Transport** .. **The Hon. Thiru K.N. Nehru:**

Transport, Nationalised Transport and Motor Vehicles Act

10. **Minister for Backward Classes** .. **The Hon. Thiru M.R.K. Panneerselvam:**

Backward Classes, Most Backward Classes and Denotified Communities, Indians Overseas, Refugees and Evacuees, Registration and Stamp Act

11. **Minister for Rural Industries** .. **The Hon. Thiru Pongalur N. Palanisamy:**

Rural Industries including Cottage Industries and Small Industries



12. **Minister for Revenue and Prisons** .. **The Hon. Thiru I. Periasamy:**

Revenue, District Revenue Establishment, Deputy Collectors, Prisons, Weights and Measures, Debt Relief including Legislation on Money Lending, Chits and Registration of Companies

13. **Minister for Tourism** .. **The Hon. Thiru N. Suresh Rajan:**

Tourism and Tourism Development Corporation

14. **Minister for Information** .. **The Hon. Thiru Parithi Ellamvazhuthi:**

Information and Publicity, Film Technology and Cinematograph Act, Stationery and Printing, Government Press, Town Planning, Urban Development and Chennai Metropolitan Development Authority

15. **Minister for Food and Co-operation** .. **The Hon. Thiru E.V. Velu:**

Food, Civil Supplies, Consumer Protection, Price Control and Co-operation

16. **Minister for Housing and Slum Clearance** .. **The Hon. Thiru Suba. Thangavelan:**

Housing, Rural Housing, Housing Development, Slum Clearance Board and Accommodation Control

17. **Minister for Health** .. **The Hon. Thiru K.K.S.S.R. Ramachandran:**

Health, Medical Education and Family Welfare

18. **Minister for Labour** .. **The Hon. Thiru T.M. Anbarasan:**

Labour, Population, Employment and Training, Steel Control, Newsprint Control, Census and Urban and Rural Employment

19. **Minister for Hindu Religious and Charitable Endowments** .. **The Hon. Thiru K.R. Periakaruppan:**

Hindu Religious and Charitable Endowments

20. **Minister for Handlooms** .. **The Hon. Thiru NKK. P. Raaja:**

Handlooms and Textiles

21. **Minister for School Education** .. **The Hon. Thiru Thangam Thenarasu:**

School Education and Archaeology

22. **Minister for Commercial Taxes** .. **The Hon. Thiru S.N.M. Upayathulla:**

Commercial Taxes

23. **Minister for Environment** .. **The Hon. Thiru T.P.M. Mohideen Khan:**

Sports and Youth Welfare, Environment and Pollution Control and Wakfs

24. **Minister for Forests** .. **The Hon. Thiru N. Selvaraj:**

Forests and Cinchona



25. **Minister for Highways** .. **The Hon. Thiru M.P. Saminathan:**

Highways and Ports

26. **Minister for Social Welfare** .. **The Hon. Dr. (Tmt.) Poongothai:**

Social Welfare including Women's and Children's Welfare, Nutritious Noon Meal, Welfare of the Disabled, Orphanages and Correctional Administration, Integrated Child Development and Beggar Homes

27. **Minister for Animal Husbandry** .. **The Hon. Tmt. P. Geetha Jeevan:**

Animal Husbandry

28. **Minister for Adi Dravidar Welfare** .. **The Hon. Tmt. A. Tamilarasi:**

Adi Dravidar Welfare, Hill Tribes and Bonded Labour

29. **Minister for Fisheries** .. **The Hon. Thiru K.P.P. Samy:**

Fisheries and Fisheries Development Corporation

30. **Minister for Dairy Development** .. **The Hon. Thiru U. Mathivanan:**

Milk and Dairy Development

31. **Minister for Khadi** .. **The Hon. Thiru K. Ramachandhiran:**

Khadi and Village Industries Board, Bhoodhan and Gramadhan

# பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள் மற்றும் முக்கிய அலுவலர்கள்

## பேரவைத் தலைவர்

மாண்புமிகு திரு. இரா. ஆவுடையப்பன்

## பேரவைத் துணைத் தலைவர்

மாண்புமிகு திரு. வீ.பெ. துரைசாமி

## மாற்றுத் தலைவர்கள் #

திரு. ப. ரங்கநாதன்

திரு. துரை சந்திரசேகரன்

டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்

திரு. தி. வேல்முருகன்

செல்வி கே. பாலபாரதி

திரு. வை. சிவபுண்ணியம்

## செயலாளர்

திரு. மா. செல்வராஜ்

# 26-3-2007 அன்று மாண்புமிகு பேரவைத் தலைவரால் அறிவிக்கப்பட்டவாறு.

திரு. இல. மாரியப்பன், பி.ஏ., பி.ஜி.எல். .. இணைச் செயலாளர் (பதிப்பாளர்)

திரு. வெ.சி. சுப்ரமணியன், எம்.ஏ., பி.எல். .. இணைச் செயலாளர்

திரு. சு. பாலச்சந்தர், பி.ஏ., பி.எல். .. இணைச் செயலாளர்

திரு. நா. நடராஜன், பி.ஏ., பி.ஜி.எல். .. இணைச் செயலாளர் (பதிப்பாளர்)

திரு. கோ. இரவீந்திரன், எம்.ஏ., பி.எல். .. துணைச் செயலாளர்

திரு. தி. உமாபதி, பி.ஏ., பி.ஜி.எல். .. துணைச் செயலாளர் (பதிப்பாளர்)

திரு. தி. கோவிந்தராசு, எம்.ஏ., பி.எட்., பி.எல்., .. துணைச் செயலாளர்

திரு. ஏ.எம்.பி. ஜமாலுதீன், எம்.எஸ்சி., பி.எல். .. துணைச் செயலாளர்

திருமதி இரா. அமிர்தவல்லி, எம்.ஏ., பி.எல். .. துணைச் செயலாளர்

திருமதி கி. இந்திரா, பி.ஏ., பி.ஜி.எல். .. துணைச் செயலாளர்

திருமதி சீ. நிர்மலா, பி.காம். .. துணைச் செயலாளர் (பதிப்பாளர்)

திருமதி ந. மீனாட்சி, எம்.ஏ., பி.ஜி.எல். .. துணைச் செயலாளர்

திருமதி ப. சரசுவதி, எம்.ஏ., பி.ஜி.எல். .. துணைச் செயலாளர்

திரு. மு. பைரவன், எம்.காம்., .. குழு அலுவலர்

திரு. ப. இராமகிருஷ்ணன், எம்.ஏ., பி.ஜி.எல். .. துணைச் செயலாளர் (பதிப்பாளர்)

திரு. கோ. தேவராசன், பி.ஏ. .. குழு அலுவலர்



திருமதி இரா. கஸ்தூரி, பி.ஏ., பி.ஜி.எல். .. குழு அலுவலர்

திருமதி சை.உ. சலீம் உன்னிசா, பி.ஏ. .. சார்புச் செயலாளர்

செல்வி நா. இந்திரா பாய், பி.ஏ., பி.ஜி.எல். .. சார்புச் செயலாளர்

திரு. நா. வீரராகவன், எம்.ஏ., பி.ஜி.டி.சி.ஏ. .. தலைமை நிருபர்

திரு. த.ர. நாகராஜன், எம்.ஏ., பி.எல். .. சார்புச் செயலாளர்

திரு. கோ. சுப்புராம், பி.ஏ. .. சார்புச் செயலாளர்

திரு. மு. கதிரேசன், எம்.ஏ. .. தலைமை நிருபர்

திரு. து. சீனிவாசன், பி.ஏ. .. சார்புச் செயலாளர்

திரு. க. லட்சுமணன், பி.எஸ்சி., பி.எல். .. பேரவைத் தலைவரின் தனிச் செயலர்

திருமதி து. இராஜேஸ்வரி, எம்.ஏ., பி.எட்., பி.ஜி.எல். .. சார்புச் செயலாளர்

திரு. ம. பன்னீர் செல்வம் .. தலைமை நிருபர்

திருமதி இரா. சந்திரா, பி.ஏ., பி.ஜி.எல். .. சார்புச் செயலாளர்

திரு. கி. மாதவன், எம்.ஏ., பி.ஜி.எல். .. தலைமை நிருபர்

திரு. இரா. வெங்கடகிருஷ்ணன், பி.எஸ்சி., பி.எல். .. தலைமை நிருபர்

## பேரவை உறுப்பினர்கள்

### (அகர வரிசைப்படி)

### பெயர்களும் தொகுதிகளும்

| | | |
|---|---|---|
| 1. | அங்கையற்கண்ணி, செல்வி ஆ. | .. சங்கராபுரம் |
| 2. | அப்துல் பாசித், திரு. எச். | .. வாணியம்பாடி |
| 3. | அப்பாவு, திரு. மு. | .. ராதாபுரம் |
| 4. | அமரமூர்த்தி, திரு. து. | .. அரியலூர் |
| 5. | அரி, திரு. கோ. | .. திருத்தணி |
| 6. | அருண்மொழிதேவன், திரு. ஆ. | .. சிதம்பரம் |
| 7. | அருள் அன்பரசு, திரு. | .. சோளிங்கர் |
| 8. | அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், திரு. | .. திருச்செந்தூர் |
| 9. | அன்பரசன், திரு. தா.மோ. | .. ஆலந்தூர் |
| 10. | அன்பழகன், திரு. எம். | .. பழனி (செ.வ.) |
| 11. | அன்பழகன், திரு. கே.பி. | .. பாலக்கோடு |
| 12. | அன்பழகன், பேராசிரியர் க. | .. துறைமுகம் |
| 13. | அன்பில் பெரியசாமி, திரு. | .. திருச்சிராப்பள்ளி–1 |
| 14. | ஆவுடையப்பன், திரு. இரா. | .. அம்பாசமுத்திரம் |
| 15. | ஆறுமுகம், திரு. கி. | .. செங்கல்பட்டு |
| 16. | ஆற்காடு நா. வீராசாமி, திரு. | .. அண்ணா நகர் |
| 17. | இராசசேகரன், திரு. எஸ். | .. ஆலங்குடி |
| 18. | இராணி, திருமதி இரா. | .. உப்பிலியாபுரம் (ஆ.வா.) |
| 19. | இராமகிருஷ்ணன், திரு. நா. | .. கம்பம் |
| 20. | இராமசாமி, திரு. கரி. | .. திருவாடனை |

21. இராமசாமி, திரு. தி. - ஸ்ரீவில்லிபுத்தூர்
22. இராமசுவாமி, திரு. கே.பி. - ராசிபுரம்
23. இராமச்சந்திரன், திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். - சாத்தூர்
24. இராமச்சந்திரன், திரு. டி. - தளி
25. இராமன், டாக்டர் இ.எஸ்.எஸ். - பள்ளிப்பட்டு
26. இராம்பிரபு, திரு. இரா. - பரமக்குடி (செ.வ.)
27. இராஜா, திரு. எஸ்.ஆர். - தாம்பரம்
28. இராஜேந்திரன், திரு. ஆ. - வீரபாண்டி
29. இராஜேந்திரன், திரு. இரா. - பனமரத்துப்பட்டி
30. இராஜேந்திரன், திரு. க. - ஜெயங்கொண்டம்
31. இராஜேந்திரன், திரு. சபா. - நெல்லிக்குப்பம்
32. இராஜ்குமார், திரு. ம. - பெரம்பலூர் (செ.வ.)
33. இளமதி சுப்பிரமணியன், திருமதி - வலங்கைமான் (செ.வ.)
34. இளவரசன், திரு. வீர. - திருமங்கலம்
35. இளவழகன், திரு. கே.எல். - ஆற்காடு
36. உதயசூரியன், திரு. தா. - சின்னசேலம்
37. உதயம் சண்முகம், திரு. - அறந்தாங்கி
38. உபயதுல்லா, திரு. சி.நா.மீ. - தஞ்சாவூர்
39. உலகநாதன், திரு. கே. - திருத்துறைப்பூண்டி (செ.வ.)
40. எதிரொலி மணியன், திரு. கோ. - பெரணமல்லூர்
41. ஐயப்பன், திரு. கோ. - கடலூர்
42. கணபதி, திரு. ந. - வானூர் (செ.வ.)



43. கணேசன், திரு. ஆர்.டி. - தேனி
44. கண்ணப்பன், திரு. மு. - தொண்டாமுத்தூர்
45. கண்ணன், திரு. பெ. - தாரமங்கலம்
46. கண்ணன், திரு. வே. - செஞ்சி
47. கமலாம்பாள், திருமதி பெ. - காஞ்சிபுரம்
48. கருணாநிதி, கலைஞர் மு. - சேப்பாக்கம்
49. கருப்பசாமி, திரு. சொ. - சங்கரநயினார்கோவில் (செ.வ.)
50. கருப்பசாமி பாண்டியன், திரு. வீ. - தென்காசி
51. கலியவரதன், திரு. வீ.ஏ.டி. - முகையூர்
52. கலீலூர் ரஹ்மான், திரு. ம.அ. - அரவக்குறிச்சி
53. கலைராஜன், திரு. வி.பி. - தியாகராய நகர்
54. காந்தி, திரு. ஆர். - இராணிப்பேட்டை
55. காமராஜ், திரு. பெ. - கிருஷ்ணராயபுரம் (செ.வ.)
56. காயத்ரி தேவி, டாக்டர் (திருமதி) கே. - மதுராந்தகம்
57. காவேரி, திரு. வை. - எடப்பாடி
58. கிருஷ்ணமூர்த்தி, திரு. அக்ரி எஸ்.எஸ். - கலசப்பாக்கம்
59. கீதா ஜீவன், திருமதி பி. - தூத்துக்குடி
60. குணசேகரன், திரு. சு. - சிவகங்கை
61. குணசேகரன், திரு. ம. - மானாமதுரை (செ.வ.)
62. குத்தாலம் க. அன்பழகன், திரு. - குத்தாலம்
63. குமரகுரு, திரு. இரா. - திருநாவலூர்

64. குருசாமி, திரு. செ. .. அந்தியூர் (செ.வ.)
65. கோபாலன், திரு. போ. .. உதகமண்டலம்
66. கோபிநாத், திரு. கே. .. ஓசூர்
67. கோவிந்தசாமி, திரு. சி. .. திருப்பூர்
68. கோவை தங்கம், திரு. .. வால்பாறை (செ.வ.)
69. சக்கரபாணி, திரு. அர. .. ஒட்டன்சத்திரம்
70. சங்கரவல்லி என்கிற சங்கரிநாராயணன், திருமதி .. அச்சரப்பாக்கம் (செ.வ.)
71. சண்முகம், திரு. சி.வி. .. திண்டிவனம்
72. சண்முகவேலு, திரு. சி. .. உடுமலைப்பேட்டை
73. சதன் திருமலைக்குமார், டாக்டர் தி. .. வாசுதேவநல்லூர் (செ.வ)
74. சந்திரகாசி, திரு. மா. .. வரகூர் (செ.வ.)
75. சந்திரா, திருமதி மு. .. ராஜபாளையம் (செ.வ.)
76. சாமி, திரு. ஆர். .. மேலூர்
77. சாமி, திரு. கே.பி.பி. .. திருவொற்றியூர்
78. சாமிநாதன், திரு. மு.பெ. .. வெள்ளக்கோவில்
79. சிவசங்கர், திரு. எஸ்.எஸ். .. ஆண்டிமடம்
80. சிவபுண்ணியம், திரு. வை. .. மன்னார்குடி
81. சிவராஜ், திரு. சு. .. ரிஷிவந்தியம்
82. சிவானந்தம், திரு. ஆர். .. ஆரணி
83. சிவாஜி, திரு. இ.ஏ.பி. .. திருவள்ளூர்
84. சின்னசாமி, திரு. அ. .. பேரணாம்பட்டு (செ.வ.)
85. சின்னசாமி, திரு. ஆர். .. சிங்காநல்லூர்



86. சின்னச்சாமி, திரு. செ. .. மருங்காபுரி
87. சின்னதுரை, திரு. கு. .. தலைவாசல் (செ.வ.)
88. சின்னப்பன், திரு. போ. .. விளாத்திகுளம்
89. சின்னராஜ், திரு. ஓ.கே. .. மேட்டுப்பாளையம்
90. சீனிவாசன், திரு. கு. .. பூங்கா நகர்
91. சுதர்சனம், திரு. டி. .. பூந்தமல்லி
92. சுந்தரம், திரு. எம்.ஆர். .. ஆத்தூர்
93. சுந்தரம், திரு. ந. .. காரைக்குடி
94. சுந்தர், திரு. க. .. உத்திரமேரூர்
95. சுப்பிரமணியம், திரு. ஓ. .. பவானிசாகர்
96. சுப்புராம், திரு. ராம. .. திருமயம்
97. சுப்ரமணியன், திரு. ந. .. குளத்தூர் (செ.வ.)
98. சுரேஷ் ராஜன், திரு. என். .. கன்னியாகுமரி
99. சூரியகுமார், திரு. என்.கே.ஆர். .. நாட்ராம்பள்ளி
100. செங்குட்டுவன், திரு. டி. .. கிருஷ்ணகிரி
101. செங்கோட்டையன், திரு. கே.ஏ. .. கோபிசெட்டிப்பாளையம்
102. செந்தமிழன், திரு. ஞா. .. சைதாப்பேட்டை
103. செந்தமிழ்ச்செல்வன், திரு. பா. .. மேல்மலையனூர்
104. செந்தில் பாலாஜி, திரு. வே. .. கரூர்
105. செல்வம், திரு. கு. .. மங்களூர் (செ.வ.)
106. செல்வராஜ், திரு. என். .. முசிறி
107. செல்வராஜ், திரு. து. .. ஸ்ரீவைகுண்டம்
108. செல்வி ராமஜெயம், திருமதி .. புவனகிரி

109. சேகரன், திரு. கூ.ந. - திருவெறும்பூர்
110. சேகர், திரு. எஸ்.வி. - மயிலாப்பூர்
111. சேகர்பாபு, திரு. பி.கே. - டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர்
112. சையது கௌஸ் பாஷா, திரு. சை. - மதுரை மத்தி
113. சௌந்தரபாண்டியன், திரு. அ. - லால்குடி
114. சௌந்திரபாண்டியன், திரு. அ. - குன்னூர் (செ.வ.)
115. ஞானசேகரன், திரு. சி. - வேலூர்
116. ஞானதாஸ், திரு. ஆர். - சிவகாசி
117. டில்லி பாபு, திரு. ப. - அரூர் (செ.வ.)
118. தங்கமணி, திரு. பி. - திருச்செங்கோடு
119. தங்கம் தென்னரசு, திரு. - அருப்புக்கோட்டை
120. தங்கவேலன், திரு. சுப. - கடலாடி
121. தண்டபாணி, திரு. மா. - வேடசந்தூர்
122. தமிழரசி, திருமதி ஆ. - சமயநல்லூர் (செ.வ.)
123. தமிழரசு, திரு. அ. - ஓமலூர்
124. தமிழ்செல்வன், திரு. சி. - ஏற்காடு (ஆவா.)
125. தம்பிதுரை, முனைவர் மு. - பர்கூர்
126. தர்மலிங்கம், திரு. எல்.பி. - சத்தியமங்கலம்
127. தாமோதரன், திரு. செ. - கிணத்துக்கடவு
128. தியோடர் ரெஜினால்டு, திரு. த. - பத்மநாபபுரம்
129. திருநாவுக்கரசு, திரு. கே. - உளுந்தூர்பேட்டை (செ.வ.)
130. துரைக்கண்ணு, திரு. இரா. - பாபநாசம்



131. துரை சந்திரசேகரன், திரு. - திருவையாறு
132. துரைசாமி, திரு. வீ.பெ. - சங்கரி (செ.வ.)
133. துரைமுருகன், திரு. - காட்பாடி
134. துரைராஜ், திரு. சி. - சேடப்பட்டி
135. தேன்மொழி, திருமதி எஸ். - நிலக்கோட்டை (செ.வ.)
136. நன்மாறன், திரு. என். - மதுரை கிழக்கு
137. நெடுஞ்செழியன், டாக்டர் க. - கபிலர்மலை
138. நெடுஞ்செழியன், திரு. ரெ. - புதுக்கோட்டை
139. நேரு, திரு. கே.என். - திருச்சிராப்பள்ளி–2
140. பதர் சயீத், திருமதி - திருவல்லிக்கேணி
141. பத்மாவதி, திருமதி பி. - நன்னிலம் (செ.வ.)
142. பரஞ்ஜோதி, திரு. மு. - ஸ்ரீரங்கம்
143. பரிதி இளம்வழுதி, திரு. - எழும்பூர் (செ.வ.)
144. பலராமன், திரு. பி. - பொன்னேரி (செ.வ.)
145. பழனிசாமி, திரு. ஆர்.எம். - மொடக்குறிச்சி
146. பன்னீர்செல்வம், திரு. எம். - சீர்காழி (செ.வ.)
147. பன்னீர்செல்வம், திரு. எம்.ஆர்.கே. - குறிஞ்சிப்பாடி
148. பன்னீர்செல்வம், திரு. ஓ. - பெரியகுளம்
149. பாண்டுரங்கன், திரு. கு. - அணைக்கட்டு
150. பாபு, திரு. வி.எஸ். - புரசைவாக்கம்
151. பாரதி மோகன், திரு. ஆர்.கே. - திருவிடைமருதூர்
152. பாலபாரதி, செல்வி கே. - திண்டுக்கல்
153. பிச்சாண்டி, திரு. கு. - திருவண்ணாமலை

154. பிரபாவதி, திருமதி பெ. .. தாராபுரம் (செ.வ.)
155. பிரேமா, திருமதி ஆர். .. அவினாசி (செ.வ.)
156. பீட்டர் அல்போன்ஸ், திரு. எஸ். .. கடையநல்லூர்
157. புஷ்பராஜ், திரு. செ. .. கண்டமங்கலம் (செ.வ.)
158. பூங்கோதை, டாக்டர் (திருமதி) .. ஆலங்குளம்
159. பெரியகருப்பன், திரு. கே.ஆர். .. திருப்பத்தூர்
160. பெரியசாமி, திரு. இ. .. ஆத்தூர்
161. பெரியசாமி, திரு. மு.க. .. பூம்புகார்
162. பெரியண்ணன், திரு. பி.என். .. பெண்ணாகரம்
163. பொங்கலூர் நா. பழனிசாமி, திரு. .. கோயம்புத்தூர் கிழக்கு
164. பொள்ளாச்சி வி. ஜெயராமன், திரு. .. பொள்ளாச்சி
165. பொன்முடி, டாக்டர் க. .. விழுப்புரம்
166. பொன்னுசாமி, திரு. கே. .. சேந்தமங்கலம் (ஆ.வா.)
167. பொன்னுதுரை, திரு. செ. .. பெருந்துறை
168. போளூர் ம. வரதன், திரு. .. செங்கம் (செ.வ.)
169. போஸ், திரு. ஏ.கே. .. திருப்பரங்குன்றம்
170. மகேந்திரன், திரு. இ. .. உசிலம்பட்டி
171. மகேந்திரன், திரு. கே. .. பெரம்பூர் (செ.வ.)
172. மகேஷ் கிருஷ்ணசாமி, திரு. த. .. திருவோணம்
173. மணி, திரு. எஸ். .. பொங்கலூர்
174. மணி, திரு. கோ.சி. .. கும்பகோணம்
175. மணி, திரு. ஜி.கே. .. மேட்டூர்
176. மதிவாணன், திரு. உ. .. திருவாரூர் (செ.வ.)



177. மலரவன், திரு. தா. .. கோயம்புத்தூர் மேற்கு
178. மாணிக்கம், திரு. இரா. .. குளித்தலை
179. மாரிமுத்து, திரு. வே. .. நாகப்பட்டினம்
180. மாலைராஜா, திரு. என். .. திருநெல்வேலி
181. முருகவேல், திரு. கே. .. முதுகுளத்தூர்
182. முல்லைவேந்தன், திரு. வ. .. மொரப்பூர்
183. மூர்த்தி, திரு. டி. .. திருப்போரூர் (செ.வ.)
184. மூர்த்தி, திரு. பி. .. சோழவந்தான்
185. மேகநாதன், திரு. த.அ. .. காவேரிப்பட்டினம்
186. மோகன், திரு. பெ. .. ஒட்டப்பிடாரம் (செ.வ.)
187. மைதீன்கான், திரு. டி.பி.எம். .. பாளையங்கோட்டை
188. யசோதா, திருமதி டி. .. ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.)
189. ரங்கநாதன், திரு. ப. .. வில்லிவாக்கம்
190. ரங்கராஜன், திரு. என்.ஆர். .. பட்டுக்கோட்டை
191. ரவிக்குமார், திரு. து. .. காட்டுமன்னார்கோவில் (செ.வ.)
192. ரவிச்சந்திரன், திரு. எல். .. சேலம்—I
193. ராணி வெங்கடேசன், திருமதி .. சாத்தான்குளம்
194. ராதாகிருஷ்ணன், திரு. ல. .. கோவில்பட்டி
195. ராமச்சந்திரன், திரு. கா .. கூடலூர்
196. ராமநாதன், திரு. கே.வீ. .. பவானி
197. ராஜ கண்ணப்பன், திரு. ஆர்.எஸ். .. இளையான்குடி
198. ராஜகுமார், திரு. எஸ். .. மயிலாடுதுறை
199. ராஜசேகரன், திரு. மா. .. தொட்டியம்

| | | |
|---|---|---|
| 200. | ராஜன், திரு. அ. | .. நாகர்கோவில் |
| 201. | ராஜா, திரு. என்கேகே.பி. | .. ஈரோடு |
| 202. | ராஜா, திரு. தி.சு. | .. திருப்பத்தூர் |
| 203. | லெட்சுமணன், திரு. ச. | .. போடிநாயக்கனூர் |
| 204. | லதா, திருமதி ஜி. | .. குடியாத்தம் |
| 205. | லீமா றோஸ், திருமதி ரா. | .. திருவட்டாறு |
| 206. | வசந்தகுமார், திரு. எச். | .. நாங்குநேரி |
| 207. | வரதராஜன், திரு. ரா. | .. விருதுநகர் |
| 208. | விசுவநாதன், திரு. இரா. | .. நத்தம் |
| 209. | விடியல் எஸ். சேகர், திரு. | .. காங்கேயம் |
| 210. | விஜயகாந்த், திரு. | .. விருத்தாசலம் |
| 211. | விஜயகுமார், திரு. கே.எஸ். | .. கும்மிடிப்பூண்டி |
| 212. | விஜயகுமார், திரு. பெ.சு. | .. போளூர் |
| 213. | விஷ்ணுபிரசாத், டாக்டர் எம்.கே. | .. செய்யாறு |
| 214. | வீரகபிலன், திரு. எம்.வி.ஆர். | .. பேராவூரணி |
| 215. | வீரபாண்டி எஸ். ஆறுமுகம், திரு. | .. சேலம்–2 |
| 216. | வேதரத்தினம், திரு. எஸ்.கே. | .. வேதாரண்யம் |
| 217. | வேலு, திரு. எ.வ. | .. தண்டராம்பட்டு |
| 218. | வேலுசாமி, திரு. இல. | .. தருமபுரி |
| 219. | வேலுசாமி, திரு. செ.ம. | .. பல்லடம் |
| 220. | வேலுமணி, திரு. சு.ப. | .. பேரூர் |
| 221. | வேல்துரை, திரு. பா. | .. சேரன்மகாதேவி |
| 222. | வேல்முருகன், திரு. தி. | .. பண்ருட்டி |



| | | |
|---|---|---|
| 223. | வைத்திலிங்கம், திரு. ஆர். | .. ஒரத்தநாடு |
| 224. | ஜாண் ஜேக்கப், திரு. எஸ். | .. கிள்ளியூர் |
| 225. | ஜாண் ஜோசப், திரு. ஞா. | .. விளவங்கோடு |
| 226. | ஜெகன்மூர்த்தி, திரு. மு. | .. அரக்கோணம் (செ.வ.) |
| 227. | ஜெயக்குமார், திரு. டி. | .. இராயபுரம் |
| 228. | ஜெயக்குமார், முனைவர் கு. | .. நாமக்கல் (செ.வ.) |
| 229. | ஜெயபால், திரு. எஸ். | .. குளச்சல் |
| 230. | ஜெயராமன், திரு. எஸ்.பி. | .. வந்தவாசி (செ.வ.) |
| 231. | ஜெயலலிதா, செல்வி ஜெ | .. ஆண்டிப்பட்டி |
| 232. | ஸ்டாலின், திரு. மு.க. | .. ஆயிரம் விளக்கு |
| 233. | ஹசன் அலி, திரு. கு. | .. இராமநாதபுரம் |
| 234. | ஆஸ்கார் சி. நிக்லி, டாக்டர் | .. நியமனம் |
| 235. | (வெற்றிடம்) | .. மதுரை மேற்கு |

**பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்**

| | |
|---|---|
| திரு. இரா. விடுதலை | .. மாநில அரசுத் தலைமை வழக்குரைஞர் |

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## பங்குனி 19, விய – திருவள்ளுவர் ஆண்டு 2038

## 2007 ஏப்ரல் 2, திங்கட்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. இரா. ஆவுடையப்பன்** அவர்கள் தலைமையில் காலை 9–30 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

*"இயற்றலும் ஈட்டலுங் காத்தலுங் காத்த*
*வகுத்தலும் வல்ல தரசு."*

முறையாக நிதி ஆதாரங்களை வகுத்து, அரசாங்கக் கருவூலத்திற்கான வருவாயைப் பெருக்கி, அதைப் பாதுகாத்துத் திட்டமிட்டுச் செலவிடுவதுதான் திறமையான நல்லாட்சிக்கு இலக்கணமாகும்.

## 1. வினாக்கள்—விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள். வினா எண் 1, மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய வேண்டுகோளுக்கிணங்க பின்னர் எடுத்துக்கொள்ளப்படும்.

வினா எண் 2, மாண்புமிகு உறுப்பினர் திரு. வீ.ஏ.டி. கலியவரதன், மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**2—**

### இணைப்புச் சாலை

***2498—திரு. வீ.ஏ.டி. கலியவரதன்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

முகையூர் தொகுதி, ஜம்பை முதல் தேவரடியார் குப்பம் வரை இணைப்புச் சாலை அமைத்திட அரசு நடவடிக்கை எடுக்குமா?

[2007 ஏப்ரல் 2

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

முகையூர் தொகுதி, ஜம்பை முதல் தேவராடியார் குப்பம் வரை இணைப்புச் சாலை அமைத்திட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வீ.ஏ.டி. கலிவரதன்.

**திரு. வீ.ஏ.டி. கலியவரதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கு நன்றி. எனது முகையூர் தொகுதி, ஜம்பை முதல் தேவரடியார் குப்பம் வரை இணைப்புச் சாலையை அமைத்திட அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதைக் கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதற்குத்தான் பதில் சொல்லிவிட்டார்களே! (குறுக்கீடு) மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முகையூர் தொகுதியில் இருக்கக்கூடிய ஜம்பை மற்றும் தேவரடியார் குப்பம் கிராமங்களை இணைக்கும் பிரதானச் சாலை, நெடுஞ்சாலைத் துறையைச் சார்ந்ததாகும். இந்தத் தார்ச் சாலையினுடைய மொத்த நீளம் 4 கிலோ மீட்டர் 300 மீட்டர் ஆகும். இச்சாலையில் மேம்படுத்தக்கூடிய பணியாக, நெடுஞ்சாலைத் துறை மூலமாக ரூபாய் 22 இலட்சம் மதிப்பீட்டில் ஓர் அடுக்கு கருங்கல் ஜல்லி மற்றும் தார்த் தளம் அமைக்கும் பணி எடுத்துக்கொள்ளப்பட்டு, பணி நடைபெற்று வருகிறது. மேற்கண்ட சாலையைத் தவிர, ஒரு கிலோ மீட்டர் 600 மீட்டர் நீளம் உள்ள பிறிதொரு வகைப்படுத்தப்படாத சாலையும் உள்ளது. இந்தச் சாலை தற்போது மண் சாலையாக இருக்கிறது. தற்போது 2007–2008 ஆம் ஆண்டில் ஒன்றியப் பொது நிதியின்மூலம் ரூபாய் 2 இலட்சம் மதிப்பீட்டில் செம்மண் கப்பிச் சாலையாக அதனை மேம்படுத்த ஊராட்சி ஒன்றியத்தின்மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வீ.ஏ.டி. கலியவரதன்.

**திரு. வீ.ஏ.டி. கலியவரதன்:** மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 3, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சின்னசாமி, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.



2007 ஏப்ரல் 2]

3—

## உழவர் சந்தை

***9702—திரு. அ. சின்னசாமி:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பேரணாம்பட்டுத் தொகுதியில் உழவர் சந்தை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) பேரணாம்பட்டுத் தொகுதியில் உழவர் சந்தை அமைக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சின்னசாமி,

**திரு. அ. சின்னசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரணாம்பட்டுத் தொகுதி, பேரணாம்பட்டிலும், அதன் சுற்றுப்புறங்களில் உள்ள நூற்றுக்கணக்கான கிராமங்களிலும் வாழ்கின்ற விவசாயிகள் தாங்கள் விளைவிக்கின்ற பொருட்களை விற்பனை செய்வதற்கு 20 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள குடியாத்தத்திற்கோ அல்லது 30 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள ஆம்பூர் நகரத்திற்கோதான் செல்ல வேண்டிய நிலையில் இருக்கின்றார்கள். ஆகவே, பேரணாம்பட்டு மற்றும் பேரணாம்பட்டின் சுற்றுப் பகுதியிலுள்ள விவசாயிகளுடைய நலனைக் கருதி, பேரணாம்பட்டிலேயே ஓர் உழவர் சந்தையை அமைத்துத் தர அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என்பதைத் தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே இப்போது 103 உழவர் சந்தைகள் சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றன. 50–க்கும் மேற்பட்ட இடங்களிலே புதிய உழவர் சந்தைகள் தேவை என்று கோரிக்கைகள் வரப்பெற்றிருக்கின்றன. அவை அரசினுடைய பரிசீலனையில் இருந்து

வருகின்றன. வேலூர் மாவட்டத்திலே, புதிதாக வேலூர், காகிதப்பட்டறை, காட்பாடி, குடியாத்தம், வாணியம்பாடி, ஆற்காடு, இராணிப்பேட்டை ஆகிய பகுதிகளிலே இப்போது உழவர் சந்தைகள் செயல்பட்டு வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையான, பேரணாம்பட்டிலே ஓர் உழவர் சந்தை வேண்டுமென்பதைப் பற்றி அரசு பரிசீலித்து, உரிய நடவடிக்கை எடுக்கும்.

முற்பகல் 9–35

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. எதிரொலி மணியன்.

**திரு. கோ. எதிரொலி மணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை மாவட்டம், பெரணமல்லூர் சட்டப் பேரவைத் தொகுதிக்குட்பட்ட பகுதியிலே 3 பேரூராட்சிகள் இருக்கின்றன. அதிலே பெரிய பேரூராட்சியாக இருப்பது சேத்துப்பட்டு பேரூராட்சி. கிட்டத்தட்ட 20 ஆயிரம் மக்கள் தொகையுள்ள அந்தப் பேரூராட்சியைச் சுற்றிலும் அதிகமான விவசாயிகள் காய்கறிகளை உற்பத்தி செய்கிறார்கள். எனவே, அங்கு ஓர் உழவர் சந்தையை ஏற்படுத்த வேண்டும் என்று தங்கள் வாயிலாக அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓர் உழவர் சந்தையைத் தொடங்குவதென்றால், அதற்குத் தேவையான காய்கறிகள் வரத்து இருக்க வேண்டும். அது இருக்கிறதா என்று பார்க்க வேண்டியுள்ளது. காய்கறிகள் வந்தால் மட்டும் போதாது; நுகர்வோர்கள் அந்தக் காய்கறிகளை வாங்கக்கூடிய அளவிற்கு அந்தப் பகுதிகளிலே இருக்கிறார்களா என்று பார்த்துத்தான் உழவர் சந்தையைத் தொடங்க வேண்டும். இல்லாவிட்டால் உழவர் சந்தை தொடங்கி, காய்கறிகள் வந்தாலும் விற்பனை ஆகாவிட்டால் அந்த உழவர் சந்தையைச் சிறப்பாகச் செயல்படுத்துவதற்கான வாய்ப்பு இல்லாமல் போய்விடும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன்.

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகளுடைய நலனைப் பாதுகாக்கின்ற வகையில் நம்முடைய தமிழக அரசு உழவர் சந்தைகளை மீண்டும் திறந்து, இன்றைக்கு



நாடெங்கிலும் சிறப்பாகப் பல்வேறு இடங்களில் அவை நடைபெற்று வருகின்றன. ஆனால், 15–க்கும் மேற்பட்ட மாவட்டங்களில் அதிகமாகப் பயிரிடப்படுகின்ற வாழைகளை உழவர்கள் குறிப்பிட்ட நாட்களில் கொண்டு போய் வியாபாரச் சந்தைகளிலோ அல்லது பொதுச் சந்தைகளிலோ விற்றால் மட்டும்தான் அவர்களுக்குப் போதிய விலை கிடைக்கிறது. தமிழக அரசு மிகப் பெரிய அளவில் குளிர்சாதனக் கிடங்குகளை அமைத்துப் போதுமான அளவிற்கு வாழைகளைச் சேமித்து வைத்து, அவர்களுக்கு நல்ல விலை கிடைக்கின்ற வகையிலும், தேவைக்கேற்ப விற்று இலாபம் ஈட்டுகின்ற வகையிலும், டெல்டா மாவட்டங்கள், கடலூர், திருச்சி ஆகிய மாவட்டங்களில் முக்கியமான இடங்களில் வாழைத் தார்களைத் தேக்கி வைக்கின்ற குளிர்சாதனக் கிடங்கு அமைப்பதற்கு அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பழங்கள், காய்கறிகள், இவற்றை வைப்பதற்குத்தான் குளிர்பதனக் கிடங்கு தேவை என்று இதுவரையில் கேட்டிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வாழை இலைக்குக் கேட்கிறார். (குறுக்கீடு) வாழைப் பழத்திற்கா? (குறுக்கீடு) வாழைப் பழத்திற்குத் திருச்சியிலே ஓர் ஆராய்ச்சி நிலையம் இருக்கிறது. அங்கே வாழைப் பழத்தை பவுடர் பண்ணி, எக்ஸ்போர்ட்டும் பண்ணுகிறோம். இதற்கென்று தனியாக ஒரு கிடங்கு ஆரம்பிக்க வேண்டும் என்ற அந்த யோசனை இதுவரையில் இல்லை. அதைப் பற்றிப் பரிசீலிக்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வே. செந்தில் பாலாஜி.

**திரு. வே. செந்தில் பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கரூர் சட்டமன்றத் தொகுதி, கரூர் நகராட்சியில் இயங்கி வரும் உழவர் சந்தையில் இதுவரை தரைக் கடை அமைத்த விவசாயிகளுக்கு 10 ரூபாய் சுங்க வரி என்றும், முழுநேரக் கடை அமைத்த விவசாயிகளுக்கு 25 ரூபாய் சுங்க வரி என்றும் வசூல் செய்யப்பட்டு வந்தது. நேற்று 1–4–2007 முதல் விவசாயிகளை அச்சுறுத்திக் கட்டாய வசூல் செய்யப்படுகின்ற ஒரு சூழ்நிலையில், நேற்று நான்கிற்கு நான்கு சதுர அடி கொண்ட தரைக் கடை விவசாயிகளுக்கு ரூபாய் 50 என்று கட்டாய வசூலும் செய்துள்ளார்கள். நான் நேரடியாக அந்த உழவர் சந்தைக்குச் சென்று விவசாயிகளுடைய குறைகளைக் கேட்டு, அவர்களைத் தொடர்புகொண்டு, இத்தகைய

சூழ்நிலை நிலவுகிறது என்று கூறியதற்குப் பிறகு, நேரடியாகச் சென்று அவர்கள் கட்டாய வசூல் செய்து அந்தக் கடை உரிமையாளர்களை மிரட்டி, கடையில் உள்ள பழங்கள், காய்கறிகளை எல்லாம் சாக்கடையில் தள்ளிவிட்டு வசூல் செய்துள்ளார்கள். அந்த வசூலுக்குண்டான ரசீதையும் தற்போது இந்தச் சபைக்குக் கொண்டு வந்துள்ளேன். நகராட்சியால் வழங்கப்பட்டுள்ள ரசீது இது. 10 ரூபாய்க்கு, 50 ரூபாய் என்று வசூல் செய்துள்ளார்கள். பழைய கட்டணத்தை வசூலிக்க அரசு முன்வருமா? அவ்வாறு கட்டாய வசூல் செய்தவர்கள்மீது நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மூலக் கேள்விக்கும், இதற்கும் தொடர்பு இல்லை. (குறுக்கீடு) இல்லை, உழவர் சந்தை அமைக்கப்படுமா என்பதுதான் மூலக் கேள்வி. (குறுக்கீடு) மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

(உறுப்பினர், மாண்புமிகு பேரவைத் தலைவரிடம் ரசீதை வழங்கினார்.)

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உழவர் சந்தையிலே அதுபோலப் பெரிய கடை, சின்னக் கடை என்று பிரித்துப் பணம் வசூல் செய்வது என்பது இதுவரையில் இல்லை. (குறுக்கீடு) இல்லை, இல்லை. அப்படி மாண்புமிகு உறுப்பினர் சொல்வது உண்மையானால், விசாரித்து நடவடிக்கை எடுக்கப்படும்.

முற்பகல் 9–40

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 4, மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி, மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

**4—**

## தூர் வாரும் பணி

***1030—திரு. கு. பிச்சாண்டி:**

மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—





(அ) திருவண்ணாமலைத் தொகுதி, சோமாசிபாடி ஏரியைத் தூர் வாரி ஆழப்படுத்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) திருவண்ணாமலைத் தொகுதி, சோமாசிபாடி ஏரியைத் தூர் வாரி ஆழப்படுத்தும் செயற்குறிப்பு தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இக்கேள்வி எழவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி.

**திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சோமாசிபாடி ஏரி, 65 எக்டேர் பரப்பளவுள்ள ஏரி. கடந்த மழைக் காலங்களில் வெள்ளம் வந்து, அந்த ஏரி உடைந்து, பல ஏக்கர் கணக்கில் பயிர்கள் சேதம் அடைந்திருக்கின்றன. ஆகவே, இந்த ஆண்டிலாவது சோமாசிபாடி ஏரியைத் தூர் வார அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஏரியைத் தூர் வாரி பலப்படுத்துவதற்காக 2003 ஆம் ஆண்டு SGRY திட்டத்தின்கீழ் 7 இலட்சம் ரூபாய்க்குப் பணியை எடுத்துக்கொண்டார்கள். SGRY என்பது உணவுக்கு வேலைத் திட்டம். அதில் 25% பணமாகவும், 75% அரிசியாகவும் வேலை செய்கிறவர்களுக்குத் தரப்பட வேண்டும். ஆனால், இந்தத் திட்டத்திற்குப் பணம் ஒதுக்கப்படவில்லை. அரிசியும் ஒதுக்கப்படவில்லை. எனவே, அந்தத் திட்டத்தில் 2½ இலட்சம் ரூபாய் அளவிலே வேலை செய்யப்பட்டு, பிறகு நிறுத்தப்பட்டுவிட்டது. இரண்டு இலட்சத்து 25 ஆயிரம் ரூபாய் பெறுமானத்திற்கு அரிசியும், பணமும் கொடுக்காத காரணத்தினால், வேலை நின்று போய்விட்டது. தண்ணீர் வந்தது. பிறகு எப்படியோ சரிப்படுத்தி, அந்தத் திட்டத்தில் அதற்குரிய பணம் மட்டும் 25% 2004–ல் கொடுக்கப்பட்டது. ஆனால், அப்போது அரிசி கொடுக்கப்படவில்லை. 2003–லே எடுத்துச் செய்யப்பட்ட வேலைக்கு அரிசி கொடுக்க முடியாமல், 2005–ல்தான் அதற்குரிய பணத்தை மட்டும்தான் கொடுக்கிற நிலை ஏற்பட்டது.

ஆக, வேலைக்கு உணவு என்பது திட்டத்திற்குப் பெயர். ஆனால், வேலையிருந்தது; உணவில்லை. 'பேரு பெத்த பேரு, தாகத்துக்கு நீலு லேது' என்பார்கள் தெலுங்கில். அந்த நிலையில்தான் சோமாசிபாடி ஏரி போய்விட்டது. இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் சொன்ன அத்தியாவசியத்தைக் கருதி இந்த அரசு வருகிற காலங்களில் எடுத்துக்கொள்ளும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி.

**திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேலே 20 ஏரிகள் நிரம்பி, சோமாசிபாடி ஏரிக்கு அதிகளவுத் தண்ணீர் வந்து, அது ஒரு ஆற்றிலே கலக்கக்கூடிய நிலை இருக்கின்றது. ஆகவே, மிகப் பெரிய ஏரியாக இருக்கிற இந்தத் திட்டத்தை சிறிய திட்டத்திலே சேர்க்காமல், ஏரிகளை நவீனப்படுத்தும் திட்டத்திலே சேர்த்து, அதைத் தூர் வார அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** அதைத்தான் நான், அரசு பரிசீலிக்கும் என்று சொன்னேன். பேரவைத் தலைவர் அவர்களே, அரசு பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. காமராஜ்.

**திரு. பெ. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய கிருஷ்ணராயபுரம் தொகுதியில் மிகப் பெரிய ஏரியான பஞ்சப்பட்டி ஏரியைத் தூர் வாரும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா? ஏற்கெனவே, இது பற்றிய கேள்விக்கு 'உறுப்பினர் எழுதிக் கொடுத்தால் அரசு பரிசீலிக்கும்' என்று மாண்புமிகு அமைச்சர் கூறியுள்ளார். நானும் எழுதிக் கொடுத்துள்ளேன். மாண்புமிகு அமைச்சர் விவரம் கூறுவாரா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை அரசினுடைய பரிசீலனையில் இருக்கிறது. என்னுடைய துறை மானியக் கோரிக்கைக்குப் பிறகு, அது குறித்து நடவடிக்கை எடுக்கப்படும்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. கோவிந்தசாமி.

**திரு. சி. கோவிந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேரடியாக இந்தக் கேள்விக்குத் தொடர்பு இல்லையென்றாலும், அது பற்றிய முழு விவரங்களை அறிந்த நமது பொதுப் பணித் துறை அமைச்சர்மூலமாக ஒரு செய்தியை எதிர்ப்பார்க்கிறேன். இந்திய நாட்டின் மிக முக்கியமான தேசிய நதிகளையெல்லாம் தூய்மைப்படுத்துவதற்காக மத்திய அரசால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பதில், காவிரி நதியும் சேர்க்கப்பட்டிருப்பதாக அறிகிறேன். அந்தக் காவிரி நதியினுடைய ஒரு கிளை நதியாக கோவையிலிருந்து உற்பத்தியாகி, திருப்பூர், ஈரோடு வழியாகக் காவிரியில் கலக்கிற அந்தக் கிளை நதியைத் தூய்மைப்படுத்துகிற, தூர் வாருகிற பணியை மேற்கொள்கிற வாய்ப்பு இருக்கிறதா என்பதை மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களின்மூலம் அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 9–45*

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கு விவரமான பதில் சொல்ல வேண்டும். மானியக் கோரிக்கையின்போது இதற்குரிய பதிலை அளிக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது அரசின் சார்பிலே ஏரிகளைத் தூர் வாருகிற பணிகளுக்காகத் திட்டமிடப்பட்டிருக்கிறது. நபார்டு வங்கியின்மூலமாக அந்தத் திட்டங்கள் நிறைவேற்றப்படும் என்று நிதிநிலை அறிக்கையிலே சொல்லப்பட்டு இருக்கிறது. அந்தத் திட்டத்தின் அடிப்படையிலே, என்னுடைய மன்னார்குடி தொகுதிக்குட்பட்ட மிகப் பெரிய ஏரியாக இருக்கின்ற தெரிமேடு ஏரியை நபார்டு திட்டத்திலே இணைத்து, இந்த ஆண்டு தூர் வாருவதற்கான முயற்சியை அமைச்சர் அவர்கள் மேற்கொள்வார்களா என அறிய விரும்புகிறேன். நேற்றையதினம் பரபரப்பான ஒரு செய்தி. முல்லைப் பெரியாறிலே புதிய அணை கட்டப்படும் என்று கேரள முதலமைச்சர் அச்சுதானந்தன் அவர்கள் பிரதமரிடத்திலே மனு அளித்திருக்கிறார்கள். மத்திய நிபுணர் குழு அனுமதி அளித்ததாகச்

சொல்கிறார். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அதை மறுத்து இருக்கிறார்கள் என்றாலும், கட்டுமானப் பணிகள் தொடரும் என்றும், மத்தியக் குழு அனுமதித்து இருக்கிறது என்றும் அச்சுதானந்தன் அவர்கள் சொல்கிறார்களே, இதைப் பற்றிய நம்முடைய அரசின் நிலைப்பாடு என்ன? இப்படியே போய்க்கொண்டு இருந்தால், நம்முடைய நீர் ஆதாரங்கள் எல்லாம் கிடைக்காமல் போய்விடுமோ என்ற அச்சம் ஏற்படுகிறதே, இதைப் பற்றி அமைச்சர் அவர்கள் விளக்க வேண்டும் என்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் தொகுதியிலே உள்ள அந்த ஏரி குறித்து மானியக் கோரிக்கையில் அரசு பரிசீலனை செய்யும். முல்லைப் பெரியாறில் புதிய அணை கட்டப் போகிறோம் என்று கேரள அரசினுடைய மாண்புமிகு முதலமைச்சர் பாரதப் பிரதமரைச் சந்தித்தது பற்றிக் குறிப்பிட்டார்கள். அதற்கு நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நேற்றைக்கு விளக்கமான ஒரு பதிலை அளித்து இருக்கிறார்கள். அதுவே போதும் என்று கருதுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் *1*, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. சண்முகவேலு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**1—**

## மென்பொருள் பூங்கா

***34—திரு. சி. சண்முகவேலு:**

மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர்போன்ற நகரங்களில் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் தகவல் தொழில்நுட்பத் துறைமூலம் மென்பொருள் பூங்கா அமைக்க அரசு விரைந்து நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.



(ஆ) தகவல் தொழில்நுட்பவியலின் புரட்சிகரமான செயல்பாட்டைத் தொடர்ந்து, தமிழகத்தின் மற்ற நகரங்களிலும் இதனைப் பரவச் செய்ய அரசு உறுதி பூண்டுள்ளது. கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரிக்குச் சொந்தமான 29.08 ஏக்கர் நிலத்தைக் கோவை மருத்துவக் கல்லூரியிடமிருந்து மீளப்பெற்று, எல்காட் நிறுவனத்திற்கு நில உரிமை மாற்றம் செய்து அரசு ஆணையிட்டுள்ளது. மேலும், கோயம்புத்தூர் நகரில் தகவல் தொழில்நுட்பப் பூங்கா அமைப்பதற்குக் கூடுதல் இடங்களையும் தெரிவு செய்ய முடிவு செய்யப்பட்டுள்ளது. இது தவிர, மதுரை, திருச்சி, சேலம், திருநெல்வேலி ஆகிய நகரங்களில் தகவல் தொழில்நுட்பப் பூங்காக்களை அமைப்பதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளது. இந்தப் பூங்காக்கள் அமைப்பதற்காகத் தகுந்த நிலங்களைத் தெரிவு செய்யும் பணியைச் சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர்கள் தொடங்கி இருக்கின்றார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. சண்முகவேலு.

**திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று நடக்கின்ற சட்டமன்ற வினாக்கள்-விடைகள் நேரத்திலே முதல் கேள்வியாக என்னுடைய கேள்வியைத் தாங்கள் அமைத்துக் கொடுத்ததற்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு என்னுடைய நன்றியை முதலிலே கூறிக்கொள்கிறேன். மாண்புமிகு முதல்வர் அவர்கள் கூறும்போது, கோயம்புத்தூர்போன்ற நகரங்களில் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் தகவல் தொழில்நுட்பத் துறைமூலம் மென்பொருள் பூங்கா அமைக்கப்படுமா என்று நான் வினவிய வினாவிற்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் பதில் கூறினார்கள். கோவை மாவட்டத்தில் அதிகமான தொழில்நுட்பக் கல்லூரிகள் இருக்கின்றன. சுமார் *22*-க்கும் மேற்பட்ட தொழில்நுட்பக் கல்லூரிகள் அங்கு உள்ளன. அங்கு அதிகமான மாணவ, மாணவியர்கள் படித்துவிட்டு வேலைவாய்ப்பை எதிர்நோக்கி உள்ளனர். இங்கு படித்தவர்கள், மேலை நாடுகளிலும், சென்னை, பெங்களூர் போன்ற பெருநகரங்களிலும் பணியாற்றி வருகிறார்கள். தமிழக அரசுமூலமும், பன்னாட்டுத் தனியார் துறைமூலமும் மென்பொருள் பூங்கா அமைக்க அரசு விரைந்து நடவடிக்கை எடுத்தால், இந்தப் பகுதியில் இருக்கக்கூடிய இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புக் கிடைக்கவும், பொருளாதாரரீதியாக அவர்களது குடும்பம் முன்னேறுவதற்கும் வசதியாக இருக்கும். அதேபோல, கோவை மாநகரமானது "தென்னிந்தியாவின் மான்செஸ்டர்". என்னுடைய

தொகுதியான உடுமலைப்பேட்டையானது poor man's Ooty என்று சொல்லக்கூடிய பகுதி. கோவை மாவட்டத்திலே அதிகமாக நிலங்கள் இருக்கின்றன. தேவையான அளவுக்கு நிலங்கள் இருக்கின்றன. அந்தப் பகுதிகளிலே தனியார்மூலமாகவும் அந்த நிலங்களைப்பெற்று, அதன்மூலமாகத் தொழில்நுட்பப் பூங்கா அமைத்தால், அந்தப் பகுதிகளிலே இருக்கக்கூடிய இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புக் கிடைக்கக்கூடிய நிலையும் இருக்கும். அதேபோல, கோவையையொட்டி இருக்கக்கூடிய பொள்ளாச்சி, உடுமலைப்பேட்டைபோன்ற பகுதிகளிலேயும்கூட, N.H.209 ரோடு இருக்கின்றது. எல்லா சௌகர்யங்களும் இருக்கின்றன. Meter Gauge, Broad Gauge ஆக, ஆகக்கூடிய நிலையும் இருக்கிறது. மதுரை....

(முற்பகல் 9-50)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சண்முகவேலு, வினாவை மட்டும் கேளுங்கள்.

**திரு. சி. சண்முகவேலு:** மதுரை, கோவை, திருச்சிபோன்ற (குறுக்கீடு) வினாவிற்கு வந்துவிட்டேன். அதனால், அந்த இடங்களிளெல்லாம் போதிய வசதிகள் இருப்பதால், பன்னாட்டு நிறுவனங்கள்மூலமாகவும் அந்தத் தகவல் தொழில்நுட்பப் பூங்காவினை அமைக்கக்கூடிய வாய்ப்பை உருவாக்கித் தர அரசு முன்வருமா என்றும், அதேபோல அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் கோவையிலே எல்காட் நிறுவனத்தின்மூலமாக 5 இலட்சம் சதுர அடி நிலப்பரப்பிலே கோவை மருத்துவக் கல்லூரிக்குச் சொந்தமான இடத்தைத் தேர்வு செய்தார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சண்முகவேலு, நீங்கள் கேள்வியை மட்டும் கேளுங்கள் என்று சொன்னால், பெரிய விளக்கவுரையே நிகழ்த்திக்கொண்டிருக்கிறீர்கள்.

**திரு. சி. சண்முகவேலு:** அப்போதுதான் அரசுமூலம் நிலம் எடுத்தார்கள் மாண்புமிகு முதல்வர் அவர்கள் கூறியதுபோல, மதுரை, திருச்சி, சேலம் ஆகிய நகரங்களிலும் தற்போது அது மாதிரி எல்காட் நிறுவனத்தின்மூலமாக நிலம் எடுத்துள்ளதாகக் கூறினார்கள். அதேபோல, சென்னை, தரமணியில் இரண்டாவது டைடல் பூங்கா அமைக்க அரசு ஒப்பந்தம் கோரி உள்ளது. அது தற்போது எந்த நிலையில் உள்ளது என்பதைத் தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.



2007 ஏப்ரல் 2]

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** எல்லாமே நல்ல நிலையில் இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. அப்பாவு.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகம் முழுவதும் மென்பொருள் பூங்கா அமைத்து, இலட்சக்கணக்கான இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புத் தந்த தமிழக முதல்வர் அவர்கள், நெல்லையிலும் மென்பொருள்.... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சண்முகவேலு, என்னவென்று கேளுங்கள். ஒரே வரியில் கேள்வியைக் கேட்டு முடிக்க வேண்டும். விளக்கவுரையெல்லாம் தேவையில்லை.

**திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாட்டுக்குத் தேவையான கேள்வி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதெல்லாம் சரி, நாட்டுக்குத் தேவையானதுதான்.

**திரு. சி. சண்முகவேலு:** தொழில்நுட்பம் சம்பந்தமானது. அதனால்தான் கேட்கிறேன். தகவல் தொழில்நுட்ப வடிவமைப்பில மத்திய அரசு மனித வள மேம்பாட்டுத் துறையின்மூலமாக உயர் தனிக் கல்வி மையத்தை சர்வதேசத் தரத்தில் சென்னையில் அமைப்பதாகச் சொன்னார்கள். 2003-ல் அந்த வேலை முடியாமல் நின்றுவிட்டது; கட்டடப் பணி நின்றுவிட்டதாகச் சொன்னார்கள். ஆனால், இப்பொழுது நம்முடைய அரசு பொறுப்பேற்ற பின்பு அது எந்த நிலையில் இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன். அதேபோல, மாநில அளவில் தொழில்நுட்பக் குழு அமைப்பதாக அறிவித்தீர்கள். அதுவும் தற்போது எந்த நிலையில் இருக்கிறது என்பதை மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவா அவர்களே, தகவல் தொழில்நுட்பப் பூங்கா அமைப்பதைப் பற்றியதுதான் மூலக் கேள்வி. அவை எங்கெங்கே, எந்தெந்த நகரங்களில் அமைக்கப்படுகின்றன என்பதற்கான விளக்கத்தைத் தொடக்கத்திலேயே தந்துள்ளேன். கோயம்புத்தூர், மதுரை, திருச்சி, சேலம், திருநெல்வேலி ஆகிய இரண்டாம் நிலை நகரங்களில் தகவல் தொழில்நுட்பப் பூங்காக்களை அமைக்க அரசு முனைப்போடு செயல்பட்டு வருகிறது. அதற்கான பணிகளைத் தொடங்க

வேண்டுமென்று அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு ஆணை பிறப்பித்துள்ளது. அவர்களும் அந்தப் பணியிலே ஈடுபட்டுள்ளார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. அப்பாவு.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெல்லையிலும் தகவல் தொழில்நுட்பப் பூங்கா அமைக்க ஆணை வழங்கிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, ஏற்கெனவே தமிழக முதல்வர் அவர்களாலும், மறைந்த மரியாதைக்குரிய மாண்புமிகு முரசொலி மாறன் அவர்களாலும் நெல்லை மாவட்டம், நாங்குநேரியிலே சிறப்புப் பொருளாதாரத் திட்டமாக அறிவிக்கப்பட்ட அந்த இடத்தில் நெல்லையில் அமையவிருக்கின்ற அந்தத் தகவல் தொழில்நுட்பப் பூங்காவை அமைத்துத் தருவார்களா என்று தங்கள்மூலம் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, அதற்கு நாங்குநேரி அல்லாமல் வேறு இடம் இப்பொழுது பார்க்கப்பட்டிருக்கிறது. நாங்குநேரியிலும் தொழில் மையம் அமைவதற்கான சாத்தியக்கூறுகள் இருக்கின்றன. அவை பற்றியும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.ஆர். ரங்கராஜன்.

**திரு. என்.ஆர். ரங்கராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முழுவதுமாக விவசாயத்தையே நம்பியிருக்கக்கூடிய தஞ்சை, திருவாரூர், நாகப்பட்டினத்திலே இருக்கக்கூடிய விவசாயிகளின் இளைய வாரிசுகளுக்கு உதவக்கூடிய வகையிலே தஞ்சையிலோ, திருவாரூர் பகுதியிலோ இதேபோன்று ஒரு தொழில்நுட்பப் பூங்காவை நிறுவுவதற்குத் தஞ்சையினுடைய தலைமகனாக இருக்கக்கூடிய நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்பதைத் தங்கள்மூலமாக நான் கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாய நிலங்கள் உள்ள தஞ்சை, திருச்சிபோன்ற பகுதிகளில் இந்தத் தொழில்நுட்பப் பூங்காக்களை நிறுவுவது அவ்வளவு எளிதான காரியம் அல்ல. எங்கே வெறும் நிலப் பகுதி மாத்திரம் இருக்கிறதோ, அங்கேதான் இந்தப் பணிகளைத் தொடங்க முடியும்.



ஆகவே, விவசாய நிலங்கள் இருக்கின்ற இடங்களில் விவசாயிகளைப் பாதிக்கின்ற அளவுக்கு இந்தத் தொழில்நுட்பப் பூங்காக்கள் அமையாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி ஜி. லதா.

**திருமதி ஜி. லதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூர் மாவட்டத்தில் வேலூரை மையமாகக்கொண்டு, அரியூர் பகுதியில் தகவல் தொழில்நுட்பப் பூங்காவை அமைக்க அரசு முன்வருமா என்பதனைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9-55)

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு உறுப்பினரவர்கள் குறிப்பிடுகின்ற அந்த இடம் பொருத்தமானதா என்பதை ஆய்வு செய்து, பரிசீலிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்.

**திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களது மாவட்டமான தூத்துக்குடி மாவட்டத்தில், கடந்த கால எங்களுடைய அம்மாவின் ஆட்சிக் காலத்தில் தொழில்நுட்பத் துறையின்மூலம் மென்பொருள் பூங்கா அமைப்பதற்கான ஆய்வுகள் எல்லாம் நடத்தப்பட்டன. ஆனால், இப்போது அறிவிக்கப்பட்டிருக்கின்ற அறிவிப்பில், எங்கள் மாவட்டத்தில் மென்பொருள் தொழில்நுட்பப் பூங்கா வருவதற்கான அறிவிப்புகள் வரவில்லை. அங்கே துறைமுக வசதியிலிருந்து, விமான நிலைய வசதியிலிருந்து, இரயில்வே ஸ்டேஷன் வசதியிலிருந்து, சாலை வசதியிலிருந்து அத்தனை வசதிகளும் உள்ளன. இடமும் அதிகமாக உள்ள பகுதி. ஆகவே, எங்களுடைய தூத்துக்குடி மாவட்டத்திலும் அந்த மென்பொருள் தொழில்நுட்பப் பூங்காவை அமைப்பதற்கு இந்த அரசு ஆவன செய்யுமா என்பதைக் கேள்வியாகக் கேட்கின்றேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** நான் ஏற்கெனவே குறிப்பிட்டுள்ள அந்த மாவட்டத் தலைநகரங்களில் இந்தப் பூங்காக்கள் அமைந்த பிறகு, படிப்படியாக, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுவதுபோல, எல்லா இடங்களிலும் இத்தகைய பூங்காக்கள் அமைய முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

[2007 ஏப்ரல் 2

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 5, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன், மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

5—

## இட ஒதுக்கீடு

***10718—திரு. சி. ஞானசேகரன்:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சுதந்திரப் போராட்ட வீரர்களின் வாரிசுகளுக்குப் பொறியியல், மருத்துவக் கல்லூரிகளில் இட ஒதுக்கீடு செய்ய அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தற்போதுள்ள அரசாணையின்படி, சுதந்திரப் போராட்ட வீரர்களின் வாரிசுகளான மகன், மகள், இவர்களுக்குப் பொறியியல் மற்றும் மருத்துவக் கல்லூரிகளில் இட ஒதுக்கீடு வழங்கப்படுகிறது.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள், இப்போது சுதந்திரப் போராட்ட வீரர்களுடைய வாரிசுகளாக இருக்கிற மகன், மகள்களுக்குப் பொறியியல் மற்றும் மருத்துவக் கல்லூரிகளில் இட ஒதுக்கீடு வழங்கப்பட்டு வருகிறது என்று சொன்னார்கள். சுதந்திரப் போராட்ட வீரர்கள் எல்லோருமே வயதானவர்கள். இப்போது மகன்கள், மகள்கள் என்று இருக்கக்கூடிய நிலை எல்லாம் கொஞ்சம் கழிந்து போய், பேரன்கள், பேத்திகள் என்று வரக்கூடிய நிலையில்தான் அவர்கள் இருக்கிறார்கள். காரணம், நாடு சுதந்திரம் அடைந்து 50 வருடங்களுககு மேலாகிவிட்டது. ஆகவே, அவர்களுக்கு உயர் கல்வி பயிலும் மகனோ, மகளோ இருப்பதற்கான சாத்தியக்கூறு மிகவும் குறைவு. ஆகவே, பேரன், பேத்திகளுக்கு இந்தச் சலுகை சென்றடையக்கூடிய வகையிலே மாண்புமிகு முதல்வர் அவர்களும், மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களும், பொறியியல் மற்றும் மருத்துவக் கல்லூரிகளிலே சுதந்திரப் போராட்ட வீரர்களுடைய வாரிசுகளுக்கு, அதாவது பேரன், பேத்திகளுக்கு இட



2007 ஏப்ரல் 2]

ஒதுக்கீடு வழங்குவதற்கு ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2002–2003 வரையில் பேரன், பேத்திகளுக்கும் வழங்கலாம் என்றுதான் அரசாணை இடப்பட்டிருந்தது. ஆனால், 1-11-2002-ல் 5 நீதிபதிகள்கொண்ட உயர் நீதிமன்ற பெஞ்ச் அதற்கு ஒரு தடை உத்தரவை வழங்கி, மகன், மகள் ஆகியோருக்கு மட்டும்தான் வழங்க வேண்டும் என்ற உத்தரவினைப் பிறப்பித்திருக்கிறது. அதற்கு எதிர்ப்பாகவும், அதை மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்றும் அரசுத் தரப்பிலே முறையிடப்பட்டிருக்கிறது. வழக்கு நிலுவையில் இருக்கிறது. வழக்கு முடிந்த பிறகுதான் பேரன், பேத்திகளுக்கும் இதைக் கொடுக்க முடியுமா என்பது பற்றி ஆலோசிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, யார், யாருக்கு, எப்படி இட ஒதுக்கீடு என்று அரசியல் சாசனத்திற்கு உட்பட்டு இதை வழங்க வேண்டுமென்று கொள்கை முடிவெடுத்து, அதைச் செயல்படுத்த வேண்டிய பொறுப்பு, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்ற பிரதிநிதிகள் உள்ள இந்த அவைக்கும், அதேபோல, மக்கள் பிரதிநிதிகளை வைத்து உருவாகியிருக்கிற மாண்புமிகு முதல்வர் மற்றும் அமைச்சரவைக்கும்தான் உண்டு. அந்தப் பொறுப்பை உணர்ந்துதான் இப்படிப்பட்ட அரசாணைகளை அல்லது சட்டங்களை நாம் இயற்றுகிறோம். ஆனால், Judicial activism அதிகமாகச் சென்று, இப்போது நீதிபதிகள் தங்களுடைய எல்லையைக் கடந்து இப்படியொரு தீர்ப்பைக் கொடுத்துவிட்டு, பேரன், பேத்திகளுக்கு வரக்கூடிய வாய்ப்பை 2002 ஆம் ஆண்டிலிருந்து நிறுத்திவிட்டிருக்கக்கூடிய ஒரு சூழ்நிலை வந்திருக்கிறது. அந்த வழக்கு நடப்பது நடக்கட்டும். அரசு உடனடியாக இங்கே மீண்டும் அதற்கான ஒரு சட்டத்தைக் கொண்டு வந்தாவது, பேரன், பேத்திகள், கொள்ளுப் பேரன், கொள்ளுப் பேத்திகளுக்குக்கூட இந்தச் சலுகை சென்றடையக்கூடிய வகையில் நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாராளுமன்றத்திலே ஒருமனதாக நிறைவேற்றப்பட்ட சட்டத்தையே நிறுத்தி வைத்திருக்கிற காலக்கட்டம். உங்களுடைய

கருத்துகளைப் பரிசீலித்து, என்ன செய்ய வேண்டுமோ, அதைச் செய்வதற்கு எப்போதும் கலைஞருடைய அரசு தயங்காது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது மாணவர் சேர்க்கைக்கான இடங்கள் பற்றிய கேள்வி. குறிப்பாக, இட ஒதுக்கீட்டுக்குத் தமிழகம்தான் வழிகாட்டியாக இருந்திருக்கிறது என்பதற்குத் தற்போது ஏற்பட்டிருக்கிற 27 விழுக்காடு இட ஒதுக்கீட்டுச் சோதனைக்கு நம்முடைய தமிழகம் மீண்டும் வழிகாட்டியிருக்கிறது. ஆகவே, இட ஒதுக்கீட்டிற்கே வழிகாட்டியிருக்கிற நம்முடைய தமிழ் மண், சமூக நீதிக்காகப் போராடிச் சிறை சென்றவர்கள், உயிரிழந்தவர்கள் ஆகியோரின் குடும்பங்களுக்கு—இந்த இட ஒதுக்கீட்டுப் போராட்டத் தியாகிகளின் குடும்பங்களுக்கு இட ஒதுக்கீட்டில் சிறப்பு இட ஒதுக்கீடாக வாய்ப்புகள் வழங்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-00

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** பேரவைத் தலைவர் அவர்களே, நான் முன்பே குறிப்பிட்டதைப்போல, 2002-2003-க்கு முன்பாக தமிழுக்காக உயிர் கொடுத்தவர்களுடைய வாரிசுகளுக்கெல்லாம் இட ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. ஆனால், 1-11-2002 அன்று அளித்த தீர்ப்பின்படி, நான்கே நான்கு வகையினருக்குத்தான் சிறப்பு ஒதுக்கீடு செய்ய முடியும் என்று உயர் நீதிமன்றம் தீர்ப்பு அளித்தது. உடல் ஊனமுற்றோர், மிகச் சிறந்த விளையாட்டு வீரர்கள், சுதந்திரப் போராட்டத் தியாகிகளின் பிள்ளைகள், அதாவது மகன், மகள் மற்றும் முன்னாள் இராணுவ வீரர்களின் பிள்ளைகள் ஆகிய இந்த 4 பிரிவினர்களுக்கு மட்டுமே சிறப்புச் சலுகை வழங்கப்பட வேண்டுமென்று உயர் நீதிமன்றம் உத்தரவு கொடுத்திருக்கிறது. அதை எதிர்த்துத்தான் அப்போதே, 2003-லேயே வழக்குத் தொடரப்பட்டு, இன்னும் வழக்கு நிலுவையிலேயே இருக்கிறது. அதை விரைவுபடுத்த இந்த அரசு நடவடிக்கை எடுக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. ராஜன்.

**திரு. அ. ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதிலுரைக்கு



நன்றி. ஆனால், அதனுடன், எல்லைப் போராட்டத் தியாகிகளின் வாரிசுகளுக்கும், மொழிப் போர் தியாகிகளின் வாரிசுகளுக்கும் பொறியியல் மற்றும் மருத்துவக் கல்லூரிகளில் இட ஒதுக்கீடு செய்ய அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** பேரவைத் தலைவர் அவர்களே, நான் முன்பே குறிப்பிட்டதைப்போல, உச்ச நீதிமன்றத்திலே இந்த வழக்கை எவ்வளவு விரைவில் முடிக்க முடியுமோ முடித்து, அதன் பிறகு முதல்வர் அவர்கள் எடுக்கிற முடிவின்படி யார், யாருக்குக் கொடுக்கலாம் என்பதையும் இந்த அரசு கவனத்தில்கொண்டு ஏற்பாடுகள் செய்யும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினா எண் 6, மாண்புமிகு உறுப்பினர் திரு. என். நன்மாறன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**6—**

### பணிமனை

***1602—திரு. என். நன்மாறன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மதுரையில் பொன்மேனி பணிமனையைச் சீர்படுத்த அரசு உரிய நடவடிக்கை எடுக்குமா ?

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம், மதுரை, பொன்மேனி கிளைப் பணிமனையில் வண்டிகள் நிறுத்தும் தளத்தின் மேடு, பள்ளங்கள் ஜேசி.பி. கொண்டு மட்டப்படுத்தப்பட்டுள்ளன; மற்றும் கட்டடப் பராமரிப்புப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. மேலும், சிமென்ட் தளம் அமைக்கும் பணி பகுதி, பகுதியாக மேற்கொள்ளப்பட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அத்தியாவசியத் தேவைகள் அவ்வப்போது செய்து வரப்படுகின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. என். நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதிலுக்கு நன்றி

தெரிவிக்கின்றேன். ஒரு பானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பதைப்போலத்தான் அந்த ஒரு பணிமனையைக் குறிப்பிட்டேன். பக்கத்திலேயே மாட்டுத் தாவணிக்கு அருகில் ஒரு பணிமனை உண்டு. இப்போது நிறைய சொகுசுப் பேருந்துகள் எல்லாம் நாகர்கோவில் மற்றும் பல்வேறு பகுதிகளுக்கு விடப்படுவதாக தினசரி அறிவிப்புகள் வருகின்றன. இந்தப் பேருந்துகள் சொகுசாகத் தொடர்ந்து நீடிக்க வேண்டுமென்றால், பணிமனையும் உரிய முறையில் இருக்க வேண்டிய அவசியம் இருக்கிறது. மாட்டுத் தாவணிக்கு அருகில் இருக்கக்கூடிய பணிமனையில், மழை பெய்தால் முழங்கால் அளவுக்குத் தண்ணீர் தேங்குகிறது. இது மொத்தமாக அந்தப் பேருந்துகளையே கெடுக்கக்கூடிய ஒரு நிலைமையை ஏற்படுத்தும். தமிழகம் முழுவதும் இருக்கக்கூடிய பணிமனைகளில் உள்ள இதுபோன்ற கோளாறுகளைச் சரி செய்வதற்குப் பரிந்துரை செய்ய ஒரு குழு அமைக்க ஆவன செய்யப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல்வேறு இடங்களிலே பணிமனைகள் அமைக்கப்பட்டபோது, அந்தப் பகுதிகளெல்லாம் சரியாகத்தான் இருந்தன. ஆனால், சாலைகள் உயர்ந்துகொண்டே வருகின்றபோது, பணிமனைகள் பள்ளமான இடங்களாகிவிட்டன. குறிப்பாக, சென்னையிலிருக்கின்ற பணிமனைகளும் அப்படித்தான் இருக்கின்றன. போக்குவரத்துக் கழகங்கள் முழுமையாக இலாப நோக்கோடு நடத்தப்படுகின்றவை அல்ல. இவை மக்கள் சேவைக்காக நடத்தப்படுகின்றன. மிகவும் குறைவாகக் காசு வசூலிக்கின்ற காரணத்தினால், இதுபோன்ற பணிகளைச் செய்வதற்குரிய நிதி ஒதுக்கீட்டைப் போக்குவரத்துக் கழகங்களால் செய்ய முடியவில்லை. நம்முடைய முதலமைச்சர் அவர்கள்தான் இப்போது இந்தப் புதிய பேருந்துகள் வாங்குவதற்காக அரசுப் பணத்தை இந்த ஆண்டும், கடந்த ஆண்டும், 2 முறை கிட்டத்தட்ட 5,600 புதிய பேருந்துகள் வாங்குவதற்காக ஒதுக்கித் தந்தார்கள். அதனால்தான் புதிய பேருந்துகள் எல்லாம் வாங்கப்பட்டிருக்கின்றன. குறிப்பாக, இங்கே இருக்கின்ற நம்முடைய தொழிலாளர் நலத் துறை அமைச்சர் திரு. தா.மோ. அன்பரசன் அவர்கள், அவர்களுடைய பகுதியிலே இருக்கின்ற பணிமனையைச் சரி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, அவர்களுடைய சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு வளர்ச்சி நிதியிலிருந்து நிதியை ஒதுக்கித் தந்திருக்கிறார்கள். அதேபோல, நம்முடைய திருவள்ளூர் பாராளுமன்ற உறுப்பினர் அவர்களும், அவர்களுடைய தொகுதி மேம்பாட்டு வளர்ச்சி



நிதியிலிருந்து நிதியை ஒதுக்கித் தந்திருக்கிறார்கள். நம்முடைய உறுப்பினர் திரு. நன்மாறன் அவர்களும் தங்களுடைய பகுதியிலே இருக்கின்ற அந்தப் பணிமனையை உடனடியாகச் சீர் செய்ய வேண்டுமென்றால், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு வளர்ச்சி நிதியிலிருந்து நிதியை அவர்கள் ஒதுக்கித் தருவார்களேயானால், உடனடியாக இந்த ஆண்டே அது செய்து தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. என். நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சொகுசுப் பேருந்துகளாலே ஒரு சிரமம் ஏற்பட்டிருக்கிறது. ஏற்கெனவே இருக்கிற பேருந்துகளுக்கு ஏற்ற உயரத்தில்தான் அந்தப் பணிமனைகளின் மேற்கூரை இருக்கிறது. சொகுசுப் பேருந்துகளின் உயரம் தட்டுகிறது என்று சொல்கிறார்கள். குறிப்பாக, மாட்டுத் தாவணிப் பேருந்து நிலையப் பணிமனையிலே அந்த நிலை இருக்கிறது. சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி இதற்கு ஒதுக்கப்படலாம் என்றால், தாராளமாகச் செய்யலாம். ஆனால், அரசு இப்பொழுது எங்களுக்குக் கொடுத்திருக்கக்கூடிய வழிகாட்டுதல் நெறிமுறைகளில், அரசு அலுவலகங்களுக்கு இது பொருந்தாது என்று இருக்கிறது. இந்தப் பணிமனையும் அதற்குட்பட்டு வந்தால், எங்களுக்கு இதைச் செய்வதில் சிரமம் ஏற்படும். உட்படவில்லை என்றால், அவரவர் தொகுதிகளில் சட்டமன்ற உறுப்பினருடைய தொகுதி மேம்பாட்டு வளர்ச்சி நிதியைப் பயன்படுத்தலாம் என்பதை நானும் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–05

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசின்மூலமாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்டு, அந்த அனுமதியைப் பெற்றுத் தருவது என்னுடைய பொறுப்பு. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நிதியை ஒதுக்கித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன். மேலும், பல்வேறு இடங்களில் புதிய பணிமனைகளைத் தொடங்க வேண்டுமென்று சட்டமன்ற உறுப்பினர்கள் கோரிக்கை வைத்திருக்கிறார்கள். சில இடங்களிலே புதியதாகத் தொடங்கப்பட்டிருக்கின்றன. மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அந்தப் பகுதிகளிலே இருக்கின்ற புறம்போக்கு நிலங்களைப் போக்குவரத்துக் கழகத்திற்குத் தருவார்களேயானால்,

[2007 ஏப்ரல் 2

புதிய பணிமனைகளைத் தொடங்குவதற்கான பணியும் இந்த ஆண்டு தொடங்கப்படும். நம்முடைய மானியக் கோரிக்கையிலே இதற்குத் தக்க பதில் உங்களுக்கு வரும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு.

**திரு. ப. டில்லி பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணகிரி மாவட்டம், ஊத்தங்கரையில் அரசுப் போக்குவரத்துப் பணிமனையில் ஏறக்குறைய ஓராண்டு காலமாகக் குடிதண்ணீர் வசதியில்லாமல், மாதா மாதம் மூவாயிரம் ரூபாய் போக்குவரத்துக் கழகத்தின் சார்பாகக் குடிதண்ணீருக்காகப் பணம் செலுத்திக்கொண்டிருக்கிறார்கள். அங்கு குடிதண்ணீர் வசதியும், கேன்டீன் வசதியும், எந்தவிதமான அடிப்படை வசதியும் இல்லாமல் ஏறக்குறைய நூற்றுக்கும் மேற்பட்ட தொழிலாளிகள் பல முறை என்னிடத்தில் மனு செய்திருக்கிறார்கள். மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் எங்களுடைய மாவட்டத்திற்கு வருகை தந்தபோதுகூட, அமைச்சரிடத்தில் நேரடியாக மனு கொடுத்தும் இருக்கிறார்கள். ஆகவே, இந்தச் சந்தர்ப்பத்திலாவது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குடிதண்ணீர் வசதியும், கேன்டீன் வசதியும், எந்தவிதமான அடிப்படை வசதியுமில்லாத இந்தப் போக்குவரத்துப் பணிமனைக்கு அவற்றைச் செய்து தர முன்வருவார்களா என்று தங்கள் வாயிலாகக் கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அந்த மாவட்டத்திற்குச் சென்றபோதே இந்தக் கோரிக்கையைச் சொன்னார்கள். குறிப்பாக, போக்குவரத்துக் கழகங்கள் தங்களுடைய நிதியிலிருந்து செய்யக்கூடிய நிலையில் இல்லை. புதிய பேருந்துகள் வாங்குவதற்குக்கூட, நம்முடைய முதலமைச்சர் அவர்களை அணுகி, அவர்கள் தந்த நிதியிலேதான் புதிய பேருந்துகளே வாங்கப்பட்டன. இதுபோல இருக்கின்ற நிலையில், அடிப்படை வசதிகளை மேம்படுத்துவதற்காகத் தேவையான நிதியை இந்த ஆண்டு சிறப்பு நிதியாக அரசிடம் கேட்கலாம் என்று சொன்னால், அரசு ஏற்கெனவே கிட்டத்தட்ட 550 கோடி ரூபாயை இந்த ஆண்டுக்கென்று ஒதுக்கியிருக்கிறது. மேற்கொண்டும் அரசைக் கேட்டால், அது சரியாக இருக்காது என்கின்ற காரணத்தால்தான் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களுடன் கலந்து பேசி, உங்களுக்கு உடனடித் தேவையான



2007 ஏப்ரல் 2]

பணிகளைச் செய்வதற்கு துறையின் மானியக் கோரிக்கையிலே முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. கோவிந்தசாமி.

**திரு. சி. கோவிந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர்கள் தொகுதி மேம்பாட்டு வளர்ச்சி நிதியிலிருந்து போக்குவரத்துப் பணிமனைகளுக்குச் செலவு செய்யலாம் என்று நம்முடைய மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் தெரிவிக்கிறார்கள். அரசு வெளியிட்டிருக்கக்கூடிய அந்த வழிகாட்டும் நெறிமுறையில் அது இல்லை என்று ஏற்கெனவே சொல்லப்பட்டு இருக்கிறது. ஆகவே, அனுமதி வாங்கித் தருவதாகச் சொன்னார்கள். அனுமதியோடு கூடுதலான நிதியும் வாங்கித் தந்தால், அதைக் கட்டாயமாகச் செய்வதிலே எந்தத் தடையும் இருக்காது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள்மூலம் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். நிதியும் வாங்கிக் கொடுத்தீர்கள் என்றால், கட்டாயம் ஒதுக்கலாம்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏன் கையை இப்படிச் சுற்றித் தொடுகிறீர்கள்? நிதி அங்கிருந்தால் அதை நாங்கள் நேரடியாகக் கேட்டு வாங்கிக்கொள்கிறோம். உங்களுக்குகெல்லாம் தெரியும், ஏற்கெனவே நம்முடைய முதல்வர் அவர்கள் 1 கோடியே 20 இலட்சம் ரூபாய் நிதியைச் சட்டமன்ற உறுப்பினர்களுக்கென்று ஒதுக்கித் தந்திருக்கின்றார்கள். அதிலிருந்து ஏதாவது கொடுத்தால்தான் இந்த வேலையைச் செய்ய முடியும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. ஆறுமுகம்.

**திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்கல்பட்டு நகரின் மையப் பகுதியாக இருக்கிற பகுதியிலே போக்குவரத்துப் பணிமனை அமைந்திருக்கிறது. அதனாலே போக்குவரத்து நெரிசல் அடிக்கடி ஏற்படுகிறது. ஏற்கெனவே நம்முடைய அதிகாரிகள் செங்கல்பட்டு நகரையொட்டி இருக்கிற வெண்பாக்கம் பகுதியிலே இதை மாற்ற வேண்டும் என்று பரிசீலனை செய்திருக்கிறார்கள். இந்த ஆண்டு நம்முடைய அமைச்சர் அவர்கள் அந்தப் பணிமனையைச் செங்கல்பட்டு நகருக்கு அருகிலே இருக்கிற

வெண்பாக்கம் பகுதிக்கு மாற்ற முயற்சி எடுப்பார்களா என்பதைத் தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைக் கருத்தில் கொண்டு, செயலாற்றுவோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 7, மாண்புமிகு உறுப்பினர் திருமதி பெ. கமலாம்பாள், மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

**7—**

## கோரா உற்பத்தி

***6252—திருமதி பெ. கமலாம்பாள்:**

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பட்டுச் சேலைகள் தயாரிக்கத் தமிழ்நாட்டிலேயே கோரா உற்பத்தி செய்வதற்கு அரசு நடவடிக்கை எடுக்க முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தமிழ்நாட்டில் பட்டுச் சேலைகள் தயாரிக்கத் தேவையான கோரா பட்டு நூல் உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது. 2005–2006 ஆம் ஆண்டில் 738.85 மெட்ரிக் டன் கோரா பட்டு உற்பத்தி செய்யப்பட்டது. நடப்பாண்டில் 800 மெட்ரிக் டன் கோரா பட்டு உற்பத்தி செய்யத் திட்டமிடப்பட்டு, அக்டோபர் 2006 முடிய 643.55 மெட்ரிக் டன் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.

(ஆ) தற்சமயம் கோரா பட்டு தமிழ்நாட்டிலேயே உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றது.

முற்பகல் 10–10

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி பெ. கமலாம்பாள்.



**திருமதி பெ. கமலாம்பாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெங்களூர்போன்ற மற்ற மாநிலப் பகுதியிலிருந்து கோராவை இன்னும் வாங்கிக்கொண்டு வருகிறார்கள். அதனால், கோராவைத் தமிழ்நாட்டிலேயே அதிகமான அளவிலே உற்பத்தி செய்தால், பட்டுத் தொழில் வளர்ச்சிபெற ஏதுவாக இருக்கும். அதனால் தமிழ்நாட்டிலேயே அதிக அளவு உற்பத்தி செய்ய அரசு ஆவன செய்ய முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் இலாபம் தரக்கூடிய விவசாயப் பயிர்களில், மல்பரிச் செடி வளர்த்துப் பட்டு உற்பத்தி செய்யும் தொழில் முதலிடத்தில் இருக்கிறது. எனவே இத்தொழில் வளர, மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய அறிவுரைப்படிப் பல நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டு வருகின்றோம். குறிப்பாக, ஒரு ஏக்கருக்கு உயர் விளைச்சல் தரும் மல்பரிப் பயிர்கள் நடவு செய்வதற்காக மத்திய, மாநில அரசுகள் மானியமாக 1,000 ரூபாயும், சொட்டு நீர்ப்பாசன அமைப்பு நிறுவுவதற்காக ஒரு ஏக்கருக்கு மத்திய, மாநில அரசுகள் மானியமாக 16,100 ரூபாயும், தனியாகப் பட்டுப் புழு வளர்ப்பு மனை கட்டுவதற்கு மானியமாக 50,000 ரூபாயும், புழு வளர்ப்புத் தளவாடங்கள் கொள்முதல் செய்வதற்காக 25,500 ரூபாயும், மண் புழு தயாரிப்புக் கூடம் கட்டுவதற்காக 10,500 ரூபாயும், தரமான கிருமிநாசினிகள் விநியோகம் செய்வதற்கு மானியமாக 1,435 ரூபாயும், ஆக, ஒரு ஏக்கருக்கு ஒரு விவசாயிக்கு 1,04,535 ரூபாய் மானியம் வழங்கப்படுகிறது. ஆகவே, தாங்கள் சொன்னபடி தமிழகத்திலேயே முழுவதுமாகப் பட்டுக்குத் தேவையான நூல்களை எதிர்காலத்தில் உற்பத்தி செய்யலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவை தங்கம்.

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவா அவர்களே, பட்டுச் சேலைகள் தயாரிப்பதற்குத் தனியாக அரசு மானியம் வழங்க முன்வருமா என்பதைத் தங்களின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது கைத்தறித் துறையைச சார்ந்த கேள்வி. மாண்புமிகு உறுப்பினர் கைத்தறித் துறை அமைச்சரிடம் கேட்குமாறு தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ. செங்கோட்டையன்.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பட்டு உற்பத்தி செய்கிற விவசாயிகள், அந்த குக்கூன் கூடுகளை மைசூருக்கு எடுத்துச் சென்றுதான் விற்க வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. சில நேரங்களில் கர்நாடகக் காவிரி நீர்ப் பிரச்சினை வருகிறபோது, அவர்கள் சென்று விற்க முடியாத சூழ்நிலைகள் ஏற்படுகிற காரணத்தினால், தமிழ்நாட்டிலேயே, கோவை அல்லது ஈரோடு மாவட்டத்தில், ஏதாவது ஒரு நகரத்தை மையமாக வைத்து விற்பனை நிலையத்தைத் துவங்குவதற்கு அரசு முன்வருமா என்பதை உங்கள்மூலம் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலேயே மொத்தம் 17 இடங்களில் பட்டு விற்பனை மையங்கள் மற்றும் வாங்கும் மையங்கள் இருக்கின்றன. கோவை, அதேபோல ஈரோடுபோன்ற இடங்களில் இருக்கின்றன. நடமாடும் பட்டுக் கூடுகளை வாங்குகின்ற நிலையங்களை அடுத்த ஆண்டு ஏற்படுத்த இருக்கின்றோம். ஆகவே, இனிமேல் மைசூருக்குப் போக வேண்டிய அவசியம் இருக்காது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சிவானந்தம்.

**திரு. ஆர். சிவானந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பட்டுச் சேலை உற்பத்தியில் காஞ்சிபுரம், ஆரணிபோன்ற பகுதிகளில் மிகப் பெரிய அளவில் நெசவாளர்கள் ஈடுபட்டிருக்கிறார்கள். 200-க்கும் மேற்பட்ட பட்டு முறுக்காலைகள் ஆரணிப் பகுதியில் இருக்கின்றன. பெரும் பகுதியான பட்டு முறுக்கேற்றப்பட்டு, காஞ்சிபுரம், கும்பகோணம் ஆகிய பகுதிகளுக்கு ஆரணியிலிருந்துதான் எடுத்துச் செல்லப்படுகிறது. எனவே, விவசாயிகளை ஊக்குவிக்கின்ற வகையிலே ஆரணிப் பகுதியில் டான்சில்க் பட்டு மல்பரிச் செடிப் பயிர் வைக்கின்ற அலுவலகங்களைத் துவக்க ஆவன செய்யப்படுமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை ஏற்று, ஆவன செய்யப்படும்.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 8, மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. வை. சிவபுண்ணியம் மற்றும் திரு. கோவை தங்கம் ஆகிய இரண்டு பேரும் கொடுத்திருக்கிறார்கள். மாண்புமிகு வருவாய் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

8—

## இயற்கைப் பேரிடர்கள்

***3551—திரு. வை. சிவபுண்ணியம்:**

**திரு. கோவை தங்கம்:**

மாண்புமிகு வருவாய் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சுனாமி, நில நடுக்கம் போன்ற இயற்கைப் பேரிடர்களை முன்கூட்டியே கண்டுபிடித்து மக்களை எச்சரிக்கை செய்திட அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

*முற்பகல் 10–15*

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) சுனாமி ஆழிப் பேரலை இயற்கைப் பேரிடர்களிலிருந்து காப்பாற்றுவதற்காக, மக்கள் தங்களைத் தற்காத்துக்கொள்வதற்காகக் கையேடுகள் அச்சிடப்பட்டு வழங்கப்பட்டிருக்கின்றன. சுனாமி எச்சரிக்கை மையம், கடல்சார் ஆராய்ச்சி மையம் ஒன்றை ஹைதராபாத்திலே அமைப்பதற்காக இந்திய அரசு நடவடிக்கை எடுத்து வருகின்றது. தமிழகத்தைப் பொறுத்தளவில் கன்னியாகுமரி, தூத்துக்குடி, இராமேஸ்வரம், நாகப்பட்டினம், கடலூர் மற்றும் சென்னை ஆகிய இடங்களிலே இந்தியப் புவியியல் ஆராய்ச்சி மையத்தின்மூலமாக சுனாமி எச்சரிக்கை மையங்கள் அமைப்பதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. குறிப்பாக, சென்னையில் இருக்கின்ற அண்ணா பல்கலைக்கழகமும், கடல்சார் ஆராய்ச்சி மையமும் இணைந்து, செயற்கைக் கோள்கள்மூலமாக, கடலிலே ஏற்படுகின்ற மாற்றங்களை

ஆய்வு செய்து, இன்றைக்கு மக்களுக்கு வானொலிமூலமாக தொலைக்காட்சியின்மூலமாக, பத்திரிகைகளின்மூலமாக அனுப்புகின்ற பணிகளை மேற்கொண்டிருக்கின்றன.

குறிப்பாக நில நடுக்கம், தமிழகத்தைப் பொறுத்தளவில் மண்டலம் II, III என்ற பிரிவில் பதிவு செய்யப்பட்டிருக்கின்றது. இந்திய தீபகற்பத்தைப் பொறுத்தளவில், நில நடுக்கத்திற்கு உட்பட்டிருக்கின்றது. அந்த வகையிலே இன்றைக்கு இந்திய அளவிலே இதற்காக ஒரு Expert Committee அமைக்கப்பட்டு, இந்தப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. குறிப்பாக, தமிழகத்தைப் பொறுத்தளவில் நம்முடைய வேலூர் மாவட்டத்திலே காவலூரிலும், திருப்பத்தூரிலும், அதேபோல நாமக்கல் மாவட்டத்திலே ராசிபுரத்திலும், கிருஷ்ணகிரி மாவட்டத்திலே தேன்கனிக்கோட்டையிலும், நில நடுக்கத்தைப் பதிவு செய்கின்ற புதிய மையங்கள் அமைப்பதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. குறிப்பாக, இந்தியாவில் இருக்கின்ற நம்முடைய வானிலை மையத்தின் சார்பாக சென்னை, சேலம், கொடைக்கானல் ஆகிய பகுதிகளில் ஏற்கெனவே நில நடுக்கத்தைக் கண்டறிவதற்குரிய மையங்கள் அமைக்கப்பட்டு, தகவல்கள் சேகரிக்கப்பட்டு, அறிவிக்கப்பட்டு வருகின்றன. பூமித் தட்டுகளில் ஏற்படுகின்ற பல்வேறு மாற்றங்கள், அதிலும் குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால், ஏற்படக்கூடிய விளைவுகள், நில நடுக்கத்தை முன்னெச்சரிக்கையாகக் கண்டுகொள்வதற்குரிய வாய்ப்புகள் ஆகியவை இன்னும் ஆய்வு நிலையிலேயே இருக்கின்றன. ஆகவே, மக்கள் முன்னெச்சரிக்கையோடு நடந்துகொள்வதற்கு நம்முடைய அரசின் சார்பாகப் பேரிடர் மேலாண்மையின்மூலமாக அவர்களுக்குப் பயிற்சிகள் அளிக்கப்பட்டு, அந்தப் பணி மிகச் சிறப்பாக நடைபெற்று வருகின்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விரிவான விளக்கத்தைத் தந்திருக்கிறார்கள். விவர அறிக்கையையும் இன்று அவையிலே வைத்திருக்கிறார்கள். 2004 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்திலே மிகப் பெரிய சுனாமி பேரலை ஏற்பட்டு, வரலாற்றிலே கண்டிராத வகையிலே தமிழகம் மிகப் பெரிய பாதிப்புக்கு உள்ளானது. மேலும், இதுபோன்ற பாதிப்புகள் ஏற்படுவதற்கான அறிகுறிகள் இருக்கின்றன என்பதுதான் நமது இந்திய நாட்டைப் பொறுத்தவரையிலும் தொடர்ந்து



இருக்கிறது. அருகில் இருக்கக்கூடிய பல்வேறு நாடுகளில் அந்த விபத்துக்கள் ஏற்பட்டுக்கொண்டே இருக்கின்றன. குறிப்பாக, இந்தோனேஷியாபோன்ற நாடுகளில் அடிக்கடி நில நடுக்கமும், ஆழிப் பேரலையும் வந்துகொண்டேயிருக்கின்றன. அதனுடைய பாதிப்புகள் நமது இந்தியாவிலும் தொடர்கின்றன. குறிப்பாக, சென்னையில் இருந்து தொடங்கி கன்னியாகுமரி வரையில் இருக்கிற கடற்கரையிலே இந்தப் பாதிப்புகள் வருகின்றன. ஆகவே, இவற்றைத் தடுப்பதற்கான முயற்சி என்ற வகையில் மத்திய அரசாங்கம்தான் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று குறிப்பிட்டுச் சொல்லியிருப்பது சரியானது என்று சொன்னாலும்கூட, விவர அறிக்கையிலே சொல்லப்பட்டிருப்பது, பூமித் தட்டுகளில் ஏற்படும் மாற்றங்கள், அதனால் ஏற்படும் விளைவுகள், நில நடுக்கத்தினை முன்கூட்டியே கண்டறிவது போன்றவை இன்றும் ஆராய்ச்சி நிலையிலேயே உள்ளன என்று குறிப்பிட்டுச் சொல்லப்பட்டிருக்கிறது. பல்லாயிரக்கணக்கான உயிர்கள் பலி கொள்ளப்பட்டதற்குப் பின்னாலும், பல ஆயிரக்கணக்கான கோடி ரூபாய் நமக்கு நஷ்டத்தை ஏற்படுத்தியதற்குப் பின்னாலும், இன்னும் ஆராய்ச்சி நிலையிலேயே இருக்கிறது என்று சொன்னால், இப்படிப்பட்ட சுனாமி பேரலைகள் மற்றும் நில நடுக்கத்திலிருந்து மக்களைப் பாதுகாப்பதற்குரிய வாய்ப்பு இல்லாமல் போய்விடுகிற அபாயம் இருக்கிறது. ஆகவே, இதைப் பற்றி மத்திய அரசாங்கத்தை வலியுறுத்துவதற்கும், நமது மாநில அரசு இதைப் பற்றித் தகுந்த ஆய்வுகளை மேற்கொண்டு, நமது மாநிலத்தில் தற்காப்பு நடவடிக்கைகளை எடுப்பதற்கும் உரிய முயற்சிகளை விரைவாக மேற்கொள்ளுமா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-20

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சுட்டிக்காட்டியதைப்போல, மத்திய அரசின்மூலமாக உலக அளவிலே நில நடுக்கத்தை முன்னாலேயே கண்டறியக்கூடிய ஆய்வு முடிக்கப்பட்டு, வாய்ப்பு இருப்பதாகக் கண்டறியப்பட்டுவிட்டால், நிச்சயமாக அதைப் பின்பற்றுவதற்குத் தமிழக அரசு தயாராக இருக்கின்றது. குறிப்பாக, அவர் சொன்னதைப்போல, மத்திய அரசே செய்கின்றது என்றல்ல; மாநில அரசும் இதிலே முழு அக்கறை எடுத்து, ஏற்கெனவே சுனாமியைக் கண்டறிவதற்காக 6 மையங்கள் அமைக்கின்ற அந்தப் பணிகள் இன்றைக்குப் பாதியளவிற்கு வந்திருக்கின்றன. அதைப்போல, நில நடுக்கத்தைக் கண்டறிவதுதான் இன்னும் ஆய்வு நிலையில்

இருக்கிறது. எதிர்காலத்திலே அதற்குரிய ஆய்வுகள் முடிக்கப்பட்டால், உலக அளவிலே இது நிச்சயமாகப் பரவலாக்கப்படும். அப்படி ஆய்வுகள் முடிக்கப்பட்டுக் கண்டறியப்பட்டவுடனே, தமிழகத்திலே நில நடுக்கத்தைக் கண்டறிவதற்குரிய அந்தப் பணியை நிச்சயமாகத் தமிழக அரசு மேற்கொள்ளும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோவை தங்கம், அமைச்சர் தெளிவான பதிலைச் சொல்லிவிட்டார். வேறு ஏதாவது கேள்வி இருக்கிறதா? *(குறுக்கீடு)* திரு. கோவை தங்கம்.

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விரிவான விளக்கத்தைத் தந்திருக்கின்றார்கள்; விளக்கமான அறிக்கையையும் தந்திருக்கின்றார்கள். இருந்தாலும், சுனாமி எச்சரிக்கை மையம் ஒன்று ஹைதராபாத்தில் இருப்பதாகவும், இந்தியக் கடல்சார் ஆராய்ச்சி மையத்தை நிறுவ மத்திய அரசால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்றும் குறிப்பிட்டார்கள். அதற்கான ஏற்பாட்டை வேகமாகச் செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். நில நடுக்கத்தைப் பொறுத்தவரையில், இரண்டு மாதங்களுக்கு முன்பு நீலகிரி மாவட்டம், ஊட்டியில் நில நடுக்கம் ஏற்பட்டதைத் தாங்கள் அறிவீர்கள். ஆகவே, நீலகிரி மாவட்டத்திலும், வால்பாறையிலும் இந்த நில நடுக்கத்தைப் பதிவு செய்யும் கருவியை நிறுவுவதற்கு வேண்டிய நடவடிக்கையை அரசு எடுக்குமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** தற்சமயம் தமிழகத்திலே 3 இடங்களிலே நில நடுக்கத்தைப் பதிவு செய்கின்ற அமைப்புகள் இருக்கின்றன. சென்னை, சேலம், கொடைக்கானல் ஆகிய இடங்களிலே நில நடுக்கத்தைப் பதிவு செய்கின்ற மையங்கள் இருக்கின்றன. எதிர்காலத்திலே மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை அரசு பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. ஜெயக்குமார்.

**திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய இந்திய தீபகற்பத்தில் உள்ள தமிழகம், மண்டலம் இரண்டு மற்றும் மூன்றில் உள்ள ஒரு பயங்கரமான சூழ்நிலையில், ஏற்கெனவே இயற்கைப் பேரிடர்களைக் கடந்த காலங்களில் நாம் தொடர்ச்சியாகப் பெற்றிருக்கின்ற ஒரு சூழ்நிலையில், சுனாமிபோன்ற ஆழிப் பேரலைகளால் தாக்கப்பட்டு, 8,000-க்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்த நிலையில், நம்முடைய மத்திய அரசு இது குறித்து ஆய்ந்து, தன்னுடைய அறிக்கையைச் சமர்ப்பிக்கின்ற இடைக்காலத்தில், நம்முடைய தமிழ்நாட்டைப் பொறுத்தளவில் ஆயிரம் கிலோ மீட்டர் நீளமுள்ள கடற்கரைப் பகுதியில் இயற்கைப் பேரிடர், சுனாமிபோன்ற பேரிடர்கள் வரும்போது, அவற்றைத் தடுப்பதற்குரிய அந்த முன் நடவடிக்கை என்று சொன்னால், முகத்துவாரங்களை ஆழப்படுத்துவதன்மூலமும், அதே நேரத்திலே ஆயிரம் கிலோ மீட்டர் நீளமுள்ள கடற்கரையிலே அதிகமான மரங்கள் நடப்படுவதன்மூலமும் சுனாமி போன்ற ஆழிப் பேரலைகளை முழுமையாகத் தடுக்க முடியும் என்பது எல்லோருடைய கருத்துமாகும். முன்கூட்டியே அதைச் செய்வதற்கு வேண்டிய நடவடிக்கைகளை அரசு எடுக்குமா என்பதை அறிய விரும்புகின்றேன்.



**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சுட்டிக்காட்டியதைப்போல, மாண்புமிகு முதல்வர் அவர்கள் 24-6-2006 ஆம் நாளன்று தமிழகத்தில் இருக்கின்ற குறிப்பிட்ட 13 மாவட்டங்களினுடைய ஆட்சித் தலைவர்களையும் அழைத்து, விரிவான கூட்டங்களை நடத்தி, எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து எங்களுக்கு அறிவுரை வழங்கியிருக்கிறார்கள். அதனுடைய அடிப்படையிலே நம்முடைய மாண்புமிகு நிதி அமைச்சர் தலைமையிலே அதற்குப் பின்னால் இரண்டு கூட்டங்கள் கூட்டப்பட்டு, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் சுட்டிக்காட்டியதைப்போல, மீன் பிடிக்கின்ற முகத்துவாரங்கள் எல்லாம் இன்றைக்குப் பழுதுபார்க்கப்பட்டு, சரி செய்யப்பட்டு, எதிர்காலத்திலே சுனாமி ஆழிப் பேரலை வந்தாலும், அதைத் தாங்கக்கூடிய அளவிற்கு அரசு விரைந்து நடவடிக்கை எடுத்து வருகின்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன? திரு. சிவபுண்ணியம், நீங்கள்தானே கேள்வியை முதலிலே கேட்டீர்கள்?

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நில நடுக்கத்தைப் பொறுத்தவரையிலும் தமிழகம் இரண்டாவது, மூன்றாவது மண்டலங்களிலே இருப்பதாகக் குறிப்பிட்டுச் சொல்லப்பட்டிருக்கிறது. சில மாவட்டங்களையும் இங்கே அறிக்கையிலே குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, அந்த மாவட்டங்களிலே முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக நமது அரசின்

[2007 ஏப்ரல் 2

சார்பிலே என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன? குறிப்பாக, கட்டடங்கள் கட்டுவதற்கான முயற்சிகள் எடுக்கப்படுகிறபோது, அதற்குரிய தொழில்நுட்ப யுக்திகளை நமது அரசு அந்த மாவட்டங்களுக்கும், அந்த மாதிரியான பகுதிகளுக்கும் வழங்குகிறதா? வானிலை ஆராய்ச்சி மையம்மூலமாக இப்பொழுது முன்கூட்டியே தகவல் வழங்கப்படுகிறது. தொலைக்காட்சி, வானொலிமூலமாகவும், சுனாமி பாதிப்பு, நில நடுக்கத்தை அறிவிக்கிறோம் என்று சொல்கிறார்கள். ஆனால் நம்முடைய 'வானிலை அறிவிப்பு' என்று சொல்கிறபோது, அது வித்தியாசமாக இருக்கிறது. மேகம் கறுக்கிறது என்று சொன்னாலே, அது வெளுத்துவிடுகிறது; புயல் வருகிறது என்று சொன்னால், வராது; சுனாமியைப் பற்றியே பேசாதபோது, அது வந்து தாக்கிவிடுகிறது. ஆகவே, போதுமான அளவு விஞ்ஞானத் தொழில்நுட்பத்தோடு அது செயல்படவில்லை என்றுதான் கருதுகின்றேன். அதை மேம்படுத்துவதற்கான முயற்சியையும் அரசு எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 10–25*

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சுட்டிக்காட்டியதைப்போல, கடலோரப் பகுதிகளிலே ஏறத்தாழ 52 இடங்களிலே எச்சரிக்கை மையங்கள்—warning centres—ஏற்கெனவே செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. இப்போது வானிலை மட்டும் இல்லாமல் அந்தந்தப் பகுதிகளிலே ஏதாவது புயலோ அல்லது வேறு ஏதும் வருகின்றது என்று சொன்னால், பெரிய அலைகள் வருகின்றன என்று சொன்னால், கடல் சீற்றம் வருகின்றது என்றால், உடனே தெரிவிப்பதற்கு warning centres 52 இடங்களிலே பயன்பட்டு வருகின்றன. அதோடு அவர், இப்போது கட்டப்படக்கூடிய வீடுகளுக்கு என்ன பாதுகாப்பு இருக்கிறது என்று கேட்டார். நாம் ஏற்கெனவே இருக்கக்கூடிய நடைமுறைகளிலே, கடலோரப் பகுதிகளிலே, அலைகளைத் தாங்குகின்ற அளவிற்கு இன்றைக்கு வனத் துறையின்மூலமாக wind breaker என்கின்ற சதுப்பு நிலக் காடுகளை உருவாக்கிக்கொண்டிருக்கிறோம். அப்படி உருவாக்கிவிட்டோம் என்றால், நிச்சயமாகப் புதிதாகக் கட்டப்படுகின்ற வீடுகளுக்கு முழுப் பாதுகாப்பு இருக்கும். எதிர்காலத்திலே சுனாமி ஆழிப் பேரலைபோன்ற நிலை ஏற்பட்டாலும்கூட, புதிய வீடுகளைப் பாதிக்காத அளவிற்கு இன்றைக்கு வனத் துறையின்மூலமாகக் காடுகள் அமைக்கப்பட்டு வருகின்றன.



2007 ஏப்ரல் 2]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 9, மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவை தங்கம், மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள்.

**9—**

## கிளை அச்சகம்

***16279—திரு. கோவை தங்கம்:**

மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறையில் கிளை அச்சகம் ஒன்றை ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி, செய்தித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) இது தொடர்பான செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசிடம் இல்லை. எனவே, வினா எழவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவை தங்கம்.

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வால்பாறையில் ஒரு கிளை அச்சகம் துவக்க வேண்டுமென்று வினா எழுப்பியிருக்கின்றேன். காரணம், அரசுப் பணிகளுக்கும், அரசு அலுவலகங்களுக்குத் தேவையான ஸ்டேஷனரிக்கும், அழைப்பிதழ் போன்றவற்றிற்கும் கோவை மாவட்டத்திற்குத்தான் வர வேண்டும். அங்கேயிருந்து 100 கிலோ மீட்டர் தூரம் கோவைக்கு வர வேண்டியிருக்கிறது. அரசினுடைய பணமும் வீணாகிறது; நேரமும் வீணாகிறது. ஆகவே, அரசு ஒரு கிளை அச்சகத்தை வால்பாறையிலே துவக்குவதற்கு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு அச்சகங்கள் சென்னையிலே இரண்டு இருக்கின்றன; மதுரையிலே இரண்டு இருக்கின்றன; சேலத்தில் ஒன்று, புதுக்கோட்டையில் ஒன்று, திருச்சியில் ஒன்று, விருத்தாசலத்தில் ஒன்று என இந்த இடங்களிலே எல்லாம் கிளை அச்சகங்கள் இருக்கின்றன.

தேவையான அரசு ஆவணங்களை அச்சடிக்க இந்த அச்சகங்களே போதுமானவையாக இருக்கின்றன. வால்பாறைக்குத் தேவையானவை சேலத்திலும், திருச்சியிலும், மதுரையிலும் அச்சடிக்கப்பட்டு வருகின்றன. தற்போது நவீனமயமாக்கும் திட்டம் நிறைவேற்றப்பட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. முழுவதும் நவீனமயமாக்கப்பட்டபின் தரமாக, இன்னும் கூடுதலாக அச்சிடும் பணியைச் செய்ய இயலும். எனவே, வால்பாறையில் தனியாக அச்சகம் நிறுவத் தேவையில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவை தங்கம்.

**திரு. கோவை தங்கம்:** பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய கேள்வியின் நோக்கமே, சுமார் 30 ஆயிரம் பேர்கள் வால்பாறையைவிட்டுத் திருப்பூருக்கு வேலைக்கு வந்துவிட்டார்கள். அங்கே வேலைவாய்ப்பு ஒன்றுமே கிடையாது. இப்படி ஒரு கிளை அச்சகத்தை உருவாக்கினாலாவது அங்கே வேலைவாய்ப்புக் கிடைக்குமா என்பதற்காகத்தான் இந்தக் கேள்வியையே கேட்டிருக்கின்றேன். ஆகவே, பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதை மீண்டும் பரிசீலனை செய்வாரா என்பதைத் தங்களின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி:** தேவை ஏற்படின், அரசு இது குறித்துச் சிந்திக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. இராமசாமி.

**திரு. தி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு அரசினுடைய செய்தி, விளம்பரப் படங்கள் இதற்கு முன்பு எல்லாத் திரையரங்குகளிலும் கண்டிப்பாகக் காட்டப்பட்டன. ஆனால் இப்போது இல்லை என்று நினைக்கின்றேன். அவற்றைத் திரையரங்குகளிலே விளம்பரப்படுத்துவதோடு, டி.வி. சேனல்களிலும் அரை மணி நேரம் கொண்டு வருவதற்கான முயற்சியைத் தமிழக அரசு எடுக்குமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி:** பேரவைத் தலைவர் அவர்களே, அரசு செய்திப் படம் எல்லாத் திரையரங்குகளிலும் காட்டப்பட்டு வருகிறது. அதேபோல, பொது மக்கள் கூடுகின்ற இடங்களில் எல்லாம்



அரசு சின்னத் திரைகள்மூலமாக அரசினுடைய அத்தனை சாதனைகளும் எடுத்துக் காட்டப்பட்டு வருகின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. த. தியோடர் ரெஜினால்டு.

**திரு. த. தியோடர் ரெஜினால்டு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தினுடைய அரசு அச்சகமானது, என்னுடைய தொகுதியில் தக்கலையில் உள்ளது. அது போதிய நிதி இல்லாமல், பணியாளர்கள் இல்லாமல், நவீன அச்சு இயந்திரங்கள் இல்லாமல், நவீன யுக்திகள் கையாளப்படாமல் மிகவும் பின்தங்கிய நிலைமையில் உள்ளது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் போதிய நிதியை ஒதுக்கி, பணியாளர்களை அமர்த்தி, நவீன இயந்திரங்களைப் புகுத்தி, நவீன யுக்திகளைக் கையாண்டு, அதைப் புனரமைக்க முன்வருவார்களா என்பதையும், அது அரசு நிலத்தில் உள்ளது, தேவைப்பட்டால் என்னுடைய தொகுதி நிதியிலிருந்து நான் கட்டடங்களைக்கூடக் கட்டிக் கொடுக்கத் தயாராக இருக்கின்றேன்; என்னுடைய மாவட்டத்தினுடைய அச்சகமான காரணத்தினால், அதில் தனிக் கவனம் செலுத்தி அதை நவீனப்படுத்த அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2006–2007 ஆம் ஆண்டு பகுதி–II திட்டத்தில், இந்தத் துறையிலுள்ள அச்சகங்களை ரூ.193.15 இலட்சம் செலவில் கணினிமயமாக்கவும், உபகரணங்களைப் புதுப்பிக்கவும் அரசாணைகள் வெளியிடப்பட்டுள்ளன. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து கட்டடம் கட்டித் தருவதாக உறுதியளித்திருக்கிறார்கள். அதை வரவேற்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 10, மாண்புமிகு உறுப்பினர் திரு. தா. மலரவன், மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

**10—**

## கம்பிவட ஊர்தி

***10133—திரு. தா. மலரவன்:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோயம்புத்தூரிலுள்ள மருதமலை முருகன் கோயிலுக்குக் கம்பிவட ஊர்தி வசதி செய்து தர அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கோயம்புத்தூர் மாவட்டம், மருதமலை அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில், மலையின்மீது அமைந்துள்ளதால், இத்திருக்கோயிலுக்கு வரும் பக்தர்களின் வசதிக்காகச் சாலை அமைக்கப்பட்டு, இச்சாலை வழியாகத் திருக்கோயில் பேருந்து, சிற்றுந்துகள் மற்றும் இரு சக்கர வாகனங்கள்மூலம் இத்திருக்கோயிலுக்குப் பக்தர்கள் வருகைபுரிந்து சுவாமி தரிசனம் செய்கின்றனர். இது தவிர, அடிவாரத்திலிருந்து பக்தர்கள் நடந்து மலைமேல் வருவதற்கு வசதியாக, மலை அடிவாரத்திலிருந்து திருக்கோயில் வரை 837 படிக்கட்டுகள் அமைக்கப்பட்டுள்ளன. அதில் நிழல் மண்டபங்களும் அமைக்கப்பட்டுள்ளன. இவ்வழியாகவும் பக்தர்கள் திருக்கோயிலுக்கு வந்து சுவாமி வழிபாடு செய்கின்றனர். ஆகவே, அப்படிப்பட்ட சூழ்நிலையில் பக்தர்கள் தடையில்லாமல் வந்து செல்கின்ற காரணத்தால், இத்திருக்கோயிலுக்குத் தற்போது கம்பிவட ஊர்தி (Rope Car) அமைத்திட வேண்டிய அவசியம் எழவில்லை என்பதைத் தங்கள்மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. தா. மலரவன்.

**திரு. தா. மலரவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மருதமலை திருக்கோயில் என்பது ஒரு பிரசித்திபெற்ற ஆலயமாக, ஏழாவது படை வீடு என்று முருக பக்தர்களால் அழைக்கப்பட்டு வருகிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதைப்போல, அங்கேயிருக்கக்கூடிய படிக்கட்டுக்கள் எல்லாம் அரசின் சார்பிலே அமைக்கப்பட்டதல்ல. அன்றைக்கு அந்த ஆலயத்தை நிர்மாணித்து, எல்லா வசதிகளும் செய்து கொடுக்க வேண்டுமென்ற நல்ல



எண்ணத்தோடு, திரைப்படத் தயாரிப்பாளர் சாண்டோ எம்.எம்.ஏ. சின்னப்ப தேவர் அவர்களால்தான் அந்தப் படிக்கட்டுகள் அமைக்கப்பட்டன. அது மட்டுமல்லாமல், அந்த ஆலயத்திற்கும், திராவிட இயக்கத்திற்கும் ஒரு தொடர்பு உண்டு என்பதையும் நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏனென்று சொன்னால், அங்கே படிக்கட்டுகளை அமைத்து, மின் விளக்குகளைப் போட்டு, மின் விளக்கை ஏற்றி வைக்க வேண்டுமென்று அன்றைக்கு சாண்டோ எம்.எம்.ஏ. சின்னப்ப தேவர் அவர்கள் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களிடத்திலே கேட்டுக்கொண்டார்கள். புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களும் அந்த நேரத்திலே அங்கே சென்று light-க்கான switch-ஐ on செய்து மின் விளக்கினை ஏற்றி வைத்தார்கள். அதன் பிறகு, குமாரபாளையத்திலே தி.மு.க.வினுடைய பொதுக் குழு நடைபெற்றது. அன்றைக்கு, திராவிட முன்னேற்றக் கழகம் கடவுள் மறுப்புக் கொள்கையை உறுதியாகக் கடைப்பிடித்திருந்த நேரம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மலரவன், கேள்வியைக் கேளுங்கள்.

**திரு. தா. மலரவன்:** கேள்வியைத்தான் கேட்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதிலே பெரிய விளக்கம் ஒன்றும் வேண்டாம். என்ன அது? மாநாட்டிற்கும், இதற்கும் எல்லாம் என்ன தொடர்பு இருக்கிறது? (குறுக்கீடு) கேள்வியை மாத்திரம் கேளுங்கள். (குறுக்கீடு) கோயிலுக்கு Rope Car வேண்டுமென்று கேளுங்கள்.

**திரு. தா. மலரவன்:** கேள்வியைத்தான் கேட்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கோயிலுக்கு Rope Car வேண்டுமென்று கேளுங்கள்.

**திரு. தா. மலரவன்:** இப்படிச் சொல்லிவிட்டால் எப்படி? கேள்வியைத்தான் கேட்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்வியை மட்டும் கேளுங்கள். அதைவிட்டுவிட்டு எங்கெங்கெல்லாமோ சுற்றிச் சுற்றி வருகிறீர்களே?

**திரு. தா. மலரவன்:** அப்படிப்பட்ட காலமாக இருந்ததனால், அந்தப் பொதுக் குழுவிலேகூட, "எப்படி எம்.ஜி.ஆர். போய் அங்கே விளக்கை ஏற்றலாம், கோயிலுக்குப் போய் விளக்கை ஏற்றலாம்" என்ற கேள்விகளை எல்லாம் எழுப்பினார்கள். பேரறிஞர் அண்ணா

அவர்கள், "என்னைக் கேட்டுவிட்டுத்தான் எம்.ஜி.ஆர். சென்றார்; விளக்கு ஏற்றுவதற்குக்கூடத் தடையா?" என்று சொல்லி, அந்தப் பொதுக் குழுவிலே விவாதம் எல்லாம் நடைபெற்றது. ஆகவே, அப்படிப்பட்ட தொடர்புள்ள ஓர் ஆலயம் என்பதற்காகத்தான் நான் இதைக் கோடிட்டுக் காட்டுகின்றேன். இன்றைக்கு அது முருக பக்தர்களுடைய ஏழாவது படை வீடாகவும் திகழ்ந்துகொண்டிருக்கிறது; ஒரு மிகப் பெரிய சுற்றுலாத் தலமாகவும் திகழ்ந்துகொண்டிருக்கிறது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதற்கு 'இல்லை' என்று சொல்லாமல், அங்கே Rope Car வசதியையோ அல்லது Winch—இழுவை இரயில் வசதியையோ செய்து கொடுத்தால், அங்கே பக்தர்கள் இன்னும் விரைவாகச் சென்று சுவாமி தரிசனம் செய்வதற்கு ஏதுவாக இருக்கும். இதைச் செய்து கொடுக்க வேண்டுமென்று அமைச்சர் அவர்களைத் தங்கள்மூலமாகக் கேட்க விரும்புகிறேன்.

*முற்பகல் 10–35*

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே குறிப்பிட்டதைப்போல, இரண்டு வழிகளில் பக்தர்கள் தங்குதடையில்லாமல் உரிய வசதிகளோடு சென்று வருகின்ற காரணத்தால் அங்கே கம்பிவட ஊர்தி தேவையில்லை என்ற கருத்து பெறப்பட்டிருக்கிறது. திருக்கோயில்களைப் பொறுத்தவரையில், அரசு மட்டும்தான் அந்தக் காரியங்களைச் செய்ய வேண்டும் என்பதில்லை என்பதை அவருடைய வினாவிலே விளக்கிச் சொல்லியிருக்கின்றார். காரணம், அங்கே படிக்கட்டுகளை அமைத்ததுகூட திரைப்படத் தயாரிப்பாளர் திரு. சாண்டோ சின்னப்ப தேவர் என்றும் குறிப்பிட்டிருக்கின்றார்கள். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மிக ஆர்வமாகவும், அதிகமான பக்தியில் ஈடுபாடுகொண்டவராகவும் இருந்தால், தாங்கள் விரும்புகின்ற அந்த ஊர்திக்குத் தாங்களே முன்வந்து நிதி உதவி அளித்து, அதைச் செய்தாலும்கூட வரவேற்பதற்குத் தயாராக இருக்கின்றோம். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பரஞ்சோதி. (குறுக்கீடு) சரி, சொல்லுங்கள். என்ன? திரு. மலரவன், சொல்லுங்கள்.

**திரு. தா. மலரவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் பக்தியோடு இருப்பதால் அவரே முன்வந்து செய்ய



வேண்டுமென்று அமைச்சர் சொல்லுகிறார். எல்லோரும் தனிப்பட்ட முறையில் அவர்களே செய்ய வேண்டுமென்று சொன்னால், அரசாங்கம் தேவையில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, அரசாங்கம் செய்ய வேண்டுமென்றுதான் நான் கேட்டுக்கொள்கின்றேன். அதைச் செய்தால், அதனால் அரசுக்கும் வருமானம் வரும்; ஆலயத்திற்கும் இன்னும் வருமானம் அதிகம் வரக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. ஆகவே, நீங்கள் அடுத்த பட்ஜெட்டிலாவது அதை நிறைவேற்ற வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அறநிலையத் துறையைப் பொறுத்தவரையில், அரசு ஒரு பகுதியிலே உதவி செய்து இந்தத் துறையைக் கவனித்து வந்தாலும்கூட, மேம்படுத்தினாலும்கூட, தனியார்கள், பக்தர்கள் இந்த அறநிலையத் துறைக்குக் கொடைகள்மூலமாகத் திருப்பணிகள்போன்ற காரியங்களில் ஈடுபட்டுக்கொண்டிருக்கிறார்கள் என்பதற்காகத்தான் நான் அதைச் சுட்டிக்காட்டினேனே தவிர, அரசு இதைக் கண்டுகொள்ளவில்லை என்று உறுப்பினர் கருத வேண்டாம் என்பதை மீண்டும் நினைவுபடுத்த விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பரஞ்ஜோதி. (குறுக்கீடு) பொறுங்கள்.

**திரு. மு. பரஞ்ஜோதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சி மலைக்கோட்டை உச்சிப் பிள்ளையார் கோயிலுக்கு Rope Car வசதி செய்து தருவதற்கு அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பரஞ்ஜோதி, கோயம்புத்தூரிலுள்ள கோயிலுக்குக் கேட்டால் நீங்கள் திருச்சி கோயிலுக்குப் போய்விட்டீர்களே! (குறுக்கீடுகள்) உட்காருங்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்:** தற்பொழுது அதற்கான வாய்ப்புகள் எழப்பெறவில்லை. வருங்காலத்தில் அரசு இது பற்றிப் பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. மூர்த்தி.

**திரு. டி. மூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காஞ்சிபுரம் மாவட்டம், எனது திருப்போரூர் தொகுதியிலுள்ள திருப்போரூர் முருகன் கோயில் மிக முக்கியப் பிரசித்திபெற்ற ஓர் இடம். அந்தக் கோயிலில் அமைந்துள்ள குளத்தில் குளிக்க வருகின்ற பக்தர்கள் குளிக்கும்போது குளத்திலுள்ள படிகளில் பாசி பிடித்துள்ள காரணத்தினால், வழுக்கி விழுந்து பல உயிர்ச் சேதங்கள் ஏற்பட்டுள்ளன. உயிர்ச் சேதத்தைத் தடுக்கவும், படிகளிலுள்ள பாசியைப் போக்கவும், பாதுகாப்பு நடவடிக்கை எடுக்கவும் அரசு என்ன நடவடிக்கை எடுக்க இருக்கிறது என்பதை அறியத் தங்கள் வாயிலாகக் கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்பொழுது பெருவாரியான குளங்களில் நீராதாரங்கள் இல்லை என்று கேள்விப்பட்டிருக்கின்றோம். ஆனால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற அந்தக் குளத்திலே நீர் தேங்கியிருக்கின்ற காரணத்தினாலே, பாசி பிடிப்பது இயற்கையான ஒன்றுதான். அப்படி உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட அந்தக் குளத்திலே வழுக்கி விழக்கூடிய அளவிற்குப் பாசி பிடித்திருந்தால், அவற்றைக் களைவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு) (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஹசன் அலி, இது கோயிலுக்கு Rope Car அமைப்பது சம்பந்தப்பட்டது. நீங்கள் என்ன கேட்கப் போகிறீர்கள்? சொல்லுங்கள்.

**திரு. கு. ஹசன் அலி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராமநாதபுரம், இராமேஸ்வரம் கோயில் இன்றைக்கு இந்தியாவிலேயே இரண்டாவது புனிதத் தலமாகக் கருதப்படுகின்ற ஒரு கோயில். அதற்கு, தெற்கு, வடக்கு கோபுரங்களுடைய பணி 2000 ஆம் ஆண்டிலே ஆரம்பிக்கப்பட்டது. இதுவரை 1½ கோடி ரூபாய் அதற்காகச் செலவழித்திருக்கிறார்கள். 2004–லே அந்தப் பணிகள் நிறுத்தப்பட்டன. பிறகு, சென்ற சட்டமன்றக் கூட்டத் தொடரிலே மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அந்தப் பணி தொடரும்; அதற்காக இன்னும் 2½ கோடி ரூபாய் செலவிட வேண்டியிருக்கும் என்று சொன்னார்கள். அந்தப் பணி இன்று வரை தொடங்கப்படவில்லை. இரண்டாவதாக, நவபாஷாணம் என்று அழைக்கப்படுகின்ற மற்றொரு புண்ணியத் தலத்திலே, அந்த நகரத்தினுடைய நிலைமையும், அங்கிருக்கும் கோயில்களுடைய நிலைமையும் மிக மோசமான நிலையிலே இருக்கின்றன. இதை ஏற்கெனவே அவர்களுக்கு நான் எடுத்துக் காட்டியிருக்கிறேன். அந்தப் பணிகளும் இதுவரை தொடங்கப்படவில்லை. ஆகவே, அந்தப் பணிகள் தொடருமா? இராமேஸ்வரமும், நவபாஷாணமும் புனிதம் அடையுமா? ஏனென்றால், ரொம்ப அசிங்கமாக இன்றைக்கு இருக்கின்றன அந்த இடங்கள் எல்லாம். நாய்கள் மற்றும் பன்றிகள் ரொம்ப அதிகமாக அங்கே சுற்றுகின்றன. இவைகளுக்கு எல்லாம் (குறுக்கீடு) அது அந்த மந்திரிக்குச் சம்பந்தப்பட்டது அல்ல. இருந்தாலும், கோபுரப் பணிகள் தொடருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.



(முற்பகல் 10–40)

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாங்கள் குறிப்பிட்டதைப்போல, கம்பிவட ஊர்தி சம்பந்தப்பட்ட கேள்வியாக இருந்தாலும், நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. ஹசன் அலி அவர்கள், அவருடைய தொகுதியிலே இருக்கக்கூடிய இராமேஸ்வரம் கோயிலைப் பற்றிக் கேள்வி எழுப்பியிருக்கிறார்கள். வடக்கு, தெற்கு கோபுரங்களுடைய திருப்பணிகள் கடந்த ஆட்சிக் காலத்திலே நடைபெற்றுக்கொண்டிருந்தன. காஞ்சி சங்கர பீடத்தின் சார்பிலே, சங்கர மடத்தின் சார்பிலே அந்தப் பணிகள் மேற்கொண்டு நடைபெற்றுக்கொண்டிருந்தன. கடந்த ஆட்சிக் காலத்திலே அவர்மீது வழக்குத் தொடரப்பட்டு, அவர் கிரிமினல் குற்றவாளி என்று முத்திரை குத்தப்பட்டதன் காரணமாக, இந்து சமய அறநிலையச் சட்டத்தின்படி, கிரிமினல்கள் என்று அவர்கள்மீது வழக்குகள் தொடரப்பட்டால், அறநிலையத் துறை அவர்களிடமிருந்து நிதி உதவிகளைப் பெறுவது தவிர்க்கப்பட வேண்டும் என்பது சட்ட வடிவிலே இருக்கின்றது. ஆகவேதான், அவர் மேற்கொண்ட அந்தப் பணி நின்றுகொண்டு இருக்கின்றது. உரிய வழிமுறைகளைப்பெற்று, பணிகள் தொடர்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. சிறப்புக் கவன ஈர்ப்பு

### கன்னியாகுமரி மாவட்ட மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டது குறித்து

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து (குறுக்கீடுகள்) உட்காருங்கள், சொல்கிறேன். (குறுக்கீடுகள்) முதலில் நான் சொல்வதைக் கேளுங்கள். குமரி மாவட்டத்திலே (குறுக்கீடுகள்) முதலில் நான் சொல்வதைக் கேளுங்கள், உட்காருங்கள். குமரி மாவட்டத்தில் மீன் பிடிக்கச் சென்ற மீனவர்கள்மீது இலங்கை கடற்படையினர் துப்பாக்கிச் சூடு நடத்தியதால் மீனவர்கள் பலியானதையொட்டி, அப்பகுதியில் வாழும் மீனவர்கள் மத்தியில் உருவாகியுள்ள நிலைமை குறித்து மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. எஸ். ஜெயபால், திரு. எஸ். ஜாண் ஜேக்கப், திரு. கோவை தங்கம், திரு. பா. வேல்துரை, திரு. அருள் அன்பரசு, திரு. கரி. இராமசாமி, திரு. நா. இராமகிருஷ்ணன், திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ், திரு. டி. சுதர்சனம், டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன், திரு. ஞா. ஜாண் ஜோசப், திரு. டி. ஜெயக்குமார், திரு. கே.ஏ. செங்கோட்டையன், திரு. ஓ. பன்னீர்செல்வம், திரு. சி. ஞானசேகரன், திரு. வை. சிவபுண்ணியம், திரு. சி. கோவிந்தசாமி, திரு. ஜி.கே. மணி மற்றும் திரு. தி. வேல்முருகன் ஆகியோர் ஒத்திவைப்புத் தீர்மானமாக அறிவிப்புக் கொடுத்துள்ளார்கள். இதனைச் சிறப்புக் கவன ஈர்ப்பாக எடுத்துக்கொள்கிறேன். இது குறித்துச் சுருக்கமாகக் கட்சிக்கு ஒருவர் என்ற முறையில் பேசலாம். முதலில் யார் பேசுகிறீர்கள்? (குறுக்கீடு) உட்காருங்கள், பொறுங்கள். கட்சிக்கு ஒருவர்தான். யார்? (குறுக்கீடுகள்) சரி, மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. ஜெயக்குமார்.

***திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 23 ஆம் தேதியன்று ஏழுதேசம், சின்னத்துறை என்கிற மீனவ கிராமங்களிலிருந்தும், நம்முடைய தமிழ்நாட்டினுடைய கடைசி மீனவ கிராமமாக இருக்கின்ற நீரோடி மீனவ கிராமத்திலிருந்தும் 9 மீனவர்கள் கடலிலே மீன் பிடிக்கச் சென்று, நடுக் கடலில், அதுவும் நம்முடைய இந்திய எல்லைக்குட்பட்ட பகுதியில் மீன் பிடித்துக்கொண்டிருந்தபோது, மரியா என்கின்ற ஒரு படகிலும், இன்னொரு படகிலும் கிட்டத்தட்ட 20 பேர் திடீரென்று இரண்டு படகுகளிலே வந்து கண்மூடித்தனமாக, மிருகத்தனமாகச் சுட்டதில் இரண்டு மீனவர்கள் குண்டு பாய்ந்து உயிரைக்



காப்பாற்றிக்கொள்வதற்காகக் கடலிலே விழுந்து உயிரிழந்த ஒரு சூழ்நிலையும், இரண்டு மீனவர்கள் குண்டு பாய்ந்து அந்த இடத்திலேயே உயிரை இழந்த ஒரு மிகத் துயரமான சம்பவமும், ஒரு மீனவர் குண்டு பாய்ந்து குற்றுயிராக கன்னியாகுமரி மாவட்ட மருத்துவமனையிலே அனுமதிக்கப்பட்டு இறந்ததும், மீதி நான்கு மீனவர்கள் குண்டு மழை பொழிந்தவுடனேயே உடனடியாகக் குனிந்ததன் விளைவாக உயிர் காப்பாற்றப்பட்ட சூழ்நிலையையும் நம்முடைய தமிழ்நாட்டு மீனவர்கள் அறிந்து, இன்றைக்குத் தமிழ்நாட்டு மீனவ மக்கள் மத்தியிலே மட்டுமல்லாமல், பொது மக்கள் மத்தியிலேயும் கொதிப்படைந்த ஒரு நிலைமையும், கவலையும் ஏற்பட்டிருக்கின்றது.

(முற்பகல் 10-45

இன்றைக்கு நம்முடைய தமிழ்நாட்டு மீனவர்களுடைய நிலைமை என்னவென்று சொன்னால், மார்ச் மாதத்திலே மட்டும் கிட்டத்தட்ட 3, 4 நிகழ்வுகள் தொடர்ச்சியாக ஏற்பட்டு, மீனவர்கள் சுடப்பட்டு, அவர்கள் கடலுக்குச் சென்று மீன் பிடித்துக்கொண்டு வருகின்ற ஒரு நிலை மாறி, பிணமாகத் திரும்பி வந்துகொண்டிருக்கின்ற ஒரு துர்பாக்கியமான நிலைமைதான் இன்றைக்கு ஏற்பட்டிருக்கின்றது. இதைவிட மிகவும் கொடுமையானதொரு செயல், நம்முடைய மீனவர்கள் தங்குகடல் என்று சொல்லுகின்ற ஆழ்கடலுக்குச் சென்று மீன் பிடிக்கப் போகும்பொழுது, அவர்கள் ஐஸையும், உப்பையும் கொண்டு செல்வார்கள். பிடிக்கின்ற மீன்களுக்குத்தான் அந்த ஐஸையும், உப்பையும் போடுவார்கள். ஆனால், இன்றைக்கு, எந்த மீனவன் மீன்மீது ஐஸையும், உப்பையும் போடுவதற்கு எடுத்துச் சென்றானோ, அந்த மீனவன் உடல்மீதே அந்த ஐஸையும், உப்பையும் போட்டு, அந்த மீனவனுடைய உடல் இன்றைக்குக் கரைக்குக் கொண்டு வரப்படுகின்றது, ஒரு சோகமான நிலைமையிலே. அதை நினைக்கும்போதே இன்றைக்கு நெஞ்சமெல்லாம் பதைபதைக்கின்றது. அப்படிப்பட்ட ஒரு நிலைமை என்று சொல்லும்பொழுது, எங்கள் கழகத்தின் நிரந்தரப் பொதுச் செயலாளர் மாண்புமிகு அம்மா அவர்கள் உடனடியாக எங்களையெல்லாம் அனுப்பி, பாதிக்கப்பட்ட குடும்பங்கள் ஒவ்வொன்றிற்கும் 25 ஆயிரம் ரூபாய் கொடுக்க வேண்டும், காயமடைந்தவர்களுக்கு 5 ஆயிரம் ரூபாய் கொடுக்க வேண்டும், இன்றைக்கு அந்த மாவட்டத்தில் மீனவ அமைப்புகள் நடத்துகின்ற அந்த ஆர்ப்பாட்டத்திற்கும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் முழு ஆதரவு அளிக்கும் என்று சொல்லி, சனிக்கிழமை அன்று கன்னியாகுமரி மாவட்டத்திற்குச்

சென்று, நேரடியாக ஒவ்வொரு வீட்டிற்கும் சென்று, அந்தத் தொகையை அம்மா அவர்களுடைய உத்தரவின்பேரிலே கொடுத்தோம்.

அப்பொழுது அங்கே விசாரணை செய்ததிலே, அவர்கள் சொன்னது, கன்னியாகுமரிக்கு நேர் கிழக்கே நம்முடைய எல்லையிலே கிட்டத்தட்ட 25, 30 nautical mile-இலே அவர்கள் மீன் பிடித்துக் கொண்டிருந்தபோது—இலங்கை எல்லை என்று சொன்னால், அவர்கள் மீன் பிடித்துக்கொண்டிருந்த எல்லையிலிருந்து கிட்டத்தட்ட 70 nautical miles வரும். நம்முடைய எல்லையிலே வந்து, அவர்கள் துப்பாக்கிச் சூட்டை நடத்தி, கொடூரமான முறையிலே மீனவர்களைத் தாக்கியிருக்கிறார்கள் என்றால், எந்த அளவிற்கு மத்திய அரசும், மாநில அரசும் இதை வேடிக்கை பார்த்துக்கொண்டிருக்கின்றன என்கின்ற அந்தக் கவலையை நான் இங்கே தெரிவித்துக்கொள்வதற்குக் கடமைப்பட்டிருக்கின்றேன். முன்பு இதுபோன்ற ஒரு சம்பவம் நடைபெற்றபோது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள், எங்களுடைய கைகள் பூப்பறித்துக் கொண்டிருக்காது என்கின்ற அந்தத் தகவலை அப்பொழுது சொன்னார்கள். ஆனால், அந்தப் பூக்கள் மீனவர்களுடைய உடலிலே இன்றைக்கு மலர் மாலையாக விழுந்திருப்பதாக எங்களுக்கெல்லாம் கவலையும், அச்சமுமாக இருந்துகொண்டிருக்கின்றது.

பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு, அவர்கள் காணாமல்போன சூழ்நிலையிலே, இன்றைக்கு நாங்கள் நிதியுதவி அளித்தவுடன், அவர்கள் திரும்பி வரவில்லையென்றாலும்கூட இரண்டு இலட்சம் ரூபாய் அளித்திருக்கிறீர்கள். ஆனால், இந்த இரண்டு இலட்சம் ரூபாய் போதாது. ஐந்து இலட்சம் ரூபாய் அவர்களுக்குக் கொடுக்க வேண்டும். ஆனால், இதேபோன்று கடந்த காலங்களிலே மீன் பிடிக்கச் சென்று காணாமல் போன அத்தனை குடும்பங்களையும் நீங்கள் கண்டறிந்து, அவர்களுக்கும் இந்த இரண்டு இலட்சம் ரூபாயை வழங்க வேண்டும். இதுபோன்ற நிகழ்வுகளை வருங்காலத்திலே முழுமையான அளவிற்குத் தடுத்து நிறுத்துவதற்கு வேண்டிய எல்லாவித நடவடிக்கைகளையும் மத்திய, மாநில அரசுகள் இனியும் காலந்தாழ்த்தாமல் விரைந்து செய்திட வேண்டுமென்று இந்த மாமன்றத்தை நான் கேட்டுக்கொள்கின்றேன்; முதலமைச்சரைக் கேட்டுக்கொள்கின்றேன்.

இன்றைக்கு செய்தித்தாளிலே ஒரு செய்தி வந்திருக்கிறது, `தினத்தந்தி`யிலே. Hovercraft--அது மெரினா கடற்கரையிலும், அதே நேரத்திலே கடலிலும் செல்லுகின்ற தன்மை மிக்கது. ஆனால், இங்கே அந்த Hovercraft செல்வதன் பயன் என்ன என்பதைத்



தயவுசெய்து சிந்திக்க வேண்டும். தயவுசெய்து, இதுபோன்ற பிரச்சினைகள் உள்ள பகுதிகளில், நம்முடைய Palk Strait என்று சொல்லக்கூடிய தென் மாவட்டங்களான கன்னியாகுமரி, இராமநாதபுரம், மதுரை, தூத்துக்குடி, புதுக்கோட்டைபோன்ற மாவட்டங்களில் உள்ள கடற்பரப்பிலே இந்த Hovercraft மற்றும் ஹெலிகாப்டர் போன்றவற்றை உடனடியாக ஏற்பாடு செய்து, முழுமையான அளவிற்கு, இன்றிலிருந்து தமிழ்நாட்டிலேயுள்ள மீனவர்களுக்கு இதுபோன்ற பிரச்சினை ஏற்படாது என்கின்ற அந்த உறுதியை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இங்கே தெரிவிக்க வேண்டுமென்று கேட்டு, அமர்கின்றேன். நன்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன்.

*முற்பகல் 10–50*

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகக் கடலோர மீனவர்கள், மீன் பிடிக்கச் சென்றவர்கள் பல காலக்கட்டங்களிலே இலங்கை கடற்படையினரால் சுடப்பட்டு, அவர்களில் சிலர் மாண்டு போயும், சிலர் படுகாயம் அடைந்தும் வந்துகொண்டிருக்கக்கூடிய நிலை தமிழகத்து மீனவர்களுக்கு ஒரு பேரிடியாக அமைந்திருக்கிறது. 29–3–2007 ஆம் தேதி ஐந்து மீனவர்கள் சுடப்பட்டுப் படுகொலை செய்யப்பட்ட காரணத்தினாலே, இன்று குமரி மாவட்டத்திலே இருக்கக்கூடிய மீனவர்களானாலும் சரி அல்லது புதுக்கோட்டை கடலோர மீனவர்கள், அனைவருமே இன்றைக்குப் பல போராட்டங்களில் ஈடுபட்டுக்கொண்டிருக்கிறார்கள். மாண்டு போன சதீஷ், ஜஸ்டின், மரிய ஜான், லீனஸ், ஜீஸஸ்தாஸ் ஆகிய ஐந்து பேர்களின் குடும்பங்களுக்குத் தமிழகத்தினுடைய முதலமைச்சர் மாண்புமிகு கலைஞர் அவர்கள் ஏற்கெனவே இரண்டு இலட்சம் ரூபாயை நிதியுதவியாக அளித்து, இன்று அவர்கள் ஓரளவிற்குக் குடும்பத் தொல்லையிலிருந்து விடுபடுவதற்கான ஒரு சூழலுக்கு வழி கண்டிருக்கிறார்கள். அதை ரூபாய் ஐந்து இலட்சமாக அதிகரித்துக் கொடுக்க வேண்டுமென்ற கோரிக்கையும் இப்பொழுது மீனவர்கள் மத்தியிலே இருந்துகொண்டிருக்கிறது. ஆனால், இப்படி அடிக்கடித் தமிழக மீனவர்கள் சுடப்பட்டு, அவர்கள் தங்களுடைய இன்னுயிரை இழப்பதோடு, இன்றைக்கு அந்தக் குடும்பங்கள் எந்தவிதமான ஆதரவும் இல்லாமல் மிக மோசமான நிலைக்குத் தள்ளப்படக்கூடிய ஒரு சூழலைக் கருதி, மாண்புமிகு முதல்வர் அவர்கள் இது குறித்து ஏற்கெனவே மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களுடைய

கவனத்திற்குக் கடிதங்களை எழுதி, அதற்கான பதிலையும் பெற்றிருக்கிறார்கள். அவர்களேகூட அறிக்கையிலே சொல்கிறபோது, முதலிலே 27–2–2007 ஆம் தேதியும், அதேபோல 28–2–2007 ஆம் தேதியும் மாண்புமிகு பாரதப் பிரதமருக்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் தமிழக மீனவர்களை, இலங்கை கடற்படை தங்களுடைய எல்லையைக் கடந்து வந்து சுட்டு வீழ்த்திய நிலை குறித்துக் கடிதத்தை எழுதியும், மத்தியப் பாதுகாப்பு அமைச்சரகத்திற்கு 23 ஆம் தேதி ஒரு கடிதம் எழுதியும், மாண்புமிகு பாரதப் பிரதமரும் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு 14–3–2007 ஆம் தேதி ஒரு கடிதம், இப்படிப்பட்ட ஒரு சூழல் இனி நிகழாமல் பார்த்துக்கொள்ளக்கூடிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று எழுதியிருக்கிறார்கள்.

இப்படி எழுதிய பின்புங்கூட, 29 ஆம் தேதிய நிகழ்வு தமிழக மீனவர்களுக்கு ஒரு பெரிய இடியைத் தந்திருக்கிறது. ஐந்து பேர் உயிரை இழந்திருக்கிறார்கள். இப்படிப்பட்ட நிலை இருக்கிறபோது இதிலேயும்கூட அரசியல் புகுந்துவிடுகிறது. மீனவர்கள் படுகொலை செய்யப்படுவது ஒன்று; அதேபோல, இப்படிப்பட்ட மீனவர்களுக்கு இன்று ஆதரவு தெரிவிக்கின்ற வகையிலே சில அறிக்கைகளை விடுகிறபோது, நம்முடைய தமிழகத்தில் இருக்கக்கூடிய அரசியல் கட்சித் தலைவர்களும் தங்களுடைய எல்லையை மீறக் கூடாது என்று காங்கிரஸ் கட்சி சார்பாக நான் வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏனென்று சொன்னால், ம.தி.மு.க.வினுடைய பொதுச் செயலாளர் ஒரு அறிக்கை விடுகிறார், இந்த ஐந்து மீனவர்கள் சுடப்பட்ட நிலை குறித்து அவர்கள் அறிக்கை விடுகிறபோது, 'தனது குடிமக்களின் உயிரையும், உடைமைகளையும் காப்பாற்ற வேண்டிய கடமையில் மத்திய, மாநில அரசுகள் தவறிவிட்டன; மக்களின் வரிப் பணத்திலே இயங்கும் இந்திய கடற்படை சிங்கள அரசுக்குச் சேவகம் செய்யும் கைக்கூலியாகிவிட்டதோ எனச் சந்தேகம் எழுகிறது' என்கிற ஒரு கருத்தை அவர்கள் அறிக்கை வாயிலாகத் தந்து, பல பத்திரிகைகளிலே இப்படிச் செய்திகள் வருகின்றன. மத்திய அரசு பொறுப்புணர்ச்சியோடு இதிலே நடந்துகொண்டு, அதற்கான நடவடிக்கையை எடுத்து, மாண்புமிகு முதல்வர் அவர்களுக்குக்கூட பாரதப் பிரதமர் அவர்கள் ஏற்கெனவே 14–3–2007 ஆம் தேதியே ஒரு கடிதம் எழுதியிருக்கிறார்கள். இப்படி ஒரு இறையாண்மைமிக்க, இந்திய அரசியல் சாசனப்படி அமைந்திருக்கிற ஒரு அரசைப் பார்த்து, சிங்கள அரசினுடைய கைக்கூலியா என்று மத்திய அரசையும், மாநில அரசையும் இப்படிப்பட்ட அரசியல் தலைவர்கள் விமர்சிப்பது என்பதை



நிச்சயமாக ஏற்றுக்கொள்ள முடியாது. அவர்கள் அப்படிச் சொல்கிறபோது இன்னும் கடுமையான வார்த்தைகளைப் போட்டு ஒரு அறிக்கை விட்டிருப்பது, உண்மையில் யாரையோ திருப்திப்படுத்துவதற்காக. யாருக்கு யார் கைக்கூலி என்கிற நிலையையெல்லாம் நாம் ஆராய முடியாது. கள்ளத் தோணியிலே போனவர்களெல்லாம் இன்று இப்படிப்பட்ட நிலையை எடுத்து, அவர்கள் மத்திய அரசைப் பார்த்து—ஏனென்று சொன்னால், ஏற்கெனவே (குறுக்கீடுகள்) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் பணிவன்போடு கேட்டுக்கொள்வதெல்லாம்... (குறுக்கீடுகள்)

**திரு. வீர. இளவரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Point of Order.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** No point of order, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. வீர. இளவரசன், உட்காருங்கள் (குறுக்கீடுகள்) உட்காருங்கள்.

முற்பகல் 10–55

**திரு. சி. ஞானசேகரன்:** நான் ஏற்கெனவே அறிவிப்புக் கொடுத்து இருக்கிறேன். ஏற்கெனவே பொறுப்புணர்ச்சியோடு தமிழகத்தினுடைய முதலமைச்சர் அவர்கள் பாரதப் பிரதமருக்குக் கடிதம் எழுதி இதிலே நடவடிக்கை எடுத்திருக்கிறபோது, விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாக இருக்கக்கூடிய, சில பேர்கள்—ம.தி.மு.க.–காரர் சீமா பஷீர் ஏற்கெனவே கைது செய்யப்பட்டிருக்கிறார். இன்றுகூட ஒரு செய்தி. அதிலேகூடப் பார்க்கிறபோது, அந்தச் சிறையிலே இருக்கக்கூடிய பஷீர் அவர்களைப் பார்த்துவிட்டு திரு. வைகோ அவர்கள்... (குறுக்கீடுகள்)

**திரு. வீர. இளவரசன்:** தலைவர் அவர்களே...

**திரு. ஆர். ஞானதாஸ்:** தலைவர் அவர்களே...

**திரு. இரா. விசுவநாதன்:** தலைவர் அவர்களே...

**திரு. டி. ஜெயக்குமார்:** தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வீர. இளவரசன், உட்காருங்கள். திரு. ஞானதாஸ், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) No, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடுகள்) திரு. விசுவநாதன், நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடுகள்)

**திரு. சி. ஞானசேகரன்:** பேரவைத் தலைவர் அவர்களே, நான் இங்கே பணிவன்போடு கேட்டுக்கொள்வதெல்லாம், சிறைக்குச் சென்று சீமா பஷீரைப் பார்த்துவிட்டுத் திரும்புகிற வைகோ அவர்கள், 'ராஜபக்சேவினுடைய ஊதுகுழலா தமிழ்நாட்டினுடைய முதலமைச்சர்' என்றுகூட ஓர் அறிக்கை விட்டிருக்கிறார்கள். *(குறுக்கீடுகள்)* இப்படிச் சில அறிக்கைகளைவிட்டு இதில் குளிர் காய நினைக்கக்கூடிய அரசியல்வாதிகளை நீங்கள் நிச்சயமாகத் தடுத்து நிறுத்த வேண்டும்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஏற்கெனவே ஒரு ஆலோசனையைக் கொடுத்திருக்கிறார்கள். அந்த ஆலோசனைப்படி, இந்தத் தாக்குதலை நடத்துகிறவர்களின் அடையாளங்களையும், அவர்களின் சர்வதேசத் தொடர்புகளையும் கண்டறிய, இந்தச் சம்பவத்தைப் பற்றி விசாரணைக்கு உத்தரவிட வேண்டுமென்றும், அதேபோலக் கூடுதல் ஆட்களுடனும், நவீனப் படகுகள் மற்றும் விமானங்களுடனும் தீவிரமான கடல் மற்றும் வான் கண்காணிப்பிற்காக, கடலோரக் காவல் படை மற்றும் கடற்படை ஆகியவற்றை அதிகரிக்க வேண்டும் என்றும், தற்போது சில குழப்பங்கள் நீடிப்பதால் கிழக்கு அல்லது மேற்குக் கடற்கரை என்று இல்லாமல், தமிழ்நாட்டுக் கடற்கரைப் பகுதி முழுவதும் கடல் ரோந்துக் கண்காணிப்பு முதலானவற்றை ஓரே தலைமையில் கொண்டு வர உத்தரவிட வேண்டுமென்றும், தொடரும் இந்தப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண்பதில் இந்திய அரசின் உறுதியைக் காட்டும் வகையில் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுகிறேன் என்றும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பாரதப் பிரதமருக்கு ஏற்கெனவே கடிதத்தை எழுதியிருக்கிறார்கள். இதிலே மாண்புமிகு பாரதப் பிரதமரிடமிருந்து அடுத்து ஏதாவது பதில் வந்திருக்கிறதா என்பதை நான் அறிய விரும்புகிறேன். அதேபோல . . .

**திரு. டி. ஜெயக்குமார்:** தலைவர் அவர்களே. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஜெயக்குமார், நீங்கள் பேசும்போது யாரும் குறுக்கிடவில்லை. *(குறுக்கீடுகள்)* உட்காருங்கள். Not allowed. *(குறுக்கீடுகள்)*

*(அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று கொண்டிருந்தனர்.)*

**திரு. சி. ஞானசேகரன்:** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் இந்த அளவிற்குக் கடிதம் எழுதி, அதற்கு மாண்புமிகு பாரதப் பிரதமரிடமிருந்து ஏதாவது கடிதம் வந்திருக்கிறதா என்று கேட்டறிவதோடு, இங்கே வைகோ அவர்கள் கொடுத்திருக்கிற அறிக்கையிலேகூட, 'சிங்கள அரசின் கடல் ஆதிக்கத்தினை நிலைநாட்டவும், வேட்டையாடுவதற்காகவும்தான் கூட்டு ரோந்து என்ற சதித் திட்டத்தை நீண்ட நாட்களாக வற்புறுத்தி வந்த நிலையில், சிங்கள அரசுக்குத் துணை போகும்விதத்தில், கூட்டு ரோந்து யோசனையை இங்கே தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் கருணாநிதி வரவேற்றது கண்டனத்திற்குரியது மட்டுமல்லாமல், அவர் இந்தப் பிரச்சினையிலே அந்தர் பல்டி அடித்ததால், தமிழர்களைப் பாதுகாக்க வேண்டுமென்ற உண்மையான உணர்வு அவருக்கில்லை' என்று கூறியிருக்கிறார்கள். முதலில் கூட்டு ரோந்து வேண்டுமென்றால், வேண்டாம்; அது தமிழர்களுக்குத் துரோகம் என்கிறார். அடுத்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அதை வேண்டாம் என்று சொன்னால், உடனே தமிழகத்தைப் பாதுகாப்பது என்ற உண்மையான உணர்வு இல்லை என்று கூறுகிறார். இப்படி, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே... *(குறுக்கீடுகள்) (கூச்சல்–குழப்பம்)*





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள். *(குறுக்கீடுகள்) (கூச்சல்–குழப்பம்)*

**மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ம.தி.மு.க. பொதுச் செயலாளரை 19 மாதங்கள் உள்ளே வைத்தீர்களே, எதற்காக என்பதை அ.இ.அ.தி.மு.க. நண்பர்கள் தெரிவிப்பார்களா? *(குறுக்கீடுகள்) (கூச்சல்–குழப்பம்)* 19 மாதங்கள் உள்ளே வைத்தீர்களே, எதற்காக வைத்தீர்கள்? *(குறுக்கீடுகள்) (கூச்சல்–குழப்பம்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் பேசிக்கொண்டிருக்கிறார். எல்லோரும் உட்காருங்கள். *(குறுக்கீடுகள்) (கூச்சல்–குழப்பம்)* அவர் தன்னுடைய கருத்தைச் சொல்கிறார். மற்றவர்கள் அவர்கள் தரப்பில் பேசும்போது அதற்குப் பதில் சொல்லட்டும், உட்காருங்கள். *(குறுக்கீடுகள்) (கூச்சல்–குழப்பம்)* மாண்புமிகு அமைச்சர், நீங்கள் சொல்லுங்கள். *(குறுக்கீடுகள்) (கூச்சல்–குழப்பம்)*

**மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி:** பத்திரிகையில் வந்த, அவர் வெளியிட்டுள்ள அந்த அறிக்கையைக் கையிலே வைத்துக்கொண்டு திரு. ஞானசேகரன் அவர்கள் உரையாற்றிக்கொண்டிருக்கிறார்கள். அவராக இட்டுக்கட்டி எதுவும் சொல்லவில்லை. *(குறுக்கீடுகள்) (கூச்சல்–குழப்பம்)* நான் கேட்க விரும்புவது, 19 மாதங்கள் ம.தி.மு.க. பொதுச் செயலாளரைச் சிறைச்சாலையிலே வைத்திருந்தீர்களே,

எதற்காக வைத்திருந்தீர்கள் என்பதை இப்போது சொல்ல முடியுமா? (குறுக்கீடுகள்) (கூச்சல்—குழப்பம்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எல்லோரும் உட்காருங்கள். முதலில் அவர் என்ன பேசுகிறார் என்பதைக் கவனியுங்கள். உட்காருங்கள். (குறுக்கீடுகள்) (கூச்சல்—குழப்பம்) என்ன பிரச்சினை? எதிர்க்கட்சித் துணைத் தலைவர், சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) (கூச்சல்—குழப்பம்) எதிர்க்கட்சித் துணைத் தலைவர். மற்றவர்கள் எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் பேசுங்கள்.

(முற்பகல் 11-00)

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக மீனவர்கள் தொடர்ந்து இலங்கை கடற்படையினரால் சுட்டுக் கொல்லப்படுவது வாடிக்கையாகத் தினந்தோறும் நடைபெற்றுக்கொண்டிருக்கின்ற ஒரு நிகழ்ச்சியாக அமைந்திருக்கிறது என்று சொல்லி, தமிழக மீனவர்களைக் காப்பதற்கு மாநிலத்தில் இருக்கின்ற தமிழக அரசாலும், மத்திய அரசாலும் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்று கேட்டு, இந்தச் சூழ்நிலையை அறவே தடுத்து நிறுத்த வேண்டும் என்ற நல்ல நோக்கத்தோடு நீங்களும் சபையை ஒத்திவைத்து, நாம் அந்தப் பிரச்சினையை இங்கே விவாதத்திற்கு எடுத்துக்கொண்டிருக்கின்றோம். ஆனால், மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞானசேகரன் அவர்கள் அதிலிருந்து விலகி, வெளியில் கட்டுரை வாயிலாக, மேடைப் பேச்சின் வாயிலாக சொன்ன கருத்துகளையும், சபையில் இல்லாத ஒருவரைப் பற்றியும் தேவையில்லாமல் இங்கே விவாதத்திற்கு எடுத்துக்கொண்டிருக்கின்றார்கள். முக்கியமான பிரச்சினை. அவர் சொன்னார், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** One minute. சபையை ஒத்திவைக்கவில்லை. சிறப்புக் கவன ஈர்ப்பாக எடுத்துக்கொண்டிருக்கிறோம்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** சரி, சிறப்புக் கவன ஈர்ப்பாக நீங்கள் எடுத்துக்கொண்டிருக்கின்றீர்கள். அதற்கு நன்றி. மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞானசேகரன் அவர்களும் சொன்னார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மத்திய அரசுக்குக் கடிதம் எழுதி இருக்கின்றார் என்றுதான் சொன்னார்கள். மாண்புமிகு முதலமைச்சர் மத்திய அரசுக்குக் கடிதம் எழுதி, மாண்புமிகு பிரதமரின் பதிலும்





பெறப்பட்டு, அதற்குப் பின்னாலும் இந்த நிகழ்வு நடைபெற்றிருக்கின்றது. என்ன பாதுகாப்பை மீனவர்களுக்குத் தரப் போகின்றீர்கள்? அதைப் பற்றித்தான் நாம் இன்றைக்கு சிறப்புக் கவன ஈர்ப்பாகப் பேசிக்கொண்டிருக்கின்றோம். அதையொட்டிப் பேசாமல் ஏதேதோ பேசி, அவர் பிரச்சினையை வேறு வழியில் எடுத்துச் சென்றுகொண்டிருக்கின்றார். அதற்கு சபாநாயகர் அவர்கள் அனுமதி தரப் போகின்றீர்களா? அனுமதி தந்து, அதையும் கேட்டுக்கொண்டிருக்கின்றீர்கள் என்ற சூழ்நிலைதான் இன்றைக்குச் சபையில் நடந்துகொண்டிருக்கின்றது. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஞானசேகரன், நீங்கள் Subject-ஐ மாத்திரம் பேசுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே இந்த 5 மீனவர்கள் மாண்டது குறித்து, இந்தப் பிரச்சினை குறித்து இருக்கக்கூடிய நிலையை எங்களுடைய. . . (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதைத்தான் சொல்லி இருக்கிறார்களே! அதையும் சொல்லும்போது சொல்ல வேண்டியதுதானே? (குறுக்கீடுகள்)

**திரு. சி. ஞானசேகரன்:** என்னை control பண்ண வேண்டாம் அவர்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** Subject–ஐ மாத்திரம் பேசுங்கள், திரு. ஞானசேகரன். (குறுக்கீடுகள்)

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெயபால் அவர்களும், அதேபோல கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்த திரு. ஜாண் ஜோசப் அவர்களும், குளச்சல் தொகுதியிலிருந்து 10 மீனவர்கள் ஏற்கெனவே காணாமல் போய்விட்டிருக்கிறார்கள்; அவர்களைத் தேடிக்கொண்டிருக்கக்கூடிய நிலையில் இன்று இந்திய கடற்படை இருந்துகொண்டிருக்கிறது; தமிழக அரசுக்கு ஏதாவது பதில் கிடைத்திருக்கிறதா என்பதைக் குறித்தும் அவர்கள் அறிய விரும்புகிறார்கள்.

அதேபோல, மீனவர்கள் காக்கப்பட வேண்டும் என்பதிலே மாறுபட்ட கருத்து இன்று மத்திய அரசுக்கும், மாநில அரசிற்கும்

இல்லை. அவர்களும் நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். ஆனால், இந்திய கடற்படைக்கு இங்கே co-ordination, அதாவது ஒருங்கிணைப்பு இருக்க வேண்டும் என்று ஏற்கெனவே மத்திய அரசு இதற்காக ஒரு கூட்டத்தைக் கூட்டி, அங்கே இருக்கக்கூடிய அமைச்சரவை, ஒருங்கிணைப்பு ரோந்து வர வேண்டும் என்று சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். இந்த ஒருங்கிணைப்பு ரோந்தைப் பற்றி ஏற்கெனவே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும்கூட ஒரு கருத்தை, கூட்டு ரோந்து வேண்டும் என்று சொன்னார்கள். பிறகு அதற்குச் சில பேர் எதிர்ப்புத் தெரிவித்தவுடனே, அந்த ரோந்து இப்பொழுது அவசியம் இல்லை என்று அதை விட்டுவிட்டார்கள். இப்பொழுது கூட்டு ரோந்து கேட்டாலும், அவர்கள் தமிழர்களுக்குத் துரோகி என்கிறார்கள். இப்பொழுது அதை விட்டுவிட்டாலும், அந்தர் பல்ட்டி அடித்துவிட்டார்; ஆகவே, தமிழக முதலமைச்சர் மீண்டும் தமிழகத்திற்குத் துரோகி என்கிறார்கள். இப்படிப் போனாலும் கஷ்டம், அப்படிப் போனாலும் கஷ்டம். இதற்கு இன்று சில பேர் அறிக்கை விட்டு, குட்டையைக் குழப்பிக்கொண்டிருக்கக்கூடிய நிலை தமிழகத்திலே இருந்துகொண்டிருக்கிறது. (குறுக்கீடுகள்) நமக்கு இருக்கக்கூடிய பிரச்சினையே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்) நான்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முதலிலே எதிர்க்கட்சியிலே துணைத் தலைவர் யார்? நீங்களா, அவர்களா?, பொறுங்கள். (குறுக்கீடுகள்) கொஞ்சம் பொறுங்கள். எதிர்க்கட்சித் துணைத் தலைவர் யார்? (குறுக்கீடுகள்)

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீனவர்களின் பாதுகாப்பு மிக, மிக முக்கியம். அதற்கு ரோந்து நிச்சயமாகத் தேவை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெளியிலே விட்ட அறிக்கையைப் பற்றிப் பேசலாமா என்று மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் கேட்கிறார்கள். உங்கள் உறுப்பினர் பேசுகிறபோது, வெளியிலே நடந்த உண்ணாவிரதத்தைப் பற்றிக் குறிப்பிடுகிறபோது, சம்பந்தப்பட்ட ஒரு பிரச்சினையைப் பற்றி வெளியிலே அறிக்கை விட்டு, இப்போது பேசி இருப்பது அரசியலாக்கப்படுவதை இங்கே சுட்டிக்காட்டுவதிலே தவறு



என்ன இருக்க முடியும்? முடிந்தால் பதில் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) அதைச் சொல்லிவிட்டார்களே! அதில் ஒன்றும் தவறு இருக்க முடியாது. உங்கள் உறுப்பினர் பேசுகிறபோது, வெளியிலே உண்ணாவிரதம் இருந்ததைப் பற்றி இங்கே பேசினாரே, அது எந்த விதத்திலே சம்பந்தம்? நீங்கள் அரசியல் பேசுகிறபோது, இங்கே அறிக்கையைப் பற்றிப் பேசக் கூடாதா? (குறுக்கீடுகள்) வேறு என்ன?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சுதர்சனம். (குறுக்கீடு) பொறுங்கள், உட்காருங்கள்.

*முற்பகல் 11-05*

**திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர் திரு. ஞானசேகரன் அவர்கள் 5 மீனவர்கள் கொல்லப்பட்ட பிரச்சினையைப் பற்றி விவரமாகவும், விளக்கமாகவும் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காங்கிரஸ் கட்சி உறுப்பினர் திரு. ஞானசேகரன் விவரமாகவும், விளக்கமாகவும் பேசிக்கொண்டிருக்கிறார் என்று நான் சொல்வதற்கே இப்படிக் கூச்சல் போட்டால், இப்படி எல்லாவற்றிற்கும் கூச்சல் போடுகின்ற ஒரு நிலை ஏற்படுமானால், இந்தச் சட்டமன்றம் எப்படி நடைபெறும்? (குறுக்கீடுகள்) நாம் எதையும் சொல்லவில்லை, இவர்கள்மீது குற்றம் சுமத்தவில்லை. ஆனால், விவரமாக, விளக்கமாகச் சொன்னார் என்று சொல்வதற்கே இப்படிக் கூச்சல் போடுகிறார்கள். அவருக்கு ஒரு அக்கறை இருக்கிறது. திரு. ஞானசேகரன் அவர்களுக்கும், காங்கிரஸ் கட்சிக்கும், மற்ற கட்சிகளுக்கும் அக்கறை இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) மீனவர்கள் தாக்கப்படக் கூடாது, மீனவர்கள் படுகொலை செய்யப்படக் கூடாது என்ற எண்ணம் எல்லோருக்கும் இருக்கிறது. அதிலே யாருக்கும் சந்தேகம் இல்லை. இங்கேகூட மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெயக்குமார் அவர்கள் விரிவாக, விளக்கமாகப் பேசினார்கள். அதிலே நாங்கள் யாரும் குறுக்கிடவில்லை. ஆனால்... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மற்றவர்கள் அமைதியாக இருங்கள், அமைதியாக உட்காருங்கள்.

**திரு. டி. சுதர்சனம்:** எங்களுடைய உறுப்பினர் மாண்புமிகு அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பற்றியோ, அந்த உறுப்பினர்களைப் பற்றியோ எதையும் அவர் குறிப்பிட்டுப் பேசவில்லை. ஆனால்,

யாரோ, இந்த மீனவர்களுக்கு, இலங்கையிலே இருக்கின்ற இலங்கை அரசினாலோ அல்லது யாராலோ பாதிக்கப்படுகின்ற மக்களுக்கு நன்மை தேடிக் கொடுக்க வேண்டுமென்று சில யோசனைகளையும் சொல்லிக்கொண்டிருக்கிறார். அதற்கு ஏன் இவர்கள் இப்படிக் கூச்சல் போட்டுக்கொண்டிருக்கிறார்கள் என்று எனக்குப் புரியவில்லை. ஆனால், இவர்கள் இலங்கையிலே வாழ்கின்ற மக்களுக்கு நன்மை செய்யப் போகிறார்களா அல்லது தமிழக மீனவர்கள் இங்கே கொல்லப்பட்டார்களே, அவர்களுக்கு ஏதாவது பாதுகாப்பு நடவடிக்கையிலே ஈடுபடுவதற்கு, அரசுக்கு இவர்கள் உதவி செய்யப் போகிறார்களா, அதைக் கெடுக்கப் போகிறார்களா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எதிர்க்கட்சித் துணைத் தலைவருக்குச் சொல்கிறேன். நீங்கள் ஏதாவது கேட்டீர்கள் என்றால், உங்கள் கருத்து என்னவென்று தெரிந்து கொள்ள உதவியாக இருக்கும். ஓட்டுமொத்தமாகக் கத்தினீர்கள் என்றால், சரியாக வராது. திரு. ஞானசேகரன், பேசுங்கள். Subject-ஐ மாத்திரம் சொல்லுங்கள். *(குறுக்கீடுகள்)*

**திரு. சி. ஞானசேகரன்.:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தின் மீனவர்களுடைய பாதுகாப்பு என்பது மிக, மிக முக்கியமான ஒரு விஷயம் என்பதிலே எங்களுக்கு மாறுபட்ட கருத்து இல்லை. ஏனென்றால், அதற்காகத்தான் ஒத்திவைப்புத் தீர்மானமே கொண்டு வந்திருக்கிறோம். *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சுருக்கமாகச் சொல்லுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** இதிலே நாம் ஒற்றுமையோடு செயல்பட வேண்டும். ஒற்றுமையோடு செயல்பட வேண்டிய ஒரு இடத்தில், இப்படி சில அரசியல் கட்சித் தலைவர்கள் இன்று ஒரு மத்திய அரசாங்கத்தைப் பார்த்து, மாநில அரசாங்கத்தைப் பார்த்து, கைக்கூலியா என்று சொல்வது, அதுவும், சிங்கள இராணுவத்தினுடைய கைக்கூலியா என்று கேட்பது நிச்சயமாக வன்மையாகக் கண்டிக்கத்தக்கது. இதிலே குளிர் காய நினைக்கக்கூடிய கூட்டங்களுக்கு, (மேசையைத் தட்டும் ஒலி) விடுதலைப் புலிகளுக்கு வால் பிடிப்பவர்களுக்கு நிச்சயமாக ஒரு தடையை நீங்கள் ஏற்படுத்தியாக வேண்டும். இதிலே வைகோவைப் பற்றிப் பேசினால், இங்கே இருக்கக்கூடிய அ.தி.மு.க. உறுப்பினர்கள் ஏன்





பதைபதைக்கிறார்கள் என்று எனக்குப் புரியவில்லை. இவர்களுக்கு ஏன் ஆத்திரம் வருகிறது என்று புரியவில்லை. *(குறுக்கீடுகள்)* ஏற்கெனவே வைகோவைப் பல மாதங்கள் மூடிய ஒரு தலைவருடைய கூட்டத்தைச் சார்ந்தவர்கள்தான் இவர்கள். இவர்களுக்கு ஏன் இப்படிக் கோபம் வருகிறது என்று எனக்குப் புரியவில்லை. *(குறுக்கீடுகள்)* *(கூச்சல்–குழப்பம்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காரச் சொல்லுங்கள், *(குறுக்கீடுகள்)* யாராவது ஒருவர் பேசுங்கள். *(குறுக்கீடுகள்)* உட்காரச் சொல்லுங்கள். *(குறுக்கீடுகள்)* எல்லோரையும் உட்காரச் சொல்லுங்கள். *(குறுக்கீடுகள்)* No. அவரவர்கள் இருக்கைக்குப் போய் உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)* நான் சொல்கிறேன். *(குறுக்கீடுகள்)* சொல்கிறேன், கேளுங்கள். நீங்கள் பேச வேண்டுமென்றால் எழுந்து நில்லுங்கள். அதை விட்டுவிட்டு எல்லோரும் எழுந்து நின்றால் நான் யாரை அழைப்பது? *(குறுக்கீடுகள்)* No, not allowed. *(குறுக்கீடுகள்)*

*(அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர்கள் திரு. டி. ஜெயக்குமார் மற்றும் திரு. ஆர். சின்னசாமி ஆகியோர் தங்கள் இருக்கைகளைவிட்டு முன் வரிசையை நோக்கி வந்தனர்.)*

திரு. ஜெயக்குமார், திரு. சின்னசாமி, நீங்கள் உங்கள் இருக்கையைவிட்டு ஏன் இங்கே வந்தீர்கள்? *(குறுக்கீடுகள்)* உங்கள் இருக்கையைவிட்டு எதற்கு இங்கே வந்தீர்கள்? *(குறுக்கீடுகள்)*

*(அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர் திரு. டி. ஜெயக்குமார், மாண்புமிகு பேரவைத் தலைவர் இருக்கைக்கு அருகில் வந்தார்.)*

Issue–வில்தான் பேசச் சொல்கிறேன். *(குறுக்கீடுகள்)* நான் பேசிவிடுகிறேன். *(குறுக்கீடுகள்)* நான் சொல்லிவிடுகிறேன். நீங்கள் எல்லோரும் பேச வேண்டாம், நீங்கள் போய் உட்காருங்கள். உங்கள் இடத்திற்குப் போய் உட்காருங்கள். திரு. சின்னசாமி, இருக்கையைவிட்டு இங்கே வந்தீர்கள் என்றால், நடவடிக்கை எடுப்பேன், உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)* இருக்கையைவிட்டு இங்கே வந்தீர்கள் என்றால், நடவடிக்கை எடுப்பேன், உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)* திரு. ஞானசேகரன். *(குறுக்கீடுகள்)* என்ன? *(குறுக்கீடுகள்)* மற்ற உறுப்பினர்களை உட்காரச் சொல்லுங்கள், அதற்குப் பிறகு பார்க்கலாம். மற்ற உறுப்பினர்கள் உட்கார்ந்தால்தான் நான் பேசச் சொல்ல முடியும். உட்காரச் சொல்லுங்கள். எல்லோரும்

உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் உங்கள் இருக்கைக்குப் போங்கள். திரு. ஜெயக்குமார், நீங்கள் உங்கள் இருக்கைக்குப் போங்கள். திரு. ஞானசேகரன், சீக்கிரம் பேசி முடியுங்கள்.

*முற்பகல் 11–10*

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தின் மீனவர்களைக் காப்பாற்றுகின்ற வகையிலே, ஏற்கெனவே மாண்புமிகு முதல்வர் அவர்கள் சொன்னதைப்போல, உடனடியாக இதற்கு ஒரு விசாரணைக்கு உத்தரவிடுவதற்காக, மத்திய அரசிற்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் இந்த அவையின்மூலமாக ஒரு தீர்மானத்தைப் போட்டாவது நீதி விசாரணைக்கு அவர்கள் உத்தரவிட ஏற்பாடு செய்ய வேண்டும். அதேபோல இங்கே கடலோர எல்லையிலே மீனவர்களைச் சுற்றிப் பாதுகாப்புக் கொடுப்பதற்கு நவீனப் படகுகளைப் பயன்படுத்த வேண்டும். வான்வெளியிலிருந்துகூட கண்காணிக்கின்ற ஒரு நிலையை உருவாக்கி, தமிழக மீனவர்களுக்கு முழுமையான பாதுகாப்பைத் தந்து, ஏற்கெனவே காணாமல் போன மீனவர்களைத் தேடிக் கண்டுபிடித்துத் தருவதற்கும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்றும் இந்த அவையின்மூலமாகக் கேட்டு, அமைகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வேல்முருகன். (குறுக்கீடுகள்) எல்லோரும் அமைதியாக இருங்கள்.

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தின் கடலோடிகளை, தமிழகத்தின் மீனவர்களை சிங்களப் பேரினவாத கடற்படை தொன்றுதொட்டு இன்று வரையில் கொன்று குவித்து வருகின்றது. குறிப்பாக, சிங்கள கடற்படை, தமிழக மீனவர்கள் கடல் எல்லையில் மீன் பிடித்துக்கொண்டிருக்கின்றபோது, அங்கே ஆயிரக்கணக்கான மைல்களைக்கொண்ட கடற்பரப்பில் கொஞ்சம் எல்லைகள் தெரியாமல் தவறி வேறு எல்லைக்குச் செல்வதற்கு முன்னாலேயே, அவர்களைக் காட்டுமிராண்டித்தனமாக மிகக் கொடுமையான முறையிலே சுட்டுக் கொல்கின்ற கொடுமை தமிழகத்தில் நிலவி வருகிறது. குறிப்பாக, கன்னியாகுமரியில் இப்போது சுட்டுக் கொலை செய்யப்பட்டிருக்கின்ற 5 மீனவர்களும், அந்த இலங்கை சிங்களப் பேரினவாத கடற்படை சுற்றி வளைத்தபோது, எங்களைச் சுட்டுக் கொன்றுவிடாதீர்கள், நாங்கள் தமிழக மீனவர்கள் என்று தங்களுடைய இரு கைகளையும் உயர்த்தி, 'அபயம்' என்று இலங்கை கடற்படையை நோக்கிச் சரணடைந்தபோது, ஈவு, இரக்கமற்ற



முறையிலே அவர்களைச் சரமாரியாக இயந்திரத் துப்பாக்கிகளால் சுட்டுக் கொலை செய்திருக்கிறார்கள். தமிழக மீனவர்களாக இருந்தாலும், தமிழீழ மீனவர்களாக இருந்தாலும், புலம்பெயர்ந்து நாட்டுக்கு அகதிகளாக வருகின்றவர்களாக இருந்தாலும், தமிழன் என்கின்ற ஒரே அடையாளத்தை அவர்கள் கருத்திலே உள்வாங்கிக்கொண்டால், எந்தவிதக் கேள்விக்கும் இடமளிக்காமல் அவர்களைச் சுட்டுக் கொல்கின்ற நடைமுறையை சிங்கள இராணுவ அரசும், சிங்களப் பேரினவாத அரசும் இன்றைக்குக் கடைப்பிடித்து வருகிற இந்தச் சூழலில் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள், முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் எடுத்திருக்கின்ற நடவடிக்கையை நாங்கள் பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாகப் பாராட்டுகின்றோம். அதே நேரத்தில், இன்றைக்குக் குமரி முனையிலேயும், இராமேஸ்வரம் பகுதியிலேயும், கடலூர் பகுதியிலேயும் மீனவச் சகோதரர்களுக்குப் படுகாயமும், உயிர்ச் சேதமும் ஏற்படுகின்ற சூழலில் விரைந்து சென்று, உயிர்ச் சேதங்களைத் தடுக்கின்ற வகையில் இந்தியப் பேரரசுக்கு வலியுறுத்தி, உடனடியாக இதுபோன்ற பகுதிகளிலே helipad என்று சொல்லக்கூடிய துணை விமான ஊர்தி நிலையம் அமைக்கவும், உடனடியாக விரைந்து சென்று அந்த மீனவச் சகோதரர்களைக் காப்பாற்றுவதற்கு அதிநவீனப் போக்குவரத்து வசதிகளைக்கொண்ட அதிநவீனப் படகுகளை இந்திய அரசாங்கம் கொண்டு வந்து, தமிழக அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் தந்து, தமிழக மீனவர்களைப் பாதுகாக்கின்ற நடவடிக்கையையும் நம்முடைய தமிழக அரசு உடனடியாக எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்ள விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் ஒரு செய்தி. தமிழகத்தின் வரலாற்றில் இதற்கு முன் ஏற்பட்டிராத செய்தி. கடலூரிலே சிங்களப் பேரினவாத அரசுக்கு, அந்த நாட்டுக்குச் சொந்தமான சிங்கள மீனவர்கள் 5 பேர் எல்லை மாறி, தமிழகத்தின் எல்லைக்கு, இந்தியாவின் எல்லைக்கு வருகை தந்திருக்கின்றார்கள். இந்தியப் பேரரசும், தமிழகத்தின் கடலோரக் காவல் படையும், எடுத்தவுடனே, 'அபயம்' என்று சொன்னவர்களைச் சுட்டுக் கொன்றுவிடவில்லை என்ற செய்தி வந்திருக்கிறது. அவர்களைப் பத்திரமாக மீட்டு, அந்த நாட்டினுடைய அரசாங்கத்திற்கு இந்திய வெளியுறவுத் துறையின்மூலமாக நாம் தகவல் தெரிவித்திருக்கிறோம். எந்த மனிதநேயத்தோடு நாம் சிங்கள மீனவர்களை அணுகுகிறோமோ, எந்த மனிதநேயக் கண்ணோட்டத்தோடு அவர்களுடைய உயிருக்கு ஆபத்தில்லாமல் அவர்களைக் கொண்டு வந்து நம்முடைய

எல்லையிலே வைத்து, அந்த நாட்டு அரசாங்கத்திற்கு நாம் தகவல் சொல்கிறோமோ, அந்த நிலைமைகள் எல்லாம் இல்லாமல், இன்றைக்கு சிங்கள அரசு, அப்பாவித் தமிழர்கள் புலம்பெயர்ந்து வருகின்றபோது, எங்கள் சொந்த மண்ணிலே வாழ்கின்ற, எங்கள் சொந்தக் கடலோடிகள், தங்கள் உயிரைக் காப்பாற்றிக்கொள்வதற்கு, அன்றாட வாழ்க்கைக்காக கடல் வாணிபத்திற்குச் சென்று இயற்கையிலிருந்து அவர்கள் மீண்டு வீடு வந்து சேர்ந்தால்தான் உயிர் நிச்சயம் என்ற அந்த நிலையில்கூட, இன்றைக்கு இயற்கைக்கு மாறாக, ஒரு நாட்டினுடைய அரசாங்கமும், ஒரு நாட்டினுடைய முப்படைகளும் எங்கள் தமிழர்களைக் கொன்று குவிப்பது எந்தவிதத்தில் நியாயம் என்பதை நான் பேரவைத் தலைவர் வாயிலாக இலங்கை அரசை, இந்திய அரசின் சார்பாகக் கேட்க விரும்புகிறேன். அடுத்தது, இன்றைக்கு இந்தியாவினுடைய இராணுவம், தமிழக எல்லையிலும், இந்தியாவினுடைய கடல் எல்லையிலும் கண்காணிக்கின்றபோது, சிங்கள. . .

*முற்பகல் 11–15*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கைகள் எல்லாம் இருக்கின்றன. நீங்கள் சுருக்கமாகப் பேச்சை முடியுங்கள். (குறுக்கீடு) Subject-க்கு வாருங்கள்.

**திரு. தி. வேல்முருகன்:** Subject-க்குத்தான் வருகிறேன். அதே எல்லை; அதே மனிதநேயம், சிங்கள கடற்படைக்கு இல்லை என்கிறபோது, இந்திய இராணுவம் நம்முடைய தமிழக மீனவர்களைக் காப்பாற்றுவதற்கு இதுபோன்ற கடுமையான நடவடிக்கைகளை எடுத்து, நாங்கள் சொல்கின்ற அதிநவீனக் கருவிகளையும், படகுகளையும், வானூர்திகளையும் கடல் எல்லையில் நிறுத்தி, அவர்களைப் பாதுகாக்க வேண்டுமென்று கேட்டு, உயிரிழந்த குடும்பங்களுக்கு ரூபாய் ஐந்து இலட்சம் வழங்கி, அவர்களுக்கு வீட்டுக்கு ஒருவருக்கு வேலை வழங்குவதற்கும், இனி இதுபோன்ற சம்பவங்கள் நடைபெறாமல் இருப்பதற்கும், எக்காரணத்தைக்கொண்டும் தமிழகத்தினுடைய மீனவர்கள் வேறு எல்லைகளுக்குச் செல்கின்றபோது, அது இந்திய நாடாக இருக்கலாம் அல்லது இலங்கையாக இருக்கலாம், வேறு எந்த நாட்டினுடைய அரசாங்கங்களும் மீனவர்களை, அந்தக் கடலோடிகளைச் சுட்டுக் கொல்கின்ற நிலைமைக்கு இனி வரக் கூடாது என்கிற ஒரு தீர்மானத்தை இந்தியப் பேரரசு அந்த நாடுகளுக்கு அறிவுறுத்தி, அந்த நாட்டினுடைய வெளியுறவுத் துறைக்கும், அந்த நாட்டினுடைய அமைச்சகத்திற்கும் சொல்லி, இனி எக்காரணத்தைக்



கொண்டும், தடுமாறிச் செல்கின்ற அப்பாவித் தமிழர்களைச் சுட்டுக் கொல்வதற்கு யாருக்கும் உரிமையில்லை என்கிற நிலையை மாண்புமிகு தமிழகத்தினுடைய முதல்வர் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் எடுத்து, இதுதான் தமிழகத்தினுடைய வரலாற்றில் அப்பாவித் தமிழர்களைச் சுட்டுக் கொல்கின்ற கடைசி நிகழ்வாக இருக்க வேண்டுமென்கிற செய்தியை இந்த நேரத்திலே வற்புறுத்தி, இதற்கெல்லாம் காரணமாக இருக்கின்ற, நாம் விட்டுக் கொடுத்த கச்சத் தீவை மீண்டும் நம்முடைய தமிழர்களுக்குப் பெற்றுத் தந்து, தமிழகத்தினுடைய மீனவர்கள் அந்தக் கச்சத் தீவிலே வலைகளை உலர்த்துவதற்கும், அங்கே சென்று ஓய்வு எடுப்பதற்கும், எங்கே மீன் அதிகமாகக் கிடைக்கிறதோ, அந்தப் பகுதிகளுக்குச் சென்று மீன் பிடிப்பதற்கும் மாண்புமிகு முத்தமிழறிஞர் முதல்வர் அவர்கள் ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டு, இந்தச் சிறப்புக் கவன ஈர்ப்புத் தீர்மானத்தின்மூலமாக அதனை வலியுறுத்தி என் கருத்தைப் பதிவு செய்து, அமர்கிறேன். பேரவைத் தலைவர் அவர்களுக்கு, வாய்ப்புத் தந்தமைக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞா. ஜாண் ஜோசப்.

***திரு. ஞா. ஜாண் ஜோசப்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே; கடலில் சுடப்பட்ட ஐந்து பேர்களும், அதேபோல பாதிக்கப்பட்ட நான்கு பேர்களும் கன்னியாகுமரி மாவட்டத்தைச் சார்ந்தவர்கள். குறிப்பாக, விளவங்கோடு தொகுதியைச் சார்ந்தவர்கள். என்னுடைய தொகுதியைச் சார்ந்தவர்கள். பாதிக்கப்பட்ட நபர்களை உள்ளடக்கியவர்களுக்குப் பிரதிநிதியாக நான் இருந்துகொண்டிருக்கிறேன். அந்த வகையில் இது தொடர்பாகப் பேசுவதற்கு என்னை முதலில் அழைக்காமல் நான்காவதாக அழைத்த தங்களுக்கு முதலில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல, தமிழகத்தில் மிகப் பெரிய குலைநடுக்கத்தை, குறிப்பாகக் கன்னியாகுமரி மாவட்டத்தை நிலைகுலையச் செய்திருக்கக்கூடிய இந்தச் சம்பவத்தை அறிந்தவுடனேயே நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள், மதிப்பிற்கும், மரியாதைக்கும் உரிய கன்னியாகுமரி மாவட்டத்தின் மண்ணின் மைந்தரான சுற்றுலாத் துறை அமைச்சர் திரு. சுரேஷ் ராஜன் அவர்களை மிக விரைவாக அப்பகுதிக்கு அனுப்பியிருக்கிறார்கள். அரசின் சார்பாக அஞ்சலி செலுத்தப்பட்டிருக்கிறது. நிதியுதவியும் வழங்கப்பட்டிருக்கிறது. அவர் பாதிக்கப்பட்ட இடங்களுக்கு

நேரடியாகச் சென்று, விவரங்களை முழுமையாக அறிந்து வந்து, தங்களுக்குத் தகவலும் தெரிவித்திருக்கிறார் என்று கருதுகிறேன். இந்தச் சம்பவம் அறிந்து நானும் உடனடியாக என்னுடைய தொகுதிக்குச் சென்று, இது சம்பந்தமான விவரங்களை அறிந்து இருக்கின்றேன். பாதிக்கப்பட்ட அந்தக் குடும்பங்களையும் சென்று பார்த்தேன். என்னுடைய கட்சியின் சார்பில் நான் அஞ்சலியும் செலுத்தியிருக்கிறேன்.

கடலில் மீன் பிடிக்கச் செல்பவர்கள் காணாமல் போவதும், சுடப்படுவதும் புதிய நிகழ்வு அல்ல. ஏற்கெனவே தமிழகத்தின் பல கடலோரப் பகுதிளைச் சார்ந்த மீனவர்கள் இப்படிப் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள்; சுட்டுத் தள்ளப்பட்டிருக்கிறார்கள். ஆனால், கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில் இதுவொரு புதிய நிகழ்வு. இதுவரையிலும் இப்படிப்பட்ட நிகழ்வு, குறிப்பாக, சுடப்பட்ட நிகழ்வு கன்னியாகுமரி மாவட்டத்தில் நடந்ததில்லை. ஐந்து பேர் சுடப்பட்டிருக்கிறார்கள். இதுவொரு மிகப் பெரிய துயரத்தைத் தரக்கூடிய சம்பவம். அந்தத் துயரத்திற்கு மகுடம் வைத்ததுபோல் இந்த ஐந்து பேரில் மூன்று பேர் ஒரே குடும்பத்தைச் சார்ந்தவர்கள். அதில், சதீஷ், ஜஸ்டின் ஆகிய இரண்டு பேர்களுடைய உடல்கள் இதுவரையிலும் கிடைக்கவில்லை. அவர்களுடைய மைத்துனரான ஜீஸஸ்தாஸ் என்பவரும் அதே குடும்பத்தைச் சார்ந்தவர். இப்படி மூன்று பேர்களும் ஒரே குடும்பத்தைச் சார்ந்தவர்கள்.

முற்பகல் 11-20

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய அறிக்கையை நான் இரண்டு தினங்களுக்கு முன்னால் படித்தேன். ஒரு வேளை அந்த மாவட்டத்தினுடைய அதிகாரிகள் கொடுத்த விவரத்தின் அடிப்படையில் அந்த அறிக்கை அமைந்திருக்கும் என்று நான் கருதுகிறேன். மூன்று பேர் சுடப்பட்டதாகவும், இருவர் தப்பிப்பதற்காகப் படகிலிருந்து குதித்ததாகவும் அந்த அறிக்கையில் கண்டேன். ஆனால், அது சரியான தகவல் அல்ல என்பதை இந்த மாமன்றத்தில் பதிவு செய்ய நான் விரும்புகிறேன்.

தப்பித்து வந்த நபர்களை நான் நேரடியாகக் கண்டு, அவர்களிடத்தில் விவரங்களைக் கேட்டு அறிந்திருக்கிறேன். அவர்கள் என்னிடத்தில் சொன்னார்கள். அவர்கள் இரண்டு பேரும் சுடப்பட்டுத் தண்ணீரில் வீழ்ந்திருக்கிறார்கள். சுட்டுத் தள்ளப்பட்டிருக்கிறார்கள் என்ற தகவலைத்தான் நேரடியாகப்



பார்த்தவர்கள் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, அவர்களும் இறந்திருக்கக் கூடும் என்பதுதான் என்னுடைய கருத்து. இந்தக் குடும்பங்களைப் பொறுத்தமட்டில் அரசு உடனடியாக 2 இலட்சம் ரூபாய் நிவாரணம் வழங்கியிருக்கிறது. அது போதுமானதாக இல்லை. அதை உயர்த்த வேண்டும். குறைந்தபட்சம் 5 இலட்சம் ரூபாய் என்ற கணக்கில் உயர்த்த வேண்டும். மத்திய அரசும் இவர்களுடைய குடும்பங்களைப் புனரமைத்துக்கொள்வதற்குத் தேவையான நிதி ஆதாரங்களைத் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இறந்த குடும்பங்களில், படித்தவர்கள், வேலைவாய்ப்புக்குத் தகுதியானவர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு அரசு வேலை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். அதுபோல, குழந்தைகள் இருக்கிறார்கள். அந்தக் குழந்தைகளைப் படிக்க வைப்பதற்குத் தேவையான நிதியுதவிகளை அரசு சார்பாகச் செய்ய வேண்டும் என்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

கடலில் காணாமல் போவது தொடர்கதையாக இருக்கிறது. எங்களுடைய மாவட்டத்தில் சுமார் ஒரு மாதத்திற்கு முன்னால் 12 பேர் குளச்சல் பகுதியில் காணாமல் போயிருக்கிறார்கள். ஒரு மாதமாகியும் இதுவரையிலும் அவர்கள் என்ன ஆனார்கள் என்ற தகவல் இல்லை. சுமார் 2 மாதங்களுக்கு முன்னால் வேறு இரண்டு பேர் இதுபோல் காணாமல் போனார்கள். அதில் ஒருவர் 3, 4 நாட்கள் கழித்து மீட்கப்பட்டார். கடலில் நடந்த சோக நிகழ்வைப் பற்றி அவர் விவரித்தார். அதை ஒரே நிமிடத்தில் நான் இந்த அவையில் சொல்ல விரும்புகிறேன்.

இயற்கைச் சீற்றத்தால், கடல் கொந்தளிப்பால் பாதிக்கப்பட்டு, அவர்கள் சென்ற படகு கவிழ்ந்தது. அதிலிருந்த இரண்டு பேர் ஒரு காலியான மண்ணெண்ணெய் can-ல் தொற்றிக்கொண்டு வெள்ளத்தில் மிதந்து நின்றுகொண்டிருக்கிறார்கள். மூன்று நாட்கள் கழித்து, கரையிலிருந்து இவர்களைத் தேடிச் சென்ற படகு அவர்களில் ஒருவரை மீட்டுக்கொண்டு வந்தது. அந்த மற்றவருக்கு என்ன ஆனது என்பதை இவர் விளக்கினார். என்னுடைய நண்பன் என்னோடு அந்த can-லே தொற்றிக்கொண்டு நின்றார். சுமார் 24 மணி நேரம் அப்படி நின்றார். 24 மணி நேரம் தாண்டிய பிறகு, அண்ணா, அண்ணா, நான் இன்னும் 3 மணி நேரம்தான் உயிரோடு இருப்பேன். இதற்குமேல் என்னால் தாக்குப் பிடிக்க முடியாது என்று சொல்லிக்கொண்டு அழுதாராம். ஒவ்வொரு மணி நேரமும் இதையே திரும்பச் சொல்லிச் சொல்லி, நான் இனி 2 மணி நேரம், நான் இனி 1 மணி நேரம் என்று

சொல்லி, கடைசி நிமிடம் வரக்கூடிய நேரத்தில், என்னால் இனி தாக்குப் பிடிக்க முடியாது. ஆகவே, நான் போய் விடுகிறேன், என்னுடைய குழந்தைகள் எப்படியோ, என்னுடைய மனைவி எப்படியோ என்று கதறிக்கொண்டு கையை விட்டாராம். அவருடைய உயிர் மூச்சு மேல் நோக்கியும், ஊன் உடல் கீழ் நோக்கியும் போனதாக, கரைக்கு மீட்கப்பட்டு வந்த நபர் கண்ணீரோடு கூறினார். ஆகவேதான், இப்படிக் காணாமல் போகக்கூடியவர்களைத் தேடுவதற்கு உடனடி வசதி என்ற முறையில், ஹெலிகாப்டர் வசதி குமரி மாவட்டத்தில் செய்து தர வேண்டும் என்று நாங்கள் வலியுறுத்தி வருகிறோம். கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில், இதுபோன்று கடலில் காணாமல் போகக்கூடியவர்களைத் தேடுவதற்கு ஹெலிகாப்டர் வசதி கேட்டால், 3 நாள், 4 நாள் கழித்துத்தான் அப்படிப்பட்ட வசதி கிடைக்கிறது. என்னென்னவெல்லாமோ இடையூறுகள், என்னென்னவெல்லாமோ சட்ட நடைமுறைகள் இருக்கின்றன. இந்தச் சட்ட நடைமுறைகளைத் தாண்டி வரக்கூடிய நேரத்தில், உரிய காலத்தில் helicopter சென்று சேரவும் முடியாது. காணாமல் போனவரை மீட்கவும் முடியாத நிலை இருக்கிறது. ஒரு வேளை கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவர் கேட்டுக்கொண்ட அதே நேரத்தில் இந்த helicopter வந்திருந்தால், கடலில் மூழ்கிய அந்த நபரைக்கூட மீட்டிருக்க முடியும் என்பது என்னுடைய கருத்து. ஆகவே, இன்றைக்கு இருக்கக்கூடிய நடைமுறை விதிகளைத் தளர்த்தி, மாவட்ட ஆட்சித் தலைவர் அல்லது, ஏன், அந்தப் பகுதியில் இருக்கக்கூடிய சட்டமன்ற உறுப்பினர், அவர் பொறுப்பான நபர்தானே?...

*(முற்பகல் 11-25*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள், மீனவர்கள்மீது துப்பாக்கிச் சூடு பற்றி மட்டும் பேசுங்கள். மற்றவற்றையெல்லாம் மானியக் கோரிக்கையிலே பேசுங்கள்.

**திரு. ஞா. ஜாண் ஜோசப்:** சட்டமன்ற உறுப்பினர்மூலமாகத் தகவல் கொடுத்தால், உடனடியாக helicopter-ஐ அனுப்பக்கூடிய வகையில் விதிகளைத் தளர்த்த வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் இந்தச் சம்பவத்திற்குப் பின்னால் ஆயிரக்கணக்கான படகுகள், விசைப் படகுகள், இதர படகுகள் வேலையை முடக்கி, கரையில் இருந்துகொண்டிருக்கிறார்கள். அவர்கள் கடலுக்குச் சென்று தொழிலில் ஈடுபடுவதற்குப்



பயந்துகொண்டிருக்கிறார்கள். அச்ச உணர்வோடு இருக்கிறார்கள். கடலிலே மீன்பிடித் தொழிலுக்குச் சென்றால் தங்களுக்கு என்ன பாதுகாப்புக் கிடைக்கும் என்ற கவலை அவர்களுக்கு இருக்கிறது. அவர்களுடைய அச்ச உணர்வைப் போக்கக்கூடிய வகையில் மத்திய, மாநில அரசுகள் உரிய உத்தரவாதம் நல்க வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

இந்திய-இலங்கை எல்லையைக் கடலில் வரையறுக்கக்கூடிய வகையில் நவீன முறையிலான அடையாள வசதிகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். உலக வரைபடத்தில் ஒரு நீர்த் துளி அளவே உள்ள ஒரு நாட்டிலிருந்துதான் இவ்வளவு பெரிய மிரட்டல். இந்த மிரட்டலுக்குக் காரணகர்த்தாக்கள் யார் என்பது இங்கே முக்கியமல்ல. கடற்படையின் தளபதியினுடைய அறிக்கையை இரண்டு தினங்களுக்கு முன்னால் படித்தேன். இலங்கையைச் சார்ந்த கடற்படை இந்தச் சம்பவத்தை. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜாண் ஜோசப், கொஞ்சம் short ஆக பேசி முடியுங்கள். ரொம்ப நேரம் பேசுகிறீர்கள். Subject-க்குள் சொல்லுங்கள்.

**திரு. ஞா. ஜாண் ஜோசப்:** இந்தச் சம்பவத்தைச் செய்திருக்க வேண்டிய தேவையில்லை என்று நம்முடைய கடற்படை அதிகாரி அறிக்கை வெளியிட்டிருந்தார். யார் செய்தார் என்பது முக்கியமல்ல. இந்த மிரட்டலைத் தடுப்பதற்கு மத்திய, மாநில அரசுகள் என்ன நடவடிக்கை எடுத்திருக்கின்றன என்பதுதான் முக்கியம். குறிப்பாக, மத்திய அரசு ஒரு மெத்தனமான நடைமுறையைக் கடைப்பிடிக்கிறது என்றுதான் தோன்றுகிறது. மத்திய அரசை நிர்பந்திக்க மாநில அரசும் உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று பணிவோடு கேட்டுக்கொண்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி, அமர்கின்றேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்த ஏழுதேசம், சின்னத்துறை, நீரோடி ஆகிய மீனவ கிராமங்களிலிருந்து சென்ற ஐந்து மீனவர்கள் படுகொலை செய்யப்பட்டிருக்கிறார்கள். இது பற்றித் தமிழகம் மிகப் பெரிய கொந்தளிப்பில் இருக்கிறது. குறிப்பாக, இங்கே

[திரு. வை. சிவபுண்ணியம்] [2007 ஏப்ரல் 2

பேசியவர்கள் பல்வேறு கருத்துகளைச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால், யாரால் சுடப்பட்டார்கள் என்ற பிரச்சினை தொடர்கிறது. யார் சுடுகிறார்கள் என்பதற்குக் கடலிலே சாட்சிகள் இல்லை. இதற்குரிய சாட்சியாக அமைய வேண்டியது மத்திய அரசாங்கத்தினுடைய கடற்படையாகத்தான் இருக்க முடியும். ஆகவே, கடற்படை அதற்குரிய முயற்சிகளை எடுப்பதிலே தொடர்ந்து கவனம் செலுத்துவதிலேயும் பலவீனம் நீடிக்கிறது என்பது இந்திய கம்யூனிஸ்ட் கட்சியினுடைய அழுத்தமான கருத்து. குறிப்பாக, இதைப் பற்றிய செய்திகள் கடந்த இரண்டு, மூன்று தினங்களாகப் பல்வேறு ஊடகங்கள்மூலமாக வந்துகொண்டிருக்கின்றன. நம்முடைய இந்திய நாட்டினுடைய கடற்படைத் தளபதி, விடுதலைப் புலிகளால் அவர்கள் சுட்டுக் கொல்லப்பட்டிருக்கலாம் என்று சொல்கிறார். வேறு ஒரு கோணத்திலிருந்து வருகிற செய்திகளைப் பார்த்தால், கடத்தலகாரர்களால் சுடப்பட்டிருப்பார்களோ என்ற அச்சம் வெளியிடப்படுகிறது. இன்னொரு வகையிலே, தொடர்ந்து சிங்கள இராணுவத்தால் இப்படிப்பட்ட படுகொலை தொடர்கிறது என்று சொல்லப்படுகிறது. ஒரு கணக்கீடு என்பதைப் பார்த்தால், 1980 ஆம் ஆண்டிலிருந்து கிட்டத்தட்ட இதுவரையிலும் 259 மீனவர்கள் கொல்லப்பட்டிருக்கிறார்கள், சுட்டுக் கொல்லப்பட்டிருக்கிறார்கள். சுமார் 200 மீனவர்கள் காணாமல் போய் இருக்கிறார்கள். இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட மீனவர்கள் படுகாயம் அடைந்திருக்கிறார்கள் அல்லது முற்றிலும் ஊனமடைந்து போய் இருக்கிறார்கள். இப்படித் தொடர்ந்து பாதிக்கிற சம்பவங்கள் நடைபெற்றுக்கொண்டே இருக்கின்றன. இதற்கு என்ன முடிவு காண்பது என்பது மிக முக்கியமான ஒன்று.

*முற்பகல் 11–30*

குறிப்பாக என்னுடைய கருத்து என்பது, நம்முடைய கடலோரக் காவல் படை, கடற்படை இதற்குப் பொறுப்பாக்கப்பட வேண்டும். யாராக இருந்தாலும் பிடிக்க வேண்டும். இதிலே யார் சுட்டுக் கொன்றார்கள் என்பது அல்ல பிரச்சினை. யார் சுட்டார்கள் என்பதற்கு என்ன சாட்சி என்பதுதான் என்னுடைய கேள்வி. அதைச் சாட்சியாக அமைத்து, அவர்கள்மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமானால், அதற்குக் கடற்படை முக்கியக் காரணமாக இருக்க வேண்டும். காவல் படை அதற்கு முக்கியக் காரணமாக இருக்க வேண்டும். அதைச் செய்து, இன்னார் செய்தார்கள் என்று உறுதிப்படுத்தி, அதன்மீது நடவடிக்கை எடுப்பதிலே நமக்கு



2007 ஏப்ரல் 2] [திரு. வை. சிவபுண்ணியம்]

ஆட்சேபனை இல்லை. ஆனால், தேவையில்லாமல் விடுதலைப் புலிகளைப் பற்றிச் சொல்வது அல்லது வேறுவிதமாகச் சொல்வது என்று யூகங்களின் அடிப்படையிலே சொல்லி, தேவையில்லாமல் திசை திருப்புவதற்கான ஒரு முயற்சி தொடர்ந்து நடைபெறுகிறது. மத்திய அரசாங்கம்தான் இதைத் தடுப்பதற்கான முயற்சியை எடுக்க வேண்டும் என்று நான் வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். குறிப்பாக, இப்போது இலங்கையிலே பல்வேறு பிரச்சினைகள் தொடர்ந்து நடக்கின்றன. இலங்கையிலே சிங்களர்களுக்கும், தமிழர்களுக்குமான போராட்டம் நடைபெறுகிறது. இன்னொன்றை நாம் பார்க்க வேண்டும்.

இலங்கையிலே பல்வேறு ஒப்பந்தங்கள் போடப்பட்டன. ஆனால், அந்த அரசாங்கம் அந்த ஒப்பந்தங்களை ஏற்றுக்கொள்வதே கிடையாது. பல நாடுகள்மூலமாக சமாதான ஒப்பந்தங்கள் போடப்பட்டுக்கொண்டே இருக்கின்றன, அந்த ஒப்பந்தங்கள மீறப்பட்டு விடுகின்றன. அதனாலே அதற்குத் தீர்வு என்ன என்று சொல்லவில்லை. ஆகவே, சிங்களர்கள் என்ன சொல்கிறார்கள் என்பதைப் பற்றிய தெளிவான கருத்து இப்போது உலகத்திற்கே தெரியாது. தமிழர்கள் என்ன சொல்கிறார்கள், என்ன கோருகிறார்கள் என்பதை அவர்கள் சொல்கிறார்கள். ஆகவே, இதற்கு எது தீர்வாக அமைய முடியும் என்று இலங்கை அரசாங்கம் சொல்லாத காரணத்தினாலே, இப்படித் தொடர்கிறது. இது அந்த நாட்டினுடைய பிரச்சினையாக இருக்கலாம். ஆனால், இதனால் தமிழகம் தொடர்ந்து பாதித்துக்கொண்டே இருக்கிறது என்பதுதான் யதார்த்தமான உண்மை. தமிழகம் பாதிக்கப்படுவதற்குரிய நிகழ்ச்சி இலங்கையின்மூலமாக வருகிறது. இலங்கை அரசாங்கம் எதுவும் சொல்லவில்லை. இதை நம்முடைய மத்திய அரசு வலியுறுத்தி, என்ன தீர்வு காண வேண்டும் என்று விரும்புகிறார்கள் என்று நாம் கேட்க வேண்டும். நமது மத்திய அரசாங்கம் இலங்கை அரசாங்கத்தைக் கேட்க வேண்டும் என்பது இந்திய கம்யூனிஸ்ட் கட்சியினுடைய அழுத்தமான கருத்து. இதைச் செய்ய வேண்டும். இல்லையென்று சொன்னால், இப்படிப்பட்ட காரியங்கள் தொடர்ந்து நடந்துகொண்டே இருக்கும். இப்படிப்பட்ட பலிகள் நடந்துகொண்டே இருக்கும். இல்லையென்றால், இதைத் தடுப்பதற்கு முடியாமல், இப்படிப்பட்ட வேதனையான காரியங்களில் ஈடுபட்டுக்கொண்டே இருக்க வேண்டிய நிலை இருக்கும். இதைத்தான் நம்முடைய முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள், அவர்களுடைய அறிக்கையின்மூலமாகத் தெளிவுபடுத்தி இருக்கிறார்கள். இதை மத்திய அரசாங்கம் கவனித்து, காரியங்களைச் செய்வதற்கான முயற்சிகளை எடுக்க வேண்டும் என்பதை நான் பணிவோடு

கேட்டுக்கொள்கிறேன். இப்படி மீனவர்கள் சாவது என்பது தொடர்கதையாக இருக்க முடியாது. இதைப் பொறுத்துக்கொண்டும் இருக்கக் கூடாது. இது ஏற்றுக்கொள்ளப்பட முடியாத ஒன்று. இந்த நிகழ்ச்சி தமிழகத்திலே மீண்டும் நடக்காமல் தடுப்பதற்கு மத்திய அரசாங்கம் பொறுப்பேற்க வேண்டும். மாநில அரசு வலியுறுத்த வேண்டும் என்று கேட்டு முடிக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. நா. இராமகிருஷ்ணன், இருக்கையில் இல்லை. (குறுக்கீடு) என்ன, ஜெயபால்? நீங்கள் கொடுத்து இருக்கிறீர்களா? சொல்லுங்கள் என்னவென்று? (குறுக்கீடு) கட்சிக்கு ஓர் உறுப்பினர் பேசியாகிவிட்டது.

**திரு. எஸ். ஜெயபால்:** என்னுடைய தொகுதி. காணாமல் போன மீனவர்கள்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி. (குறுக்கீடு) கட்சிக்கு ஓர் உறுப்பினர் பேசியாகிவிட்டது. (குறுக்கீடு) அவர் தொகுதியிலே 10 பேர் காணாமல் போய் இருக்கிறார்கள். அதனால் அவர் பேச வேண்டும் என்று கேட்கிறார். (குறுக்கீடு) திரு. ஜெயபால், சொல்லுங்கள்.

**திரு. எஸ். ஜெயபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமீபத்தில் குமரி மாவட்டக் கடற்கரையைச் சார்ந்த மீனவர்களுக்கு எதிராக சிங்கள இராணுவத்தினருடைய தாக்குதல். . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இராமகிருஷ்ணன் முன்னறிவிப்புக் கொடுத்து இருக்கிறார். அவர் இருக்கையில் இல்லை.

**திரு. எஸ். ஜெயபால்:** குமரி மாவட்டத்திலே மிகப் பெரிய நெருக்கடியை ஏற்படுத்தி இருக்கிறது. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் பேசிவிடட்டும். (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காருங்கள் (குறுக்கீடு). மாண்புமிகு முதல்வர் அவர்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். திரு. ஜெயபால். (குறுக்கீடு) உறுப்பினர் திரு. இராமகிருஷ்ணன் கொடுத்திருக்கிறார். அவர் இருக்கையில் இல்லையே?(குறுக்கீடுகள்) நீங்கள் அறிவிப்புக் கொடுக்கவில்லை, உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குமரிக் கடலில் 5 மீனவர்கள் மீன் பிடிக்கச் சென்றபோது



சிங்கள இராணுவ வெறியர்களால் சுட்டு வீழ்த்தப்பட்ட கொடுமை பற்றியும், அவர்களை இழந்த குடும்பங்களுக்கு நாம் ஆற்ற வேண்டிய கடமை பற்றியும் இங்கே நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. ஜெயக்குமார் அவர்களும், திரு. ஞானசேகரன் அவர்களும், திரு. வேல்முருகன் அவர்களும், திரு. ஜாண் ஜோசப் அவர்களும், திரு. சிவபுண்ணியம் அவர்களும் விளக்கங்களைத் தந்து இருக்கிறார்கள்.

முற்பகல் 11–35

அவையில் இருக்கின்ற அத்தனை பேர்களுடைய குரலாகத்தான் அவர்களுடைய குரல்கள் ஒலித்ததாக நான் கருதுகின்றேன். அவையிலே மாத்திரமல்ல, தமிழகத்தில் இருக்கின்ற கோடானு கோடி மக்களின் குரலாகத்தான் இந்த அவையிலே பேசிய உறுப்பினர்களுடைய குரல் ஒலித்ததாக நான் நம்புகிறேன். தமிழகத்திலே மாத்திரமல்ல, உலகத்திலே வாழுகின்ற, பல்வேறு திசைகளில் வாழுகின்ற தமிழ் மக்களுடைய உள்ளத்தின் பிரதிபலிப்பாகத்தான் இந்தக் குரல்கள் இங்கே ஒலித்ததாக நான் கருதுகின்றேன். ஏனென்றால், இலங்கையிலே இருக்கின்ற தமிழர்களுக்கு ஆபத்து, இங்கேயிருக்கின்ற தமிழர்கள் இலங்கைக்குச் சென்றால் ஆபத்து. இப்படி ஒரு சூழ்நிலை கடந்த 10 ஆண்டு காலத்திற்கு மேலாக இருந்து வருகின்றது. இதற்கு விடியலே கிடையாதா என்றுதான் அகில உலகத்திலே உள்ள எல்லா நாடுகளும் யோசித்து, இதற்கு ஒரு தீர்வு, நல்ல தீர்வு நார்வே காணக் கூடும் என்று நம்பி, அவர்களும் தூது வந்து பேசிப் பார்த்து, அந்தப் பேச்சு பயன் அளிக்காத ஒரு சூழ்நிலையில், மீண்டும் என்ன ஆகுமோ என்ற வினாக்குறி விஸ்வரூபம் எடுத்த சூழ்நிலையில், நாம் இன்றைக்கு இலங்கை இராணுவத்தால் நம்முடைய மீனவர்களுக்கு ஏற்பட்ட தொல்லை குறித்தும், இழப்பு குறித்தும், மரணம் குறித்தும் இங்கே பேசிக்கொண்டிருக்கின்றோம்.

மீண்டும் 20 மணி நேரம் தடையில்லாத மின்சாரத்தை வழங்க வேண்டும் என்று உங்களை அன்போடு கேட்டுக்கொள்கின்றேன். அடுத்தபடியாக உங்களை அன்போடு கேட்டுக்கொள்வதெல்லாம், இன்றைக்கு மின்சாரப் பற்றாக்குறை அடிக்கடி அந்தப் பகுதியிலே ஏற்படுகிறது. குறிப்பாக, கிராமப்புற மக்களுக்குச் சரியாக மின்சாரம் கிடைப்பதில்லை. அறிவிக்கப்படாத ஒரு மின் வெட்டு அமலில் இருக்கிறது என்று சொன்னால், அது மிகையாகாது. திராவிட முன்னனேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்ததற்குப் பின்பு, நகர்ப்புறங்களிலே மின் வெட்டு இல்லாத ஒரு சூழ்நிலையை உருவாக்கி இருக்கிறது, நான் இல்லையென்று சொல்லவில்லை. ஆனாலும்கூட, நான் நகர்ப்புறத்திற்கு மின் வெட்டு வேண்டும் என்று சொல்லவில்லை. நகர்ப்புறங்களிலே செலுத்துகின்ற அதே கவனத்தைக் கிராமப்புறங்களிலும் செலுத்தி, அறிவிக்கப்படாத மின் வெட்டு அமலில் இருக்கின்ற அந்தக் கிராமப்புறங்களிலே இன்றைக்கு உள்ள அந்த நிலைமையை மாற்றி, நகர்ப்புறங்களில் இருப்பதைப்போல கிராமப் பகுதிகளுக்கும் அனைத்து நேரங்களிலும் சீரான மின்சாரம், தடையில்லாத மின்சாரம் வழங்கிட வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன்.

மற்றொன்றையும் இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்ள விரும்புவது, இந்த விவசாயிகளுக்கு மட்டும் ஏன் மின் supply-ஐக் குறைத்திருக்கிறீர்கள் என்பதுதான். இன்றைக்குத் தமிழகத்தைப் பொறுத்தவரையிலே மின் உற்பத்தியிலே தன்னிறைவுபெற்ற மாநிலமாக விளங்கிக்கொண்டிருக்கிறது. புரட்சித் தலைவி அம்மாவினுடைய ஆட்சிக் காலத்திலே நமது தமிழகம் மின்சார உற்பத்தியிலே உபரி மாநிலமாக விளங்கியது. அப்படிப்பட்ட நிலையில், இன்றைக்கும் மின்சார உற்பத்தியைப் பொறுத்தளவிலே நமது installed capacity, தமிழ்நாடு மின்சார வாரியத்தினுடைய நிறுவு திறன் தேவைக்கு அதிகமாக இருக்கிறது என்பதை நீங்கள் அறிவீர்கள். நமது உச்சபட்சத் தேவைக்கு அதிகமாக மின் உற்பத்திக்கு வேண்டிய நிறுவு திறன் இருந்தபோதிலும்கூட, ஏன் விவசாயிகளுக்கு மட்டும் அங்கே மின்சாரம் வழங்குவதற்கு நீங்கள் மறுக்கிறீர்கள், நேரத்தைக் குறைக்கிறீர்கள் என்பதை நான் இந்த நேரத்திலே தெரிந்துகொள்ள விரும்புகிறேன். அதனை நான் ஒரு குற்றச்சாட்டாகவே உங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரத் அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. விசுவநாதன் அவர்கள் மின்சாரத் துறைக்கு அமைச்சராக இருந்தவர். அவர் பேசுவதிலே குறுக்கிட வேண்டும் என்று நான் விரும்பவில்லை. ஆனால், ஒரு தவறான கருத்தை இந்தச் சட்டமன்றத்திலே பதிவு செய்வதை விளக்க வேண்டியது என்னுடைய கடமை. எந்த விவசாயிக்கும் அவர்களுக்கென்று ஒதுக்கப்பட்ட நேரத்தைக் குறைத்து இந்த அரசு மின்சாரத்தை நிறுத்தவில்லை. இன்னும் சொல்லப் போனால், உபரியாகத்தான் மின்சாரம் தமிழகத்திலே இருக்கிறது. ஆனால், கடந்த காலத்தில், ஐந்தாண்டு காலம், 14,000 transformer-கள் வாங்கி, கிராமப் பகுதிகளிலே நாம் நிறுவியிருக்க வேண்டும். ஆனால், நீங்கள் அதைச் செய்யாமல் விட்டுவிட்ட காரணத்தால், இந்த அரசு வந்து அதற்கான ஆணைகளைப் பிறப்பித்து, ஒரே நேரத்திலே 14,000 transformer-கள் வாங்க முடியாத ஒரு சூழ்நிலையில், இதுவரையிலே 4,000 transformer-கள் வாங்கி, ஒவ்வொரு மாவட்டத்திற்கும் 200, 250 என்று கொடுத்துக்கொண்டிருக்கிறோம். எல்லா இடங்களிலேயும் transformer-ஐக் கொடுத்துவிட்டால் இந்தப் பிரச்சினையே இருக்காது. அதற்கான முயற்சிகளை இந்த அரசு எடுத்துக்கொண்டிருக்கிறது. இதுவரையிலும் 4,000 transformer-கள் வாங்கியிருக்கிறோம். மீதமுள்ள 10,000 transformer-கள்



வாங்குவதற்கு இன்னும் 6 மாத காலமாகும். அது வரையிலே சில இடங்களிலே, அரை மணி நேரம், 15 நிமிடம் என இப்படித்தான் மின்சாரம் தடைப்படுகிறதே தவிர, வேண்டுமென்றே, திட்டமிட்டு, விவசாயிகளுக்கு ஏதோ 20 மணி நேரம் என்பதை 6 மணி நேரமாகக் குறைத்துவிட்டதாகச் சொல்வது முழுக்க, முழுக்கத் தவறான கருத்து என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

பிற்பகல் 12-05

**திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தவறான கருத்து அல்ல. நானும் ஒரு விவசாயி. நானும் எங்கள் பகுதியிலே அந்த மின்சாரத்தை அனுபவித்துக்கொண்டிருக்கின்றேன். எனக்கு வருகின்ற—எனக்கு மட்டுமல்ல, எங்கள் பகுதியிலே இருக்கின்ற அனைவருக்கும். நான் தினந்தோறும் தோட்டத்திற்குச் செல்கிறேன். நானே மோட்டார் போடுகிறேன்; 6 மணி நேரம்தான் மின்சாரம் வருகிறது. நான் ஒன்றும் மிகைப்படுத்திச் சொல்லவில்லை. அதிலேயும் சில உறுப்பினர்கள் 4 மணி நேரம்தான் வருவதாகத் தகவல் சொல்கிறார்கள். உற்பத்தித் திறன் நமக்குப் போதுமான அளவிற்கு இருக்கின்றபோது, ஏன் விவசாயிகளுக்கு மின் சப்ளை செய்கின்ற நேரத்தைக் குறைக்க வேண்டுமென்பதுதான் என்னுடைய கேள்வி. ஆகவே, அதைச் சீரமைக்க வேண்டுமென்று உங்களைக் கேட்டுக்கொள்கிறேன். மற்றொன்று, அதற்கு இன்னொரு காரணம்கூட இருக்கலாம். ஏனென்று சொன்னால், விவசாயிகளுக்கு நாம் கொடுப்பது இலவச மின்சாரம். விவசாயிகளுக்கு மின்சாரம் கொடுக்கின்ற நேரத்தைக் குறைத்தால், தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு ஏற்படுகின்ற இழப்பை ஓரளவுக்குக் குறைத்துக்கொள்ளலாம் என்ற உள்நோக்கத்தோடு அந்த நேரம் குறைக்கப்படுகிறது என்பதுதான் இப்போது என்னுடைய குற்றச்சாட்டு.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கற்பனையாக எதை வேண்டுமானாலும் சொல்லக் கூடாது. கலைஞர் அவர்கள் முதலமைச்சராகப் பொறுப்பேற்றுக்கொண்டதற்குப் பிறகுதான், உங்களுடைய ஆட்சியிலே 10,000 ரூபாய், 25,000 ரூபாய், 50,000 ரூபாய் என்று சுய உதவித் திட்டத்தின்கீழ் மின்சார இணைப்புப் பெற்றவர்கள்

2,50,000 பேர்களுக்கும், அவர்கள் ஒரு horse power–க்கு 250 ரூபாய் கட்டி வந்ததை, அதையும் இரத்துச் செய்து, எல்லா விவசாயிகளுக்குமே இலவசமாக மின்சாரம் வழங்கப்படும் என்று அறிவித்திருக்கிறார் என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, புரட்சித் தலைவி அம்மாவினுடைய ஆட்சிக் காலம்தான் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்குப் பொற்காலம் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை இந்த நேரத்தில் நான் பதிவு செய்ய விரும்புகிறேன். புரட்சித் தலைவி அம்மாவினுடைய ஆட்சிக் காலத்திலே, தமிழ்நாடு மின்சார வாரியத்தினுடைய installed capacity (குறுக்கீடு) சொல்லிவிடுகிறேன். ஒரு புள்ளிவிவரத்தோடு நான் உங்களுக்கு அதைக் கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன். புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில், 31–3–1996–ல் புரட்சித் தலைவி அம்மாவினுடைய ஆட்சிக் காலம் முடிவுறுகின்ற நிலையில், தமிழ்நாடு மின்சார வாரியத்ினுடைய installed capacity, அதாவது உற்பத்தித் திறன். நிறுவு திறன். T.N.E.B. சொந்தமாக உற்பத்தி செய்வது. Co-generation, Wind mill, Biomass மற்றும் அனைத்து வகைத் தனியார் மின் உற்பத்தி ஆகிய அத்தனையும் சேர்த்து நான் இந்தப் புள்ளிவிவரத்தைச் சொல்கிறேன். 31–3–1996–ல் தமிழ்நாடு மின்சார வாரியத்தினுடைய நிறுவு திறன் 5,067 மெகாவாட், அம்மாவினுடைய முதல் ஆட்சிக் காலத்தில். 31–3–2001–ல் உங்களுடைய ஆட்சிக் காலம் முடிவுறுகின்றபோது, 7,513 மெகாவாட்டாக மின் நிறுவு திறனை நீங்கள் அதிகரித்திருக்கிறீர்கள், இல்லையென்று சொல்லவில்லை. அந்த 5 ஆண்டு காலத்தில், தி.மு.க. ஆட்சிக் காலத்தில், நீங்கள் மொத்தம் 2,446 மெகாவாட் உற்பத்தித் திறனைக் கூட்டியிருக்கிறீர்கள். ஆனால் அதற்குப் பின்பு புரட்சித் தலைவி அம்மாவினுடைய ஆட்சிக் காலத்திலே இப்போது வந்ததற்குப் பின்பு 2001 முதல் 2006 வரை— 2006 வரையல்ல—31–12–2005 வரையுள்ள புள்ளிவிவரத்தையே நான் சொல்கிறேன். அம்மாவினுடைய ஆட்சிக் காலத்திலே, 4 ஆண்டு ஆட்சிக் காலத்திலேயே, தமிழ்நாடு மின்சார வாரியத்தினுடைய மொத்த நிறுவு திறன், installed capacity, 12,665 மெகாவாட். (மேசையைத் தட்டும் ஒலி) உங்களுடைய ஆட்சிக் காலத்திலே 2,446 மெகாவாட் உற்பத்தித் திறன் கூட்டப்பட்டது. ஆனால், அம்மாவினுடைய ஆட்சிக் காலத்திலே கூடுதல் உற்பத்தித் திறன் 5,162 மெகாவாட் எனக் கூடுதலாக உற்பத்தி செய்யப்பட்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அது தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு ஒரு பொற்காலம்.



பிற்பகல் 12–10

அது மட்டுமல்ல. அடுத்து ஒரு புள்ளிவிவரத்தையும் உங்களுக்கு நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். தி.மு.க. அரசினுடைய ஐந்தாண்டு ஆட்சி, கடந்த முறை உங்களுடைய ஆட்சிக் காலம் முடிந்து, புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றபோது, தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு ஏற்பட்ட மொத்த இழப்பு—உங்களுடைய ஆட்சிக் காலம் முடியும்போது, 4,851.89 கோடி ரூபாய், உங்களுடைய ஆட்சிக் காலத்திலே ஏற்பட்ட நஷ்டம். ஆனால், அம்மாவினுடைய ஆட்சிக் காலத்திலே அந்த நஷ்டத்தைப் பெருவாரியாகக் குறைத்து, இறுதியாக ஏற்பட்ட மொத்த நஷ்டம் 1,314.81 கோடி ரூபாய்தான். உங்களுடைய ஆட்சிக் காலத்திலே 4,851.89 கோடி ரூபாய். அம்மாவினுடைய ஆட்சிக் காலத்திலே 1,314.81 கோடி ரூபாய்தான். (மேசையைத் தட்டும் ஒலி) ஆக, 3,537.08 கோடி ரூபாய் நஷ்டம் அம்மாவினுடைய ஆட்சிக் காலத்திலே குறைக்கப்பட்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. விசுவநாதன் அவர்கள் புள்ளிவரங்கள் கொடுப்பதிலே எனக்கு ஆட்சேபனை இல்லை. ஆனால், எப்படி அவர் தந்திரமாகத் திசை திருப்புகிறார் என்றால், அ.தி.மு.க. ஆட்சியிலே நிறுவு திறன் 12,665 மெகாவாட் என்று சொல்கிறார். ஆனால், அவ்வளவும் உற்பத்தியாயிற்றா? நிறுவு திறன் வேறு, உற்பத்தியாகக்கூடிய மின்சாரம் வேறு. உதாரணத்திற்குச் சொல்கிறேன். 3,200 மெகாவாட் நிறுவு திறன் உள்ள காற்றாலைகளை அமைத்திருக்கிறோம். ஆனால், இயற்கையாக நாம் பெறக்கூடிய மின்சாரம் எவ்வளவு என்று கேட்டால், இப்போது 900 மெகாவாட்தான். ஆக, நிறுவு திறனைக் காட்டி, நாங்கள் இவ்வளவு நிறுவு திறனை உருவாக்கிவிட்டோம் என்று சொன்னால், இன்றைக்கே நம்முடைய மின்சார உற்பத்தி, உண்மையாகச் சொன்னால் 10,098 மெகாவாட்தான். அப்படி இருக்கும்போது அம்மா ஆட்சிக் காலத்திலே 12,665 மெகாவாட் நிறுவு திறன் ஏற்படுத்திவிட்டோம் என்றால், ஏதோ அந்த அளவிற்கு மின்சாரம் உற்பத்தி செய்ததைப்போல ஒரு மாயத் தோற்றத்தை உண்டாக்குகிறார். அது தவறு. இரண்டாவது, தி.மு.க. ஆட்சி 2001–லே நாங்கள் விடைபெற்று நீங்கள் ஆட்சிக்கு வந்தபோது, ஏதோ 4,851 கோடி ரூபாய் இழப்பு ஏற்பட்டதாகவும், இப்போது 1,314

கோடி ரூபாய்தான் இழப்பு என்று சொன்னார்கள். நான் சட்டமன்ற உறுப்பினராக இருந்தபோது, இந்த மாதிரிப் புள்ளிவிவரம் சொன்ன நேரத்தில், அவர் ஆளுங்கட்சியிலே அமைச்சராக இருந்த நேரத்திலே, அதை மறுத்திருக்கிறேன். தி.மு.க. ஆளுங்கட்சியாக இருந்த நேரத்திலேகூட 2001-ல் ஆட்சியைவிட்டு நாங்கள் வெளியேறுகின்ற நேரத்திலே, நாங்கள் வைத்துவிட்டுச் சென்ற கடன் ரூ.1,300 கோடிதான்.

**திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தெளிவாகச் சொல்லியிருக்கிறேன். அமைச்சருக்கு அது நன்றாகப் புரிந்திருக்கும். வேண்டுமென்றே திசை திருப்ப முயற்சிக்கிறார். நிறுவு திறன் என்று சொன்னாலே (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை, உங்களுக்குத் தெரியும். அவருக்குத் தெரியும். துறை அமைச்சர் என்பதனால் அவருக்குத் தெரியும். Installed capacity, நிறுவு திறன் என்று சொன்னாலே, மொத்தத்திலே உற்பத்தி செய்வதாகப் பொருள் அல்ல. அதற்கு ஒரு விளக்கமே தேவையில்லை. அதே நிறுவு திறன்தான் உங்களுடைய இப்போதைய ஆட்சிக் காலத்திலேகூட பதின்மூன்றாயிரத்து சொச்சம் மெகாவாட் நிறுவு திறனாக வந்திருக்கிறது, இல்லையென்று சொல்லவில்லை. அதை வெவ்வேறு நேரங்களில் உற்பத்தி செய்ய முடியும். நான் அதற்காகச் சொல்லவில்லை. ஆனாலும் தேவைப்பட்டால் ஒட்டுமொத்தமாகப் பயன்படுத்த வாய்ப்புள்ள நேரங்களில் அவ்வளவு மின்சாரத்தை உற்பத்தி செய்யக்கூடிய சக்தியை, அந்த வாய்ப்பை உருவாக்கிக் கொடுப்பதற்குப் பெயர்தான் நிறுவு திறன். ஆகவே, அதற்கு ஒரு விளக்கமே தேவையில்லை. அமைச்சர் அதைத் திசை திருப்ப வேண்டாம்.

அதற்கடுத்தபடியாக மூலதனச் செலவை எடுத்துக்கொண்டால், தி.மு.க. ஆட்சிக் காலத்திலே மூலதனச் செலவு—உங்களுடைய ஆட்சிக் காலத்திலே ரூ.6,030.45. . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. விசுவநாதன், 15 நிமிடங்கள் ஆகிவிட்டன.

**திரு. இரா. விசுவநாதன்:** கொஞ்சம் இருங்கள். இன்னும் பாதி விஷயம்கூடச் சொல்லவில்லை. ஒரு விஷயத்தைக்கூடத் தொடர்ந்து சொல்லவே முடியவில்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இல்லை, இல்லை. நீங்கள் ஒரு positive methodஆகப் பேசிக்கொண்டு போக வேண்டும். இதைச் செய்யுங்கள், அதைச் செய்யுங்கள் என்று கேட்டுக்கொள்ளுங்கள்.



**திரு. இரா. விசுவநாதன்:** அடுத்தபடியாக, மூலதனச் செலவை எடுத்துக்கொண்டால், தி.மு.க. ஆட்சிக் காலத்தில் மூலதனச் செலவு 6,030.45 கோடி ரூபாய். அம்மாவினுடைய ஆட்சிக் காலத்திலே மூலதனச் செலவு எவ்வளவு தெரியுமா? 6,962.28 கோடி ரூபாய். ஆக, 932.83 கோடி ரூபாய் புரட்சித் தலைவி அம்மாவினுடைய ஆட்சிக் காலத்திலே மூலதனச் செலவையும் கூடுதலாகச் செய்திருக்கிறது வளர்ச்சிப் பணிகளுக்காக. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள், உங்களுடைய ஆட்சிக் காலத்திலே transformer வாங்கி நிறுவவில்லை என்று. ஆனால், உங்களுடைய ஆட்சிக் காலத்தைவிட, ஏறத்தாழ 1,000 கோடி ரூபாய் மூலதனத்திற்காகக் கூடுதலாகச் செலவு செய்யப்பட்டிருப்பதை நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நினைவூட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 12-15

அதற்காகத்தான் சொன்னேன்; ஒவ்வொரு வகையிலும் உங்களுடைய ஆட்சிக் காலத்தையும், அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தையும் ஒப்பிட்டுப் பார்த்தால், புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலம்தான் தமிழகத்தினுடைய மின்சார வாரியத்திற்கு ஒரு பொற்காலம் என்பதை (மேசையைத் தட்டும் ஒலி) மீண்டும் புள்ளிவிவரங்களுடைய அடிப்படையிலே நான் இங்கே எடுத்து வைத்திருக்கின்றேன்.

அது மட்டுமல்ல; காற்றாலை மின்சார உற்பத்தியிலே இந்தியாவிலேயே தமிழகம்தான் முதலிடம். தமிழ்நாடு மின்சார வாரியம்தான், தமிழகம்தான் முதலிடம் வகிக்கிறது. இன்றைக்கும் அதை நீங்கள் தக்க வைத்திருப்பதால், முதலிடத்திலேதான் இருக்கிறது; இல்லையென்று சொல்லவில்லை. ஆனால், அந்த நிலையை முதலில் உருவாக்கியவர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதை இன்றைக்கு உங்களுக்கு நான் அன்போடு சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதற்கடுத்தபடியாக, மிக முக்கியமான பிரச்சினை. நான் ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன். சென்ற முறை மானியக் கோரிக்கையிலேகூட குறுக்கிட்டுப் பேசும்போது நான் சொல்லியிருக்கிறேன். மின்சார உற்பத்தியைப் பொறுத்தளவிலே, நிலக்கரி ஒரு முக்கியப் பங்கு வகிக்கிறது. ஆனால், மத்திய அரசு தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு ஒப்பந்தப்படிக் கொடுக்க வேண்டிய

14 சதவிகித நிலக்கரியைச் சென்ற முறை அவர்கள் தரவில்லை; குறைத்துவிட்டார்கள்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

இன்னும் சொல்லப் போனால், தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு ஆண்டொன்றுக்கு 14.5 இலட்சம் டன் நிலக்கரி தேவை. அதிலே 14 சதவிகிதத்தை அவர்கள் குறைத்துவிட்டார்கள். அன்றைக்கு நான் அமைச்சராக இருக்கின்றபோது, அம்மா அவர்களும், நானும் பல முறை கடிதங்கள் எழுதினோம். நாங்களும் பல முறை மத்திய அரசோடு தொடர்புகொண்டோம். ஆனால், அவர்கள் அந்த ஒப்பந்தப்படி கொடுப்பதற்கு மறுத்துவிட்டார்கள். இருந்தாலும்கூட, அதற்கு மாற்று ஏற்பாடாக, வருங்காலத்தை எண்ணி, புரட்சித் தலைவி அம்மா அவர்கள் (மணியடிக்கப்பெற்றது) இன்னும் point-ஐயே சொல்ல ஆரம்பிக்கவில்லை; சொல்லிவிடுகிறேன். சொல்ல ஆரம்பித்துவிடுகிறேன்; முக்கியமான பிரச்சினை இது. வேறொன்றும் இல்லை. அவரே பதில் சொல்லட்டும். இது முக்கியமான பிரச்சினைதான்.

தமிழ்நாடு மின்சார வாரியத்திற்குப் பயன்படும் என்பதால், ஒரு ஆலோசனையாகத்தான் சொல்ல விரும்புகிறேன். அன்றைக்குப் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே ஒரு முக்கியமான முடிவை எடுத்தோம். அம்மா அவர்கள் எடுத்த முடிவு என்னவென்று சொன்னால், இந்த நிலக்கரிப் பிரச்சினை எப்பொழுதும் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு ஒரு தலைவலியாக இருக்கிறது, இதற்கு நிரந்தரத் தீர்வு காண வேண்டுமென்ற எண்ணத்தோடு, ஒரிசாவிலே Nowgam Coal Block-லே நிலக்கரிச் சுரங்கங்கள் இருக்கின்றன; மத்திய அரசாங்கத்திற்குச் சொந்தமான அந்தச் சுரங்கத்திலே, இந்தியாவிலே இருக்கின்ற சில மின்சார வாரியங்கள், சொந்தமாகத் தங்களுக்கென்றே நிலக்கரிச் சுரங்கங்களை வைத்திருக்கிறார்கள். நம்முடைய தமிழ்நாடு மின்சார வாரியத்திற்குச் சொந்தமான நிலக்கரிச் சுரங்கம் இல்லை. ஆகவே, மத்திய அரசும் நிலக்கரியை ஒப்பந்தப்படி கொடுக்க மறுக்கிறது. ஆகவே, நமக்கே சொந்தமாக ஒரு நிலக்கரிச் சுரங்கத்தை வைத்துக்கொள்ளலாம் என்ற எண்ணத்திலே Nowgam Coal Block-லே ஒரு சுரங்கம் வேண்டுமென்று நாம் விண்ணப்பித்தோம்; தமிழ்நாடு மின்சார வாரியம் விண்ணப்பித்தது. தமிழ்நாடு மின்சார வாரியம் மட்டுமல்ல; அதோடு சேர்த்து, அதற்கு மூன்று பேர் விண்ணப்பித்தார்கள். தமிழ்நாடு மின்சார வாரியத்தோடு Orissa Mining Corporation, N.T.P.C. (National Thermal Power Corporation) ஆகியோரும் விண்ணப்பித்தார்கள். இப்படி விண்ணப்பித்திருந்தவர்களில், நியாயமாகத் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்குத்தான் அந்த நிலக்கரிச் சுரங்கத்தை அவர்கள் கொடுத்திருக்க வேண்டும். காரணம் என்னவென்று சொன்னால், அந்த Orissa Mining Corporation-க்குச் சொந்தமான நிலக்கரிச் சுரங்கம் ஏற்கெனவே அங்கிருக்கிறது. அதேபோல, N.T.P.C.-க்கும் அங்கே சொந்தமாக நிலக்கரிச் சுரங்கங்கள் இருக்கின்றன. அப்படி இருக்கின்றபோது, நிலக்கரிச் சுரங்கம் இல்லாத நமது தமிழ்நாடு மின்சார வாரியத்திற்குத்தான் அவர்கள் முன்னுரிமை கொடுத்திருக்க வேண்டும். ஆனால், மத்திய அரசு, தமிழ்நாடு அரசு என்ற ஒரே காரணத்திற்காக வஞ்சித்து, புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய தலைமையிலே இருக்கின்ற அரசுக்கு அந்த உதவியையும் செய்யக் கூடாது என்ற குறுகிய எண்ணத்தோடு, விதிமுறைகளுக்கு மாறாக, தர்ம, நியாயத்திற்கு மாறாக, அந்தச் சுரங்கத்திற்கான அனுமதியை நமக்கு வழங்கவில்லை. இதற்காகப் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், பல முறை பிரதமரிடத்திலே நேரடியாக வற்புறுத்தியிருந்தார்கள்; கடிதம்மூலமாகவும் வலியுறுத்தியிருந்தார்கள். நானும் மத்திய அமைச்சரிடம் பல முறை சென்று பேசியிருக்கின்றேன். ஆனாலும், அவர்கள் கொடுக்கவில்லை. நான் சொல்வது, மத்திய அரசு தமிழகத்தை வஞ்சித்துவிட்டது. மத்தியிலும் நீங்கள்; மாநிலத்திலும் நீங்கள்; (குறுக்கீடுகள்) இதிலே ஒன்றும் இல்லை, உட்காருங்கள். (குறுக்கீடுகள்)



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் (குறுக்கீடுகள்) திரு. விசுவநாதன், நீங்கள் சீக்கிரம் பேசி முடியுங்கள். (குறுக்கீடுகள்)

**திரு. இரா. விசுவநாதன்:** நான் சொல்லிவிடுகிறேன். (குறுக்கீடுகள்) முக்கியமான பிரச்சினை. உங்களுக்கு உதவுகின்ற பிரச்சினைதான். நீங்கள் அப்புறம் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. விசுவநாதன் அவர்கள் ஒரு நல்ல யோசனையைத்தான் சொல்லியிருக்கிறார். அதே யோசனையைக் கடந்த ஆண்டு டெல்லியிலே மின் துறை அமைச்சர்கள் மாநாடு நடைபெற்றபோது, இன்றைய மின் துறை அமைச்சராக மத்தியிலே இருக்கக்கூடிய திரு. சிந்தியா அவர்களிடத்திலே நான் வேண்டுகோள் வைத்திருக்கிறேன். ஒரிசாவிலிருந்து அந்த நிலக்கரிச்

சுரங்கத்திலே நிலக்கரி எடுத்துக்கொள்வதற்கு தமிழ்நாட்டிற்கு நிச்சயமாக அனுமதி தருவதாக அவர் வாக்குறுதி தந்திருக்கிறார். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)

*பிற்பகல் 12-20*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சுதர்சனம், சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) அவர் சொல்லட்டும்.

**திரு. டி. சுதர்சனம்:** தேவையில்லாமல் மத்திய அரசைக் குறை கூறுவதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நிறுத்திக்கொள்ள வேண்டும். ஏனென்று சொன்னால், அந்த நிலக்கரிச் சுரங்கம் பெறுவது சம்பந்தமான பிரச்சினையைப் பற்றி உரிய ஆவணங்களை மாநில அமைச்சராக இருந்த உறுப்பினர் சரியாகச் சமர்ப்பிக்காத காரணத்தினால், இவர்களுக்கு அந்தச் சுரங்கம் வழங்கப்படவில்லை என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. விசுவநாதன், உங்களுக்கு அனுமதிக்கப்பட்டது 15 நிமிடங்கள். ஆனால், நீங்கள் எடுத்திருப்பது 23 நிமிடங்கள்.

**திரு. இரா. விசுவநாதன்:** முக்கியமான விஷயம். குறுக்கீடுகளில் நிறைய நேரம் போய்விட்டது. சீக்கிரம் சொல்லி விடுகிறேன். பிரச்சினை ஒன்றும் இல்லை. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அடுத்தபடியாக. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் 23 நிமிடங்கள் எடுத்திருக்கிறீர்கள்.

**திரு. இரா. விசுவநாதன்:** இல்லை, இல்லை. குறுக்கீடுகள்தான் அதிகம். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு காங்கிரஸ் கட்சியினுடைய சட்டமன்றக் கட்சித் தலைவர் அவர்கள் கோபப்பட வேண்டாம். (குறுக்கீடு) உண்மை. தமிழ்நாட்டினுடைய நன்மைக்காக மட்டும்தான். நீங்களும் சற்றுப் போராட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்களுக்கு மட்டும்தான் 15 நிமிடங்கள். மற்றவர்களுக்கெல்லாம் 10, 10 நிமிடங்கள்தான். (குறுக்கீடு) சொல்லுங்கள்.





**திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிற்கு இவர்கள் எவ்வளவு நன்மையைச் செய்ய வேண்டுமென்று நினைக்கிறார்களோ, அதைவிட அதிகமான நன்மையை இப்போது இருக்கின்ற ஆளுகின்ற கட்சியும், மத்திய அரசும் செய்யும் என்பதிலே யாருக்கும் சந்தேகம் வேண்டாம். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உரையை முடித்து விடுகிறேன். ஏற்கெனவே இந்தப் பிரச்சினையையும் நான் அமைச்சருடைய கவனத்திற்கு இந்த அவையின் வாயிலாகக் கொண்டு வந்திருக்கிறேன். மீண்டும் நினைவுபடுத்த விரும்புகிறேன். ஆனால், அதிலுள்ள ஒரு முக்கியச் சட்டத்தை, இப்பொழுது மத்திய அரசினுடைய மின்சாரச் சட்டம் வந்திருப்பதால், அதையும் கோடிட்டுக் காட்டிவிட்டு, தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு அது உதவும் என்கிற காரணத்தினால் இதையும் நீங்கள் பரிசீலிக்க வேண்டுமென்று உங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

Gas allotment. மின்சார வாரியத்தைப் பொறுத்தளவிலே, நீர் மின் நிலையத்திற்கு அடுத்தபடியாக மின்சாரத்தைச் சிக்கனமாக, குறைந்த செலவிலே உற்பத்தி செய்யக்கூடியது gas மூலமான உற்பத்திதான்; எரிவாயுமூலமாக உற்பத்தி செய்வது. அதிலே மத்திய அரசைச் சொன்னவுடன் வருத்தப்பட்டு விடாதீர்கள். உள்ளதைச் சொல்லிவிடுகிறேன். நீங்கள் அப்புறம் சொல்லுங்கள். தமிழ்நாடு மின்சார வாரியம், அந்த gas allotment வேண்டுமென்று கேட்கின்றபொழுது, மின்சார வாரியத்திற்கு அந்த அனுமதியைக் கொடுக்க மறுத்துவிட்டு, தனியார்களுக்கு வழங்கி வருவதை வழக்கமாகவே கொண்டிருக்கிறது. இதைக் கொள்கை ரீதியாக அன்றைக்கு இருந்த நாங்கள் எதிர்த்தோம். இன்றைக்கும் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள்; நாங்களும் அதை எதிர்த்து வருகிறோம் என்று சொன்னார்கள். அதற்காக நன்றி. தொடர்ந்து அதைக் கடைப்பிடிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஆனால், அவர் சொன்னதிலே ஒரே ஒரு கருத்திலே நான் மாறுபடுகிறேன். அவர் சொல்லுகின்றபொழுது, அப்படியே மத்திய அரசு தனியார்களுக்கு அந்த gas allotment வழங்குவதை நாங்களும் எதிர்த்திருக்கிறோம்; அப்படிக் கொடுப்பதாக இருந்தால், தனியார்கள் அந்த gas மூலமாக உற்பத்தி செய்கின்ற அந்த மின்சாரத்தை I.P.P.A. போடுகின்றபொழுது, அதிகாரம் நம்மிடம் இருக்கிறது; ஆகவே, அதைத் தடுத்து நிறுத்தி விடலாம் என்ற ஒரு தகவலைச் சொன்னார்கள். அமைச்சர் சொன்ன

தகவல், இரண்டாண்டுகளுக்கு முன்பு வரை அது சரியாக, பொருத்தமாக, சட்டப்படி சரி. ஆனால், இன்றைக்கு இருக்கின்ற நிலையில் மாநில அரசு அல்லது தமிழ்நாடு மின்சார வாரியம், தனியார் உற்பத்தி செய்கின்ற அந்த மின்சாரத்தைக் கொள்முதல் செய்வதற்கு மறுத்துவிட்டாலும்கூட, அவர்கள் சில condition-களுக்கு உட்பட்டுத் தனியாருக்கு நேரடியாக விற்கலாம் என்ற ஒரு நிலையை, மத்திய மின்சாரச் சட்டம் வகுத்திருக்கிறது. ஆகவே, இப்படிப்பட்ட நிலையில் நீங்கள் எப்படி அவர்களைக் கட்டுப்படுத்த முடியும் என்பதை இந்த நேரத்தில் நான் உங்களைக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். அடுத்தபடியாக ஒன்று.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *26* நிமிடங்கள் ஆகிவிட்டன.

**திரு. இரா. விசுவநாதன்:** இன்னும் ஒரு பிரச்சினை இருக்கிறது. அதிலே சிறப்புக் கவனம் செலுத்தி, தனியார்களுக்குச் செல்வதைத் தடுத்து நிறுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்; சூசகமாகவும் சொல்கிறேன். சட்டமன்றம் என்பதால், அதைச் சொன்னால் ஆதாரம் இருக்கிறதா என்று கேட்பார்கள். அதற்காகச் சொல்கிறேன். சில சக்தி வாய்ந்த அரசியல் பின்னணியிலே தனியார்கள் gas பெறுவதற்கு இன்றைக்கும் முயற்சிகள் நடந்துகொண்டிருக்கின்றன. அதை முளையிலேயே கிள்ளி எறிவதற்கு நீங்கள் முயற்சிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதற்கடுத்தபடியாக மற்றொன்றையும் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு நிலக்கரியை transport செய்வது நமது Poompuhar Shipping Corporation—பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகம். அதனுடைய role, அதனுடைய நடவடிக்கை மிக முக்கியமானது. அதிலே பல்வேறு பிரச்சினைகள். தேவையில்லாத நிருவாகச் செலவுகளையும், மின்சார வாரியத்திற்கு ஏற்படுகின்ற சுமையையும் குறைப்பதற்காக நிருவாகச் சீர்திருத்த நடவடிக்கைக்காக, சென்ற ஆட்சிக் காலத்திலே ஒரு ஆலோசனையை மேற்கொண்டோம். சென்ற ஆட்சிக் காலத்திலே அம்மா அவர்கள் ஒரு ஆலோசனையை வழங்கினார்கள். பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகம் என்பது, மின்சார வாரியத்திற்கு நிலக்கரி எடுப்பதை மட்டுமே தொழிலாகக்கொண்ட, அதற்காக மட்டுமே ஏற்படுத்தப்பட்ட அமைப்பு. தனியாக இந்த அமைப்பு செயல்படுவதால் கூடுதலாகத் தேவையில்லாமல் நிருவாகச் செலவுகளும், வீணாக அங்கே பல்வேறு பிரச்சினைகளும் ஏற்படுவதன்



காரணமாக, தமிழ்நாடு மின்சார வாரியத்திற்குச் சில நேரங்களிலே அதனால் கோடிக்கணக்கிலே இழப்பு ஏற்பட்டுவிடுகிறது. அப்படிப்பட்ட சூழ்நிலையைத் தடுப்பதற்காக, இந்தப் பணியை மின்சார வாரியத்திற்காக அது செய்வதால் அதை மின்சார வாரியத்தோடு இணைத்துவிடலாமா என்பதைப் பற்றி ஆய்வு செய்வதற்காக அன்றைக்கு I.A.S. அதிகாரிகள்கொண்ட ஓர் உயர்மட்டக் குழுவைப் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நியமித்தார்கள். தலைமைச் செயலாளர், போக்குவரத்துத் துறைச் செயலாளர், நெடுஞ்சாலைத் துறைச் செயலாளர், E.B. Chairman, எரிசக்தித் துறைச் செயலாளர் மற்றும் Poompuhar Shipping Corporation I.A.S. அதிகாரிகள், Finance Secretary போன்ற உயர்மட்ட I.A.S. அதிகாரிகள் ஆகியவர்களைக்கொண்ட அந்தக் குழு பரிந்துரை செய்தது. அதைப் பற்றி ஆய்வு செய்து ஒரு பரிந்துரையை அரசுக்கு அளித்திருக்கிறது. அந்தப் பரிந்துரையைப் பற்றி, அதை ஏற்பது குறித்து அரசு சிந்தித்துக்கொண்டிருந்தபோது, அதற்காகச் சில முயற்சிகளை எடுத்து ஆய்வுக் கூட்டங்களை நடத்திக்கொண்டிருந்தோம். அது சம்பந்தமாக ஆலோசனை செய்துகொண்டிருந்த நேரத்திலே தேர்தல் வந்துவிட்டது. ஆகவே, அந்த கமிட்டியினுடைய அறிக்கையைப் பற்றி இந்த அரசு பரிசீலனை செய்து, தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு ஏற்படுகின்ற வீண் இழப்பைத் தடுப்பதற்கு வேண்டிய முயற்சிகளிலும் செயல்பட வேண்டும், முனைப்போடு காரியம் ஆற்றிட வேண்டும் என்று உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன். அடுத்து, மிக முக்கியப் பிரச்சினை...

*பிற்பகல் 12-25*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 'நிறையக் கேட்டுக்கொள்கிறேன்', உட்காருங்கள். அரை மணி நேரத்திற்குமேல் ஆகிறது. (குறுக்கீடுகள்) 'கேட்டுக்கொள்கிறேன்', 'கேட்டுக்கொள்கிறேன்' என்று எவ்வளவு நேரம் இன்னும் சொல்லிக்கொண்டே இருப்பீர்கள்? அரை மணி நேரத்திற்குமேல் ஆகிறது. (குறுக்கீடுகள்) அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.கே.ஆர். சூரியகுமார். (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) சரி, சொல்லுங்கள். நன்றி சொல்லிப் பேச்சை முடியுங்கள். (குறுக்கீடுகள்) அரை மணி நேரமாகப் பேசிக்கொண்டிருக்கிறீர்கள். (குறுக்கீடுகள்) No, no, அரை மணி நேரமாகிறது. (குறுக்கீடுகள்) இதோ பாருங்கள், *11–50* மணிக்குப் பேச ஆரம்பித்தீர்கள். இப்போது *12–27* மணியாகிறது. அரை மணி நேரத்திற்குமேல் ஆகிறது. (குறுக்கீடு)

**திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இறுதியாக ஒன்றைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்னும் நிறையப் பேர் பேச வேண்டியிருக்கிறது.

**திரு. இரா. விசுவநாதன்:** நிறையக் குறுக்கீடுகள். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற முறை நமது மாண்புமிகு அமைச்சர் அவர்கள்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** குறுக்கீடுகள் இல்லாமல் நீங்கள்தான் பேச வேண்டும்.

**திரு. இரா. விசுவநாதன்:** அவர்கள் குறுக்கீடுகள் பண்ணினால், அதற்கு நான் என்ன செய்ய முடியும்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, பேசுங்கள்.

**திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதை அனுமதிப்பதும், அனுமதி மறுப்பதும் உங்கள் கையிலே இருக்கிறது. ஆகவே, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சென்ற முறை அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே ஏறத்தாழ 8,000 மெகாவாட்டிற்குமேல் உற்பத்தி செய்ததாக அறிவித்து இருந்தார்கள். ஆனால், அவர்கள் அறிவித்தபடி அந்த உற்பத்தியைச் செய்யவில்லை என்பதை சென்ற ஆட்சிக் காலத்திலே அவருடைய பேச்சிலே இருந்து மேற்கோள் காட்டி நான் எடுத்துச் சொல்லியிருந்தேன். அதைச் சென்ற முறை அமைச்சர் அவர்கள் மேற்கோள் காட்டி, 'பழைய அமைச்சர் அவர்கள் நாங்கள் அறிவித்தது எதையுமே செய்யவில்லை என்று சொல்லியிருக்கிறார்கள்; ஏன், இந்தத் திட்டங்களை அறிவித்ததாக நாங்கள் அறிவித்திருக்கிறோமே, இதுவெல்லாம் அவர்களுக்குத் தெரியாதா, என்று கேட்டிருக்கிறார், அதிலே அவர் சொன்னது, இன்றைக்கு G.M.R. Vasavi தனியார் துறையிலே உற்பத்தி செய்வதை நாங்கள் அனுமதித்தோம், பிள்ளைப்பெருமாநல்லூர் தனியார் உற்பத்திமூலமாக 330 மெகாவாட் மின் உற்பத்தித் திட்டத்தை நாங்கள் அனுமதித்தோம், நீங்கள் M.o.U. போட்டீர்கள்—புரிந்துணர்வு ஒப்பந்தம்; M.o.U. போட்டது புரட்சித் தலைவி அம்மாவினுடைய ஆட்சிக் காலத்திலே, ஆனால் செயல்படுத்தவில்லை. நாங்கள் செயல்படுத்தி I.P.P.A. போட்டது எங்களுடைய ஆட்சிக் காலத்திலே; அதைத் தொடங்கி



வைத்தது முதலமைச்சர் என்று சொன்னார்கள். நான் சொல்லுகின்றேன், இன்றைக்கும் சொல்லுகின்றேன், மத்திய அரசு, மத்திய மின்சாரச் சட்டம் தனியார் மின்சார உற்பத்தியை ஊக்குவிக்கின்றது, இல்லையென்று சொல்லவில்லை. ஆனால், அது நமது மாநிலத்திற்கு ஏற்புடையது அல்ல. அதை ஊக்குவிப்பது நமது மாநிலத்திற்கு, மின்சார வாரியத்திற்குப் பாதிப்பான விளைவுகளை ஏற்படுத்தும் என்பதை இந்த நேரத்திலே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அப்படிப்பட்ட அந்த G.M.R. Vasavi, பிள்ளைப்பெருமாநல்லூர் போன்ற தனியார்களுக்கு நீங்கள் I.P.P.A. போட்டதாகப் பெருமையாகச் சொன்னீர்களே, நீங்கள் போட்ட அந்த Independent Power Purchase Agreement மூலமாக மட்டும் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு ஆண்டுக்கு 400 கோடி ரூபாய் வீணாக நட்டம் ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது என்பதுதான் உண்மை. அதை வேண்டுமானால்—அந்த I.P.P.A.-யிலே Minimum Guarantee என்ற ஒரு clause-ஐச் சேர்த்து, அந்த Minimum Guarantee–யிலே கொடுக்கின்ற, கொள்முதல் செய்தாலும், கொள்முதல் செய்யவில்லை என்றாலும், அங்கே 400 கோடி ரூபாயை நாம் வீணாக, தண்டமாக அந்தத் தனியார்களுக்குத் தாரைவார்த்துக் கொண்டிருக்கிறோம். அந்தத் தனியார் துறைமூலமாக உற்பத்தி செய்வதிலே தமிழ்நாடு மின்சார வாரியம் எப்படியெல்லாம் பாதிக்கப்படுகிறது என்பதற்கு ஒரு உதாரணத்தைத்தான் சொன்னேன். அதையொரு சாதனையாக நீங்கள் சொல்ல வேண்டாம்.

*பிற்பகல் 12-30*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிள்ளைப்பெருமாநல்லூராக இருந்தாலும், எந்தத் தனியார் மின் உற்பத்தி நிலையங்களாக இருந்தாலும், மின்சார இலாகாவிற்கு நட்டம் ஏற்படக் கூடாது என்பதுதான். ஏற்கெனவே பிள்ளைப்பெருமாநல்லூர் நிறுவனத்தைச் சேர்ந்தவர்கள், கடந்த கால ஆட்சியிலேயே எரிவாயுமூலமாக நாங்கள் உற்பத்தி செய்கிறோம் என்று கேட்டு, ஓராண்டு காலமாக அவர்களுக்கு அனுமதி கொடுக்காமல், இந்த ஆட்சி வந்ததற்குப் பிறகு, எரிவாயுமூலமாக நீங்கள் உற்பத்தி செய்தால், ஏறக்குறைய மின்சார வாரியத்திற்கு, ஆண்டொன்றுக்கு 900 கோடி ரூபாய் இலாபம் வரும் என்று எண்ணி, அதை அனுமதித்திருக்கிறோம் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.கே.ஆர். சூரியகுமார். (குறுக்கீடு) நன்றி சொல்லி உரையை முடியுங்கள், விசுவநாதன்.

**திரு. இரா. விசுவநாதன்:** பேரவைத் தலைவர் அவர்களே, Independent Power Purchase Agreement போட்டது முழுவதும் எங்களுடைய ஆட்சிக் காலத்தில்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒன்று சொல்கிறேன், கேளுங்கள். உங்களுக்கு அனுமதித்தது 15 நிமிடங்கள்தான். 33 நிமிடங்கள் ஆகியிருக்கின்றன. (குறுக்கீடு) முடியாது. மாண்புமிகு உறுப்பினர் திரு. சூரியகுமார். (குறுக்கீடு) மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகம் கடந்த ஆட்சியில் நட்டத்தில் இயங்கியதாக இங்கே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டார்கள். மாண்புமிகு முதல்வர் தலைவர் கலைஞர் அவர்கள் முன்பே முதலமைச்சராக இருக்கும்போது ஏற்படுத்தப்பட்ட இந்நிர்வாகம், முழுக்க, முழுக்கத் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்குப் பல்வேறு பகுதிகளிலிருந்து நிலக்கரி ஏற்றி, இறக்கும் பணியைச் செய்து வருகிறது. இப்பொழுது மாண்புமிகு முதல்வர் தலைவர் கலைஞர் அவர்களுடைய அரசு ஏற்பட்ட பிறகு, அது இலாபத்திற்கு வந்திருக்கிறது என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சூரியகுமார்.

**திரு. என்.கே.ஆர். சூரியகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு மானியக் கோரிக்கைமீது பேசுவதற்கு இவ்வளவு நேரம் என்று ஒதுக்கப்பட்டிருக்கிறபோது, எந்த உறுப்பினராக இருந்தாலும், எந்தக் கட்சியைச் சேர்ந்தவராக இருந்தாலும், உரிய நேரத்திற்குமேல், அளவு கடந்த நேரம் எடுத்துக்கொண்டு மற்றவர்கள் வாதத்திலே பங்குகொள்வதைத் தடை செய்கிற அந்த முறையில்



அவர்கள் வாதம் செய்ய அனுமதிக்கக் கூடாது. தலைவர் அவர்கள் 10 நிமிடங்கள் அனுமதித்தார்கள். ஏதேனும் சில காரணங்களால் 15 நிமிடங்கள் ஆகலாம். தொடர்ந்து ஒருவரே பேசிக்கொண்டிருந்தால், அப்புறம் இந்த வாதத்திலே, ஏதோ அவருக்கு மட்டும்தான் இந்தப் பிரச்சினை சம்பந்தம் உடையதுபோலவும், மின்சார வாரியமும், மின்சாரத் துறையும் அந்த ஓர் உறுப்பினருக்குத்தான் தொடர்புடையது என்பதுபோலவும் அவர் மட்டுமே பேசிக்கொண்டிருப்பது முறையல்ல. அதைத் தாங்கள் அனுமதிக்கக் கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சூரியகுமார். (குறுக்கீடு) நீங்கள் பிரதான எதிர்க்கட்சியைச் சார்ந்தவர் என்பதால் இவ்வளவு நேரம் கொடுக்கப்பட்டிருக்கிறது, போதும். (குறுக்கீடு) உட்காருங்கள். திரு. சூரியகுமார், பேசுங்கள்.

***திரு. என்.கே.ஆர். சூரியகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிழக்கு எது என்று கீழ்வானத்துக்குச் சொல்லி, நெட்டி முறித்து நெடுந்தூரப் பயணத்தை உதய சூரியனுக்கு நினைவூட்டும் நினைவாற்றல் எங்கள் தலைவர், பொதுவுடைமைப் பாட்டை,பொதுப் பணியே வாழ்க்கை, முதுமையிலும் துள்ளும் முயல் என விளங்கும் எங்கள் மரியாதைக்குரிய தலைவர், பண்பில் பழுத்த பழம், இட ஒதுக்கீட்டுப் பிரச்சினையில் எதிரிக்கும் இடம் தராத எங்கள் இனமானத் தலைவர், ஐந்தாம் முறையாய்த் தமிழகத்தை ஆளும் எங்கள் அய்யன் வள்ளுவர், மாண்புமிகு முதல்வர் தலைவர் கலைஞர் அவர்களே, (மேசையைத் தட்டும் ஒலி) என்னுடைய தாத்தா, அமரர் திரு. ஆர்.சி. சாமண்ணக் கவுண்டர் அவர்கள் பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் தலைமையிலே இந்த அவையில் ஓர் உறுப்பினர். அடுத்ததாக, என்னுடைய பெரியப்பா திரு. டி.சி. திம்மராயக் கவுண்டர் அவர்கள் பேரறிஞர் அண்ணா அவர்களால் அடையாளம் காணப்பட்டு, அவரும் இங்கு ஓர் உறுப்பினர். அண்ணாவின் தலைமையில் உறுப்பினரான அவர், அண்ணாவின் தம்பியாம் எங்கள் தலைவர் கலைஞர் அவர்கள் தலைமையில் மீண்டும் உறுப்பினர். என்னுடைய தந்தை திரு. என்.கே. ராஜா அவர்களுக்கு மூன்று தேர்தல்களிலே வெற்றிக் கனி இழப்பு. அந்த இழப்புக்கு ஈடு செய்ய, தலைவர் கலைஞர் அவர்கள் தலைமையில் எங்கள் குடும்பத்திலே மீண்டும் எனக்கொரு வாய்ப்பு. ஆக, பெருந்தலைவர் காமராஜர், அறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர் என முத்தரப்புத் தலைவர்கள்தம் ஆசிகளை முத்தாய்ப் பெற்றது எங்கள் குடும்பம். எங்கள் குடும்பத்தின் சார்பில் தலைவர் கலைஞர் அவர்களுக்கு நன்றி சொல்கிறேன்.

*பிற்பகல் 12-35*

பழைமைகளின் முற்றுகையைப் பந்தாட வந்த மழவர்! உள்ளமோ உயர் குன்றம்! ஓயா உழைப்பாறு! துள்ளும் தொண்டர்களின் தோள் என விளங்கும் எங்கள் இனமானப் பேராசிரியர், மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களே, ஈடில்லாத் தந்தையின் இணையில்லாப் பணிகளை இவ்வுலகம் எண்ணுதற்கே, தன் நாடி நரம்பெல்லாம் 'கழகமே' என ஆக்கிக் காட்டிய கட்டிளம் காளை! அரசியல் ஆழிப் பேரலைகளிலும் ஆர்த்திடும் ஆற்றல் மிகு இளைஞர், உள்ளாட்சித் தத்துவத்தை நல்லாட்சியில் விதைத்துள்ள நாயகர், இளம் ஞாயிறு, எங்கள் தளபதி, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களே, *(மேசையைத் தட்டும் ஒலி)*

எங்கள் மாவட்டத்து மண்ணின் மைந்தன், தலைவர் கலைஞர் அவர்களின் தடந்தோள், ஊர் பெயரைத் தன்னுள்கொண்ட தன்னிகரில்லாப் பெருமான் மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களே, குதர்க்கங்களுக்கோ பாகற்காய், தர்க்கங்களுக்கோ தேன் என விளங்கி, பொய் வேந்தர்கள் தொடுக்கும் வினாக் கணைகளைத் தன் மெய் வருத்தி, அதன்மூலம் அவற்றைப் பொய்ப் புராணங்களாக்கும் மண்ணின் மைந்தர், நிழலாகிவிட்ட என் தந்தைக்கு நிஜமாகி நிற்கும் எங்கள் குடும்பத் தலைவர், என் மரியாதைக்குரிய மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களே, எனக்குத் தமையனாய் விளங்கி, உடன் பிறவா என்ற சொல்லுக்கு உடன் நின்று ஒத்துழைப்பு நல்கும் என் வழிகாட்டியாம் அண்ணன் மாவட்டக் கழகச் செயலாளர் திரு. ஆர். காந்தி அவர்களே, இந்த மன்றத்துப் பிள்ளையாய் என்னைத் தொட்டிலிட்டுச் சுகம் காணும் என் தொகுதி வாக்காளப் பெருமக்களே, அந்தத் தொட்டில் சுகத்திற்குத் தூளியாய் விளங்கிய எனது கழகக் கூட்டணிக் கட்சித் தலைவர்களே, அசரீரியாக நின்று இந்த அவையிலே என்னை ஆசீர்வதித்துக்கொண்டிருக்கும் ஈன்றபொழுதினும் பெரிதுவக்கும் என் பெற்றோர்களே, அனைவருக்கும் என் தலை வணக்கம் சொல்லி, எரிசக்தித் துறை, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை ஆகிய இரண்டு துறைகளிலே இந்த அவையிலே பேச வாய்ப்பளித்து, அதன்மூலம் என் அறிமுகப் பேச்சுக்கு அடையாள மை வைத்த என் மரியாதைக்குரிய மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும் என் நன்றியைச் சொல்லி, என் அறிமுகப் பேச்சைத் தொடங்குகிறேன்.

1918 ஆம் ஆண்டு முதல் தமிழகத்திற்குத் தமிழ்நாடு மின்சார வாரியம் ஒளி தந்துகொண்டிருக்கிறது. இதன் தற்போதைய மொத்த



மின் உற்பத்தி நிறுவு திறனோ 10,098 மெகாவாட். அதில் வாரியத்தின் மின் உற்பத்தி நிலையங்கள்மூலம் கிடைக்கப்பெறும் மின்சாரமோ 5,565 மெகாவாட். தமிழகத்தின் இன்றைய ஒரு நாளின் உச்சப் பயனீடு 191.283 மில்லியன் யூனிட்டுகளாக உயர்ந்துள்ள நிலையில் 1,145 துணை மின் நிலையங்களும், 184.31 இலட்சம் மின் இணைப்புகளும் அதை எதிர்கொள்ள ஆரம்பித்துள்ளன.

இராமநாதபுரம் மாவட்டத்தில் 95 மெகாவாட் திறன்கொண்ட வழுதூர் எரிவாயு சுழலி மின் திட்டம், ஈரோடு மாவட்டத்தில் 60 மெகாவாட் திறன்கொண்ட பவானி கட்டளைத் தடுப்பணைகள் 2 மற்றும் 3 புனல் திட்டங்கள், கோயம்புத்தூர் மாவட்டத்தில் 10 மெகாவாட் திறன்கொண்ட பவானி தடுப்பணை–1 புனல் மின் திட்டம், மத்தியத் துறைமூலம் கூடங்குளம் அணு மின் நிலையத்தின் 1,000 மெகாவாட் திறன்கொண்ட முதல் பிரிவு, கைகா அணு மின் நிலையம் நிலை–2 ஆகியன இந்த நிதியாண்டில் இயக்கப்பட உள்ளன என்ற அறிவிப்புகளை எல்லாம் இந்த மானியக்கோரிக்கைமூலம் அரசு வெளியிட்டிருப்பது, தமிழகத்தை ஓர் ஒளிரும் தமிழகமாக ஆக்கத் தலைவர் கலைஞர் அவர்கள் எவ்வளவு பாடுபடுகிறார் என்பதையே காட்டுகிறது.

தமிழகத்தின் வேகமான பொருளாதார வளர்ச்சிக்கேற்ப, மின் சக்தியின் தேவையும் அதிகரித்து வருகிறது. அதைக் கருத்தில்கொண்டு, நெல்லை மாவட்டத்தில் கூடங்குளத்தில் தற்போது 2,000 மெகாவாட் மின் உற்பத்தித் திட்டம் நிறுவப்பட்டு வரும் நிலையில், கூடுதலாக 4,000 மெகாவாட் திறன் உள்ள நான்கு கூடுதல் அணு உலைகள் நிறுவப்படும் என்று மைய அரசு அறிவித்துள்ளது. இதற்காகக் கூடுதலாக நிலம் கையகப்படுத்தப்படாமல், ஏற்கெனவே கையகப்படுத்தப்பட்டுள்ள நிலப் பகுதியிலேயே இவை அமையவுள்ளன. மைய அரசு இதற்காக ரூபாய் 26,000 கோடியைத் தமிழகத்திலே முதலீடு செய்யவுள்ளது. இதுவும் நம் தலைவர் கலைஞர் அவர்களின் அரிய சாதனைதான்.

காற்றாலைகளின்மூலம் மின் உற்பத்தி செய்வதில் தமிழகம் இந்தியாவிலேயே முதன்மை மாநிலமாகத் திகழ்கிறது. தற்போது அவற்றின் மின் திறன் 3,400 மெகாவாட்டாக உள்ளது. 1989 ஆம் ஆண்டு முதன்முதலாக இந்தியாவிலேயே விவசாயிகள் அனைவருக்கும் இலவச மின்சாரத்தைத் தந்தவர் நம்முடைய தானைத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள். *(மேசையைத் தட்டும் ஒலி)*

விவசாய இணைப்புகளில் சாதாரணத் திட்டத்தில் கொடுக்கப்படும் இணைப்புகளின் இலக்கு எண்ணிக்கை 5,000–லிருந்து 10,000 ஆக உயர்த்தப்பட்டுள்ளது என்பதும், சுய நிதித் திட்டத்தின்கீழ் வரும் 2.4 இலட்சம் விவசாயிகளுக்கும் இலவச மின்சாரம் வழங்கப்படுகிறது என்பதும், கைத்தறி மற்றும் விசைத்தறி நெசவாளர்களுக்கு இலவச மின்சாரம் வழங்க நமது அரசால் கடந்த ஆண்டு அறிவிக்கப்பட்ட திட்டத்திற்காக 2007–2008 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்டத்தில் ரூபாய் 78 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்பதும், இதனால் 1,50,000 கைத்தறி நெசவாளர்களும், 80,000 விசைத்தறி நெசவாளர்களும் தொடர்ந்து பயன்பெறுவார்கள் என்பதும் இந்த நிதிநிலை அறிக்கையிலே வரவேற்புத் தோரணங்கள் கட்டக்கூடிய அறிவிப்புகளாக உள்ளன.

ஏழைக் குடும்பங்களுக்கு இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி வழங்கியதன்மூலம் நீலகிரி மலைத் தொடர்ப் பகுதியில் உள்ள அணுக முடியாத குன்றுகளில் வசிக்கும் 4,206 குடும்பங்களுக்கு, சாதனைக் காலமாக 30 நாட்களுக்குள் மின் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

*பிற்பகல் 12–40*

இதுபோல, கலைஞர் அரசின் இன்னொரு உலகச் சாதனையான, நிலமில்லாத விவசாயிகளுக்கு இரண்டு ஏக்கர் நிலம் வழங்கும் திட்டம். அரசின் சாதனையால் கிடைக்கும் விவசாய நிலங்களுக்கு மின்சாரம் இலவசமாக வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் திருவள்ளூர், திண்டுக்கல், விழுப்புரம், தூத்துக்குடி, வேலூர் ஆகிய ஐந்து மாவட்டங்களில் தற்போது இலவச மின்சாரம் விநியோகிக்கப்படுகிறது.

மத்திய அரசால் 50 சதவீதம் வரை வழங்கப்படும் மானியத் திட்டத்தின்கீழ், சூரிய ஒளியைப் பயன்படுத்தி வீட்டு விளக்கு, அலுவலக மின் விளக்கு மற்றும் தெரு விளக்குகள் அமைப்பதற்கு நமது அரசு தற்போது ஊக்கமளித்து வருகிறது. உள்ளாட்சி அமைப்புகள் இந்த மானியங்களைப்பெற்று, சூரிய ஒளி தெரு விளக்குகளை அமைத்து. அதன்மூலம் மின் கட்டணச் செலவைக் குறைக்கலாம். இதனை ஊக்கப்படுத்தும்விதமாக, 2006–2007–ல் மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் நீர் வளம் உள்ள இடங்களில், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் வாழும் பகுதிகளில் தெரு விளக்குகள் அமைக்க ரூபாய் 21.34 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.



அடுத்ததாக, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை. அரசின் நலத் திட்டங்களை மக்களிடம் கொண்டு சேர்க்கும் அரும்பணியில் மிகவும் பொறுப்பானவர்கள் அரசு ஊழியர்கள். அவர்களின் பொறுப்பை உணர்ந்து, கடந்த ஆட்சியில் அவர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளைத் திரும்பப் பெற்று, அவர்களின் காவலனாக விளங்குகிறது கலைஞர் அரசு. அதை உணர்த்தும்விதமாக, அரசு ஊழியர்களைப் பணி நீக்கம் செய்வதற்காகக் கொண்டு வரப்பட்ட ESMA சட்டம் இரத்து. கடந்த ஆட்சியில் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்ட அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களின் ஊதியமில்லா விடுப்பாக அறிவிக்கப்பட்டிருந்த நாட்களைப் பணிக் காலமாக முறைப்படுத்தி ஆணை. அரசுப் பணிகளுக்கு ஆதரவற்ற விதவைகளைக் கண்டறிந்து அவர்களுக்கு மாத வருமானம் ரூபாய் ஆயிரத்திலிருந்து ரூபாய் நான்காயிரமாக உயர்த்தி ஆணை. ஒப்பந்த அடிப்படையில் தொகுப்பூதியத்தின்கீழ்ப் பணிபுரிந்து வந்த 45,987 ஆசிரியர்களுக்குக் கால முறை ஊதியம், ஆண்டுக்கு ஒரு முறை 15 நாட்கள் அல்லது இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை 30 நாட்கள் ஈட்டிய விடுப்பு சரண் செய்து பணமாக்குதலை நிறுத்தி வைத்து இருந்ததற்குப் பின்னேற்பு, வேலை நியமனத் தடை விலக்கப்பட்டு, அத்தடையால் வேலைவாய்ப்பை இழந்தோருக்கு வேலைவாய்ப்புக்கான வயது வரம்பிலே மேலும் 5 ஆண்டுகள் நீட்டிப்பு, கடந்த ஆட்சியில் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டு உயிர் நீத்தோரின் வாரிசுகளுக்கு இப்போது கருணை அடிப்படையிலே அரசுப் பணி, அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்டு வந்த மிகை ஊதியம் மற்றும் சிறப்பு மிகை ஊதியம் மற்றும் ஓய்வூதியர்களுக்கு வழங்கப்பட்ட பொங்கல் பரிசு ஆகியவற்றைத் திரும்ப வழங்க ஆணை. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சூரியகுமார், சீக்கிரம் உங்களுடைய பேச்சை முடியுங்கள். நேரம் இல்லை. (குறுக்கீடு) தொகுதி பற்றிச் சொல்லுங்கள்.

**திரு. என்.கே.ஆர். சூரியகுமார்:** என்னுடைய தொகுதிப் பிரச்சினைகளைப் பற்றி இந்த மன்றத்திலே பதிவு செய்ய விரும்புகிறேன். மல்லகுண்டா ஊராட்சியில், ஜோதி நகரில் 200 பம்புசெட்டுகளும், நாராயணபுரம் ஊராட்சியில் 50 பம்புசெட்டுகளும், புள்ளூர் ஊராட்சியில் 50 பம்புசெட்டுகளும் கடந்த இருபது வருடங்களாகப் பக்கத்து மாநிலமான ஆந்திரத்திலே இருந்து மின் இணைப்பைப் பெற்று வந்தன. இதுவரை வழங்கி வந்த மின்சாரத்தை அந்த அரசு இப்போது நிறுத்திக்கொண்டதால், அந்தப் பகுதி விவசாயிகள் பெரிதும்

பாதிப்புக்கு உள்ளாகியிருக்கிறார்கள். இவற்றில் பெரும்பாலான நிலங்கள், பதிவு செய்யப்படாத வனப் பகுதிகள். எனவே, மீண்டும் இந்த நிலங்களுக்கு மின்சாரம் கிடைக்க அரசு ஆவன செய்ய வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

கந்திலி ஒன்றியத்தில் உள்ள சுந்தரம்பள்ளி, நாட்ராம்பள்ளி ஒன்றியத்தில் உள்ள பச்சூர் ஆகிய ஊர்களில் துணை மின் நிலையம் அமைக்க வேண்டுமென்றும், அதுபோல், நாட்ராம்பள்ளியில் தற்போது துணை மின் நிலையமாக உள்ளதை ஓர் உயர் அழுத்த மின் நிலையமாக மாற்ற வேண்டுமென்றும் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

பர்கூர் தொகுதி, ஆம்பள்ளி ஏரியிலிருந்து ஒரு கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள காக்கங்கரை ஏரிக்குக் கால்வாய் வெட்டி, அந்த காக்கங்கரை ஏரியில் நீர் நிரப்பினால், அதிலிருந்து சுமார் 15 ஏரிகளுக்கு நீர் நிரப்பப்பட்டு, சுமார் 2 ஆயிரம் எக்டேர் விவசாய நிலங்கள் பயனடையக்கூடிய வாய்ப்பு உள்ளது. இந்தத் திட்டம் ஏற்கெனவே அரசின் ஆய்வில் உள்ளது. இதை மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் நிறைவேற்றித் தர வேண்டுமென இந்த அவைமூலம் கேட்டுக்கொள்கிறேன்.

அதே நேரத்தில், ஆந்திர அரசால் பாலாற்றில் கட்டப்படும் குறுக்கு அணையைத் தடுத்திட அரசு முழு முயற்சியை மேற்கொள்ள வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன். ஆவாரங்குப்பம், இராமநாயக்கன்பேட்டை, அம்பலூர் ஆகிய இடங்களில் தலா ரூபாய் ஒரு கோடி மதிப்பீட்டில் தடுப்பணைகள் கட்டப்பட வேண்டும். இந்த அணைகள் கட்டப்பட்டால், நிலத்தடி நீர் சேகரிக்கப்பட்டு, அதன்மூலம் வாணியம்பாடி, நாட்ராம்பள்ளி, திருப்பத்தூர் நகரம் மற்றும் திருப்பத்தூர் சர்க்கரை ஆலை, ஜோலார்பேட்டை நகரம் மற்றும் ஜோலார்பேட்டை இரயில்வே நிலையம், தெக்குப்பட்டு சந்தன ஆலை ஆகிய பகுதிகள் குடிதண்ணீர் வசதிபெறும். நாட்ராம்பள்ளி ஒன்றியம்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சூரியகுமார், உங்களுடைய தேவைகளை எழுத்துமூலமாகக் கொடுத்துவிடுங்கள். செய்துவிடுவார்கள். அடுத்தபடியாக, மாண்புமிகு உறுப்பினர் திரு. அமரமூர்த்தி. (குறுக்கீடு) உட்காருங்கள். (குறுக்கீடு) நன்றி சொல்லி, உரையை முடியுங்கள்.

**திரு. என்.கே.ஆர். சூரியகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரிய வாய்ப்பைத் தந்த தங்களுக்கு என்னுடைய நன்றியைச் சொல்லி, விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.



பிற்பகல் 12-45

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அமரமூர்த்தி.

**திரு. து. அமரமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எரிசக்தித் துறை மானியக் கோரிக்கையில் பேசுவதற்கு எனக்கு வாய்ப்பளித்த தங்களுக்கு முதலிலே எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அறிவிக்கப்பட்டு, அது என்றைக்கு நமது பகுதிக்கு வரும் என்று கடந்த 10 ஆண்டுகளாகக் காத்துக்கொண்டிருக்கின்ற, எதிர்பார்த்துக்கொண்டிருக்கின்ற, மக்கள் பிரச்சினைக்கு விடிவு காண இருக்கின்ற அந்த ஜெயங்கொண்டம் அனல் மின் நிலையத் திட்டத்தைப் பற்றிக் கொள்கைக் குறிப்பிலே எதுவும் குறிப்பிடப்படவில்லை. கடந்த 30 ஆம் தேதி 'தினமலர்' பத்திரிகையிலே ஒரு செய்தி வந்தது. சிலரின் எதிர்ப்பால் ஜெயங்கொண்டம் அனல் மின் நிலையத் திட்டம் கைவிடப்பட இருக்கிறது என்ற செய்தி வந்திருக்கிறது. அந்தச் செய்தியைக் கேள்விப்பட்டவுடன் அந்தப் பகுதி மக்கள் மிகவும் ஏமாற்றம் அடைந்து, வருத்தம் அடைந்திருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

பெரம்பலூர் மாவட்டத்திலே, அந்த அனல் மின் நிலையம் வருகின்ற பகுதிகளான ஆண்டிமடம், ஜெயங்கொண்டம் பகுதிகள் மிகவும் பின்தங்கிய பகுதிகள். முந்திரியை மட்டும் நம்பி இருக்கின்ற பகுதிகள். வருடத்திற்கு ஒரு முறை முந்திரிக் கொட்டைகளைப் பொறுக்கி, அவற்றை விற்று, அதிலிருந்து வரும் வருமானத்தைக் கொண்டுதான் அந்த ஜனங்கள் குடும்பம் நடத்த வேண்டும். இன்னும் சொல்லப் போனால், அங்கே வசிக்கின்ற மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்கள், பிற்படுத்தப்பட்ட மக்கள், ஆதி திராவிடர் காலனியைவிட மோசமான பகுதியிலே வசிக்கிறார்கள். ஆதி திராவிடர்களுக்குக்கூட வருடத்திற்கு ஒரு காலனி என்றால், 10 தொகுப்பு வீடுகள் கொடுத்து விடுகிறார்கள்; சிமெண்ட் வீடு கொடுத்து விடுகிறார்கள். ஆனால், இந்த மக்களுக்கு எந்த வாய்ப்புமே இல்லை. இந்த அனல் மின் நிலையத் திட்டம் வந்தால், நமக்கு மிகப் பெரிய எதிர்காலம் இருக்கும்; நம் பிள்ளைகளுக்கு, சந்ததிகளுக்கு ஒரு பெரிய வாழ்வு அமையும் என்று அந்த மக்கள் மிக ஆவலோடு எதிர்பார்க்கிறார்கள். ஏற்கெனவே 1996-லே Reliance நிறுவனம் ஒரு ஒப்பந்தம் போட்டது. அப்பொழுது யாரோ எதிர்த்தார்கள் என்று, அந்த Reliance நிறுவனம் பின்வாங்கிப் போய்விட்டது. அதற்குப் பின்னாலே வந்த அரசு அதைப் பற்றிச்

சிந்திக்கவே இல்லை. அதற்குரிய அறிவிப்பு எதுவுமே இல்லை. சமீபத்திலே மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் பெரம்பலூருக்கு வந்து, சம்பந்தப்பட்ட அதிகாரிகளை அழைத்துப் பேசி, உடனடியாகத் துவங்குவதற்கு நடவடிக்கை எடுப்போம் என்ற உறுதியைச் சொல்லிவிட்டு வந்தார்கள். கடந்த இரு தினங்களாக ஊடகங்களில் வருகின்ற செய்திகளைப் பார்க்கின்றபோது, அந்த மக்களுக்குப் பெரிய ஏமாற்றத்தைத் தருகின்ற செய்திகளாக அவை இருக்கின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. அமரமூர்த்தி அவர்கள் தயவுசெய்து அஞ்சத் தேவையில்லை. எந்தத் தடை வந்தாலும், 2008 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு முதலமைச்சர் வந்து, ஜெயங்கொண்டம் அனல் மின் திட்டத்தைத் தொடங்கி வைப்பார்கள். 3 ஆண்டு காலத்திற்குள்ளாக மின்சாரம் நிச்சயமாக உற்பத்தி செய்யப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அமரமூர்த்தி, நன்றி சொல்லி உரையை முடித்துவிடுங்கள்.

**திரு. து. அமரமூர்த்தி:** முடித்துவிட வேண்டுமா? உரையை ஆரம்பிக்கவே இல்லையே! அமைச்சர் அறிவிப்பிற்கு நன்றி. நான் மாண்புமிகு அமைச்சரைக் கேட்டுக்கொள்வதெல்லாம், அங்கேயுள்ள விவசாயிகளின் நிலங்களை, வீடுகளைக் கையகப்படுத்தும்போது, ஒரு நியாயமான விலையைக் கொடுங்கள்; ஒன்றும் அதிகமாக எல்லாம் கொடுக்க வேண்டாம். ஏனென்றால், எல்லோரும் விரும்புகிறார்கள், ஒட்டுமொத்த ஜனங்களும் அனல் மின் நிலையம் அங்கே வர வேண்டும என்று எதிர்பார்க்கிறார்கள். கலைஞர் அவர்களால்தான் அந்த அனல் மின் நிலையத்தைத் தொடங்க முடியும், வேறு எந்த அரசாலும் இதைச் செய்ய முடியாது; ஆகவே, கலைஞர் காலத்திலே இது வந்தால்தான் நமக்கு விடிவுகாலம் என்று நினைக்கிறார்கள். ஏனென்றால், விவசாயிகளுடைய நிலங்களைக் கையகப்படுத்தும்போது அதிலே இலாபம் வருகிறது.





பிற்பகல் 12-50

**மாண்புமிகு திரு. வீ.பெ. துரைசாமி (பேரவைத் துணைத் தலைவர்):** திரு. அமரமூர்த்தி, வார்த்தைக்கு வார்த்தை ரொம்ப இடைவெளிவிட்டுப் பேசுகிறாரே, low voltage-ஆ? (சிரிப்பு)

**திரு. து. அமரமூர்த்தி:** துணை சபாநாயகர் தெளிவாகப் புரிந்துகொள்ள வேண்டுமென்பதற்காகத்தான் கொஞ்சம் பொறுமையாகப் பேசுகிறேன்; வேறு ஒன்றும் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எனக்கு time முக்கியம், சீக்கிரம் உரையை முடியுங்கள்.

**திரு. து. அமரமூர்த்தி:** எனக்கு 15 நிமிடங்கள் வேண்டும். நான் இன்னும் பேச ஆரம்பிக்கவேயில்லை. இப்போதுதான் ஆரம்பிக்கிறேன். அதாவது, அந்த நிலம் இலாபத்திற்காக எடுக்கப்படுகிறது. நிலமற்றவர்களுக்குப் பட்டா கொடுக்க வேண்டுமென்றால், அரசாங்க விலையிலே எடுக்கலாம். இது இலாபம் ஈட்டுவதற்காக எடுக்கப்படுவதால், ஒரு நியாயமான விலையைக் கொடுங்கள். அது என்ன நியாயமான விலை என்றால், அதிலே உள்ள பிரச்சினை தீர வேண்டுமென்றால், அங்கே இருக்கிற நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் தலைமையிலே ஒரு குழுவை அமையுங்கள்; நாங்கள் போய் ஜனங்களைச் சந்திக்கிறோம், ஜனங்களிடம் அரசின் நியாயங்களை எடுத்துச் சொல்கிறோம். எடுத்துச் சொல்லி, ஒரு நியாயமான முடிவைக் கொண்டு வந்த பின்பு, உடனடியாக அந்த அனல் மின் நிலையத்தை நீங்கள் தொடங்குவதற்கு முன்வர வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, ஆண்டு ஒன்றுக்கு விவசாயிகளுக்குக் கொடுக்கின்ற மின் இணைப்பு 40,000 என்று குறிப்பிடுகிறார்கள். அந்த 40,000 இணைப்புகளில் 20,000-ஐ டெல்டா மாவட்டங்களுக்குக் கொடுத்துவிடுகிறார்கள். பாக்கி 20,000 தான் அனைத்து மாவட்டங்களிலும் உள்ள விவசாயிகளுக்குப் பிரித்துக் கொடுக்கப்படுவதாக நான் கேள்விப்படுகிறேன். எல்லோருக்கும் சமமாகக் கொடுக்க வேண்டும். அந்த மின் இணைப்புகளை எல்லா மாவட்டத்து மக்களுக்கும் சரிசமமாகப் பிரித்துக் கொடுக்க வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, வீராணம் விரிவாக்கத் திட்டத்திலே டெல்டா பகுதி மக்களுக்கு எங்கள் பகுதியைச் சார்ந்த திருமானூர், டி.பழூர் ஆகிய

பகுதி மக்களுக்குச் சிறப்பாக ஒரு திட்டத்தை அறிவித்தார்கள். யார், யார் மின் இணைப்பு வேண்டுமென்று விண்ணப்பம் கொடுத்திருக்கிறார்களோ, அவர்கள் அத்தனை பேருக்கும் உடனடியாக மின் இணைப்பு கொடுக்கிறோம் என்று அறிவித்தார்கள். அதை நம்பிக், கிட்டத்தட்ட 1,500 விவசாயிகள் அத்தனை பேரும் இலட்சக்கணக்கிலே செலவு செய்து, மோட்டார் இணைப்பு, மோட்டார் பம்புசெட், எல்லாவற்றையும் வாங்கிப் பதிவு செய்து, காத்திருக்கிறார்கள். ஆனால், யாருக்கும் மின் இணைப்பு வழங்கப்படவில்லை. உடனடியாக அந்த டெல்டா மக்களுக்கு அறிவிக்கப்பட்ட—மாண்புமிகு அமைச்சர்கூட உடனடியாகக் கொடுக்கிறேன் என்று புதுக்கோட்டையிலே சொல்லிவிட்டு வந்தார்கள்—அந்த மின் இணைப்புகளை உடனடியாக வழங்க வேண்டும்.

அடுத்து, கிராம மக்களுக்கு அறிவிக்கப்படாத மின் வெட்டு நிறைய இருக்கிறது. நான் சனிக்கிழமை வீட்டிலே இருந்தேன். 11 மணியிலிருந்து 1½ மணி வரையிலும்தான் இருந்தேன். 7 தடவை மின் வெட்டு வந்தது. நான் கிட்டத்தட்ட 3 மணி நேரம்தான் இருந்தேன். 11 மணியிலிருந்து 1-30 மணிக்குள் 7 முறை மின் வெட்டு ஏற்பட்டது. கிராம மக்கள் விவசாயத்தை நம்பியே வாழ்கிறார்கள். இப்படிப் போனால், அவர்கள் அரைக் காணிகூட விவசாயம் செய்ய முடியாது. ஆகவே, மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் அதிலே தனிக் கவனம் செலுத்த வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, களப் பணியாளர்களே இல்லை. களப் பணியாளர்கள் இல்லாததால் எங்கேயாவது fuse போனால், ரோட்டிலே போகிறவர்கள் போய் fuse போடுகிறார்கள். அவர் என்ன பண்ணுகிறார்? Fuse நிற்க வேண்டுமென்பதற்காக தடிமனான கம்பியைப் போட்டு fuse போடுகிறார்கள். அப்படி தடித்த கம்பியைப் போட்டு fuse போடும்போது, அது தாங்காமல் transformer வெடித்து, failure ஆகிப் போய்விட்டதென்றால், கிட்டத்தட்ட ஒரு வாரம், புது transformer வருகிற வரைக்கும்— (குறுக்கீடு) நான் குறைத்துச் சொல்கிறேன்; மின்சாரம் கிடைக்க மாதக் கணக்கிலே ஆகிறது என்று சொல்கிறார்கள். அதாவது, குடிதண்ணீர்கூட குடிக்க முடியவில்லை. நாட்டிலே மின்சாரம் இல்லையென்றால், எதுவுமே நடக்காது. இன்றைக்கு மின்சாரம் அவ்வளவு அத்தியாவசியத் தேவையாக ஆகிவிட்டது. மின்சாரம் இல்லையென்றால், எதுவுமே இல்லை. ஒரு இருட்டு உலகத்திலே வாழ்வதைப்போலத்தான் இருக்கிறது. குடிநீர் உட்பட ஒரு மாதம் அவர்கள் அலைய வேண்டியதாக இருக்கிறது. களப்



பணியாளர்கள் மிக, மிகக் குறைவாக இருக்கிறார்கள். உடனடியாகக் களப் பணியாளர்களை நியமிக்க வேண்டும். ஆரம்பத்தில் மின்சாரம் வந்தபோது, எங்களுக்குக் கிட்டத்தட்ட 30 transformers இருந்தன, அப்போது 15 பேர் இருந்தார்கள். இன்றைக்கு 1,300 transformers இருக்கின்றன, இருப்பது 12 பேர். 40 பங்கு. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 9 நிமிடங்கள் பேசியிருக்கிறீர்கள். உரையை முடியுங்கள். (குறுக்கீடு) No, no.

**திரு. து. அமரமூர்த்தி:** எதிர்க்கட்சி நண்பர்களுக்கு ஒரு நியாயம், எங்களுக்கு ஒரு நியாயம் சொல்லக் கூடாது, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை.

**திரு. து. அமரமூர்த்தி:** எங்களுக்கும் நீங்கள் நேரம் கொடுக்க வேண்டும். அதாவது, 30 மின் மாற்றிகள் இருந்தபோது, விவசாயிகள் 220. மொத்தம் 220 இருந்தபோது, களப் பணியாளர்கள் 15 பேர் இருந்தார்கள். இன்றைக்கு 23,000 services இருக்கின்றன. 2,400 விவசாய மின் இணைப்புகள் இருக்கின்றன, இருக்கின்றவர்கள் மொத்தம் 12 பேர்தான். இதனாலே அரசுக்குப் பெரிய இழப்பு. ஒரு transformer போய்விட்டால் 2 இலட்சம், 3 இலட்சம் ரூபாய் எனப் பெரிய இழப்பு வருகிறது. ஆகவே, களப் பணியாளர்களை உடனடியாக நீங்கள் நியமிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-55

அடுத்தபடியாக, எங்கள் மாவட்டத்திலே சாதாரண மின் இணைப்புக் கேட்டு விண்ணப்பித்தவர்களுக்கு 1987 வரைக்கும் seniority இருக்கிறது. இப்போது 2007 நடக்கிறது. ஒரு தலைமுறை முடிந்துதான் அவர்களுக்குப் புதிதாக மின் இணைப்பு கிடைக்கும்போல் இருக்கிறது. மின் இணைப்புக் கேட்டவர்களுக்குத் தலைமுறை முடிந்துதான் புதிதாக மின் இணைப்பு கொடுக்கிறார்கள். இன்று உபரி மின்சாரம் இருக்கிறது என்று சொல்கின்றீர்கள். ஜெயங்கொண்டத்தில் 10 ஆயிரம் மெகாவாட் உற்பத்தி செய்யலாம் என்கிறீர்கள். இந்த மாதிரி வந்தால், மின் இணைப்புக் கேட்ட விவசாயிகள் அத்தனை பேருக்கும், யார் application கொடுத்தாலும் உடனடியாக மின் இணைப்பு கொடுக்க வேண்டும். ரூ. 50 ஆயிரம் பணம் கட்டிக்கூட நிறையப் பேர் காத்துக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் உடனடியாக மின் இணைப்பு வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேட்டுக்கொண்டு, சீக்கிரம் உரையை முடியுங்கள். உரையை முடித்துவிட்டீர்கள் இல்லையா?

**திரு. து. அமரமூர்த்தி:** அடுத்தபடியாக அமெரிக்கா, இங்கிலாந்தில் இருப்பதைப்போல குறைந்த அழுத்தத்திலும் மின்சார சாதனங்கள் இயங்கும் திட்டத்தை அமல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோன்று, தேவகோட்டையில் 15 நாட்களாக மின்சாரம் இல்லையாம்! மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஆர். இராமசாமி அவர்கள் சொல்கின்றார்கள். தேவகோட்டையில் 15 நாட்களாக மின்சாரத் தட்டுப்பாடு ஏற்பட்டு, பொது மக்கள் மிகவும் சிரமப்படுகின்றார்கள் என்று சொல்கின்றார். உடனடியாக மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் சரி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் கேட்டுக்கொள்கிறேன், கேட்டுக்கொள்கிறேன் என்கிறீர்கள். பக்கத்திலிருந்து பேப்பரைத் தந்துகொண்டேயிருக்கிறார்கள்.

**திரு. து. அமரமூர்த்தி:** என் தொகுதிப் பிரச்சினைக்கு வந்துவிடுகின்றேன். எங்களுடைய திருமானூரில் இருக்கின்ற உபகோட்டத்தை லால்குடியில் சேர்த்திருக்கின்றார்கள். எங்களுடையது பெரம்பலூர் மாவட்டம். அரியலூரில் செயற்பொறியாளர் அலுவலகம் இருக்கிறது. இங்கிருந்து நாங்கள் லால்குடிக்குப் போக வேண்டியிருக்கிறது. ஆகவே, திருமானூர் உபகோட்டத்தை அரியலூரில் சேர்க்க வேண்டும்.

மின் கம்பிகளை மாற்றி 40 வருடங்கள் ஆகின்றன. Current கம்பிகளெல்லாம் கீழே தொங்கிக்கொண்டிருக்கின்றன. சாதாரண உயரம் உள்ள வண்டி போனால்கூட fire ஆகிவிடுகின்றது. வீடுகளும் fire ஆகிவிடுகின்றன. நட்ட கம்பங்களில் இருந்த concrete எல்லாம் போய், கம்பி மட்டும்தான் இருக்கிறது. பொது மக்களுக்கு உயிர்ச் சேதம் ஏற்படக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. ஆகவே, கம்பங்களையெல்லாம் மாற்றி, கம்பிகளை reshape செய்ய வேண்டும். Reshape செய்தால், voltage drop இல்லாமல் இருக்கும்; பல பகுதிகளில் குறைந்த அழுத்த மின்சாரம்தான் இருக்கிறது. இதனால் line loss-ம் வருகிறது. ஆகவே, இதையெல்லாம் சீர் செய்ய வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.



எங்கள் மாவட்டக் கோரிக்கை. அதாவது, கடந்த முறை 1996–லே மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் முதல்வராக இருந்தபோது, நானும் சட்டமன்ற உறுப்பினராக இருக்கும் வாய்ப்புக் கிடைத்தது. அப்பொழுது தேனூரில் பால் குளிரூட்டும் நிலையம் அமைக்கப்படும் என்று அறிவித்தார்கள். அறிவித்த பிறகு ஆட்சி மாறிவிட்டது, அந்தத் திட்டம் அப்படியே நின்றுவிட்டது. கிட்டத்தட்ட 25 ஆயிரம் விவசாயிகள் பயனடையக்கூடிய திட்டம் அது. மகளிர் சுய உதவிக் குழுக்களில் கேட்டவர்களுக்கெல்லாம் மாட்டுக் கடன் வழங்குகின்றார்கள். அந்தப் பால் குளிரூட்டும் நிலையம் அங்கு அமைந்தால், கிட்டத்தட்ட 50 ஆயிரம் மக்கள் பயன்பெறும் வகையில் இருக்கும். உடனடியாகத் தேனூரில் பால் குளிரூட்டும் நிலையம் அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கொள்ளிடத்திலும், மருதையாற்றிலும் கதவணை கட்ட வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 13 நிமிடங்கள் ஆயிற்று.

**திரு. து. அமரமூர்த்தி:** கதவணை கட்டித் தண்ணீரைத் தேக்கி வைத்து, பெரம்பலூர் மாவட்டம், தஞ்சாவூர் டெல்டா மாவட்ட மக்கள் என எல்லோருக்கும் குடிநீர் கொடுக்கலாம். மழைக் காலங்களில் உபரியாக வருகின்ற வெள்ள நீரைத் தேக்கி வைக்கக் கதவணை கட்டினால், பெரம்பலூர் மாவட்டம் மட்டுமல்ல--நாம் தண்ணீருக்காகக் கர்நாடகத்தோடு சண்டை போட வேண்டியிருக்கிறது—பல நூறு டி.எம்.சி. தண்ணீர் வெள்ளக் காலங்களில் வருகின்றது. தண்ணீரைத் தேக்கி வைத்து, பெரம்பலூர் மாவட்டம் மட்டுமல்ல, காவிரி டெல்டா பகுதிகளுக்கும் கொடுக்கலாம்; அவ்வளவு தண்ணீரைக் கொடுக்கலாம். கடந்த முறை மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் அறிவித்தார்கள். எங்கள் அரியலூர் மாவட்டத்தை, தேர்தல் ஆணையம்—Election Commission மறு சீரமைப்புச் செய்ய இருக்கிறார்கள் என்று. Election Commission மறு சீரமைப்பு முடிந்தவுடன். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உரையை முடியுங்கள். அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. நெடுஞ்செழியன். (குறுக்கீடு) சீக்கிரம் சொல்லுங்கள்.

பிற்பகல் 1-00

**திரு. து. அமரமூர்த்தி:** அந்த அரியலூர் மாவட்டத்தை உருவாக்கித் தர வேண்டுமென்று உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு) சம்சாரம் இல்லாமல் இருக்கலாம், மின்சாரம் இல்லாமல்

இருக்க முடியாது என்று சொல்கிறார்கள். ஆகவே, அரசு இந்தத் துறைக்கு அதிக நிதி ஒதுக்கி, அதிக ஆட்களைப் போட்டு. நல்ல முறையிலே மக்களுக்கு மின்சாரத்தை வழங்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன். *(மணியடிக்கப்பெற்றது)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. நெடுஞ்செழியன்.

***டாக்டர் க. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாட்டின் வளர்ச்சிக்கு ஆதாரமாக, ஆணி வேராக, முதுகெலும்பாக, முன்னேற்றத்தின் படிக்கட்டாகத் திகழ்கின்ற எரிசக்தித் துறை மானியக் கோரிக்கையில் பேச வாய்ப்பளித்த சமூக நீதிக் காவலர் மருத்துவர் அய்யா அவர்களுக்கும், எங்கள் பாட்டாளி மக்கள் கட்சியின் தலைவரும், ஓய்வறியா உழைப்பாளியுமான அண்ணன் கோ.க. மணி அவர்களுக்கும் நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்தியாவில் பல மாநிலங்களில் மின் தட்டுப்பாடு உள்ள நிலையில், தமிழகத்தில் பெருமளவு மின் தட்டுப்பாடற்ற நிலையை பா.ம.க. வரவேற்கிறது, வாழ்த்துகிறது. 1998 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 25 ஆம் நாளில் 1997–1998 ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கையில் இன்றைய மின்சாரத் துறை அமைச்சரவர்கள் உறுதி அளித்ததற்கு ஏற்ப, 28–2–2007 அன்று தமிழ்நாடு மின் வாரியத்தின் மொத்த மின் உற்பத்தி 10,098 மெகாவாட் என்று தெரிவிக்கப்பட்டுள்ள 2007–2008 ஆம் ஆண்டின் மின் வாரிய நிதிநிலை அறிக்கையைப் பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாக வரவேற்கிறோம், பாராட்டுகிறோம். ஆனால், மின் பற்றாக்குறை உள்ள கர்நாடகம் போன்ற மாநிலங்களில் விவசாயத்திற்கு உடனடியாக மின் இணைப்பு வழங்குகின்ற நிலையில், மின் பற்றாக்குறையோ, மின் தட்டுப்பாடோ இல்லாத தமிழகத்தில் விவசாய மின் இணைப்பு உடனடியாகத் தர முடியாதது குறித்து மிகுந்த ஆதங்கத்துடனும், வருத்தத்துடனும் உள்ள உழவர்கள், பிற தொழில்களுக்கு முன்னுரிமை கொடுத்து, உடனடியாக மின் இணைப்பு தருவதுபோல், தங்களுக்கும் தர மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் ஆவன செய்வார்கள் என்று எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறார்கள் என்பதைப் பதிவு செய்ய விரும்புகிறேன்.

ஆண்டொன்றுக்கு நாற்பதாயிரம் விவசாய மின் இணைப்புகள் கொடுக்க வேண்டுமென்ற இலக்கினை நிர்ணயம் செய்த மாண்புமிகு



முதலமைச்சர் அவர்களே, அன்றைய காலக்கட்டத்தில் மின் இணைப்பிற்காகக் காத்திருப்பவர்கள் பட்டியலில் இருந்தவர்கள் எண்ணிக்கை தெரியவில்லை. ஆனால், இன்று 5,40,000 பேர்கள் மின் இணைப்பிற்காகக் காத்திருக்கிறார்கள் என்று மாண்புமிகு எரிசக்தித் துறை அமைச்சரவர்கள் தெரிவித்துள்ளார்கள். எனவே, 15 முதல் 20 ஆண்டுகள் காத்திருக்க வேண்டிய சூழ்நிலை உள்ளது. விவசாய மின் இணைப்பிற்கான ஆண்டு இலக்கினை ஒரு இலட்சமாக உயர்த்தி, உங்கள் ஆட்சிக் காலத்திலே அண்டை மாநிலங்களான ஆந்திரம், கர்நாடகம்போன்று விவசாயத்திற்கு உடனடியாக மின் இணைப்பு கொடுக்கப்படும் என்ற நிலையை அடைய ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். 1970–க்குப் பின்னால் உற்பத்திச் செலவு குறைந்த புனல் மின் உற்பத்திக்கான வாய்ப்பு 500 மெகாவாட்டிற்குமேல் இல்லாமல் போய்விட்டதாகக் கூறப்படுகிறது. ஆனால், காவிரியின் குறுக்கே மேட்டூரிலிருந்து பவானி வரை 4 கதவணைகள் அமைக்கப்பட்டு, அவை ஒவ்வொன்றிலும் பாசன நீரோட்டக் காலத்தில் 30 மெகாவாட் மின்சாரம் தயாரிக்கப்படுவதாக அறிகின்றேன். மேலும் 3 இடங்களில் கதவணைக் கட்டுமானப் பணிகள் நடந்துகொண்டிருக்கின்றன. அதனைத் தொடர்ந்து மேலும் 3 இடங்களில், அதாவது எனது கபிலர்மலைத் தொகுதியில் கண்டிபாளையம், கொந்தளம், குமாரபாளையம் போன்ற இடங்களில் கதவணைகள் கட்ட வாய்ப்பு உள்ளதாகவும், மேலும் மேலணையில் கல்லணை வரையில் காவிரியில் 6 கதவணைகளும், கொள்ளிடத்தில் மேலணைக்கும், கீழணைக்கும் இடையே 7 கதவணைகளும் கட்ட வாய்ப்பு உள்ளதாகவும், கதவணைகளின் வாயிலாகப் பாசன நீரோட்டக் காலத்தில் 500 மெகாவாட்டுக்கும்மேலாக மின் உற்பத்தி செய்ய வாய்ப்புள்ளதாக ஆய்வுகள் தெரிவித்துள்ளன.

மக்களவையில் 2007–2008 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையைத் தாக்கல் செய்து பேசுகையில், மத்திய நிதி அமைச்சர் மாண்புமிகு திரு. ப. சிதம்பரம் அவர்கள், ஆந்திரம், கர்நாடகம்போன்ற மாநிலங்கள் இதுபோன்ற திட்டங்களைச் செயல்படுத்த இருக்கின்றன என்றும், விரும்புகிற மாநிலங்கள் ஆர்வம் செலுத்தினால் உலக வங்கியிலிருந்து கடன் பெற்றுத் தர மத்திய அரசு உதவும் என்றும் தெரிவித்துள்ளார்கள். எனவே, இதுபோன்ற வாய்ப்பினைப் பயன்படுத்தி, நதி நீரைப் பயன்படுத்தி மின்சாரம் தயாரிப்பதில் இந்தியாவிற்கே முன்னுதாரணமாகத் தமிழ்நாடு திகழ ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். எங்கள் தலைவர் அண்ணன் கோ.க. மணி அவர்கள் தொடர்ந்து வலியுறுத்திக்கொண்டிருக்கக்கூடிய

நீண்ட காலத் திட்டமான ஒகேனக்கல்லில் ஆயிரம் மெகாவாட் மின் உற்பத்தித் திறன்கொண்ட புனல் மின் திட்டத்தை அமைத்திட மத்திய அரசை வலியுறுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

30-3-2007 ஆம் நாளன்று வந்துள்ள நாளிதழ் ஒன்றில் "பா.ம.க. எதிர்ப்பில் ஜெயங்கொண்டம் அனல் மின் நிலையம் கைவிடப்படுகிறது" என்ற செய்தி வெளியிடப்பட்டுள்ளது. அந்தச் செய்தியை வன்மையாகக் கண்டித்து, இந்த அவையின் வாயிலாகப் பாட்டாளி மக்கள் கட்சி தெரிவித்துக்கொள்வது என்னவென்றால், நாங்கள் ஜெயங்கொண்டம் அனல் மின் நிலையத் திட்டத்தை வரவேற்கிறோம்; அதே வேளையில் அத்திட்டத்திற்கான நிலத்தைக் கையகப்படுத்தும்போது தலைமுறை, தலைமுறையாக வாழ்ந்துகொண்டிருக்கின்ற எம்மக்களைப் புலம்பெயர்ந்து செல்லச் சொல்லி, சொந்த மண்ணிலேயே அகதிகள்போல், தங்களுடைய நில, புலன்களை எல்லாம் விட்டுச் செல்கிற ஏழையெளிய பாட்டாளி மக்களுக்கு, அவர்களிடமிருந்து எடுக்கப்படும் நிலங்களுக்கு அரசு வழிகாட்டு மதிப்பில் உள்ள விலையைக் கொடுத்து, தங்களுடைய வாழ்வாதாரங்களிலிருந்து வெளியே அனுப்புவதற்குப் பதிலாக, எங்களுடைய பாட்டாளி மக்கள் கட்சி மாண்புமிகு சட்டமன்ற கொறடா திரு. வேல்முருகன் அவர்கள் சுட்டிக்காட்டியதைப்போல, அந்நிலங்களில் மண்டிக் கிடக்கும் பழுப்பு நிலக்கரியின் மதிப்பையும் கணக்கில்கொண்டு இழப்பீட்டுத் தொகை வழங்குவதோடு, அவர்களுடைய குடியிருப்புக்கான ஆதாரங்களை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்றும், அவர்களுக்கு வேலைவாய்ப்பினைப் பொறுத்தவரை எழுத்துபூர்வமான உத்தரவாதத்தினை அளிக்க வேண்டும் என்றும், அக்குடும்பங்களின் தலைவர்களை அந்நிறுவனத்தின் பங்குதாரர்களாக ஆக்கிக்கொள்ள வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறோம்.

பிற்பகல் 1-05

மாண்புமிகு முதல்வர் அவர்களே, பல சர்க்கரை ஆலைகள், குறிப்பாக எனது தொகுதியில் மோகனூரில் அமைந்திருக்கின்ற சேலம் மத்தியக் கூட்டுறவுச் சர்க்கரை ஆலையில் கரும்புச் சக்கையைக்கொண்டு மின்சாரம் தயாரிக்கும் co-generation plant-ஐ மத்திய அரசு மானியத்துடன் அமைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.



மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களே, தொழிற்சாலைகளுக்கு மின் கட்டணம் யூனிட் ஒன்றுக்கு 3 ரூபாய் 30 காசுகள். ஆனால் ஊர்தோறும் எரிகின்ற தெரு விளக்குகளுக்கும், மக்களின் அன்றாட, அத்தியாவசியத் தேவையான குடிநீர், மின் மோட்டார்களுக்கும் மின் கட்டணம் யூனிட் ஒன்றுக்கு மூன்று ரூபாய் 50 காசாக உள்ளது என்பதை எண்ணிப் பார்த்து, உள்ளாட்சிகளுக்கான மின் கட்டணத்தைக் குறைக்க வேண்டுகிறோம். மேலும், உள்ளாட்சிகளின் மின் கட்டண பாக்கித் தொகையை அரசே மின் வாரியத்திற்கு அளித்து, உள்ளாட்சிகளின் பொருளாதாரச் சுமையை நீக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறோம்.

மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களே. மின் உற்பத்தியில் தன்னிறைவுபெற்று, மின் தட்டுப்பாடு இல்லாத நிலையில் low voltage பிரச்சினை பல பகுதிகளில் இருக்கிறது என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

உப மின் நிலையம் அமைக்க நிலம் கிடைக்கின்ற இடங்களிலெல்லாம் உடனடியாக உப மின் நிலையம் அமைத்திட வேண்டுகிறேன். அந்த வகையில், உப மின் நிலையம் அமைக்க எனது தொகுதியில் ready ஆக உள்ள ஜேடர்பாளையம், வில்லிபாளையம், மோகனூர் போன்ற இடங்களில் உப மின் நிலையங்கள் அமைத்துத் தர ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பல்வேறு சிறப்பம்சங்களை உள்ளடக்கிய பணியாளா மற்றும நிருவாகச் சீர்திருத்தத் துறையின் நிதிநிலை அறிக்கையை வரவேற்கிறோம். அகவிலைப் படியை 29 விழுக்காட்டிலிருந்து 35 விழுக்காடாக உயர்த்தியும், அதனை retrospective effect கொடுத்து அளித்ததற்கும் பாராட்டுகிறோம். நாட்டு மக்களின் நலனைக் கருத்தில்கொண்டு நல்ல பல திட்டங்களை எல்லாம் தீட்டிச் செயல்படுத்திக்கொண்டிருக்கின்ற வேளையில், திட்ட அமலாக்கத்தினைக் கண்காணிக்கவும், அவற்றில் உள்ள குறைகளைக் கண்டறிந்து நீக்கவும், ஒவ்வொரு தொகுதியிலும் மக்கள் பிரதிநிதிகளை உள்ளடக்கிய உயர்மட்டக் கண்காணிப்புக் குழு ஒன்றினை ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

காவல் துறையில் பணிபுரியும் காவலர்கள், உதவி ஆய்வாளர்கள், ஆய்வாளர்கள் போன்றவர்களுக்குப் பணி நேரம் (அதாவது 8 அல்லது 12 மணி நேரம்) நிர்ணயம் செய்யப்பட வேண்டும். அப்போதுதான் அவர்கள் துடிப்புடனும், உற்சாகத்துடனும், மன அழுத்தமின்றியும் பணி செய்திட ஏதுவாக இருக்கும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

[டாக்டர் க. நெடுஞ்செழியன்] [2007 ஏப்ரல் 2

தற்காலிகமாக அரசுப் பணியாளர்கள் நியமிக்கப்படும்பொழுதும் இட ஒதுக்கீட்டுக் கொள்கை பின்பற்றப்பட வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். ஒட்டுமொத்தமாக எல்லாத் துறைகளிலும் அரசுப் பணிகளில் இட ஒதுக்கீடு அடிப்படையில் உரிய பங்களிக்க வேண்டும். பதவி உயர்வினை அளிக்கின்ற நேரத்திலேகூட இட ஒதுக்கீட்டினைப் பின்பற்றவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஓய்வுபெற்றவர்களுக்குச் சில துறைகளில் ஓய்வூதியம் வழங்குவதில் உள்ள காலதாமதத்தைத் தவிர்க்க ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மின்சார வாரியத்தில் ஒப்பந்த அடிப்படையில் பணிபுரிபவர்களை நிரந்தரமாகப் பணியில் அமர்த்த வேண்டும். மின்சாரத் துறையில் Assessor- களாக 20 ஆண்டுகளாக எந்தவிதப் பதவி உயர்வும் பெறாமல் இருக்கிறவர்களுக்கு Special Grade பதவி உயர்வு வழங்க வேண்டும்.

வனத் துறையில் கடந்த 1991 ஆம் ஆண்டு 200-க்கும் மேற்பட்ட வனவர், வனச் சரகர்களுக்குப் பதவி உயர்வு வழங்கப்பட்டும், பணி வரன்முறை செய்து கொடுக்கப்பட வேண்டும் என்று வனத் துறைத் தலைவர் அவர்கள் பரிந்துரை செய்தும், கடந்த 14 ஆண்டுகளாகப் பணி வரன்முறை செய்யப்படவில்லை. எனவே, இதற்கு அரசு ஆவன செய்ய வேண்டும்.

எனது தொகுதி மக்களின் ஜீவாதாரமாக விளங்குவது ராஜா, குமாரபாளையம், பொய்யேரி மற்றும் மோகனூர் வாய்க்கால்கள் ஆகும். மாண்புமிகு முதல்வர் அவர்களே, தாங்கள் பொதுப் பணித் துறை அமைச்சராகத் தமிழ்நாடு முழுவதும் வலம் வந்தபோது, கபிலர்மலை ஒன்றியப் பெருந்தலைவராக இருந்த எனது தந்தை திரு. கே.பி. கந்தசாமி அவர்களுடன் ராஜா வாய்க்காலையும் அவற்றில் உள்ள நீரேற்றுப் பாசனங்களையும், கொட்டும் மழையிலும் பார்வையிட வந்தபோது, 'நானும் வந்தேன், மழையும் வந்தது, உங்களுக்குத் தண்ணீரும் வரும்' என்று நீங்கள் பேசியது நினைவிருக்கக்கூடும். இன்றைய மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களுக்கும் அந்த வாய்க்கால்கள் எல்லாம் நன்கு பரிச்சயமானவை என்று சொல்லிக்கொள்வதில் பெருமிதம் கொள்கிறேன். மாண்புமிகு முதல்வர் அவர்களே, மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களே, அந்த ராஜ வாய்க்காலை re-modelling செய்ய வேண்டி, கரைகளை concrete lining



2007 ஏப்ரல் 2] [டாக்டர் க. நெடுஞ்செழியன்]

செய்தும், மதகுகளை மாற்றி, shutter-களுடைய மதகுகளை அமைத்தும், pillar-களோடு இருக்கும் பாலங்களை அகற்றி pillar-கள் இல்லாத பாலங்களாக மாற்றித் தந்திடவும், அவ்வாய்க்காலைப் பராமரிக்க நிரந்தரமாக லஸ்கர்களைப் பணியமர்த்தவும் வேண்டுகிறேன்.

பிற்பகல் 1-10

அதேபோல, மோகனூர் வாய்க்கால் பிரச்சினைக்கு, குமாரபாளையத்திற்கும், நன்னியூருக்கும் இடையே கதவணை கட்டி, குறும்புப் பிரச்சினையைத் தீர்ப்பதுடன், வாய்க்கால்களை re-model-ம் செய்ய வேண்டுகிறேன்.

அதேபோல, கடந்த முறை முதல்வர் அவர்களுடைய சிறப்புத் திட்டமாக நெடுஞ்சாலைத் துறையில் அறிவிக்கப்பட்ட மோகனூர் வாங்கல் பாலத்தை அமைக்க ஆவன செய்ய வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களே, பொதுப் பணித் துறையில் வேலூர் மற்றும் ஜேடர்பாளையத்தில் அமைந்துள்ள ஆய்வு மாளிகைகளை அகற்றிவிட்டு, புதிய கட்டடங்களைக் கட்டித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) அதேபோல...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் இதையெல்லாம் அதற்கான மானியக் கோரிக்கையில் சொல்லுங்கள். (குறுக்கீடு) சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**டாக்டர் க. நெடுஞ்செழியன்:** போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களே, வேலூரிலே bus depot ஒன்றும், வேலூரிலே R.T.O. கிளை அலுவலகம் ஒன்றும் ஏற்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்களே, ஒரு மாணவர் விடுதியினை வேலூரிலே அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொகுதியில் இருந்த வெற்றிலை ஆராய்ச்சி மையத்தை மீண்டும் கொண்டு வர வேண்டுமென்று நமது மரியாதைக்குரிய வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

வேளாண்மை மிகுந்த காவிரிக் கரைகளில் உள்ள எனது தொகுதியில், ஒன்றியத்திற்கு ஒரு மண் வளப் பரிசோதனை நிலையத்தை அமைத்துத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இறுதியாக, சேலம் கூட்டுறவு சர்க்கரை ஆலை அரைவைத் திறனை 5 ஆயிரம் டன்னாக உயர்த்தி, ஒரு co-generation plant–ம் அமைத்துத் தருமாறு பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞா. ஜாண் ஜோசப். நீங்கள் அப்போதே நிறையப் பேசிவிட்டீர்கள். கொஞ்சம் shortஆகப் பேசி முடியுங்கள்.

***திரு. ஞா. ஜாண் ஜோசப்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வாய்ப்பைத் தந்தமைக்காக முதற்கண் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். தமிழ்நாடு மின்சார வாரியம் தொடங்கப்பட்டு, இவ்வாண்டுடன் 50 வருடங்கள் நிறைவடைகின்றன. நாட்டின் தொழில் வளர்ச்சிக்கும், மக்களின் மின் தேவையை நிவர்த்தி செய்வதற்கும், மின் விநியோகம் மாநிலங்களின் பொறுப்பில் இருக்க வேண்டுமென்றும், அதுவும், பொதுத் துறையில் இருக்க வேண்டுமென்றும் டாக்டர் அம்பேத்கர் அவர்கள் கருதினார்கள். அன்னாரின் தீர்க்கதரிசனம், 50 ஆண்டுகளில் மின்சார வாரியம் மிகப் பெரிய வளர்ச்சியை எட்டக் கை கொடுத்தது. ஆனால், 2003–ல் உருவாக்கப்பட்ட மின்சாரச் சட்டம், எட்டிய வளர்ச்சியைப் பின்னோக்கிக் கொண்டு செல்லவே உதவுவதாக உள்ளது. மத்திய U.P.A. அரசின் குறைந்தபட்சப் பொதுச் செயல் திட்டத்தில் 2003 மின்சாரச் சட்டம் மறுபரிசீலனை செய்யப்படும் என்று அறிவிக்கப்பட்டாலும், அது அமலாகவில்லை. தமிழக அரசு இதற்காக மத்திய அரசை வலியுறுத்த வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

2006 நவம்பர் 16 அன்று டெல்லியில் நடந்த மின்சாரத் துறை அமைச்சர்களின் மாநாட்டில் நமது மாணபுமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கலந்துகொண்டு, திறமையாகவும், சிறப்பாகவும் செயல்பட்டுக்கொண்டிருக்கும் மின் வாரியம் தற்போதைய நிலையிலேயே தொடர வேண்டுமென்று வலியுறுத்தினார்கள். மார்க்சிஸ்ட் கட்சி இதை ஆமோதிக்கிறது, ஆதரிக்கிறது. இந்திய அரசியல் சட்டம், பிரிவு 246–ன்படி பொதுப் பட்டியலில் உள்ள மின்சார விஷயத்தில் மாநிலங்களுக்கு முழு உரிமையை உத்தரவாதப்படுத்தும் வகையில் உரிய திருத்தங்கள் செய்யப்பட



வேண்டும். ஆண்டு ஒன்றுக்கு 8 சதவிகிதம் கூடுதல் மின்சாரம் தேவைப்படுவதாகக் கொள்கை விளக்கக் குறிப்பு கூறுகிறது. அதாவது, 2007 முதல் 2012 வரையிலான 11–வது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் சுமார் 3 ஆயிரம் மெகாவாட் மின்சாரத்தைக் கூடுதலாக நாம் உற்பத்தி செய்ய வேண்டியுள்ளது. இந்த இலக்கைப் பொதுத் துறைமூலமாக அடைய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று மார்க்சிஸ்ட் கட்சி வலியுறுத்திக் கூறுகிறது.

தமிழ்நாடு மின் விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனத்தைப் பலப்படுத்துவது தமிழக அரசின் முக்கியப் பணிகளில் ஒன்றாக இருக்க வேண்டும். விளக்கக் குறிப்பில், 28–2–2007–ல் இந்நிறுவனத்தின் வைப்பீட்டுத் தொகை ரூ.2,107.89 கோடியாக வளர்ந்திருப்பதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த வளர்ச்சி போதுமானதல்ல என எமது கட்சியும், தொழிற்சங்கமும் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது. 2007–2008 ஆம் ஆண்டில் ரூ.15,000 கோடி முதல் ரூ.20,000 கோடி வரை இந்நிறுவனத்தின்மூலம் கூடுதலாகப் பெறுவதற்கான திட்டம் தீட்டப்பட வேண்டும். வைப்பீட்டுத் தொகை செலுத்த ஆற்றல் படைத்த மின் பயனீட்டாளர்கள், பொது மக்கள், அரசு மற்றும் பொதுத் துறை ஊழியர்கள், மத்திய பொதுத் துறை ஊழியர்கள் ஆகியோரிடமிருந்து 6 மாத காலத்தில் இந்த வைப்பீட்டுத் தொகையைப் பெறுவதற்கு அரசு சிறப்புக் கவனம் செலுத்த வலியுறுத்துகிறோம்.

கொள்கை விளக்கக் குறிப்பில், விவசாயத்திற்கான இலவச மின்சாரம் பற்றிக் குறிப்பிடப்பட்டு உள்ளது. இலவச மின்சார இணைப்புக் கேட்டு ஏராளமான மனுக்கள் நிலுவையில் உள்ளன. ஒரு காலக்கட்டத்தில் ஆண்டுக்கு 40,000 இலவச இணைப்புகள் வரையிலும் தரப்பட்டன. தற்போது இந்தக் குறிப்பில் உள்ள இலவச இணைப்புகள் 5,000–லிருந்து 10,000 என்பதை 40,000 ஆக உயர்த்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பிற்பகல் 1·15

கைத்தறியோ அல்லது விசைத்தறியோ, வாடகைக்குத் தறிக் கூடத்தை எடுத்துத் தொழில் செய்யும் நெசவாளர்கள் அதிகமாக உள்ளனர். எனவே, சொந்தத் தறிக் கூடம் மற்றும் வாடகைத் தறிக் கூடம் என்ற அடிப்படையில் தொழில் செய்யும் நெசவாளர்களுக்கு முறையே 100 யூனிட், 500 யூனிட் மின்சாரம் வழங்க வேண்டும். 28–2–2007 நிலவரப்படி, தமிழ்நாடு மின்சார வாரியத்தின்கீழ் 1,84,31,000 மின் பயனீட்டாளர்கள் உள்ளனர். பொதுப் பயன்பாட்டிலும், தேவையிலும் பிரம்மாண்டமாகப் பங்களித்து வரும் இவ்வாரியத்தின் ஊழியர்கள்

பற்றிக் கொள்கை விளக்கக் குறிப்பில் எதுவும் குறிப்பிடாதது கவலை அளிப்பதாகவே உள்ளது. தற்போதைய நிலவரப்படி, 75,000 நிரந்தர ஊழியர்களும், 23,000 ஒப்பந்த ஊழியர்களும், 3,000 பகுதிநேர ஊழியர்களும், ஆக மொத்தம் சுமார் ஒரு இலட்சம் பேர் இதில் பணியாற்றி வருகின்றனர். 15-10-2005 ஒப்பந்தப்படி, 37 மின் வழங்கு வட்டங்களுக்கு மொத்தம் 63,579 பணியிடங்கள் அனுமதிக்கப்பட்டன. ஆனால், தற்போது சுமார் 23,000 ஊழியர்கள் மட்டுமே பணியில் உள்ளனர். அதாவது, சுமார் 65 சதவிகிதப் பணியிடங்கள் காலியாக உள்ளன. மிகப் பெரிய சேவையும், தேவையும் எதிர்நோக்கியுள்ள மின் வாரியத்தில் 65 சதவிகிதக் காலியிடங்கள் என்பது தமிழக மின் வாரியத்தைத் தவிர வேறு எங்கும் இருக்க வாய்ப்பு இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இத்தனை காலியிடம் இருந்தும், மின் வாரியப் பணிகள் ஓரளவு தொய்வின்றி நடப்பதற்குக் காரணமாக இருப்பவர்கள் 23,000-க்கும் மேற்பட்ட ஒப்பந்தத் தொழிலாளர்கள்தான். வேலைப் பளுவைத் தோளிலும், வேதனைப் பளுவை நெஞ்சிலும் தாங்கும் இவர்களை, தற்போது காலியாக உள்ள 23,405 helper பணியிடங்களில் நிரப்ப வேண்டும். இவர்கள் அனைவரும் 10 முதல் 25 வருடங்கள் இவ்வாரியத்திற்காக உழைத்து, உழைத்து ஓடாய்ப் போனவர்கள். மேலும் 17,000 மேல்நிலைப் பணியிடங்கள் காலியாக உள்ளன. அவற்றையும் நிரப்பினால்தான், மின்சாரத்தின் வேகத்திற்கு, வாரியத்தின் வேகம் ஈடு கொடுக்க முடியும். ஒப்பந்தத் தொழிலாளர்களுக்கு வைப்பு நிதி, Insurance, pension போன்ற சலுகைகள் எதுவும் இல்லை. ஒப்பந்தத் தொழிலாளர்களுக்கு வைப்பு நிதிச் சலுகை அளிப்பதிலிருந்து விதிவிலக்கு அளிக்க வேண்டுமென மத்திய அரசுக்கு மனு செய்தது கடந்த ஆட்சி. மத்திய அரசு அந்த மனுவைத் தள்ளுபடி செய்து ஆணை பிறப்பித்தது. ஆனால், இந்த அரசோ இன்னும் ஒரு படி மேலே சென்று, ஒப்பந்தத் தொழிலாளர்களுக்கு வைப்பு நிதிச் சட்டத்தை அமலாக்க இயலாது எனச் சென்னை உயர் நீதிமன்றத்தில் தெரிவித்தது மட்டுமல்லாமல், மைய அரசின் ஆணைக்குத் தடையும் பெற்றுள்ளது. இந்த அரசும் தொழிலாளர் விரோதக் கொள்கை என்ற போக்கிலே போகிறதோ என்ற பலமான சந்தேகம் எழுகிறது. ஒப்பந்தத் தொழிலாளர்களை நிரந்தரப்படுத்தி, வைப்பு நிதிச் சலுகை வழங்குவது குறித்து மின் வாரியத் தலைவரோடு பேச எமது சங்கத்தை மாண்புமிகு அமைச்சர் அறிவுறுத்தினார். அதுவும் நடத்தப்பட்டது. ஆயினும், இவ்விஷயத்தில் அரசு தலையிடா அணுகுமுறையைக் கடைப்பிடிப்பது வருத்தம் அளிக்கிறது. இக்கோரிக்கையினைப் பேசி முடிக்கச் சபையை வலியுறுத்துகிறேன்.



பிற்பகல் 1-20

இன்னொரு முக்கியமான பிரச்சினை, பெண் ஊழியர்கள் சம்பந்தப்பட்டது. வாரியத்தில் 3,000-க்கும் அதிகமான பகுதிநேரப் பெண் ஊழியர்கள் பணியாற்றி வருகின்றனர். இவர்களில் ஒரு பகுதியினர் ரூபாய் 850-க்கும், இன்னொரு பகுதியினர் மாதம் ரூபாய் 250-க்கும் தொகுப்பூதியம்பெற்று வருகின்றனர். 1998-ல் இப்பிரச்சினை மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்டு, பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு, ஓர் உடன்பாடு ஏற்பட்டது. அதன்படி, சத்துணவு ஊழியர்களுக்கு நிகரான ஊதியம் இவர்களுக்கு வழங்கப்படும் என்று அவர் அறிவித்தார். அதோடு, 14-10-1998-ல் வாரியம் ஓர் ஆணையையும் வெளியிட்டது. ஆனால், அது இதுவரையிலும் அமலாக்கப்படவில்லை. பெண் என்றால் பேயும் இரங்கும் என்பது பழமொழி. பெண் தொழிலாளர்கள்மீது கருணைகூர்ந்து, வாரியத்தின் ஆணையை, 9 ஆண்டு காலமாகக் கிடப்பில் போட்டிருக்கும் ஆணையை அமலாக்குமாறு பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். மின்சாரம் வேகமாகப் பயணித்தாலும், எங்கள் மாவட்டத்திற்கான மின்சாரம் சம்பந்தப்பட்ட திட்டங்கள் மிக மந்தமாகவே நடக்கின்றன. கடைசி மாவட்டமாக இருப்பதால், எல்லாம் கடைசியாகத்தான் வந்து சேர்கிறதுபோலும்! மார்த்தாண்டம், செருப்பாலூர், குருந்தங்கோடு, கருங்கல், நடைக்காவு போன்ற இடங்களில் துணை மின் நிலையங்கள் அமைக்க அனுமதிக்கப்பட்டு வருடக்கணக்கில் ஆகியும், வேலை இன்னும் துவக்கப்படவில்லை. முஞ்சிறை டிரான்ஸ்பார்மர் capacity-யை உயர்த்தும் பணியை விரைவுபடுத்த வேண்டும். சிறப்பு மிக்க சுற்றுலா மையமான கன்னியாகுமரியின் இயற்கை அழகு மாய்ந்து வருகிறது. அதன் இயற்கை அழகை...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜாண் ஜோசப், பேச்சை முடியுங்கள்.

**திரு. ஞா. ஜாண் ஜோசப்:** 10 நிமிடங்கள்தான் ஆகியிருக்கின்றன. 15 நிமிடங்கள் என்று நீங்கள் சொன்னீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. Time இல்லை.

**திரு. ஞா. ஜாண் ஜோசப்:** இரண்டு நிமிடங்கள் கொடுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** Time இல்லை. இன்னும் ஓர் உறுப்பினர் பேச வேண்டும்.

**திரு. ஞா. ஜாண் ஜோசப்:** தொகுதி பற்றியது. மாவட்டப் பிரச்சினை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சீக்கிரம் சொல்லுங்கள்.

**திரு. ஞா. ஜாண் ஜோசப்:** கன்னியாகுமரியின் இயற்கைப் பொலிவை மீட்கும் முதல் நடவடிக்கையாக, கன்னியாகுமரியில் underground cable வசதியை ஏற்படுத்த வேண்டும். நாகர்கோவில் நகரம் போக்குவரத்து நெருக்கடியால் சிக்கித் தவிக்கிறது. சாலையை அகலப்படுத்துவதற்குப் போதுமான இட வசதி இல்லை. எனவே, அங்கும் underground cable மின் வசதி ஏற்படுத்த வேண்டும்.

அதுபோல், விளவங்கோடு, திருவட்டாறுத் தொகுதிகளுக்குட்பட்ட தோட்டப் பகுதிகளிலும், வனப் பகுதிகளிலும் மரம் முறிந்து விழுந்து, மின் தடை ஏற்படுவது தொடர்கதையாகவே உள்ளது. எனவே, underground cable மூலம் மின் வசதி ஏற்படுத்தித் தர வேண்டும். களியல் வருவாய் கிராமத்தில் சுமார் 200 குடும்பங்கள் வசிக்கும் வலியஏலா என்றொரு பகுதி உள்ளது. 60 ஆண்டு காலமாக மின் வசதி கேட்டு அந்த மக்கள் அலைந்துகொண்டிருக்கிறார்கள். இது குறித்து நானும், திருவட்டாறுத் தொகுதி சட்டமன்ற உறுப்பினரும் இந்தச் சபையில் வலியுறுத்திப் பேசியிருக்கிறோம். துறை அதிகாரிகளுக்கு நான் மனுக்களும் கொடுத்துள்ளேன். வனத் துறைக்குச் சொந்தமான பூமியை அவர்கள் ஆக்கிரமித்து வைத்துள்ளதாகக் கூறி மின்சார வாரியம் எனக்குப் பதில் தந்துள்ளது. இது உண்மை அல்ல. அந்த பூமி வருவாய்த் துறைக்குச் சொந்தமானது. 1996...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமசாமி (குறுக்கீடு) No, no. நீங்கள் நாகர்கோவில் issue–வை அப்போதே பேசிவிட்டீர்கள். இன்னும் திரும்பத் திரும்பப் பேசிக்கொண்டேயிருந்தால் என்ன அர்த்தம்?

**திரு. ஞா. ஜாண் ஜோசப்:** 1996 ஆம் ஆண்டு வரை இவர்கள் வருவாய்த் துறைக்கு B-Memo செலுத்தி வந்துள்ளனர். வனத் துறை தேவையில்லாமல் இதில் குறுக்கீடு செய்கிறது. எனவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், வருவாய்த் துறை, வனத் துறை, மின்சாரத் துறை ஆகிய 3 துறைகளையும் கலந்து பேசி, வலியஏலா மக்களுக்கு மின் வசதி கிடைக்க வழிவகை செய்ய வேண்டுமென்று பணிவோடு கேட்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி, அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமசாமி.



**திரு. தி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எரிசக்தித் துறை, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை மானியக் கோரிக்கைகளின்மீது இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் எங்களது கருத்துகளைக் கூறுவதற்கு வாய்ப்பளித்ததற்கு முதலில் நன்றி கூறிக்கொள்கிறோம்.

மின்சாரத்தைப் பொறுத்தவரை தமிழகம் உபரி மாநிலமாக இருக்கிறது என்ற செய்தி மகிழ்ச்சியளிக்கிறது. ஆனால், அதே சமயத்தில் மின் வெட்டும் தொடர்கிறது. மின்சார இணைப்பு வேண்டுமென்று கேட்டுப் பதிவு செய்த விவசாயிகளுக்கு மின்சாரம் வழங்குவதிலும் மிகவும் காலதாமதம் ஏற்படுகிறது.

பிற்பகல் 1–25

இப்போது 4 சதவிகித வளர்ச்சியை விவசாயத் துறையில் எட்ட வேண்டுமென்று சொல்லி நிதிநிலை அறிக்கையில் கூறப்பட்டிருக்கிறது. 4 சதவிகித விவசாய வளர்ச்சியைக் கொண்டு வருவது என்பது மிகச் சாதாரணமான விஷயம் அல்ல. அதற்கு அடிப்படையாக இருக்கக்கூடிய விவசாயத்தை மேம்படுத்துவதற்கு நீராதாரங்களை உருவாக்கித் தர வேண்டிய பொறுப்பு அரசுக்கு இருக்கிறது.

விவசாயிகளே சொந்தச் செலவில் கிணறு வெட்டி மின் இணைப்புக்காகக் காத்திருக்கிற காலம், 15 ஆண்டு காலத்திற்கும் மேலாக இன்னும் தொடர்ந்துகொண்டிருகின்ற ஒரு நிலை என்பது இன்னும் இருந்துகொண்டிருக்கிறது. குறிப்பாக, வருடத்திற்கு 40 ஆயிரம் என்பதை அதிகப்படுத்தி, ஓராண்டுக்கு ஒரு இலட்சம் pumpset-களுக்காவது மின் இணைப்பு கொடுப்பதற்கான முயற்சியை நமது அரசு எடுக்க வேண்டும்.

அது மட்டுமல்ல, கடந்த ஆட்சிக் காலத்தில் ரூ. 10 ஆயிரம், ரூ. 25 ஆயிரம், ரூ. 50 ஆயிரம் என்று சொல்லி, பணம் செலுத்தியவர்களுக்கு மின்சாரம் கொடுக்கின்ற ஒரு முறையைக் கொண்டு வந்துவிட்டார்கள். ஆனால், அப்படிப் பணம் கட்டினாலும் இன்னும் காத்திருக்க வேண்டிய ஒரு நிலை இருக்கிறது. ஏற்கெனவே மின்சாரத்திற்காகப் பதிவு செய்தவர்களுடைய பட்டியல் பின்னுக்குப் போய், இப்போது பணம் கட்டியவர்களுடைய அந்தப் பட்டியல முன்னுக்கு வந்திருக்கிறது. எனவே, நமது அரசு உடனடியாக விவசாயிகளுக்கு மின்சாரம் வழங்குவதற்கு, அரசினுடைய செலவிலேயே மின் இணைப்பு கொடுப்பதற்கு முயற்சிக்க வேண்டும்.

மின்சார உற்பத்தியில் 18 சதவிகிதம் line loss என்று சொல்கிறார்கள். அதற்குக் காரணம், மின் மாற்றிகள் அமைக்கப்படுகின்ற முறையில் அப்படிப்பட்ட நெருக்கடிகள் ஏற்படுகின்றன என்று சொல்கிறார்கள். ஒவ்வொரு மின் மாற்றிக்கும் இடையில் இருக்கின்ற தூரம், இடைவெளி குறைக்கப்பட வேண்டும். அது மட்டுமல்ல, உவர் மின் நிலையங்களை அதிகப்படுத்துவது மட்டுமல்ல, ஏற்கெனவே உள்ள உவர் மின் நிலையங்களில் தேவையான அளவு transformer-களைப் பொருத்த வேண்டும். இரண்டு power transformer-கள் இருக்க வேண்டிய இடங்களில் ஒரு power transformer மட்டும்தான் இப்போது செயல்பட்டுக்கொண்டிருக்கிறது. அது மட்டுமல்ல, இந்த நிருவாகத் துறை இந்த அளவுக்கு நெருக்கடிக்கு ஆளாகியிருப்பதற்குக் காரணம் ஊழியர் பற்றாக்குறை. கடந்த 20 ஆண்டு காலமாக இந்தத் துறையில் தற்காலிகமாகப் பணியாற்றிக்கொண்டிருக்கக்கூடிய ஊழியர்கள் நிரந்தரம் செய்யப்படவில்லை. 12 transformer-களுக்கு ஒரு Wire man, ஒரு Helper என்ற நிலை மாறி, இன்றைக்கு 30 Transformer-களுக்கு ஒரு Wireman, ஒரு Helper என்று இருக்கிறார்கள். பல கிராமங்களில் fuse போடுவதற்குக்கூட ஆள் இல்லை. இப்போது நம்முடைய தமிழக முதல்வர் அவர்களுடைய பெயரைச் சொல்லிக்கொண்டே, இவர் ஆட்சிக்கு வந்தாலே current இருக்காது என்று சொல்கின்ற நிலை கிராமப்புறங்களில் நிலவிக்கொண்டிருக்கிறது.

அது மட்டுமல்ல, ஆறுகளின் கரையோரங்களில் pumpset வைத்திருப்பவர்களுக்கு, கிணறு வைத்திருப்பவர்களுக்கு மின் இணைப்பு வழங்குவதற்கு, சில ஆற்றங்கரைகளில் 200 மீட்டர் தூரம், சில ஆற்றங்கரைகளில் 400 மீட்டர் தூரம் என்ற ஒரு விதியை நிர்ணயித்திருக்கிறார்கள். குறிப்பாக, தாமிரபரணி போன்ற ஆறுகளில் கரையினுடைய எல்லையில் இருந்து 200 மீட்டர் தொலைவு என்றும், அதே சமயத்தில் ஆறுகள் பட்டியலிலே இல்லாத எங்கள் தொகுதியில் பேராறுபோன்ற ஓடைப் பகுதிகளில் கரையிலிருந்து 400 மீட்டர் தூரம் என்ற ஓர் அளவை வைத்திருக்கிறார்கள். இந்த அளவு என்பது சீரமைக்கப்பட வேண்டும்.

அதேபோல, இன்றைக்கு வழக்குரைஞர்கள் அலுவலகங்களில் வழங்கப்படுகின்ற அந்த மின்சார tariff–ஐ house tariff ஆக மாற்றவேண்டும். ஒட்டுமொத்தமாக மின்சாரத்தைத் தடையில்லாமல் வழங்குவதும், விவசாயிகளுக்கு உடனடியாக மின் இணைப்பு வழங்குவதும், தேவையான transformer-களை உடனடியாகப் பொருத்தி இந்த மின்சாரத் துறையில் விநியோகத்தை அபிவிருத்தி செய்ய



வேண்டியதுமான பொறுப்பு நமது அரசுக்கு இருக்கிறது. அதை விரைவில் நிறைவேற்ற வேண்டும்.

அதேபோல, தூத்துக்குடி அனல் மின் நிலையத்தில் பணியாற்றக்கூடிய தற்காலிக ஊழியர்கள் மற்றும் கும்பகோணம் கிராமிய மின்சாரக் கூட்டுறவுச் சங்கங்களில் பணிபுரிபவர்களுக்கும் மின்சார வாரிய ஊழியர்களுக்கு வழங்கப்படுவதுபோல் அந்தத் துறையில் சலுகைகள் வழங்கப்பட வேண்டும்.

பிற்பகல் 1–30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியோடு அவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**திரு. தி. இராமசாமி:** இன்றைக்கு நிருவாகச் சீர்திருத்தத் துறை என்று வரும்போது, கிராம நிருவாக அலுவலர்கள் கிராமங்களில் அடிப்படையாகத் தேர்வு செய்யப்பட வேண்டியவர்கள், 2,500 பேர். இத்தேர்வுக்கு 8 இலட்சம் பேர் மனு தாக்கல் செய்திருக்கிறார்கள். 8 இலட்சம் பேர் மனு தாக்கல் செய்துள்ளது என்பது, நமது நாட்டில் வேலையின்மை எந்த அளவுக்கு உக்கிரமான நிலையில் இருக்கிறது என்பதற்கு ஓர் எடுத்துக்காட்டு. அது மட்டுமல்ல, இந்தத் துறைக்கான தேர்வினை நடத்தும்போது, அதற்கான கல்வித் தகுதியை நிர்ணயிக்கும்போது, வெறும் 10–வது வகுப்பிலிருந்து இன்றைக்கு எம்.ஏ., எம்.எட்., என்ற அளவுக்கு நிர்ணயித்துவிட்டார்கள். 10–வது வகுப்பு என்று நிர்ணயிக்கப்பட்ட காரணத்தினால், 8 இலட்சம் பேர் இன்றைக்கு மனு தாக்கல் செய்திருக்கிறார்கள். அந்த 8 இலட்சம் பேரில், 2,500 பேரை எந்த முறையில் தேர்வு செய்யவிருக்கிறார்கள்? அது எப்படி? அனைவரும் ஒரே சீரான முறையில் பரிட்சை எழுத முடியுமா என்ற ஒரு கேள்வி எல்லாம் எழுகிறது. எனவேதான், இப்படிப்பட்ட ஓர் அடிப்படையான துறைக்குப் பணியாளர்களைத் தேர்வு செய்யும்போது, அதற்கான ஒரு தனிப் பட்டயப் படிப்புபோன்ற ஒரு தனிப் பயிற்சி நிலையத்தை மாநில அளவில் தனியாக அமைத்து, அதற்கென ஒரு தனிப் படிப்பை ஏற்படுத்தி, அதிலிருந்து தேர்வு செய்வதற்கான முயற்சியை இனி வருங்காலங்களிலாவது நமது அரசு கடைப்பிடிக்க வேண்டும்.

அதேபோல, தற்காலிக இளநிலை உதவியாளர்கள் கிட்டத்தட்ட 5,000 பேர் நமது மாநிலத்தில் பணிபுரிந்துகொண்டிருக்கிறார்கள். அனைத்துத் துறைகளிலும் தற்காலிக ஊழியர்களை நிரந்தரம் செய்து,

இன்றைக்குச் சிறப்புப் பெற்றிருக்கின்ற நமது அரசு இந்தப் பணியாளர்களையும் நிரந்தரம் செய்ய வேண்டும்.

அதேபோல, செத்து செத்துப் பிழைத்துக்கொண்டிருக்கக்கூடிய நமது மக்கள் நலப் பணியாளர்கள், ஒவ்வோர் ஆட்சியிலும் மாறி, மாறிப் பழி வாங்கப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு ஒரு பணிப் பாதுகாப்பை நமது அரசு வழங்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொண்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி, முடித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அனைத்துக் கட்சிகளின் ஒப்புதலுடன், மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் விவாதத்திற்கு நாளை தனது பதிலுரையை வழங்குவார்கள்.

## 6. அரசினர் தீர்மானம்

### விதி 32-ஐத் தளர்த்துதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நாளை (3-4-2007) வினாக்கள்-விடைகள் நேரத்தை ஒத்திவைப்பது குறித்த தீர்மானம். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையின் முதல் ஒரு மணி நேரம் வினாக்கள்-விடைகள் என்று உள்ள சட்டமன்றப் பேரவை விதி 32-ஐ, நாளை, 3-4-2007 செவ்வாய்க்கிழமை அன்று தளர்த்தி, அந்நேரம் அரசினர் அலுவல்களுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்"

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.



நாளை (3-4-2007) வினாக்கள்-விடைகள் நேரம் இல்லை.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (3-4-2007) செவ்வாய்க்கிழமை காலை 9-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-33 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### அ. சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

35. 2005-2006 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனத்தின் முப்பத்தைந்தாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

36. 2005-2006 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனத்தின் பதினாறாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

37. 2005-2006 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் நாற்பத்தெட்டாவது ஆண்டறிக்கை. [1962 ஆம் ஆண்டு சேமிப்புக் கிடங்கு நிறுவனச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 58/1962) 31 (11) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

38. 2005-2006 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மூலிகைப் பண்ணைகள் மற்றும் மூலிகை மருந்துக் கழகத்தின் இருபத்து மூன்றாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

39. 2005-2006 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் ஏழாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

## ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

28. மானியக் கோரிக்கை எண் 14–எரிசக்தித் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2007–2008. (தமிழ், ஆங்கிலம்)

29. மானியக் கோரிக்கை எண் 35–பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2007–2008. (தமிழ், ஆங்கிலம்)

30. 2007–2008 ஆம் ஆண்டின் உடனடிச் செலவுக்கான மானிய அனுமதி. (தமிழ், ஆங்கிலம்)

31. 2007–2008 ஆம் ஆண்டு உடனடிச் செலவுக்கான மானியக் கோரிக்கைகளின் அறிவிப்பு. (தமிழ், ஆங்கிலம்)

32. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் முதலாவது அறிக்கை. (2006–2007)

— — —





## இணைப்பு I

(120 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க)

## மானியக் கோரிக்கை எண் 14-எரிசக்தித் துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு, 2007-2008

### தமிழ்நாடு மின்சார வாரியம்

தமிழ்நாடு மின்சார வாரியம் 1948 ஆம் ஆண்டு மின்சாரம் (வழங்கல்) சட்டத்தின்கீழ் 1-7-1957 அன்று நிறுவப்பட்டு மின்சாரச் சட்டம், 2003-ன்படி தொடர்ந்து செயல்பட்டு வரும் ஓர் அமைப்பாகும். மின் உற்பத்தி, அனுப்புகை மற்றும் பகிர்மானம் ஆகியவற்றை சீரிய முறையில் மேற்கொண்டு மின் பயனீட்டாளர்களுக்குத் தரமான மின்சாரத்தை வழங்குவது தமிழ்நாடு மின்சார வாரியத்தின் முதன்மையான குறிக்கோளாகும்.

தமிழ்நாடு மின்சார வாரியத்தின் மொத்த மின் உற்பத்தி நிறுவு திறன் 28-2-2007 அன்றுள்ளபடி 10,098 மெகாவாட்டாகும். இதில் வாரிய மின் உற்பத்தி நிலையங்கள் 5,565 மெகாவாட், தனியார் மின் உற்பத்தி நிலையங்கள் 1,154 மெகாவாட், மத்திய மின் உற்பத்தி நிலையங்களிலிருந்து பங்கு 2,841 மெகாவாட், வெளிப்புற உதவியாக 360 மெகாவாட் மற்றும் பிற (தன்பயன் மின்னாக்கிகள்) 178 மெகாவாட் ஆகியவை அடங்கும். இவை தவிர, தனியார் காற்றாலைகளிலிருந்து 3,225 மெகாவாட்டும், வாரியத்தின் காற்றாலைகளிலிருந்து 19 மெகாவாட்டும் கிடைக்கப்பெறுகிறது. மேலும், இணை மின் உற்பத்தி நிலையங்களிலிருந்து 314.6 மெகாவாட் மின்சாரமும், தாவரவியல் (Bio-mass) நிலையங்களிலிருந்து 77.85 மெகாவாட் மின்சாரமும் பெறப்படுகிறது.

இதுவரை உச்ச மின் தேவை 8,804 மெகாவாட்டாகும். மின் பயனீட்டு அளவின் வளர்ச்சி ஆண்டொன்றிற்கு 8 விழுக்காடாக இருக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது. 2006-2007 நிதியாண்டின் மின் பயனீட்டளவு பிப்ரவரி 2007 வரை 56,493 மில்லியன் யூனிட்டுகளாகும். ஒரு நாளின் உச்சப் பயனீடு 191.283 மில்லியன யூனிட்டுகளாக நிதியாண்டில் எட்டப்பட்டுள்ளது.

28-2-2007 நிலவரப்படி மொத்தம் 1,145 துணை மின் நிலையங்களும், 1.51 இலட்சம் கி.மீ. மிக உயரழுத்த/உயரழுத்த மின் கம்பிகளும், 1.98 இலட்சம் கி.மீ. தாழ்வழுத்த மின் கம்பிகளும், 1.72 இலட்சம் மின் பகிர்மான மின் மாற்றிகளும் மற்றும் 184.31 இலட்சம் மின் இணைப்புகளும் உள்ளன.

## I. மின் உற்பத்தித் திறனை அதிகரித்தல்

அதிகரிக்கும் மின் தேவையை நிறைவு செய்ய தமிழ்நாடு மின்சார வாரியம் பதினோராவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் (2007-2012) அதனுடைய மின் உற்பத்தித் திறனை 11,768 மெகாவாட் அளவிற்கு உயர்த்தவும், அதற்குத் தக்கவாறு மின் அனுப்புகை மற்றும் மின் பகிர்மானத்தை விரிவாக்கவும் திட்டமிட்டுள்ளது.

2006-2007 ஆம் ஆண்டில், தனியார் துறையில் ஆர்.கே. எனர்ஜி லிமிடெட் என்ற நிறுவனம் (தற்போது பென்னா எலக்ட்ரிசிட்டி லிமிடெட்) இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள வலந்தரவியில் 53 மெகாவாட் திறனுடைய எரிவாயு மின் திட்டத்தை இயக்கி வைத்தது. வாரியத் துறையில் ஒவ்வொன்றும் 15 மெகாவாட் திறனுடைய இரண்டு மின் உற்பத்திப் பிரிவுகளைக்கொண்ட பவானி கட்டளைத் தடுப்பணை-1 புனல் மின் திட்டம் ஈரோடு மாவட்டத்திலும், ஒவ்வொன்றும் இரண்டு மெகாவாட் திறனுடைய இரண்டு மின் உற்பத்திப் பிரிவுகளைக் கொண்ட அமராவதி சிறு புனல் திட்டம் கோயம்புத்தூர் மாவட்டத்திலும் இயக்கி வைக்கப்பட்டன.

2007-2008 ஆம் ஆண்டில் வாரியம் மற்றும் மத்தியத் துறை திட்டங்களிலிருந்து கூடுதல் நிறுவு திறன் 731 மெகாவாட் ஆக இருக்கும். (வாரியம்-165 மெகாவாட், மற்றும் மத்தியத் துறையிலிருந்து பங்கு-566 மெகாவாட்). மேற்சொன்ன திட்டங்கள் கீழே விவரிக்கப்பட்டுள்ளன:—

வாரியத் துறையில் இராமநாதபுரம் மாவட்டத்தில் 9.5 மெகாவாட் திறன்கொண்ட வழுதூர் எரிவாயு சுழலி மின் திட்டமும் (கூடுதல்), ஈரோடு மாவட்டத்தில் மொத்தம் 60 மெகாவாட் திறன்கொண்ட பவானி கட்டளைத் தடுப்பணைகள்-2 மற்றும் 3 புனல் மின் திட்டங்களும், கோயம்புத்தூர் மாவட்டத்தில் 10 மெகாவாட் திறன் கொண்ட பவானி தடுப்பணை-1 புனல் மின் திட்டமும் 2007-2008 ஆம் ஆண்டில் இயக்கி வைக்கப்படும்.



மத்தியத் துறையில் கூடங்குளம் அணு மின் நிலையத்தின் 1,000 மெகாவாட் திறன்கொண்ட முதல் பிரிவு 2007-2008-இல் இயக்கி வைக்கப்படவிருக்கிறது. இதிலிருந்து 463 மெகாவாட் தமிழ்நாட்டின் பங்காகக் கிடைக்கப்பெறும். மேலும், 2 x 220 மெகாவாட் திறனுடைய கைகா அணு மின் நிலையம் நிலை-2, 2007-2008-இல் இயக்கி வைக்கப்படவிருக்கிறது. தமிழ்நாட்டின் பங்காக 103 மெகாவாட மின்சாரம் கிடைக்கப்பெறும்.

## II. 2007-2008-ல் மின் விநியோக நிலைமை

தமிழக அனல் மின் நிலையங்களின் செயல்பாட்டை மேம்படுத்தியும், காயங்குளம் எரிவாயு மின் உற்பத்தி நிலையம் மற்றும் கிழக்குப் பிராந்திய மின் நிலையங்களிலிருந்து கூடுதலாக மின்சாரம் பெற்றும், தனியார் மின் உற்பத்தி நிலையங்களிலிருந்து பெறும் மின்சாரத்தைக் கட்டண விகிதாச்சார முறையில் பெற்றும், அரிய புனல் மின் இருப்பை சிறந்த முறையில் திட்டமிட்டுப் பயன்படுத்தியும் மின் வெட்டு/மின் தடை இல்லாத மின்சாரம் தமிழகத்திற்கு வழங்கப்பட்டு வருகின்றது.

தமிழ்நாட்டில் உள்ள அனல் மின் நிலையங்களின் செயல்பாடு தொடர்ந்து நன்றாக உள்ளது. மேட்டூர் மற்றும் தூத்துக்குடி அனல் மின் நிலையங்கள் 2006-2007 ஆம் ஆண்டிற்கான தங்கம்/வெள்ளி/ வெண்கலப் பதக்கங்களைப் பெற வாய்ப்பு உள்ளது.

மேட்டூர் நீங்கலாக 9-3-2007 அன்றுள்ளபடி நீர் இருப்பு 1,199 மில்லியன் யூனிட்டுகளாக இருந்தது. இது கடந்த வருடம் இதே நாளில் 1,393 மில்லியன் யூனிட்டுகள் என்ற அளவில் இருந்தது. 2005-2006 ஆம் ஆண்டில் புனல் மின் உற்பத்தி 6,141 மில்லியன் யூனிட்டுகளாக இருந்தது. தற்பொழுது உள்ள சாதகமான பருவ நிலை காரணமாக, 2006-2007 ஆம் ஆண்டில் 6,400 மில்லியன் யூனிட்டுகள் புனல் மின் நிலையங்களிலிருந்து உற்பத்தி செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. இந்த வகையில் பிப்ரவரி 2007 வரை 5,959 மில்லியன் யூனிட்டுகள் புனல் மின் நிலையங்களிலிருந்து உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.

2007-2008 ஆம் ஆண்டின் மின் தேவை மத்திய மின் ஆணையத்தின் 17-வது மின் அளவைப்படி 9,741 மெகாவாட்டாக இருக்கும். சராசரி மின் பயனீட்டளவு நாளொன்றுக்கு 175 மில்லியன் யூனிட்டுகளாக இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

[2007 ஏப்ரல் 2

கையிருப்பிலுள்ள நிறுவு திறன் மற்றும் திட்டமிடப்பட்டுள்ள மேற்சொன்ன கூடுதல் நிறுவு திறன் ஆகியவற்றைக் கொண்டும் மின் தேவையை நிறைவேற்ற முடியும்.

பதினோராவது திட்டக் காலத்தின் (2007-2012) திட்ட மதிப்பீடு ரூ. 21,159.14 கோடியாகும். 2007-2008 ஆம் ஆண்டிற்கான மூலதனத் திட்ட மதிப்பீடு ரூ. 2,910.28 கோடியாகும். வெவ்வேறு பிரிவுகளில் ்ப்பணிகளுக்கான திட்ட மதிப்பீடுகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

(ரூபாய் கோடியில்)

| வ. எண் | விவரம் | பதினோராவது திட்ட மதிப்பீடு (2007-2012) | 2007-2008 ஆம் ஆண்டிற்கான திட்ட மதிப்பீடு |
|---|---|---|---|
| 1. | உற்பத்தி | 12,497.67 | 1,249.24 |
| 2. | புதுப்பித்தலும், நவீனமயமாக்குதலும் | 551.47 | 63.78 |
| 3. | மின் அனுப்புகை மற்றும் மின் பகிர்மானம் | 7,000.00 | 1,480.99 |
| 4. | ஊரக மின்மயமாக்குதல் | 500.00 | 112.88 |
| 5. | நில அளவை மற்றும் ஆய்வுகள் | 610.00 | 3.39 |
| | மொத்தம் | 21,159.14 | 2,910.28 |

மின் தொடர் மற்றும் மின் பகிர்மான அமைப்பை மேம்படுத்தும் வகையில் 2007-2008 ஆம் ஆண்டில் பல்வேறு மின் அழுத்தங்களில் 60 புதிய துணை மின் நிலையங்களும், சுமார் 800 சுற்று கிலோ மீட்டர் மிக உயரழுத்த மின் கம்பிகளும் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. பதினோராவது திட்டக் காலத்தில் (2007-2012) மொத்தம் 300 புதிய துணை மின் நிலையங்களை அமைக்கவும், 4,000 சுற்று கிலோ மீட்டர் மிக உயரழுத்த மின் கம்பிகள் அமைக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

## III. மின் தொடர் மற்றும் மின் பகிர்மான மேம்பாட்டுத் திட்டங்கள்

### 1. விரைவுபடுத்தப்பட்ட மின் மேம்பாடு மற்றும் சீரமைப்புத் திட்டம் (APDRP)

மின் துறை அமைச்சகம், ரூபாய் 19.60 கோடி செலவிலான 17 மாவட்டத் தலைநகரங்கள் அடங்கிய திட்டங்களுக்கு ஒப்புதல்



2007 ஏப்ரல் 2]

அளித்துள்ளது. இத்திட்டங்களை நடைமுறைப்படுத்த புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட வேண்டும். இதற்காக ஒப்பந்தத்தில் சில நிபந்தனைகளைத் (தனி உரிமை, சுற்றுமுறை அடிப்படைபோன்ற) தளர்த்துமாறு தமிழ்நாடு அரசு இந்திய அரசின் மின் துறை அமைச்சகத்திடம் கோரியுள்ளது. இதற்கான பதில் மத்திய அரசின் மின் துறை அமைச்சகத்திடமிருந்து பெறப்படவுள்ளது.

### 2. ஊரக வளர்ச்சிக்கான தேசிய விவசாய வங்கித் திட்டங்கள் (NABARD)

ஊரகக் கட்டமைப்பு மேம்பாட்டு நிதி-IX-ன்கீழ் ஊரக வளர்ச்சிக்கான தேசிய விவசாய வங்கி, தருமபுரி, திருநெல்வேலி கன்னியாகுமரி, தூத்துக்குடி மற்றும் கரூர் ஆகிய 5 மாவட்டங்களுக்கு ரூபாய் 63.49 கோடி அளவிற்கு நிதியுதவி அளிக்க ஒப்புதல் அளித்துள்ளது. இத்திட்டங்கள் 2005-2006-ல் முடிக்கப்பட வேண்டும். இத்திட்டத்தின்கீழ் ரூபாய் 54.13 கோடி 28-2-2007 வரை செலவிடப்பட்டுள்ளது. மீதமுள்ள ரூபாய் 9.36 கோடி 31-3-2007-க்குள் செலவிடப்படும். இதற்காக ஊரக வளர்ச்சிக்கான தேசிய விவசாய வங்கியிடம் இத்திட்டத்திற்கு ஒரு வருட கால நீட்டிப்பு பெறப்பட்டுள்ளது.

### 3. ஊரக மின்மயமாக்கல் நிறுவனம் (REC) உதவும் திட்டங்கள்

ஊரக மின்மயமாக்கல் (Rural Electrification Corporation) நிறுவனம் 2003-2004 ஆம் ஆண்டு முதல் ஐந்தாண்டுத் திட்டச் செயல்பாடாக மின் தொடர் இழப்பைக் குறைப்பதற்காக நிதி உதவி வழங்கி வருகிறது. மின் தொடர் இழப்பைக் குறைக்கும் கீழ்க்காணும் மாவட்டங்களில் திட்டங்களுக்கு இந்த நிறுவனம் ஏற்கனவே ஒப்புதல் வழங்கியுள்ளது:

| வரிசை எண் | மாவட்டத்தின் பெயர் | திட்ட மதிப்பீடு (ரூபாய் கோடியில்) |
|---|---|---|
| 1. | கோயம்புத்தூர் (வடக்கு) | 87.86 |
| 2. | திருச்சி (வடக்கு) | 138.92 |
| 3. | திண்டுக்கல் | 109.35 |
| 4. | மதுரை | 75.64 |
| | மொத்தம் | 411.77 |

மேற்கண்ட திட்டங்களுக்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டு, 28-2-2007 வரை ரூபாய் 157.48 கோடி செலவிடப்பட்டுள்ளது.

**4. மின் நிதிக் கழகம் உதவும் திட்டங்கள்**

மின் நிதிக் கழகம் ரூபாய் 327.57 கோடி மதிப்பீட்டிலான 19 மாவட்டங்கள் அடங்கிய 21 திட்டங்களுக்கு ரூபாய் 260.94 கோடி அளவிற்கு ஒப்புதல் அளித்துள்ளது. அனைத்துத் திட்டங்களுக்கான பத்திரங்களும் கையெழுத்தாகிவிட்டன. பணிகள் நடைபெற்று வருகின்றன. இவை தவிர, 16 புதிய துணை மின் நிலையங்களை நிறுவுவதற்கென மொத்தம் ரூ. 78.04 கோடி மதிப்பீட்டிலான 16 திட்டங்களுக்கும் மின் நிதிக் கழகம், மொத்தம் ரூ. 60.20 கோடி அளவிற்கு ஒப்புதல் அளித்துள்ளது. மேலும் இரண்டு புதிய துணை மின் நிலையங்களை நிறுவுதல் மற்றும் 24 துணை மின் நிலையங்களில் மின் திறனாக்கிகளின் திறனை உயர்த்துதல் ஆகியவற்றைக்கொண்ட ரூ. 23.57 கோடி மதிப்பீட்டிலான 50 திட்டங்களுக்கு மின் நிதிக் கழகம் மொத்தம் ரூபாய் 18.85 கோடி அளவிற்கு ஒப்புதல் அளித்துள்ளது.

**5. ராஜீவ் காந்தி கிராமப்புற மின்மயமாக்கல் திட்டம் (RGGVY)**

இந்திய அரசின் மின் துறை அமைச்சகம் ராஜீவ் காந்தி கிராமப்புற மின்மயமாக்கல் திட்டம் (RGGVY) என்ற திட்டத்தை, கிராமப்புறங்களில் மின் கட்டுமானம் அமைத்து அனைத்துக் கிராமப்புறங்களில் உள்ள வீடுகளுக்கும் 2012 ஆம் ஆண்டுக்குள் மின்சாரம் வழங்குவதை முக்கிய நோக்கமாகக் கொண்டு தொடங்கி வைத்தது.

ஊரகப் பகுதிகளில் உள்ள அனைத்துக் குடியிருப்புகளையும் மின்மயமாக்கும் முகமாக தமிழ்நாட்டின் 16 மாவட்டங்களில் உள்ள ரூ. 265 கோடி மதிப்பீட்டிலான முதல் கட்டத் திட்டங்களுக்கு (அனுப்பப்பட்ட மொத்தம் 29 மாவட்டங்களில் உள்ள திட்டங்களில்) ராஜீவ் காந்தி கிராம வித்யூத்திகாரன் யோஜனா திட்டத்தின் (RGGVY) கீழ் இந்திய அரசிடம் கொள்கை அளவில் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

**IV. பொது**

**1. விவசாயிகள், கைத்தறி நெசவாளர்கள் மற்றும் விசைத்தறி நெசவாளர்கள்.**

1. விவசாய இணைப்புகளில் சாதாரணத் திட்டத்தில் (இலவசத் திட்டம்) கொடுக்கப்படும் இணைப்புகளின் இலக்கு எண்ணிக்கை 5,000-த்திலிருந்து 10,000 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.





2. சுய நிதித் திட்டத்தின்கீழ் வரும் 2.4 இலட்சம் விவசாயிகளுக்கும் இலவச மின்சாரம் வழங்கப்படுகிறது.

3. சொந்தமாகத் தறிக் கூடம் வைத்திருந்து தாமே நெசவுத் தொழிலில் ஈடுபடும் கைத்தறி நெசவாளர்களுக்கு இரு மாதங்களுக்கு 100 யூனிட் வரை மின்சாரம் இலவசமாக வழங்கப்படுகிறது.

4. அதேபோல, சொந்தமாக தறிக் கூடம் அமைத்து தாமே விசைத்தறி இயக்கும் விசைத்தறி நெசவாளர்களுக்கு இரு மாதங்களுக்கு 500 யூனிட்டுகள் வரை இலவச மின்சாரம் வழங்கப்படுகிறது.

**2. வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ள குடும்பங்களுக்கு இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி.**

மாநிலத்தில் உள்ள ஏழைக் குடும்பங்களுக்கு இலவசமாக வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி வழங்குதல், தற்போதைய தமிழக அரசின் தேர்தல் வாக்குறுதியாகும். செயற்பாட்டின் முதல் கட்டமாக 30,000 குடும்பங்கள், பெருவாரியாக நீலகிரி மாவட்டத்தில் உள்ள பழங்குடியினர் தேர்ந்தெடுக்கப்பட்டனர். நீலகிரி மலைத் தொடர் பகுதிகளில் உள்ள அணுக முடியாத குன்றுகளில் வசிக்கும் 4,206 குடும்பங்களுக்கு, சாதனைக் காலமாக 30 நாட்களுக்குள் மின் இணைப்புகள் வழங்கப்பட்டன. சமத்துவபுரம் வீடுகளுக்கு 13,283 மின் இணைப்புகள் வழங்கப்பட்டன. இரண்டாம் கட்டத்தில் மொத்தம் 64,618 மின் இணைப்புகள் வழங்கப்பட்டன.

**3. மாண்புமிகு முதலமைச்சரின் தரிசு நில மேம்பாட்டுத் திட்டம்**

நிலமில்லா விவசாயிகளுக்கு இரண்டு ஏக்கர் நிலம் வழங்குதல் தற்போதய அரசின் ஒரு தேர்தல் வாக்குறுதியாகும். இதன்படி மாண்புமிகு முதலமைச்சரின் தரிசு நில மேம்பாட்டுத் திட்டம் அறிவிக்கப்பட்டது. நிலமில்லாத விவசாயிகளுக்குக் கொடுக்கப்படும் நிலங்களை விவசாயத்திற்குப் பயன்படுத்த ஏதுவாக விவசாயப் பொறியியல் துறையின் பெயரில் தொகுப்பு நிலங்களுக்கு மின்சாரம் இலவசமாக வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் கீழ்க்கண்ட மாவட்டகளில் இலவச மின்சாரம் விநியோகிக்கப்பட்டுள்ளது. விண்ணப்பங்கள் பெறப்பட்டவுடன் மின் இணைப்புகள் உயர் முன்னுரிமையில் வழங்கப்படுகின்றன.

[2007 ஏப்ரல் 2

| வ. எண் | மாவட்டத்தின் பெயர் | தொகுப்பு நிலங்களுக்கு வழங்கப்பட்ட மின் இணைப்புகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | திருவள்ளூர் | 12 |
| 2. | திண்டுக்கல் | 1 |
| 3. | விழுப்புரம் | 3 |
| 4. | தூத்துக்குடி | 4 |
| 5. | வேலூர் | 2 |
| | மொத்தம் | 22 |

**4. கணினிமயமாக்கப்பட்ட மின் தடை நீக்கும் மையங்கள்**

கணினிமயமாக்கப்பட்ட மின் தடை நீக்கும் மையங்கள் சென்னை, கோயம்புத்தூர், மதுரை, திருச்சி மற்றும் ஈரோடு ஆகிய இடங்களில் செயல்பட்டு வருகின்றன. மேலும் இந்த வசதி, சேலம், திருநெல்வேலி, நாகர்கோவில் மற்றும் வேலூர் ஆகிய மாவட்டத் தலைநகரங்களில் விரிவுபடுத்தப்படவும் திட்டமிடப்பட்டுள்ளது.

**5. கணினிமயமாக்கப்பட்ட தாழ்வழுத்த மின் கட்டணப் பட்டியல் மற்றும் வசூல்.**

தாழ்வழுத்த மின் பயனீட்டாளர்கள் தங்கள் மின் கட்டணத்தைச் செலுத்தும்வண்ணம் கணினிமயமாக்கப்பட்ட தாழ்வழுத்த மின் கட்டணப் பட்டியல் திட்டம்-BEST (Billing of Energy Services by TNEB) 615 நகர்ப்புறப் பிரிவுகளில் ரூ. 51.23 கோடி செலவில் செயல்படுத்தப்பட்டுள்ளன. மீதமுள்ள 1,805 ஊரகப் பிரிவுகளில் இது 2007-2008 ஆம் ஆண்டு முதல் காலாண்டிற்குள் முடிக்கப்படும். இந்தத் திட்டம் முடிக்கப்பட்டவுடன், மின் கட்டணம் எந்த நேரத்திலும், எந்த இடத்திலும் கட்டலாம் என்பது சாத்தியமாகும்.



2007 ஏப்ரல் 2]

## மின்சார ஆய்வுத் துறை

### முன்னுரை மற்றும் நிர்வாகம்

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் மின்சாரம் பொதுப் பட்டியலில் சேர்த்துக்கொள்ளப்பட்டுள்ளது. மின்சாரச் சட்டம், 2003-ல் (2003 ஆம் ஆண்டின் 36-வது சட்டம்) இந்திய மின்சாரச் சட்டம் 1910, மின்சாரச் (வழங்கல்) சட்டம், 1948, மற்றும் மின்சார ஒழுங்குபடுத்துதல் ஆணையச் சட்டம், 1998, ஆகியவைகள் நீக்குவதற்குச் சட்டமியற்றப்பட்டுள்ளது. மேற்கண்ட சட்டம் 10-6-2003 முதல் நடைமுறைக்கு வந்துள்ளது.

செப்டம்பர் 1961-லிருந்து அரசு தலைமை மின் ஆய்வாளரைத் துறைத் தலைவராகக் கொண்டு மின்சார ஆய்வுத் துறை உருவாக்கப்பட்டது. 1-8-1993 முதல் தலைமைச் செயலகத்தில் எரிசக்தித் துறை தனியாக உருவாக்கப்பட்டபோது, அத்துறையின் நிர்வாகக் கட்டுப்பாட்டின்கீழ் மின் ஆய்வுத் துறை வந்தது.

### செயல்பாடுகள்

மின்சார ஆய்வுத் துறையிடம் கீழ்க்கண்ட கடமைகளும், செயல்பாடுகளும் ஒப்படை செய்யப்பட்டுள்ளன:

1. 2003 ஜூன் 10 ஆம் தேதி முதல் நடைமுறைக்கு வந்த, மின்சாரச் சட்டம் 2003 (சட்டம் 36/2003)-ன்கீழ் ஒழுங்குமுறைகள் (regulation) விதிக்கப்படும் வகையில், இந்திய மின்சார விதிகள் 1956-ன்கீழ் ஆய்வுகள் மற்றும் பணிகள் மேற்கொள்ளுதல்.

2. தமிழ்நாடு மின் தூக்கிச் சட்டம், 1997 (Tamil Nadu Lift Act, 1997) மற்றும் தமிழ்நாடு மின் தூக்கி விதிகள், 1997 (Tamil Nadu Lift Rules, 1997).

3. தமிழ்நாடு திரையரங்க (ஒழுங்கு முறை) விதிகள், 1957-ன்கீழ் திரையரங்குகளின் மின் சாதனங்கள் நிறுவுதல் தொடர்பாகக் குறிப்பிட்டுள்ள கடமைகள்.

4. மின்சாரத் தொழில்நுட்பம் தொடர்புடைய இந்திய தர நிர்ணயங்களை உருவாக்கும் இந்திய தர நிர்ணயக் குழுமத்தில் உறுப்பினராகப் பணிபுரிதல்.

[2007 ஏப்ரல் 2

5. அரசு தலைமை மின் ஆய்வாளர், இந்திய மின்சார விதிகள், 1956-ன் விதி எண் 45-ன்கீழ் உருவாக்கப்பட்ட தமிழ்நாடு மின்சார உரிமம் வழங்கும் வாரியத்திற்குப் பதவி வழியின் காரணமாக ஏற்கப்பட்ட தலைவராகப் பணிபுரிதல்.

6. அரசு தலைமை மின் ஆய்வாளர், தமிழ்நாடு திரையரங்க (ஒழுங்குமுறை) விதிகள், 1957-ன்படி உருவாக்கப்பட்ட திரைப்படக் கருவி இயக்குனர்களுக்கான தேர்வாணையத்திற்குப் பதவி வழியின் காரணமாக ஏற்கப்பட்ட தலைவராகப் பணிபுரிதல்.

7. சமூக மற்றும் பொருளாதார வளர்ச்சிக்கு எரிசக்தி ஒரு அவசியமான இடுபொருளாகும். தொடர்ந்து உயர்ந்துகொண்டே இருக்கும் எரிசக்தித் தேவை இயற்கையாகக் கிடைக்கும் எரிபொருளை எரிப்பதன்மூலம் பெறப்படுகிறது. எனவே, எரிசக்தித் திறம்பாட்டினை மேம்படுத்துவதால் எரிசக்தி சேமிப்பிற்கு வழிவகுப்பதோடு நச்சு வாயுக்களின் வெளிப்பாடு குறைக்கப்படுவதால் சுற்றுப்புறச் சூழ்நிலை அதிக அளவில் மேம்படுவதற்கும் உதவுகிறது.

இதனை எய்துவதற்கு ஏதுவாக மத்திய அரசு எரிசக்தி சேமிப்புச் சட்டம், 2001-ஐ ஓர் அறிவிக்கையின்மூலம் வெளியிட்டது. இச்சட்டத்தின் பிரிவு 15(d)-ல் கொடுக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி, தமிழ்நாட்டில் எரிசக்தி சேமிப்புச் சட்டம், 2001 (மத்தியச் சட்டம் 52/2001)-ஐ நடைமுறைப்படுத்தவும், ஒருங்கிணைக்கவும், கட்டுப்படுத்தவும், மின் ஆய்வுத் துறையை மாநில ஒருங்கிணைப்பு முகமையாகத் (Designated Agency) தமிழக அரசு ஓர் அறிவிக்கைமூலம் நியமித்துள்ளது.

எரிசக்தி சிக்கன நடவடிக்கைமூலமாக உலகத் தட்ப வெப்ப நிலை மாறுபாட்டில் பெரும் பங்கு வகிக்கும் கரியமில வாயு வெளியேற்றத்தைக் குறைப்பது சிறந்த வழிமுறை எனத் தமிழக அரசு கருதுகிறது.

மைய அரசின்கீழ் இயங்கும் புது டெல்லியிலுள்ள எரிசக்தித் திறம்பாட்டுச் செயலகத்தின் (Bureau of Energy Efficiency, New Delhi) ஆலோசனை மற்றும் பரிந்துரையின்படி, பலவிதத் திட்டங்கள் மற்றும் செயல்பாடுகளை மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது. அதாவது, அரசுக்குச் சொந்தமான மற்றும் அரசு சார்ந்த கட்டடங்களில் கச்சிதமான குறைந்த மின்சாரத்தில் இயங்கும் ஒளிர்விளக்குகளை



2007 ஏப்ரல் 2]

(Compact Fluorescent Lamp) பொருத்தவும் ஐ.எஸ்.ஐ. தரம் வாய்ந்த திறனுள்ள மோட்டார் பம்புசெட்டுகள் மற்றும் கெபாசிட்டர்கள், வால்வுகள் ஆகியன விவசாயத் துறைகளில் உபயோகிக்கவும் மற்றும் அரசு உதவிபெறும் தனியார் கட்டடங்களில் எரிசக்தித் திறம்பாட்டுடன் கூடிய வடிவமைப்புகளை எதிர்காலத்தில் அமைக்கவும் நடவடிக்கைகள் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

## இந்திய மின் விதிகள், 1956-ன்கீழ் வரும் செயல்பாடுகள்

1. மின் உற்பத்திக் கழகங்கள், தமிழ்நாடு மின்சார வாரியம் மற்றும் உயர் மின்னழுத்த நுகர்வோர்கள் ஆகியோரால் நிறுவப்படும் உயர் மற்றும் அதிக உயர் அழுத்த மின்னமைப்புகளுக்கு இந்திய மின்சார விதிகள், 1956-ன் 63-வது விதியின்படி ஒப்புதல் அளித்தல்.

2. உயர் மின்னழுத்த நிறுவனங்கள் மற்றும் மின் வணிக நிறுவனங்கள் ஆகியவற்றை இந்திய மின்சார விதிகள், 1956-ன் விதி எண் 46-ன்கீழ் கால முறை ஆய்வு செய்தல்.

3. மின் விநியோகஸ்தர்களுடைய உயர் மற்றும் அதிக உயர் மின்னழுத்த அமைப்புகளை இந்திய மின்சார விதிகள், 1956-ன் விதி எண் 46-ன்கீழ் கால முறை ஆய்வு செய்தல்.

4. இந்திய மின்சார விதிகள் 1956-ன் விதி எண் 44-ஏ-ன்கீழ் மின் உற்பத்தி, மின் விநியோகம் மற்றும் மின் உபயோகம் ஆகியவற்றில ஏற்படும் மின் விபத்துக்கள் குறித்து தகவல்பெறப்பட்டதும், விபத்து நடந்த இடத்தில் புலனாய்வு செய்தல் மற்றும் அறிக்கை தயாரித்தல்.

## தமிழ்நாடு மின்சார நுகர்வு அல்லது விற்பனைமீதான வரிச் சட்டம் மற்றும் விதிகள், 2003

இச்சட்டம் ஏற்கெனவே இம்மாநிலத்தில் அமலில் இருந்த தமிழ்நாடு மின்சார நுகர்வு வரிச் சட்டம், 1962 மற்றும் தமிழ்நாடு மின் தீர்வைச் சட்டம், 1939 ஆகியவற்றிற்குப் பதிலாக 16-6-2003 முதல் புதியதாக அமல்படுத்தப்பட்ட ஒன்றாகும்.

### (அ) இச்சட்டத்தின்படி மின் வரி

(i) சுயமாக உற்பத்தி செய்து பயன்படுத்திக் கொள்ளப்படும் மின்சாரத்திற்கு யூனிட் ஒன்றுக்கு 10 காசுகள்.

[2007 ஏப்ரல் 2

(ii) தமிழ்நாடு மின்சார வாரியம் மற்றும் ஏனைய உரிமதாரர்களால் விற்பனை செய்யப்படும் மின்சாரத்திற்கான மின் வரி நிகரக் கட்டணத்தின்மீது 5 சதவிகிதம் ஆகும்.

**(ஆ) விலக்களிக்கப்பட்டது**

கீழ்க்கண்ட இனங்களுக்கு இந்த மின் வரி விதிப்பிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளது:

1. அனைத்து அரசுத் துறைப் பயன்பாடுகள்
2. இரயில்வே துறைப் பயன்பாடுகள்
3. உள்ளாட்சி அமைப்புகளின் பயன்பாடுகள்
4. தமிழ்நாடு மின்சார வாரியம் மற்றும் ஏனைய உரிமதாரர்களால் விற்பனை செய்யப்படும் வீட்டு உபயோகம், குடிசைக்கான மின் விநியோகம் மற்றும் விவசாயப் பயன்பாட்டிற்கென வழங்கப்படும் மின்சாரம்.
5. சிறப்புப் பொருளாதார மண்டலங்களிலுள்ள தொழில் நிறுவனங்கள் மற்றும் இதர அமைப்புகளின் பயன்பாட்டிற்காக விற்பனை செய்யப்படும் மின்சாரம்.
6. தமிழ்நாட்டில் முதன்முறையாகத் தொடங்கப்படும் புதிய தொழில் நிறுவனங்களின் பயன்பாட்டிற்காக விற்பனை செய்யப்படும் மின்சாரத்திற்கு முதலீடு செய்யப்படும் தொகையினைப் பொறுத்து வர்த்தகரீதியான உற்பத்தி தொடங்கும் நாள் முதல், 3 / 4 / 5 ஆண்டுகளுக்கு விலக்களிக்கப்படும்.

**தர நிர்ணய சோதனைக் கூடம் மற்றும் நடமாடும் ஆய்வுக் கூடங்கள்:**

அரசு தர நிர்ணய மின் ஆய்வுக் கூடம், சென்னையிலுள்ள கிண்டியிலுள்ளது. நடமாடும் ஆய்வுக் கூடங்கள் சென்னை, சேலம், திருநெல்வேலி, மதுரை, திருச்சி ஆகிய நகரங்களில் இயங்கி வருகின்றன.

**2007-2008 ஆம் ஆண்டிற்கான பகுதி-2 திட்டத்தின்கீழ் புதிய திட்டங்கள்**

2007-2008ஆம் ஆண்டில் கீழ்க்காணும் பகுதி-2 திட்டங்களுக்காக ரூ. 50 இலட்சம் நிதியாக ஒதுக்க அரசு உத்தேசித்துள்ளது.



2007 ஏப்ரல் 2]

| வ. எண். | திட்டப் பணியின் விவரம் | 2007-2008 ஆம் ஆண்டிற்கான மொத்தச் செலவு (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | அரசுக் கட்டடங்களில் எரிசக்தி உபயோகத்தில் சிக்கன நடவடிக்கைகள் மேற்கொள்ளல் (EEM) | 8 |
| 2. | எரிசக்தி சேமிப்பு நடவடிக்கைகள் (EEM) | 27 |
| 3. | அரசு மின் தர நிர்ணய ஆய்வுக் கூடத்தில் சோதனை வசதிகளை மேம்பாடு செய்தல் | 15 |
| | மொத்தம் | 50 |

## தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமை

**முன்னுரை**

நாளுக்கு நாள் குறைந்துகொண்டிருக்கும் நிலக்கரி, இயற்கை எரிவாயு மற்றும் எண்ணெய் வளங்கள், அவற்றின் விலை ஏற்றம் மற்றும் அவற்றைத் தொடர்ந்து பயன்படுத்துவதால் ஏற்படும் சுற்றுச்சூழல் பாதிப்புகள் போன்றவை உலகைப் பெருத்த அச்சத்திற்கு உள்ளாக்கி வருகின்றன. உலகம் எதிர்கொண்டு வரும் இச்சவால்களைச் சமாளிக்க புதுப்பிக்கத்தக்க எரிசக்தி ஆதாரங்களை மேம்படுத்தும் முயற்சியும், அச்சக்திகளைப் பயன்படுத்துவதற்கான உபகரணங்களைத் தயாரிக்கும் முயற்சியும் உலக அளவில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

எப்போதும் கிடைக்கக்கூடிய சூரிய சக்தி, காற்று சக்தி, உயிரியல் சக்தி ஆகியவற்றைப் பயன்படுத்தி தூய்மையான எரிசக்தியை உற்பத்தி செய்யும் முயற்சிகள் முனைப்பாக நாள்தோறும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தமிழ்நாட்டில் இதற்கான தொழில்நுட்பங்களை ஆராயவும், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி வளங்களை மேம்படுத்தவும், மத்திய அரசின் புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் திட்டங்களைச் செயலாற்றும் நோக்கத்துடனும் 1985 ஆம் ஆண்டில் தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமை அமைக்கப்பட்டது.

இம்முகமை மாநில மற்றும் மைய அரசுகளின் உதவியுடன் மாற்று எரிசக்தி வளங்களைப் பயன்படுத்தும் திட்டங்கள் பலவற்றைச் செயல்படுத்தி வருகிறது. இதன் விளைவாக, புதுப்பிக்கத்தக்க எரிசக்தி வளங்கள்மூலம் (சிறு அளவிலான நீர் மின் திட்டங்கள் உட்பட) தமிழ்நாட்டில் 28-2-2007 வரை மொத்தம் 3,725 மெகாவாட் மின் உற்பத்தித் திறன் நிறுவப்பட்டுள்ளது. இது இந்திய அளவில் புதுப்பிக்கத்தக்க எரிசக்தியின்கீழ் நிறுவப்பட்டுள்ள மொத்த உற்பத்தித் திறனில் 41 சதவிகிதம் ஆகும். மேலும், தமிழ்நாடு மின்சார வாரியத்தின் மின் கட்டமைப்பின் மொத்தத் திறனில் இது 23 சதவிகிதம் ஆகும். அகில இந்திய அளவில் இது 7.5 சதவிகிதம் மட்டுமே உள்ளது. புதுப்பிக்கத்தக்க எரிசக்திமூலம் மின் உற்பத்தித் திறனை மேம்படுத்துவதில் மட்டுமல்லாது, புதுப்பிக்கத்தக்க எரிசக்தி வளங்களைப் பயன்படுத்துவதிலும் தமிழ்நாடு இந்தியாவில் மற்ற மாநிலங்களுக்கு முன்னோடியாக உள்ளது.

**புதுப்பிக்கத்தக்க எரிசக்தி வளங்களாவன :**

(1) காற்று சக்தி,

(2) சூரிய சக்தி,

(3) தாவர மற்றும் பிற உயிர் சக்திகள்,

(4) கடல் அலை மின் சக்தி,

(5) எரிபொருள் கலன்,

(6) கடல் வெப்பச் சக்தி,

(7) பூமியின் வெப்பச் சக்தி ஆகியவை.

இவற்றுள் மேலே குறிப்பிடப்பட்டுள்ள முதல் மூன்று ஆதாரங்களான காற்று சக்தி, சூரிய சக்தி மற்றும் தாவர உயிர் சக்தி ஆகியவற்றின் உற்பத்தி மற்றும் பயன்பாடு மட்டுமே இந்தியாவிலும், தமிழ்நாட்டிலும் பெருமளவில் பரவி உள்ளன. எனினும், பிற வகை ஆதாரங்களை வணிகரீதியாகப் பயன்படுத்தும் நிலை இன்னும் உருவாகவில்லை.

## 1. காற்று சக்தி

### 1.1. காற்று ஆய்வு மையங்கள் மற்றும் செயல் விளக்கக் காற்றாலைப் பண்ணைகள்

காற்றின் வேகம் மணிக்கு 18 கிலோ மீட்டருக்கு அதிகமுள்ள பகுதிகளைக் கண்டறிய காற்று ஆய்வு மையங்கள் அமைத்து ஆய்வுப்



பணிகள் மேற்கொள்ளப்பட்டன. இந்த ஆய்வின் அடிப்படையில் தமிழ்நாட்டில் 41 பகுதிகள் காற்று வளமிக்க பகுதிகள் எனக் கண்டறியப்பட்டு, அவற்றில் படிப்படியாக 19 மெகாவாட் திறன் கொண்ட செயல் விளக்கக் காற்றாலைப் பண்ணைகள் மாநில அரசால் தமிழ்நாட்டில் நிறுவப்பட்டன. 1990 ஆம் ஆண்டில் முதன்முதலில் தமிழ்நாட்டில் தனியார் காற்றாலைப் பண்ணைகள் அமைக்கப்பட்டன. அதைத் தொடர்ந்து, தனியார் காற்றாலைப் பண்ணைகள் பெருமளவில் நிறுவப்பட்டு வருகின்றன. புதிய காற்று ஆய்வு மையங்கள் அமைக்க மைய அரசின் புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகம் அதற்காகும் செலவில் 80 சதவீதத்தை அளிக்கிறது. மீதிச் செலவை மாநில அரசு ஏற்கிறது. கடந்த மூன்றாண்டுகளில் மொத்தம் 9 புதிய காற்று ஆய்வு மையங்கள் அமைக்க ஒப்புதல் பெறப்பட்டு, அவை நிறுவப்பட்டுச் செயல்பட உள்ளன. மேலும், சில குறிப்பிட்ட காற்று வளமிக்க பகுதிகளில் காற்று சக்தி அளவு பற்றி நுண் ஆய்வு (Micro survey) செய்து, காற்றாலைப் பண்ணைகள் அமைப்பதற்கான இடங்களைத் தெரிவு செய்ய, அவற்றை அமைப்போருக்கு உதவும் வகையில் தகவல்கள் அளிக்கப்படுகின்றன. புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகத்தால் ஆய்வு செய்யப்பட்ட 19 இடங்கள் தவிர, மாநில அரசின் நிதி உதவியுடன் 8 இடங்களில் ஆய்வு செய்யப்பட்டுள்ளது.

### 1.2. தனியார் முதலீடு

காற்று ஆய்வு மையம் அமைத்து ஆய்வு செய்த 69 இடங்களில காற்றாலை அமைப்பதற்குத் தகுதியானவையாகத் தெரிவு செய்யப்பட்ட 41 இடங்களில், 22 பகுதிகளில் 28-2-2007 வரை மொத்தம் 3,245 மெகாவாட் மின் திறன்கொண்ட காற்றாலைகள் அமைக்கப்பட்டுள்ளன. இது நாட்டின் மொத்தக் காற்றாலை மின் திறனில் 53 சதவிகிதமாகும். இவற்றில் 19 மெகாவாட் தவிர, மற்றவை யாவும் தனியார் முதலீட்டாளர்களால் அமைக்கப்பட்டவையாகும்.

காற்றாலைப் பண்ணைகளில் உற்பத்தியாகும் மின்சாரத்தைத் தமிழ்நாடு மின்சார வாரியம் ஒரு யூனிட்டிற்கு ரூ. 2.70 என்ற கட்டணத்திற்கு வாங்கிக்கொள்கிறது. மேலும், இந்த மின்சாரத்தை சொந்த உபயோகத்திற்குப் பயன்படுத்த ஏதுவாக, முதலீட்டாளர்களுக்கு மாநிலத்தின் பிற இடங்களுக்குக் கொண்டு செல்லும் வீலிங் கட்டணமாக (wheeling charges) 5 சதவிகிதமும், சேமித்து வைத்துப்

[2007 ஏப்ரல் 2

பயன்படுத்தும் கட்டணமாக 5 சதவீதமும் வசூலித்து, சலுகைகள் அளிக்கப்படுகின்றன.

மின்சாரக் கொள்முதல் தொடர்பான கட்டணம் மற்றும் பிற சலுகைகள் பற்றிய முடிவுகளைத் தற்பொழுது தமிழ்நாடு மின்சார ஒழுங்கு முறை ஆணையம்தான் எடுத்து வருகிறது. இந்த ஆணையம் ஆகஸ்ட் 2005-ல் வழங்கிய ஆணைப்படி, தமிழ்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்தை அயலார்களுக்கு, சில நிபந்தனைகளுக்கு உட்பட்டு விற்கலாம். மே 2006-ல் பிறப்பிக்கப்பட்ட ஆணையின்படி, கொள்முதல் விலை, ஏற்கெனவே ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ள திட்டங்களுக்கு யூனிட்டிற்கு ரூ. 2.75-ம், புதிதாக ஒப்பந்தம் செய்யப்படும் திட்டங்களுக்கு ரூ. 2.90-ம் வழங்கப்படும்.

### 1.3. சிறிய காற்று சக்தி சாதனங்கள்

மெகாவாட் அளவில் மின் உற்பத்தி செய்யும் மின் கட்டமைப்புடன் இணைந்த காற்றாலைகள் தவிர, தனித்து இயங்கும் 30 கிலோவாட் வரை திறன்கொண்ட காற்று மின்னாக்கிகள் உள்ளன. காற்றாலைகளை நேரடியாக குடிநீர் அல்லது சிறு விவசாயத்திற்கு நீர் இறைக்கவும் பயன்படுத்தலாம். புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகம் இச்சாதனங்களை அமைப்பதற்கு மானியமும் அளிக்கிறது.

## 2. சூரிய சக்தி

சூரிய சக்தியினை இரு வழிகளில் பயன்படுத்தலாம். முதலாவதாக, மின்சாரம் தயாரித்து விளக்கு மற்றும் பிற மின் தேவைகளுக்குப் பயன்படுத்துதல். இரண்டாவதாக, வெப்ப சக்தியைச் சுடுநீர் தயாரிப்பதற்கும், வேளாண் பொருட்கள் மற்றும் மீன்களை உலர்த்தவும் மற்றும் தொழிற்சாலைகளின் தேவைகள், சமையல் ஆகியவற்றுக்கும் பயன்படுத்தலாம்.

### 2.1. சூரிய ஒளி மின் சக்தி

#### 2.1.1. சூரிய ஒளி விளக்குகள்

மத்திய அரசால் 50 சதவீதம் வரை வழங்கப்படும் மானியத் திட்டத்தின்கீழ் சூரிய ஒளியைப் பயன்படுத்தி வீட்டு விளக்கு, அலுவலக மின் விளக்கு மற்றும் தெரு விளக்குகள் அமைப்பதற்கு மாநில அரசு ஊக்கம் தந்து வருகிறது. உள்ளாட்சி அமைப்புகள், சூரிய ஒளி தெரு விளக்குகளை அமைத்து மின் கட்டணச் செலவைக் குறைக்கலாம்.



2007 ஏப்ரல் 2]

தமிழ்நாட்டில் ஊரக வளர்ச்சித் துறையில் கட்டப்படும் தொகுப்பு வீடுகளில் அமைக்கப்பட்ட 429 சூரிய ஒளி வீட்டு விளக்குகள் உட்பட மொத்தம் 1,350 சூரிய ஒளி வீட்டு விளக்குகளும், மற்றும் ஊராட்சிகளில் அமைக்கப்பட்ட 3,000 சூரிய ஒளி தெரு விளக்குகள் உட்பட மொத்தம் 5,565 சூரிய ஒளி தெரு விளக்குகள் இந்த மானியத் திட்டத்தின்கீழ் நிறுவப்பட்டுள்ளன. 2005-2006ஆம் ஆண்டில் புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகம் ஊரகப் பகுதிகளில் நிறுவ 484 சூரிய ஒளி வீட்டு விளக்குகள் மற்றும் 700 சூரிய ஒளி தெரு விளக்குகளுக்கு ஒப்புதல் வழங்கியுள்ளது.

நகரப் பகுதிகளில் அமைப்பதற்காக, சூரிய ஒளி தெரு விளக்குகள் (Solar street lights) (500), தெரு விளக்குகளைக் கட்டுப்படுத்தும் சூரிய ஒளி அமைப்புகள் (Solar Street light conrol systems) (220), சூரிய ஒளி சாலைவழி விளம்பரப் பலகைகள் (Solar Hoarding) (55), சூரிய ஒளி மின்மினி மின்மினி விளக்குகள் (Solar Road studs) (1,000), சூரிய ஒளி மின்மினி விளக்குகள் (Solar blinkers) (150) மற்றும் சூரிய ஒளி போக்குவரத்து ஒழுங்குச் சாதனங்கள் (50) ஆகியவற்றுக்கும் புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகம் ஒப்புதல் வழங்கியுள்ளது. இவற்றை 6 மாநகராட்சிகள் மற்றும் 10 பெரிய நகராட்சிகளில் நகராட்சி நிர்வாக ஆணையர்மூலமாக நிறுவ நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன. இந்த ஒப்புதல்கள் மார்ச் 2006-ல் வழங்கப்பட்டது. பிறகு மே 2006-ல் மாநிலச் சட்டசபைத் தேர்தல் நடத்தப்பட்டதால், இத்திட்டங்கள் செயல்படுத்தத் தொடங்கி நடப்பு ஆண்டில் முடிக்கப்படும்.

#### 2.1.2. தொலைதூரக் குடியிருப்புகளுக்கு மின் வசதி

தமிழ்நாட்டிலுள்ள மின் கட்டமைப்புடன் இணைக்கப்படாத தொலைதூரக் குக்கிராமங்களுக்கு சூரிய ஒளி விளக்குகள்மூலம் மின் வசதி செய்து தரும் திட்டத்தைத் தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமை எடுத்துக்கொண்டுள்ளது. அவை தொலைதூரத்தில் இருப்பதாலும், வனப் பகுதிகளில் அமைந்துள்ளதாலும் மின் கட்டமைப்புமூலம் மின் வசதி அளிக்கப்படவில்லை. இதன் மொத்தச் செலவையும் மத்திய, மாநில அரசுகள் ஏற்கின்றன. 2005-2006ஆம் ஆண்டில், மாநில அரசு, ஏற்கெனவே 2003-2004-ல் அளித்த ரூ. 100 இலட்சம் தவிர, கூடுதல் மானியமாக ரூ. 366.75 இலட்சம் வழங்கியுள்ளது. புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகம் நிர்ணயித்துள்ள விலையின் 90 சதவீதத்தை மத்திய அரசு மானியமாக வழங்குகிறது. ஒப்பந்தப் புள்ளிமூலம் பெறப்படும் விலை, புதிய மற்றும்

புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகம் நிர்ணயித்துள்ள விலையைவிட அதிகமாக உள்ளதால், மீதிச் செலவுக்காக இந்தக் கூடுதல் மானியம் வழங்கப்படுகிறது. புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகம் ரூ. 367.00 இலட்சம் முன்பணமாக அளித்துள்ளது. முதல் கட்டத்தில், 12 மாவட்டங்களிலுள்ள 150 குக்கிராமங்களில் 6,637 சூரிய ஒளி வீட்டு விளக்குகளும், 300 சூரிய ஒளி தெரு விளக்குகளும் நிறுவுவதற்கான பணி ஆணையைத் தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமை பிறப்பித்துள்ளது. 5 ஆண்டுப் பராமரிப்பு உட்பட இதற்கான மொத்தச் செலவு ரூ. 1,023 இலட்சம் ஆகும். இப்பணி 99 குக்கிராமங்களில் 4,776 சூரிய ஒளி வீட்டு விளக்குகள் மற்றும் 265 சூரிய தெரு விளக்குகள் அமைப்பதுடன் முடிவடைந்துள்ளது.

இரண்டாவது கட்டமாக 94 குக்கிராமங்களில் மின் வசதி அளிக்க, புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகம் நிர்ணயித்துள்ள விலையில், 10 சதவிகிதமான ரூ. 50.59 இலட்சத்தை மாநில அரசு தன் பங்காக 2005-2006-ல் ஒதுக்கியது தவிர, எதிர்பார்க்கப்படும் ஒப்பந்தப்புள்ளி விலைகளின் அடிப்படையில், 2006-2007-ல் கூடுதலாக ரூ. 300 இலட்சத்தையும் மாநில அரசு ஒதுக்கியுள்ளது. புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகம் ஒப்புதல் பெறப்பட்டதும் இத்திட்டம் செயலாக்கம்பெற எடுத்துக்கொள்ளப்படும்.

## 2.2. சூரிய வெப்ப சக்தி

### 2.2.1. சூரிய சுடுநீர்க் கலன்கள்

சூரிய வெப்ப சக்தியைப் பயன்படுத்தி வீடுகள், விடுதிகள் மற்றும் மருத்துவமனைகள் ஆகியவற்றில் சுடுநீர் தயாரிக்கலாம். 1993 ஆம் ஆண்டிற்குப் பிறகு இதற்கு மத்திய அரசின் மானியம் வழங்கப்படுவதில்லை. எனவே, மாநில அரசின் நிதி உதவியுடன் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டது. தமிழ்நாட்டில் 31-3-2006 வரை மொத்தம் 3,522 வீடுகளுக்கும், 403 நிறுவனங்களுக்கும் சூரிய சுடுநீர்க் கலன்கள், மத்திய, மாநில அரசுகளின் மானியத்துடனும், மருத்துவமனைபோன்ற 59 அரசு நிறுவனங்களில் சூரிய சுடுநீர்க் கலன்கள் மாநில அரசின் 100 சதவீத மானியத்துடன் நிறுவப்பட்டுள்ளன. 2006-2007ஆம் ஆண்டிற்கு 500 லிட்டர் கொள்ளளவு கொண்ட 12 கலன்கள் அமைக்க மாநில அரசு ரூ.10.50 இலட்சம் ஒதுக்கியுள்ளது. இத்திட்டம் நடப்பாண்டில் நிறைவடையும்.





சில வகைப் புதிய கட்டடங்களில் சூரிய சுடுநீர்க் கலன்கள் அமைப்பதைக் கட்டாயமாக்கி, 2002 ஆம் ஆண்டில் மாநில அரசு ஆணை பிறப்பித்தது. வெவ்வேறுவிதமான பயனாளிகளுக்கு ஏற்றவாறு சூரிய சுடுநீர்க் கலன்களின் திறன்கள் எவ்வளவு என்று தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமை வழிமுறைகளை அனுப்பியுள்ளது. புதிய கட்டடங்களில் இதனைச் செயலாக்குவது குறித்து கருத்தரங்கம் ஒன்று நகரத் திட்ட அலுவலர்கள் மற்றும் நகராட்சி அலுவலர்களுக்கு நடத்தப்பட்டது.

2005-2006 ஆம் ஆண்டில் புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகம் சூரிய சுடுநீர்க் கலன்கள் அமைக்கும் பயனாளிகளுக்கு உதவி அளிக்கும் திட்டத்தை மீண்டும் கொண்டு வந்துள்ளது. அதன்படி, வீடுகளில் அமைப்பதற்கு 2 சதவீதம் மற்றும் பிற நிறுவனம் மற்றும் தொழிற்சாலைப் பயனாளிகளுக்கு 3 மற்றும் 5 சதவீத வட்டி விகிதத்தில், இந்திய புதுப்பிக்கத்தக்க எரிசக்தி வளர்ச்சி நிறுவனம் (IREDA) மற்றும் பொது / தனியார் வங்கிகள் ஆகியவற்றின்மூலமாகக் கடன் வழங்கப்படுகின்றன. தற்போது கடன் வசதிபெறாத நிறுவனங்களுக்கும் முதலீட்டு மானியம் வழங்கப்படுகிறது.

### 2.2.2. சூரிய சக்தி சுடுகாற்று அமைப்புகள்

சூரிய வெப்ப சக்தியினைப் பயன்படுத்தித் தானியங்கள், பழங்கள், தேயிலை, தோல் மற்றும் மீன்கள் ஆகியவற்றை உலர்த்துவதற்குத் தேவையான புதிய தொழில்நுட்பம் முதன்முறையாகத் தமிழ்நாட்டில் பயன்பாட்டில் உள்ளது. இவ்வகையில், தமிழ்நாடு அரசு மொத்தம் 840 சதுர மீட்டர் பரப்பளவிற்கு, ரூ. 10.81 இலட்சம் மானியம், 2003-2004 மற்றும் 2005-2006 ஆம் ஆண்டுகளில் ஒதுக்கியுள்ளது. தமிழ்நாட்டில் மொத்தம் 4,500 சதுர மீட்டர் பரப்பளவிற்கு சூரிய சக்தி சுடுகாற்று அமைப்புகள் அரசு உதவியுடன் நிறுவப்பட்டுள்ளன. சூரிய சக்தி சுடுகாற்று அமைப்புகளுக்கு 2005-2006 முதல் மானியம் அளிக்க புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகம் தொடங்கியுள்ளது. நிறுவனங்களுக்கு 50 சதவிகிதமும், வணிக / தொழில் நிறுவனங்களுக்கு 35 சதவிகிதம் வரையிலும், அதிகபட்ச உச்சவரம்புக்குட்பட்டு மானியம் வழங்கப்படும். 2006 மார்ச்-ல் புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகம், திருப்பூரிலுள்ள நிறுவனத்திற்கு 446 சதுர மீட்டர் பரப்பளவுகொண்ட அமைப்பை நிறுவ ரூ. 7.80 இலட்சம் மானியம் வழங்க ஒப்புதல் அளித்துள்ளது.

### 2.2.3. சூரிய வெப்ப சமைப்பான்கள்

பெட்டி வடிவிலான சமைப்பான்களில் 4 முதல் 5 பேர்களுக்கு சூரிய வெப்ப சக்தியைப் பயன்படுத்தி உணவு சமைக்கலாம். இதனால் மரபுசார்ந்த எரிபொருளான விறகு, சமையல் வாயு ஆகியவற்றை மிச்சப்படுத்தலாம். இச்சமைப்பான்களை அனைவரும் எளிதாகப் பெறும் வகையில் தற்பொழுது வங்கிகள்மூலம் குறைந்த வட்டியில் கடன் வசதி செய்து தரப்படுகிறது. மேலும், தட்டு வடிவிலான சமைப்பான்களைக்கொண்டு 10 முதல் 15 பேர்களுக்குச் சமைக்கலாம். சமுதாய சூரிய வெப்ப சமைப்பான்களில் கூடுதலான நபர்களுக்குக் கட்டடத்திற்குள்ளேயே சூரிய வெப்ப சக்தியைப் பயன்படுத்திச் சமைக்கலாம். இத்திட்டத்திற்கு மத்திய அரசின் புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகம் 30 சதவீதம் வரை அதிகபட்ச உச்சவரம்பிற்குட்பட்டு மானியம் அளிக்கிறது. கொதிகலன்கள்மூலம் நீராவியை உற்பத்தி செய்து பல்லாயிரம் பேர்களுக்கான சமையல் செய்யும் இடங்களில் சூரிய நீராவி சமைப்பான்களைப் பயன்படுத்தலாம். இதற்கு இலாப நோக்கில்லாத நிறுவனங்களுக்கு 50 சதவீதமும், பணியிடங்கள் மற்றும் தொழில் நிறுவனங்களுக்கு 35 சதவீதம் வரையும் மானியம் அளிக்கப்படுகின்றது. மார்ச் 2006-ல் 500 தட்டு வடிவ சமைப்பான்களுக்கு மொத்தம் ரூ. 8.25 இலட்சம் நிதி உதவி வழங்கி புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகம் ஒப்புதல் அளித்துள்ளது. மேலும், சென்னை நிறுவனம், 1,150 சதுர மீட்டர் பரப்பளவுகொண்ட ஒன்றில் சூரிய நீராவி சமைப்பான் நிறுவ ரூ. 55.00 இலட்சத்திற்கு ஒப்புதல் அளித்துள்ளது. 2006-2007-ல் மதிய உணவு மையங்கள் / விடுதிகளில், 40 சூரிய வெப்ப தட்டு வடிவ சமைப்பான்கள் அமைக்க மாநில அரசு ரூ. 2.40 இலட்சத்தை முழு மானியமாக ஒதுக்கியுள்ளது. மிகவும் பின்தங்கியவர்கள் மற்றும் அறிவிக்கப்படாத இனத்தவர்கள் நலத் துறையைச் சார்ந்த மாணவ விடுதிகளில் இவை அமைக்கப்பட்டு வருகின்றன.

## 3. தாவர மற்றும் பிற உயிர் சக்திகள்

தாவர மற்றும் பிற உயிர் சக்திக் கழிவுகளிலிருந்து எரிவாயு மற்றும் மின்சாரம் தயாரித்து எரிசக்தித் தேவைகளை நிறைவேற்றும் திட்டங்கள் கடந்த சில ஆண்டுகளாகத் தமிழ்நாட்டில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

### 3.1. இணை மின் திட்டம்

சர்க்கரை ஆலைகளில் உயர் அழுத்த நீராவிக் கலன்கள் (Boilers) மூலம் கரும்புச் சக்கையிலிருந்து நீராவியை உற்பத்தி செய்து, அதிலிருந்து



மின்சாரம் தயாரித்து, உபரி மின்சாரத்தைத் தமிழ்நாடு மின் வாரியத்திற்கு விற்பதுடன், அழுத்தம் குறைந்த நீராவியைச் சர்க்கரை உற்பத்திற்குப் பயன்படுத்தும் திட்டமும் தமிழ்நாட்டில் வெற்றிகரமாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் 28-2-2007 வரை மொத்தம் 315 மெகாவாட் அளவிற்கு உற்பத்தித் திறன் உருவாக்கப்பட்டதன் காரணமாக (மின் கட்டமைப்பிற்கு வழங்கப்படும் உபரி மின்சாரத்தின் அளவு 184 மெகாவாட்) இந்தியாவிலேயே தமிழ்நாடு முன்னணியில் உள்ளது.

### 3.2. தாவரப் பொருள் / கழிவுகள்மூலம் மின் உற்பத்தி

விறகு, பிற விவசாயக் கழிவுகள் மற்றும் மிஞ்சியிருக்கும் தாவரப் பொருட்கள், பயன்படாத காய்கறிகள்மூலம் மின்சாரம் தயாரிக்கும் திட்டத்திற்குத் தமிழ்நாடு அரசு ஊக்கமளித்து வருகிறது. தாவரக் கழிவுகளிலிருந்து மின் உற்பத்தி செய்யும் திறன் 28-2-2007 வரை 72.5 மெகாவாட்டாக (5 அலகுகள்) உள்ளது. இதனை மேலும் ஊக்கப்படுத்தி ஊரகப் பகுதிகளில் வேலைவாய்ப்புகளைப் பெருக்கவும் அரசு தகுந்த நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது.

### 3.3. தாவர எரிசக்தி வாயுக் கலன்கள்:

தொழிற்சாலைகள் மற்றும் பிற நிறுவனங்களுக்குத் தேவைப்படும் வெப்ப சக்தி மற்றும் மின் சக்தியைத் தாவர எரிசக்தி வாயுக் கலன்கள் மூலம் பெறுவதற்கு புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகம் மானியம் அளிக்கிறது. இத்திட்டத்தின்கீழ் தொழிற்சாலைகள் மற்றும் இதர நிறுவனங்களில் தாவர எரிசக்தி வாயுக்கலன்கள் அமைப்பதற்குத் தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு நிறுவனம் ஊக்கம் அளித்து வருகிறது. இத்திட்டத்தின்படி, புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகம் வெப்ப சக்திப் பயன்களுக்கான கலன்களுக்கு ரூ.2.5 இலட்சம் /300 KW மானியமும், முழுவதும் வாயுவைப் பயன்படுத்தி (100 சதவீதம்) மின்சாரம் தயாரிக்கும் திட்டத்திற்கு இயந்திரங்களுக்கான ரூ.10 இலட்சம் / 100 KW வரையிலும் மானியமும் வழங்குகிறது. தற்பொழுது டீசல், உலை எண்ணெய், சமையல் எரிவாயு ஆகியவற்றைப் பயன்படுத்தி வெப்ப சக்தி பெறுவதற்குப் பதிலாக தாவர எரிசக்தி வாயுக் கலன்களை அமைக்கப் பரிந்துரை செய்யப்பட்டு வருகிறது.

தமிழ்நாட்டில் இதுவரை மொத்தம் 14 வெப்ப சக்திக் கலன்களும் (2,770 கி.வாட்) மற்றும் 9 மின் சக்திக் கலன்களும் (2,050 கி.வாட்) நிறுவப்பட்டுள்ளன.

ஊரகப் பகுதிகளில், முக்கியமாக உள்ளாட்சி அமைப்புகளில் புதுப்பிக்கத்தக்க எரிசக்தியின் பயன்பாட்டைப் பற்றி மக்களிடையே பரப்புவதில் தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமை புதிய உந்துதல் கொடுத்துள்ளது. புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகம் மொத்தம் 135 சிறிய திறன்கொண்ட (9 கி.வா.) கலன்களுக்கு ஒப்புதல் அளித்துள்ளது. அவற்றில் 64 கலன்கள் இயக்கி வைக்கப்பட்டுள்ளன. நலிவடைந்த உள்ளாட்சி அமைப்புகளில் நிறுவ, மாநில அரசு கூடுதல் மானியம் அளித்து வருகிறது.

### 3.4. கழிப்பறையுடன் இணைந்த எரிவாயுக் கலன்கள்

தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமை கழிப்பறையுடன் இணைந்த எரிவாயுக் கலன்கள் அமைப்பதை ஊக்கப்படுத்தி வருகிறது. 2003-2005ஆம் ஆண்டுகளில் மாநில அரசு 82 கலன்கள் அமைப்பதற்கு மொத்தம் ரூ.63.40 இலட்சம் வழங்கியுள்ளது. அவற்றில் 35 கலன்கள் ஒருங்கிணைந்த மகளிர் சுகாதார மையங்கள் மற்றும் 18 கல்வி நிறுவனங்களில் அமைக்கப்பட்டுள்ளன. உற்பத்தியாகும் வாயுவைக் கொண்டு நீர் இறைக்கும் பம்புகளை இயக்கி, மையங்களுக்குத் தண்ணீர் வழங்கவும் மற்றும் சில இடங்களில் சமையல் செய்யவும் பயன்படுத்தப்படுகின்றன. 2006-2007-ல் மாநில அரசு 10 கன மீட்டர் திறன் கொண்ட 20 கலன்கள் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைமூலம் நிறுவ மானியமாக ரூ.10 இலட்சம் ஒதுக்கியுள்ளது.

### 3.5. கிராம எரிசக்திக் காப்பீட்டுத் திட்டம்

மின் வசதியில்லாத தொலைதூரக் குக்கிராமங்களின் முழு எரிசக்தித் தேவைகளை அங்கே கிடைக்கும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி ஆதாரங்களைக்கொண்டு முழுமையாக நிறைவு செய்யும்விதமாக புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகம் இந்தப் புதிய திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. தமிழ்நாட்டில் 4 குக்கிராமங்களில் சோதனை முறையில் வன அலுவலர்கள்மூலம் செயல்படுத்தப்படுகின்றது. இதற்காக 90 சதவிகிதச் செலவை (ரூ.49.54 இலட்சம்) புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகம் ஏற்றுக்கொள்கிறது. மீதிச் செலவிற்கான தொகையை மாநில அரசு ஒதுக்கியுள்ளது. மத்திய அரசின் நிதி உதவிபெற்று, மேலும் பிற தொலை தூரக் குக்கிராமங்களுக்கு இத்திட்டம் விரிவுபடுத்தப்பட உள்ளது.



## 4.0. எரிசக்திச் சிக்கனம் (Energy Conservation)

எரிசக்திச் சிக்கன நடவடிக்கை, 2001-ன்கீழ் மாநில அரசிற்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் அடிப்படையில் சூரிய சுடுநீர்க் கலன், தொழிற்சாலைகளில் சூரிய சுடுகாற்றுக் கலன், விளம்பரப் பலகைகளில் விளக்கு எரிப்பதற்கு சூரிய ஒளிப் பலகைகள், குண்டு பல்புகளுக்குப் பதிலாக சிறு குழல் விளக்குகள், எரிசக்தித் திறன் மிக்க கட்டட வடிவமைப்புகள், பம்புகள்போன்றவற்றைக் கட்டாயப்படுத்தும் ஆணையை வெளியிடுவதற்கான நடவடிக்கைகளை மாநில அரசு மேற்கொண்டு வருகிறது.

## 5.0. பிற திட்டங்கள்

### 5.1. கழிவுப் பொருட்களிலிருந்து எரிவாயு மின்சாரம் தயாரித்தல்

மரவள்ளிக் கிழங்கின் கழிவு நீர், கோழி எச்சம் மற்றும் காய்கறிக் கழிவுகள் ஆகியவற்றிலிருந்து எரிவாயு மற்றும் மின்சாரம் தயாரிக்கும் திட்டங்கள் தமிழ்நாட்டில் பின்வருமாறு செயல்படுத்தப்படுகின்றன:

(அ) தருமபுரி மாவட்டம் பாப்பிரெட்டிப்பட்டியில் மரவள்ளிக் கிழங்குகளின் கழிவு நீரிலிருந்து எரிவாயு மற்றும் மின்சாரம் தயாரிக்கும் திட்டம் (500 கிலோவாட்) நிறைவுபெற்றுள்ளது.

(ஆ) நாமக்கல் மாவட்டத்தில் கோழி எச்சத்திலிருந்து மின்சாரம் தயாரிக்கும் திட்டமும் (1.5. மெகாவாட்) நிறைவேற்றப்பட்டுள்ளது. நாமக்கல் மாவட்டத்தில் 2.5 மெகாவாட் திறன்கொண்ட மேலும் ஒரு திட்டத்திற்கான பணிகள் நிறைவுபெற்றுள்ளன.

(இ) சென்னையில் கோயம்பேடு காய்கறி மொத்த விற்பனை வளாகக் காய்கறிக் கழிவுகளைக்கொண்டு மின்சாரம் தயாரிக்க மத்திய அரசு நிதி உதவி அளித்துள்ளது. சென்னைப் பெருநகர் வளர்ச்சி நிறுவனம் இத்திட்டத்தைச் செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்திற்கான பணிகள் முடிவுற்று, மின் தயாரிப்புப் பணிகள் (250 கிலோவாட்) தொடங்கிவிட்டன.

### 5.2. மின் கலத்தால் இயங்கும் வாகனங்கள்

பெட்ரோல் மற்றும் டீசல் ஆகிய எரிபொருட்களைக்கொண்டு இயங்கும் வாகனங்கள் வெளியேற்றும் நச்சுப் புகை சுற்றுப்புறத்தை மாசுபடுத்துவதைத் தவிர்க்கும் வகையில் மின்கலத்தால் இயங்கும்

வாகனங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இத்தகைய வாகனங்களைப் பயன்படுத்தும் தகுதியான நிறுவனங்களுக்கும், பிற அமைப்புகளுக்கும் மத்திய அரசு வாகன விலையில் 33 சதவிகிதம் வரை மானிய உதவி வழங்குகிறது. இவ்வாகனங்களை வனவிலங்குச் சரணாலயங்கள், சுற்றுலா முக்கியத்துவம் வாய்ந்த பகுதிகள், மருத்துவமனைகள்போன்ற இடங்களில் பயன்படுத்திச் சுற்றுப்புறச் சூழலைப் பாதுகாத்துக் கொள்ளலாம். தமிழ்நாட்டில் இதுவரை 27 வேன்கள் மற்றும் 2 மூன்று சக்கர வாகனங்களுக்கு மத்திய அரசு மானியம் வழங்கியுள்ளது.

### 5.3. விளம்பரம் மற்றும் விழிப்புணர்வுப் பணிகள்

புதுப்பிக்கத்தக்க எரிசக்தியின் பயன்பாட்டினை விரிவுபடுத்தவும், எரிசக்திச் சிக்கனத்தைத் தொழிற்சாலைகள் மற்றும் பிற நிறுவனங்களில் செயல்படுத்தவும் தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமை கருத்தரங்குகள் மற்றும் கண்காட்சிகள் நடத்துவதுடன், பிற அமைப்புகள் ஏற்பாடு செய்யும் நிகழ்ச்சிகளிலும் கலந்துகொள்கிறது. பொது மக்கள் மற்றும் குறிப்பிட்ட பயனாளிகளான தொழிற்சாலைகள், ஊராட்சிகள், அரசுசாரா நிறுவனங்கள் ஆகியவற்றிடையே புதுப்பிக்கத்தக்க எரிசக்தியின் அவசியம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தத் தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமை மாவட்ட அளவில் தீவிர விளம்பரப் பணிகளை மேற்கொண்டு வருகிறது.

புதுப்பிக்கத்தக்க எரிசக்தி ஆதாரங்கள், அவற்றால் இயங்கும் பலவிதச் சாதனங்களைப் பற்றிய விழிப்புணர்வை மாணவர்களிடையே, முக்கியமாகப் பொறியியல் கல்லூரி மாணவர்களிடையே ஏற்படுத்த புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மன்றங்கள் அமைக்க புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகம் புதியதொரு திட்டத்தை அறிமுகப்படுத்தியது. இத்திட்டத்தின்படி, ஒரு கல்லூரிக்கு ஆண்டுக்கு ரூ. 25,000 வழங்குகிறது. தமிழ்நாட்டில் இதுவரை 123 பொறியியல் கல்லூரிகளில், இத்தகைய புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மன்றங்கள் அமைக்க ரூ. 30.75 இலட்சம் அளித்துள்ளது.

### 5.4. எரிசக்திப் பூங்காக்கள்

புதுப்பிக்கத்தக்க எரிசக்திச் சாதனங்களின் பயன்பாடு குறித்து மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காகப் பல்கலைக்கழகங்கள் மற்றும் பொறியியல் கல்லூரிகளில் எரிசக்திப் பூங்கா அமைப்பதைத் தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமை ஊக்கப்படுத்தி வருகிறது. மாவட்ட அளவில் நிறுவப்படும் முதல் பூங்காவிற்கு 75 சதவீதமும், 2-வது பூங்காவிற்கு 50 சதவீதமும் மானியமாகப் புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகம் அளிக்கிறது. இதுவரை 14 கல்லூரிகளில் எரிசக்திப் பூங்காக்கள் முடிக்கப்பட்டு விட்டன. மேலும், இவ்வாறான எரிசக்திப் பூங்காக்கள் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றன. புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகம் மார்ச் 2006-ல் மாநில அளவிலான எரிசக்திப் பூங்கா அமைப்பதற்கு ரூ.89.00 இலட்சம் அளிக்க ஒப்புதல் வழங்கியுள்ளது. இதன் கட்டுமானப் பணிக்காக மாநில அரசு ஏற்கனவே வழங்கியுள்ள ரூ. 35.00 இலட்சம் நிதியுடன், 2006-2007-ல் வழங்கிய ரூ. 17 இலட்சத்துடன் சேர்த்து மொத்தம் ரூ.52 இலட்சம் வழங்கியுள்ளது. இப்பூங்காவை சென்னை கோட்டூர்புரத்திலுள்ள தமிழ்நாடு அறிவியல் மற்றும் தொழில்நுட்பவியல் மைய வளாகத்தில் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது.





### 5.5. திருத்தியமைக்கப்பட்ட ஒருங்கிணைந்த ஊரக எரிசக்தித் திட்டம்

ஒருங்கிணைந்த ஊரக எரிசக்தித் திட்டம் 21 வட்டாரங்களில் மட்டும் செயல்படுத்தப்பட்டது. இத்திட்டத்தை மத்திய அரசின் புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகம் திருத்தியமைத்ததன் பேரில் 2005-2006-ல் தமிழ்நாட்டின் 14 மாவட்டங்களில் மட்டும் செயல்படுத்த ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இதன் மொத்தச் செலவை மத்திய, மாநில அரசுகள் 50:50 என்ற சதவிகிதத்தில் ஏற்கின்றன. இத்திட்டத்திற்காக ஆகும் மொத்தச் செலவான ரூ.290.00 இலட்சத்தில் மாநில அரசின் பங்கான ரூ. 145.00 இலட்சம் ஏற்கெனவே வழங்கப்பட்டுவிட்டது. மத்திய அரசின் பங்கான ரூ. 145.00 இலட்சத்தில் ரூ.72.50 இலட்சம் மாநில அரசுமூலம் வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தை மீதமுள்ள 15 மாவட்டங்களுக்கு அரசு விரிவுபடுத்திச் செயல்படுத்த உள்ளது. இத்திட்டம் தொகுப்புக் கிராமங்களின் எரிசக்தி உறுதிப்பாடு (Energy security) சம்பந்தமான திட்டங்களைச் செயல்படுத்த ஏதுவாக இருக்கும்.

### 5.6. மலைப் பகுதி மற்றும் மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டங்களில் புதுப்பிக்கத்தக்க எரிசக்திப் பணிகள்

மலைப் பகுதி மற்றும் மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டங்களின்கீழ், புதுப்பிக்கத்தக்க எரிசக்திச் சாதனங்களான தாவர சக்தி வாயுக் கலன், சூரிய ஒளி தெரு விளக்குகள், கழிப்பறையுடன் இணைந்த எரிவாயுக் கலன்கள், எரிசக்திப் பூங்கா, காற்று ஆய்வு மையம் அமைக்க மாநில அரசு ஊக்குவித்து வருகிறது. கடந்த

இரண்டாண்டுகளில் (2004-2006), மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்திற்கு மொத்தம் ரூ.111.90 இலட்சமும் மற்றும் மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டத்திற்கு மொத்தம் ரூ.93.65 இலட்சமும் வழங்கப்பட்டுள்ளது.

2006-2007-ல் மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் நீர் வளமுள்ள இடங்களில், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் வாழும் பகுதியில் சூரிய ஒளி தெரு விளக்குகள் அமைக்க ரூ.21.34 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் வாழும் பகுதிகளில் சூரிய ஒளி தெரு விளக்குகள், வீட்டு விளக்குகள் மற்றும் மேம்படுத்தப்பட்ட மண் அடுப்புகள் (chulahs) ஆகியவற்றை அமைக்க ரூ.60.00 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

### 5.7. ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுப் பணிகள்

புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் துறையில் மூன்று ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுத் திட்டங்களை அண்ணா பல்கலைக்கழகம்மூலம் செயல்படுத்த மாநில அரசு தன் பங்காக ரூ.20.00 இலட்சம் 2005-2006-ல் வழங்கியுள்ளது. அண்ணா பல்கலைக் கழகமும் தன் பங்கிற்கு 50 சதவிகிதப் பணிச் செலவாக ரூ.20.00 இலட்சம் அளிக்கிறது. இப்பணி நடைபெற்று வருகிறது. இன்னும் 2 ஆண்டுகளில் முடிவுபெறும்.

### 5.8. தூய்மை மேம்பாட்டு இயக்கம்

தூய்மை மேம்பாட்டு இயக்கம் என்பது ஒரு புதிய மற்றும் வரவேற்கபபடும் இயக்கமாக உள்ளது. புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் திட்டங்களுக்கு இதன்மூலம் கூடுதல் வருவாய்பெறும் வாய்ப்புள்ளது. மத்திய அரசின் சுற்றுப்புறம் மற்றும் வனத் துறை அமைச்சகம் சிறிய அளவிலான தூய்மை மேம்பாட்டு இயக்கத் திட்டங்களுக்குத் தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனத்தை மாநில அளவில் சார்பு மையமாக அறிவித்துள்ளது. ஐக்கிய நாட்டு மேம்பாட்டுத் திட்டத்தின் உதவியுடன், தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனம் 3 சிறிய அளவிலான திட்டங்களுக்குத் திட்ட உரு வரைபடக் கருத்துரு தயாரித்துள்ளது. அவை, (1) தாவர மின் உற்பத்தித் திட்டம் (2) வாகனங்களில் தாவர டீசல் மற்றும் (3) குக்கிராமங்களில் கிராமக் காப்பீட்டுத் திட்டம் ஆகும். அவற்றிற்கான பயன்களை அடைவதற்கு அவற்றை மத்திய அரசின் சுற்றுப்புறம் மற்றும் வனத் துறை அமைச்சகத்திற்கு அனுப்பியுள்ளது.



### 5.9 சிறப்புப் பொருளாதார மண்டலம்

தமிழ்நாட்டில் புதுப்பிக்கத்தக்க எரிசக்திச் சாதனங்களைத் தயாரிப்பதற்காக 675 ஏக்கர் பரப்பளவில் சிறப்புப் பொருளாதார மண்டலம் அமைப்பதற்கு இந்திய அரசு இசைவு தெரிவித்துள்ளது. இந்தச் சிறப்புப் பொருளாதார மண்டலத்தில் ஐரோப்பா மற்றும் அமெரிக்கத் தனியார் முதலீட்டாளர்கள் மற்றும் இங்கிலாந்து மற்றும் அமெரிக்காவிலுள்ள தலைசிறந்த பல்கலைக்கழகங்கள், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி சார்ந்த உற்பத்தி மையங்கள் மற்றும் உலகத் தரம் வாய்ந்த தொழில்நுட்பப் பூங்கா அமைப்பதற்கும் தயாராக உள்ளன.

## 6. 2007-2008 ஆம் ஆண்டிற்கான பகுதி–2 திட்டத்தின்கீழ் புதிய திட்டங்கள் :

2007-2008 ஆம் ஆண்டில் கீழ்காணும் பகுதி-2 திட்டங்களுக்காக ரூ.59.50 இலட்சம் நிதியாக ஒதுக்க அரசு உத்தேசித்துள்ளது.

| வ.எண். | திட்டப் பணியின் விவரம் | 2007-2008 ஆம் ஆண்டிற்கான மொத்தச் செலவு (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | நுண் நீர் இயந்திரம் (5 கி.வா) | 10.00 |
| 2. | சூரிய சக்தியில் இயங்கும் அம்மைப்பால் (Vaccine) குளிர்சாதனப் பெட்டி | 10.00 |
| 3. | சூரிய சக்தி சுடுநீர் அமைப்பு மருத்துவ விடுதிகள்போன்ற அரசு நிறுவனங்களுக்காக | 10.00 |
| 4. | மின் கலத்தால் இயங்கும் வாகனங்கள் | 10.00 |
| 5. | சாதாரணக் குழல் விளக்குகளுக்குப் பதிலாக சிறு குழல் விளக்குகளுடன் தெரு விளக்குகள் | 6.50 |
| 6. | தனியார் காற்றாலைகள் மற்றும் அவற்றின் செயல்பாடுகள் பற்றிய தகவல்கள் சேகரித்தல் | 5.00 |
| 7. | அரசு மானியத்துடன் அமைக்கப்பட்ட புதுப்பிக்கத்தக்க எரிசக்திச் சாதனங்களின் செயல்பாடு மதிப்பீடு ஆய்வு செய்தல் | 8.00 |
| | மொத்தம் | 59.50 |

[2007 ஏப்ரல் 2

## தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனம்

தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிதி நிறுவனம் 27-6-1991 ஆம் தேதி அன்று நிறுவப்பட்டது. இந்நிறுவனம் பாரத ரிசர்வ் வங்கியில் வங்கிசாரா நிதி நிறுவனமாகப் பதிவு செய்யப்பட்டு உள்ளது. இந்நிறுவனத்தின் முக்கிய நோக்கமானது, தமிழ்நாடு மின் திட்டங்களுக்கு, குறிப்பாக மின் உற்பத்தி, மின் பங்கீடு மற்றும் மின் விநியோகத் திட்டங்களுக்குத் தேவையான நிதியைத் திரட்டுவதாகும். இந்நிறுவனத்தின் அனுமதிக்கப்பட்ட மூலதனம் ரூ.50 கோடியாகும். இதில் செலுத்தப்பட்ட மூலதனம் ரூ.22 கோடி.

### வைப்பீட்டுத் தொகைகள்

இந்நிறுவனம் வைப்பீட்டாளர்களுக்குப் பரிவோடு சிறந்த சேவை புரிந்தும், தொடர்ந்து இலாபம் ஈட்டியும், வைப்பீட்டுத் தொகையை அதிகரித்ததோடு மட்டுமின்றி, வைப்பீட்டாளர்களின் மனதில் நிலையான இடத்தையும் பெற்றுள்ளது. இதன் பயனாக, 1991-1992 ஆம் ஆண்டில் ரூ.2.09 கோடியாக இருந்த வைப்பீட்டுத் தொகை 28-2-2007 அன்று ரூ.2,107.89 கோடியாக வளர்ந்துள்ளது. அதேபோன்று 1991-1992 ஆம் ஆண்டில் 816 ஆக இருந்த வைப்பீட்டாளர்களின் எண்ணிக்கை 28-2-2007 அன்று 2,12,827 ஆக வளர்ந்துள்ளது.

### கடனுதவி

இந்நிறுவனத்தால் திரட்டப்படுகின்ற நிதி தமிழ்நாடு மின் வாரியத்தின் மின் உற்பத்தி / மின் பங்கீடு மற்றும் மின் விநியோகத் திட்டங்களுக்குக் கடனாக அளிக்கப்பட்டு வருகிறது. இந்நிறுவனம் தொடங்கிய நாள் முதல் ரூ.6,051 கோடியைத் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்குக் கடனாக அளித்துள்ளது. இதில் 28-2-2007 அன்று நிலுவையில் உள்ள நிகரக் கடன்தொகை ரூ. 2,341.94 கோடியாகும். மேலும், இந்நிறுவனம் பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகம் மற்றும் தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனம் மற்றும் தமிழ்நாடு தொழில் மேம்பாட்டு நிறுவனம் ஆகியவற்றிற்கும் ரூ.109.50 கோடி கடனாக அளித்துள்ளது.

### அரசுத் திட்டங்கள் செயலாக்கம்

சிவகாமி அம்மையார் நினைவு பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் இந்நிறுவனம் இதுவரை ரூ.237.15 கோடியை வைப்பீட்டுத் தொகையாக 1,55,814 குழந்தைகளுக்காகப் பெற்றுள்ளது.



2007 ஏப்ரல் 2]

திருக்கோயில்களின் ஒரு கால பூஜைத் திட்டத்தின்கீழ் ரூ.25.51 கோடியை 10,202 திருக்கோயில்களிடமிருந்து இந்நிறுவனம் வைப்பீட்டுத் தொகையாகப் பெற்றுள்ளது.

பள்ளி மாணவ, மாணவியரின் வருவாய் ஈட்டும் தாய் அல்லது தந்தை விபத்தில் இறந்துவிட்டாலோ அல்லது நிரந்தர முடக்கம் அடைந்தாலோ, அவர்களது கல்வி மற்றும் பராமரிப்புக்காக நிதி வழங்கும் திட்டத்தின்கீழ் ரூ.1 கோடி வைப்பீட்டு நிதியாகப் பெற்றுள்ளது.

சுனாமியில் பாதிக்கப்பட்ட 222 ஆதரவற்ற குழந்தைகள், பெண்கள் மற்றும் திருமணம் ஆகாத வளரிளம் பெண்களின் பெயரில் வைப்பீடு செய்ய அரசிடமிருந்து ரூ.7.37 கோடியை வைப்பீட்டு நிதியாக பெற்றுள்ளது.

இந்நிறுவனம் துவக்கத்தில் இருந்து தொடர்ந்து இலாபம் ஈட்டி வருகிறது. செலுத்தப்பட்ட மூலதனத்தில் 20 விழுக்காடு ஈவுத் தொகையாகப் பத்து ஆண்டுகளாக, கடந்த 1995-1996 ஆம் ஆண்டு முதல் தொடர்ந்து அரசிற்கு வழங்கி வருகிறது. 2005-2006 நிதியாண்டு வரை இந்நிறுவனம் ஈவுத் தொகையாக மொத்தம் ரூ.43.22 கோடியைத் தமிழ்நாடு அரசுக்கு வழங்கி உள்ளது.

### எதிர்காலத் திட்டங்கள்

1. 2007-2008 நிதியாண்டில் ரூ.180 கோடியை நிகர வைப்பீட்டுத் தொகையாகப் பொது மக்கள் மற்றும் நிறுவனங்களிடமிருந்து திரட்டத் திட்டமிட்டுள்ளது.

2. 2007-2008 நிதியாண்டில் எரிசக்தி மற்றும் அடிப்படைக் கட்டுமானத் திட்டங்களுக்கு ரூ.900 கோடியைத் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்குக் கடனாக வழங்கத் திட்டமிட்டுள்ளது.

3. மேற்படி நிதியாண்டில் மேலும் ரூ.50 கோடியைத் இதர நிறுவனங்களுக்கு வழங்கத் திட்டமிட்டுள்ளது.

# இணைப்பு II

*(120 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க)*

## மானியக் கோரிக்கை எண் 35-பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு, 2007-2008

பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை 1976 ஆம் ஆண்டு நவம்பர் 6 ஆம் நாளில், 1973 ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட மாநில நிருவாகச் சீர்திருத்த ஆணையத்தின் பரிந்துரையின்பேரில் தோற்றுவிக்கப்பட்டது. அரசின் செயல்பாடுகளில் ஏற்பட்ட வளர்ச்சியின் காரணமாகவும், அரசுப் பணியாளர்களின் எண்ணிக்கை அதிகமானதாலும் இத்துறை ஏற்படுத்தப்பட்டது. இத்துறை பின்வரும் இரண்டு அலகுகளைக் கொண்டுள்ளது. ஒவ்வொரு அலகும் தனித் தனிச் செயலாளர்களின் நிருவாகக் கட்டுப்பாட்டின்கீழ் இயங்குகிறது.

(i) பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை

(ii) பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (பயிற்சி) துறை

2. இத்துறையானது, அறிவுரை வழங்கும் பணிகள், சட்டபூர்வமான பணிகள் மற்றும் நிருவாகப் பணிகள் ஆகிய முக்கியப் பணிகளை ஆற்றி வருகிறது.

### 3. அறிவுரை வழங்கும் பணிகள்

**"தமிழ்நாடு அரசு அலுவல் விதிகள் மற்றும் தலைமைச் செயலக அறிவுறுத்தல்கள்"** ஆகியவற்றில் வரையறுக்கப்பட்டுள்ளபடி கீழ்க்கண்ட இனங்கள் தொடர்பாக அறிவுரை வழங்கும் ஒரு துறையாகப் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை செயல்பட்டு வருகிறது:

(i) தமிழ்நாடு மாநில மற்றும் சார்நிலைப் பணிகளின்கீழ் வரும் பல்வேறு பதவிகளுக்குக் காலியிட மதிப்பீட்டை நிர்ணயம் செய்தல், பதவி உயர்வு மற்றும் உயர் பதவியில் பணி நியமனம் ஆகியவற்றுக்கான தேர்ந்த பட்டியல் தயாரித்தல்.

(ii) அரசு அலுவலர்களின் பணியை வரன்முறைப்படுத்துதல் மற்றும் தகுதிகாண் பருவத்தினை முடித்தல் தொடர்பாகச் சிறப்பு/



பொது விதிகளைத் தளர்த்துவது பற்றிய கருத்துருக்களைப் பரிசீலனை செய்தல்

(iii) அடிப்படை விதிகளில் உள்ள பல்வேறுபட்ட காப்புரைகள் குறித்த ஆலோசனை வழங்குதல்.

(iv) தமிழ்நாடு மாநில மற்றும் சார்நிலைப் பணி பொது விதி 35-ன்கீழ் முதுநிலையைத் திருத்துவது குறித்த கருத்துருக்களை ஆய்வு செய்தல்.

(v) அரசுப் பணியில் நியமனம் செய்ய வரையறுக்கப்பட்ட கல்வித் தகுதிக்குச் சமமான கல்வித் தகுதி நிர்ணயித்தல்/அங்கீகரித்தல் குறித்த கருத்துருக்களைத் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் அமைக்கப்படும் 'அங்கீகரிப்புக் குழு' முன் வைத்தல் மற்றும் மேற்படி குழுவின் பரிந்துரையின்பேரில் ஆணை வெளியிடல்.

### 4. சட்டபூர்வமான பணிகள்

அரசுப் பணியாளர்களின் பணிகள் தொடர்பாகப் பின்வரும் சட்டமுறை மற்றும் ஒழுங்குமுறை விதிகளை இத்துறை நிருவகித்து வருகிறது:—

(அ) மாநில அரசின் பல்வேறு துறைகளில் பணிபுரியும் அனைத்து வகை அரசுப் பணியாளர்களின் பணியினை முறைப்படுத்தும் பணி விதிகள் (அகில இந்தியப் பணிகள் நீங்கலாக);

(i) தமிழ்நாடு மாநில மற்றும் சார்நிலைப் பணி விதிகள் (பகுதிகள் I மற்றும் II);

(ii) தமிழ்நாடு அரசுப் பணியாளர் நடத்தை விதிகள், 1973;

(iii) தமிழ்நாடு அரசு அடிப்படை விதிகள்;

(iv) தமிழ்நாடு குடிமைப் பணிகள் (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) விதிகள்;

(v) தமிழ்நாடு குடிமைப் பணிகள் (ஒழுங்கு நடவடிக்கைகள் தீர்ப்பாயம்) விதிகள், 1955;

(ஆ) அனைத்து அரசுத் துறைகளுக்கும் உள்ள பொதுவான சில குறிப்பிட்ட பணியாளர் வகையினரை முறைப்படுத்தும் பணி விதிகள்:—

(i) தமிழ்நாடு அமைச்சுப் பணி சிறப்பு விதிகள்

(ii) தமிழ்நாடு அடிப்படைப் பணி சிறப்பு விதிகள்

(iii) தமிழ்நாடு பொது சார்நிலைப் பணி சிறப்பு விதிகள்— இனம் XXIL.

(இ) தலைமைச் செயலகப் பணி:—

(i) தமிழ்நாடு தலைமைச் செயலகப் பணி சிறப்பு விதிகள்

(ii) தமிழ்நாடு பொதுப் பணி சிறப்பு விதிகள்— இனம் XII மற்றும் XII-A

(ஈ) தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் (TNPSC)—

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய ஒழுங்குமுறை விதிகள், 1954.

(உ) தகவல்பெறும் உரிமைச் சட்டம், 2005—

தமிழ்நாடு தகவல்பெறும் உரிமை (கட்டண) விதிகள், 2005.

## 5. அரசு அலுவல்கள்

தலைமைச் செயலகத்தில் தமிழ்நாடு அரசின் அலுவல்கள் பின்வரும் விதிகளின்படி இத்துறையின்கீழ் நிருவகிக்கப்பட்டு வருகின்றன—

(i) தமிழ்நாடு அரசு அலுவல் விதிகள் மற்றும் தலைமைச் செயலக அறிவுறுத்தல்கள்;

(ii) அவ்வப்போது வெளியிடப்படும் மாண்புமிகு முதலமைச்சரின் நிலை ஆணைகள்;

(iii) தமிழ்நாடு தலைமைச் செயலக அலுவலகக் கையேடு.

## 6. நிருவாகப் பணிகள்

தலைமைச் செயலகத்தில் ஓர் அலகு முறையின் (One Unit System) கீழ் வரும் அரசு சார்புச் செயலாளர்களின் நிலை வரை அனைத்துப் பணியாளர்களின் பணி அமைப்பு குறித்தும் இத்துறையில் கவனிக்கப்பட்டு வருகிறது. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மற்றும் தமிழ்நாடு மாநிலத் தகவல் ஆணையம்





ஆகியவை இத்துறையின் நிருவாகக் கட்டுப்பாட்டின்கீழ் இயங்கி வருகின்றன.

## 7. பணியாளர் சங்கங்கள்

பணியாளர் சங்கங்களுக்கு அங்கீகாரம் அளித்தல் மற்றும் அவற்றின் கூட்டமைப்பு மன்றக் கூட்டங்களை நடத்துவது ஆகியவை இத்துறையின் பொறுப்பாகும்.

## 8. அரசு ஊழியர் மற்றும் ஆசிரியர்களுடன் நல்லுறவு

அரசின் நிதிப் பற்றாக்குறையால் அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்கள் பெற்று வந்த பல சலுகைகள் மற்றும் ஓய்வூதியப் பயன்கள் முந்தைய அரசால் பறிக்கப்பட்டன. இந்த அரசு பொறுப்பேற்றவுடன் முந்தைய அரசால் பறிக்கப்பட்ட சலுகைகள் மற்றும் ஓய்வூதியப் பயன்களை மீண்டும் வழங்கியதுடன், கூடுதலாகப் பல சலுகைகளையும் வழங்கி, பின்வரும் அரசாணைகளை வெளியிட்டுள்ளது:—

1. 7-6-2006 நாளிட்ட தமிழ்நாடு அரசிதழ் அறிவிக்கைமூலம் தமிழ்நாடு அத்தியாவசியப் பணிகள் பராமரிப்புச் சட்டம், 2003 (டெஸ்மா) திரும்பப் பெறப்பட்டது. (இரத்துச் செய்யப்பட்டது)

2. முந்தைய அரசு, அரசுப் பணிக்குப் புதிய நியமனங்கள் செய்வதற்குத் தடை விதித்திருந்தது. தொடர்ந்து தடையாணை நீக்கப்பட்ட பின்பு, இந்தத் தடையாணையால் அக்காலக் கட்டத்தில் விண்ணப்பிக்க வாய்ப்பின்றி பாதிக்கப்பட்டு, காத்துக் கிடந்த இளைஞர்களுக்குத் தற்போது அந்த வாய்ப்பு அளித்திட, அரசுப் பணியில் சேர நிர்ணயிக்கப்பட்ட வயது உச்சவரம்பினை மேலும் 5 ஆண்டுகள் உயர்த்தி இந்த அரசு பொறுப்பேற்றவுடன் ஆணை வெளியிட்டது.

3. அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்கள் போராட்டத்தில் ஈடுபட்ட 10-4-2003 மற்றும் 1-7-2003 அல்லது 2-7-2003 முதல் 4-7-2003 வரையிலான நாட்கள் பணிக் காலமாக ஏற்று ஆணை வெளியிடப்பட்டது.

4. அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்கள் பொது வேலை நிறுத்தத்தில் ஈடுபட்ட 23-10-2002 முதல் 1-11-2002 வரையான காலம் பணிக் காலமாக ஏற்று ஆணை வெளியிடப்பட்டது.

5. தலைமைச் செயலகத்தில் அரசு ஊழியர்கள் மாலை நேரத்தில் வருகைப் பதிவேட்டில் கையொப்பம் இடும் முறையை முந்தைய அரசு புகுத்தி இருந்தது. இதனை இந்த அரசு இரத்துச் செய்து ஆணை வெளியிட்டுள்ளது.

6. அரசு ஊழியர்கள் முழுமையான ஓய்வூதியம்பெறத் தகுதியுள்ள பணிக் காலம் 33 ஆண்டுகளிலிருந்து 30 ஆண்டுகளாக மீண்டும் குறைக்கப்பட்டது.

7. கடைசி 10 மாதப் பணிக் கால அளவில் பெற்ற சராசரி ஊதியத்தின் அடிப்படையிலேயே ஓய்வூதியம் கணக்கிடப்பட வேண்டும் என்று இருந்த நிலையை மாற்றி, கடைசியாகப் பெற்ற ஊதியத்தில் 50 சதவிகிதம் அல்லது கடைசி 10 மாதப் பணிக் கால அளவில் பெற்ற சராசரி ஊதியத்தில் 50 சதவிகிதம், இவற்றில் எது அதிகமோ, அதன் அடிப்படையில் 31-7-2006 முதல் ஓய்வூதியக் கணக்கீடு செய்ய ஆணையிடப்பட்டுள்ளது.

8. அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்கள் ஆண்டு ஒன்றுக்கு 15 நாட்கள் அல்லது இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை 30 நாட்கள் என ஈட்டிய விடுப்பு சரண் செய்து பணமாக்கிக்கொள்ளும் சலுகை 1980 முதல் நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டது. இச்சலுகை 2001 ஆம் ஆண்டிலிருந்து முந்தைய அரசினால் நிறுத்தி வைக்கப்பட்டது. பின்னர்,

(i) 21-10-2004 முதல் ஆண்டு ஒன்றுக்கு ஏழு நாட்கள் மட்டுமே ஈட்டிய விடுப்பு சரண் செய்ய அனுமதிக்கப்பட்டது.

(ii) 8-2-2006 முதல் 15 நாட்கள் ஈட்டிய விடுப்பு சரண் செய்து பணமாக்கிக்கொள்ளும் முறை நடைமுறைப் படுத்தப்பட்டது.

(iii) முந்தைய அரசினால் பறிக்கப்பட்டிருந்த இரண்டு ஆண்டுக்கு ஒரு முறை 30 நாட்கள் சரண் செய்யும் சலுகை மீண்டும் வழங்கப்பட்டு, தற்போது ஆணை வெளியிடப்பட்டது.

9. ஆண்டுதோறும் பொங்கல் பண்டிகையின்போது வழங்கப்பட்டு வந்த பொங்கல் போனஸ்/கருணைத் தொகையை முந்தைய அரசு 2002 ஆம் ஆண்டிலிருந்து இரத்துச் செய்து இருந்தது. இந்த அரசு பொறுப்பேற்ற பின்பு இந்த ஆண்டு (2006-2007) பொங்கல் போனஸ்/கருணைத் தொகை வழங்கப்பட்டது.





10. பணியிலிருக்கும்போது இறந்த அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களின் வாரிசுகளுக்கு அவர்களின் கல்வித் தகுதிக்கேற்பக் கருணை அடிப்படையில் தொகுதி 'சி' மற்றும் 'டி' பணியிடங்களில் அரசுப் பணி நியமனங்கள் வழங்க ஆணையிடப்பட்டது.

11. வேலைநிறுத்தக் காலத்தில் இறந்த அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்கள் மற்றும் வேலையிலிருந்து நீக்கப்பட்டிருந்த காலத்தில் இறந்த சாலைப் பணியாளர்களின் வாரிசுகளுக்கு முன்னுரிமை அளித்து, கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்க ஆணை வெளியிடப்பட்டது.

12. தமிழ்நாடு மாநில மற்றும் சார்நிலைப் பணிகளின் பொது விதி அல்லது சிறப்பு விதிகளில் குறிப்பிடப்படவில்லை என்றாலும், ஒரு பணித் தொகுப்பின் வகை அல்லது வகுப்பில் பணிபுரியும் அரசுப் பணியாளர்களை அப்பதவிக்கு இணையான வேறொரு பணித் தொகுப்பில் உள்ள வகை அல்லது வகுப்பினைச் சார்ந்த பணியிடங்களுக்குப் பொது நலன் கருதி அல்லது நிருவாகக் காரணங்களுக்காக மாநில அரசு மாறுதல் செய்யலாம் என்ற முந்தைய அரசின் ஆணையை இரத்துச் செய்து, ஆணை வெளியிடப்பட்டது.

13. அரசுப் பணிகளில் புதிய நியமனங்கள் செய்ய விதிக்கப்பட்ட தடைகள் நீக்கப்பட்டதைத் தொடர்ந்து, நியமனங்கள் செய்யத் தகுந்த அறிவுரைகள் வழங்கி, தேவையான அரசாணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

14. அரசால் ஏற்பளிக்கப்பட்ட தனியார் மருத்துவமனைகளில் உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டு சிகிச்சைபெறும் அரசுப் பணியாளர்களுக்குத் தனியார் மருத்துவமனைகளில் உள்ள மருத்துவ அதிகாரியிடமிருந்து பெறப்படும் மருத்துவச் சான்றிதழ் மற்றும் மருத்துவ அறிக்கையின்பேரில் ஈட்டா விடுப்பு வழங்குவதற்கு அவர்களை மருத்துவக் குழு பரிந்துரைக்கு அனுப்பத் தேவையில்லை என அரசு ஆணையிட்டுள்ளது.

15. 28-2-2006 முதல் 31-1-2007 வரையுள்ள காலத்தில் பணியிலிருந்து ஓய்வுபெற்ற அரசு ஊழியர் மற்றும் ஆசிரியர்கள் தங்களுடைய ஈட்டிய விடுப்பில் 15 நாட்களைச் சரண் செய்து பணம் பெற்றுக்கொள்ளும் வசதியை மீண்டும் வழங்கி இவ்வரசு ஆணையிட்டுள்ளது.

[2007 ஏப்ரல் 2

16. ஐந்தாவது ஊதியக் குழுவின் நிலுவைத் தொகையில் 60 சதவிகிதம் ஊழியர்களுக்கு வழங்கப்படாமல் நிறுத்தி வைக்கப்பட்டு இருந்தது. இதனை மாற்றி, இந்த நிலுவைத் தொகை 2006-2007 ஆம் ஆண்டுத் தொடக்கத்திலிருந்து மூன்று சம ஆண்டுத் தவணைகளில் ரொக்கமாக வழங்கப்பட அரசாணை வெளியிடப்பட்டது.

17. இந்த அரசு பொதுச் சுகாதாரத் துறை அலுவலர் சங்கத்திற்கு (தொழுநோய்) அங்கீகாரம் வழங்கி ஆணை வெளியிட்டுள்ளது.

II. இந்த அரசு பொறுப்பேற்றபின், அரசு ஊழியர் மற்றும் ஆசிரியர்களின் நலத்தினைக் கருத்தில்கொண்டு, மாண்புமிகு அமைச்சர் (மின்சாரம்) அவர்கள் முதற்கட்டமாகத் தலைமைச் செயலக வளாகத்தில் இயங்கும் அரசு அங்கீகாரம்பெற்ற தமிழ்நாடு தலைமைச் செயலகச் சங்கம், தமிழ்நாடு தலைமைச் செயலக அலுவலர்கள் சங்கம், தமிழ்நாடு சட்டமன்றச் செயலக நிருபர்கள் சங்கம், தமிழ்நாடு அரசுத் தலைமைச் செயலக ஊர்தி ஓட்டுநர்கள் சங்கம் மற்றும் தமிழ்நாடு அரசு அலுவலக உதவியாளர்கள் மற்றும் அடிப்படைப் பணியாளர்கள் கிளைச் சங்கங்களின் நிர்வாகிகளுடன் பல்வேறு கோரிக்கைகள் குறித்துக் கலந்துரையாடல் செய்ததைத் தொடர்ந்து, அவற்றை விரைவில் நடைமுறைப்படுத்த தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**அரசு அலுவலர்கள், ஆசிரியர்கள் மற்றும் ஓய்வூதியர்கள் நலன் குறித்து 2007-2008 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்ட சலுகைகள்:-**

(1) அகவிலைப் படி தற்போதுள்ள 29 சதவிகிதத்தோடு, கூடுதலாக 6 சதவிகிதம் உயர்த்தப்பட்டு, மொத்த அகவிலைப் படி 35 சதவிகிதமாக 1-1-2007 முதல் வழங்கப்படுவதோடு, இந்த அகவிலைப் படி உயர்வு நிலுவைத் தொகையும் ரொக்கமாக வழங்கப்படும்.

(2) 1-4-2003 முதல் 30-7-2006 வரை ஓய்வுபெற்றவர்களும் முழு ஓய்வூதியம்பெற வேண்டி, பணிக் கால வரம்பு 30 ஆண்டுகள் எனவும், ஓய்வுபெறுவதற்கு முன்பு கடைசி மாதத்தில் பெற்ற அடிப்படை ஊதியத்தில் 50 விழுக்காடு அல்லது ஓய்வுபெறுவதற்கு முன்புள்ள 10 மாத சராசரி ஊதியத்தின் 50 விழுக்காடு ஆகியவற்றில் எது அதிகமோ, அதன் அடிப்படையில் ஓய்வூதியம் கணக்கிடப்பட்டு வழங்கப்படும்.



2007 ஏப்ரல் 2]

(3) தற்போது வழங்கப்பட்டு வரும் பண்டிகை முன்பணத் தொகை ரூ. 1,000 வரும் நிதியாண்டிலிருந்து ரூ. 2,000 ஆக இரு மடங்கு உயர்த்தி வழங்கப்படும்.

(4) 1-12-2001 முதல் குறைக்கப்பட்ட, அரசு அலுவலர்கள் பணிநிமித்தமாகவும், விடுமுறைக் காலப் பயணச் சலுகைகளைப் பயன்படுத்தியும் பயணம் செய்வதற்கான தகுதி வரம்புகள் 1-12-2001-க்கு முன்பிருந்த நிலைக்கே மீண்டும் கொண்டு வரப்படும்.

## 9. மாநில நிருவாகச் சீர்திருத்தக் குழு

வெளிப்படையான மற்றும் ஊழலற்ற நிருவாகத்தினை அளிப்பதற்கு இந்த அரசு உறுதி பூண்டுள்ளதை மெய்ப்பிக்கும் வகையில் சென்னை உயர் நீதிமன்றத்தின் ஓய்வுபெற்ற நீதிபதி, நீதியரசர் திரு. ஏ.கே. இராஜன் அவர்கள் தலைமையில் கீழ்க்கண்ட பல துறைகளின் வல்லுனர்களான பத்து உறுப்பினர்கள் மற்றும் ஒரு உறுப்பினர்-செயலாளர் அடங்கிய மாநில நிருவாகச் சீர்திருத்தக் குழு ஒன்றினை அமைத்துள்ளது:—

1. திரு. வ. விசுவநாதன், ஐ.ஏ.எஸ்., (ஓய்வு)
2. திரு. எஸ். குமாரசாமி, ஐ.பி.எஸ்., (ஓய்வு)
3. திரு. எஸ். சண்முகசுந்தரம், ஐ.எஃப்.எஸ்., (ஓய்வு)
4. திரு. ஆர்.எஸ். பாரதி, பி.ஏ., பி.எல்.,
   நகர்மன்றத் தலைவர், ஆலந்தூர் நகராட்சி.
5. முனைவர் திரு. பொன்னவைக்கோ,
   முன்னாள் இயக்குனர், உலகத் தமிழ் இணையப் பல்கலைக் கழகம்.
6. டாக்டர். என். கல்யாணசுந்தரம்,
   முன்னாள் இயக்குநர், மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள்.
7. முனைவர் கே.பி. சுப்பிரமணியன்,
   முன்னாள் உதவி இயக்குனர், நகர் மற்றும் ஊரமைப்பு.
8. திரு. எ. முத்துகிருஷ்ணன், எம்.ஏ., பி.எட்.,
   முன்னாள் இயக்குனர், பள்ளிக் கல்வி.
9. திரு. ஆர். பன்னீர்செல்வம், பி.ஏ.,
   மாவட்ட வருவாய் அலுவலர் (ஓய்வு).
10. திருமதி அம்புஜம் துரை, எம்.எஸ்ஸி., எம்.எட்., எம்.பில்.,

[2007 ஏப்ரல் 2

**உறுப்பினர்-செயலாளர்**

முனைவர் வி. சந்திரன்,
இயக்குனர் (தமிழ்ப் பிரிவு). சட்டத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9.

இக்குழு அன்றாட வாழ்வில் பொது மக்கள் அணுகும் அலுவலகங்களில் நிலவும் காலதாமதம் மற்றும் ஊழலுக்கு அடிப்படைக் காரணமான சிகப்பு நாடா முறையினை (Red tapism) அகற்றிடவும் மற்றும் அலுவலக நடைமுறையினை எளிமைப்படுத்தவும் பரிந்துரை செய்யும்.

## 10. மக்கள் சாசனம்

ஒவ்வொரு துறையிலும் மக்கள் சாசனத்தை உருவாக்க வேண்டுமென்று அரசு ஆணை வெளியிடப்பட்டுள்ளது. மக்கள் சாசனம் என்பது மக்களுக்கு அளிக்கப்படும் சேவைகள் குறித்து மக்களுடைய கேள்விகட்குப் பதில் சொல்லும் பொறுப்பையும், அதில் ஒளிவுமறைவற்ற தன்மையையும் உறுதி செய்ய வேண்டும். பொது மக்கள் தங்கள் உரிமைகள் பற்றி அறிந்துகொள்வதற்கான விழிப்புணர்வையும் மற்றும் தங்களுக்கு வழங்கப்படும் சேவைகளின் தரங்களை அறிந்துகொள்ளும் நிலையையும் அதிகரிக்கச் செய்ய வேண்டும். மேலும், அத்துறையின் திட்டப் பணிகளுக்கு அடிப்படையாக உள்ள சிறந்த பொதுப் பணிக் கோட்பாடுகளைக் காலத்திற்கேற்றவாறு உருவாக்கவும் சம்பந்தப்பட்ட துறைக்கு மக்கள் சாசனம் உதவுகிறது.

2. மக்கள் சாசனத்தைத் தயாரிப்பதற்கான கோட்பாடுகளை உள்ளடக்கி 'கையேடு' ஒன்று தயாரித்து அனைத்துத் துறைகளுக்கும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறையினால் அனுப்பப்பட்டுள்ளது. தலைமைச் செயலகத்தில் உள்ள அனைத்துத் துறைகளும் (விலக்களிக்கப்பட்ட ஐந்து துறைகள் தவிர) மற்றும் சில அரசு நிறுவனங்களும் மக்கள் சாசனத்தைத் தயாரித்து, அவைகளைச் சட்டமன்றப் பேரவைமுன் வைத்துள்ளன. பொது மக்களுடன் நேர்முகத் தொடர்பு இல்லாத காரணத்தினால் மக்கள் சாசனத்தைத் தயாரிப்பதிலிருந்து கீழ்க்கண்ட ஐந்து துறைகளுக்கு விலக்களிக்கப்பட்டுள்ளது:—

(i) பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை

(ii) திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை



2007 ஏப்ரல் 2]

(iii) மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை

(iv) பொதுத் துறை

(v) சட்டத் துறை

3. அனைத்து மக்கள் சாசனங்களும் www.tn.gov.in. (NICNET/INTERNET) இணைய தளத்திலும் வெளியிடப்பட்டுள்ளன.

இவ்விணைய தளம் தலைமைச் செயலகத் துறைகள்/துறைத் தலைமை அலுவலகங்கள் /தமிழ்நாடு அரசின் கீழ் உள்ள வாரியங்கள்/கழகங்கள் ஆகியவை தயாரிக்கும் மக்கள் சாசனத்தையும் உள்ளடக்கியதாகும்.

## 11. தகவல் மற்றும் சேவை மையம்

அனைத்துத் தலைமைச் செயலகத் துறைகளுக்கும், மாவட்ட ஆட்சியர்களுக்கும், அரசு நடைமுறைகளை மக்கள் புரிந்துகொள்ளவும், தங்கள் கோரிக்கைகளின் தற்போதைய நிலையைத் தெரிந்து கொள்ளவும் தகவல் மற்றும் சேவை மையம் திறக்கப்பட வேண்டுமென்று அறிவுறுத்தப்பட்டுள்ளது. அரசின் ஆணைக்கேற்பத் தகவல் மையங்கள் மாவட்ட ஆட்சியர் மற்றும் துறைத் தலைமை அலுவலகங்களில் இயங்கி வருகின்றன.

## 12. மின் ஆளுகை

ஒளிவுமறைவுற்ற, சிறந்த நிருவாகத்திற்கு மின் ஆளுகையை உரிய அளவுக்குப் பயன்படுத்த இத்துறையில் முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இது தொடர்பாக அனைத்துச் சட்டங்களும், விதிகளும் www.tn.gov.in தேசிய தகவல் மையத்தின் அரசு வலை தளத்தில் (National Informatics Centre) உதவியுடன் வெளியிடப்பட்டுள்ளன.

2. இத்துறையால் வெளியிடப்பட்ட அனைத்து அரசாணைகளையும் உள்ளடக்கிய மின்னணுவியல் தொகுப்பு (Compendium) இன்றைய நிலைக்கேற்ப உருவாக்கப்பட்டு, கணினிக் குறுந்தகடுகளில் பதிவு செய்யப்படும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

3. சட்டங்களிலும், விதிகளிலும் அவ்வப்போது செய்யப்படும் திருத்தங்கள், மின்னணுவியல் தொகுப்பில் பதிவு செய்யப்பட்டு வருகின்றன.

[2007 ஏப்ரல் 2

4. தலைமைச் செயலகத்தில் பணிபுரியும் இந்திய ஆட்சிப் பணி சாராத கூடுதல் செயலாளர்கள், இணைச் செயலாளர்கள், துணைச் செயலாளர்கள், சார்புச் செயலாளர்கள் ஆகியவர்களின் பணியாளர் தொகுதிப் பட்டியல் 31-12-2006 அன்றுள்ளபடி வெளியிடப்பட்டுள்ளன. பிரிவு அலுவலர்கள், தனிச் செயலாளர்கள், நேர்முக உதவியாளர்கள், உதவிப் பிரிவு அலுவலர்கள், நேர்முக எழுத்தர்கள், உதவியாளர்கள் மற்றும் தட்டச்சர்கள் ஆகியவர்களின் கணினிமயமாக்கப்பட்டுள்ள பணியாளர் தொகுதிப் பட்டியல்களை வெளியிடுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றன.

5. இத்துறையில் "மின்னணு முறையில் கோப்புகளைக் கையாள்வது" என்ற முறையில் ஒரு பகுதியாக 1-2-2007 அன்று முதல் கணினிமயமாக்கப்பட்ட தபால் பகிர்வு மையம் ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது.

6. மேற்குறிப்பிட்ட மின்னணு முறைகள் இத்துறையில் முன்னோடித் திட்டமாக அறிமுகப்படுத்தப்படவுள்ள தலைமைச் செயலகத் திறன் முறையின் (Secretariat Knowledge System) ஒரு பகுதியாகும்.

## 13. தகவல்பெறும் உரிமைச் சட்டம், 2005

தகவல் பெறும் உரிமையானது ஒரு சனநாயக நாட்டிலுள்ள மக்களின் அடிப்படை உரிமையாகும். 2005 ஆம் ஆண்டு தகவல் பெறும் உரிமைச் சட்டம் 15-6-2005 அன்று இந்தியக் குடியரசுத் தலைவர் அவர்களின் ஒப்புதலைப்பெற்று, 12-10-2005 முதல் செயலுக்கு வந்தது. அரசின் செயல்பாட்டில் வெளிப்படையான தன்மையையும், பொறுப்புடைமையையும் மேம்படுத்தும்பொருட்டு, மக்களுக்குத் தேவைப்படும் தகவல்களை அவர்களுக்குப் பொது அதிகாரிகளின்மூலம் அளிப்பது இச்சட்டத்தின் நோக்கமாகும்.

2. இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 19 ஆம் பிரிவின்கீழ் அடிப்படை உரிமையாக, அரசாங்கம், நாடாளுமன்றம் மற்றும் சட்டமன்றப் பேரவைகள், நீதிமன்றங்களிலிருந்தும் மக்கள் தகவலைப் பெறுவதற்கு இச்சட்டம் வகை செய்கிறது. இந்தியாவிலேயே தமிழ்நாடு முதன்மை மாநிலமாக, தமிழ்நாடு 1997 ஆம் ஆண்டு தகவல்பெறும் உரிமைச் சட்டத்தை இயற்றியது. 2005 ஆம் ஆண்டு தகவல்பெறும் உரிமைச் சட்டம் இயற்றப்பட்ட பிறகு, இச்சட்டம் தமிழ்நாடு 1997 ஆம் ஆண்டு தகவல்பெறும் உரிமைச் சட்டத்தைவிட மேலோங்கி நிற்கும்.



2007 ஏப்ரல் 2]

3. மைய அரசு, இச்சட்டத்தின்படி அதற்கு வழங்கப்பட்ட அதிகாரங்களைச் செலுத்தவும், குறித்தளிக்கப்பட்ட செயற்பணிகளை ஆற்றவும் மையத் தகவல் ஆணையத்தை அமைத்துள்ளது. அதுபோன்று தமிழக அரசும் இச்சட்டத்தின்படி அதற்கு வழங்கப்பட்ட அதிகாரங்களைச் செலுத்தவும், குறித்தளிக்கப்பட்ட செயற்பணிகளை ஆற்றவும் தமிழ்நாடு மாநிலத் தகவல் ஆணையத்தை அமைத்துள்ளது. மைய மற்றும் மாநிலத் தகவல் ஆணையங்களுக்குரிய அதிகாரங்களும் மற்றும் பதவிப் பணிகளும் இச்சட்டத்தின் அத்தியாயம் V-ல் கொடுக்கப்பட்டுள்ளன. இவ்வாணையத்தில் மாநிலத் தலைமை தகவல் ஆணையர் ஒருவரும், இரு மாநிலத் தகவல் ஆணையர்களும் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். இம்மாநிலத் தகவல் ஆணையத்தில் செயலாளர் மற்றும் பணியாளர்களும் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

4. 2005 ஆம் ஆண்டு தகவல்பெறும் உரிமைச் சட்டத்தின்கீழ் தகவல்களைக் கீழ்க்கண்ட இரு வழிகளில் அளிக்கலாம்:

1. தன்னிச்சையாக வெளிப்படுத்துதல்.
2. விண்ணப்பத்தின் அடிப்படையில் அளித்தல்.

தலைமைச் செயலகத் துறைகள் மற்றும் மாவட்ட ஆட்சியர்கள் உட்படத் துறைத் தலைவர்கள் 2005ஆம் ஆண்டு தகவல்பெறும் உரிமைச் சட்டத்தின் 4 ஆம் பிரிவின்படி பொதுஅதிகாரிகளாவர். அவற்றின் அமைப்புகள், செயற்பணிகள் மற்றும் கடமைகள்போன்ற விவரங்களை அவர்கள் தெரிவிப்பதுடன், தாங்களாகவே அந்த விவரங்களை மக்களுக்கு அளிக்க வேண்டும். பொது மக்களின் பயனுக்காக அரசுத் துறைகளின் பணிகளைக் குறிப்பிட்டு நடைமுறை நூல்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. இவற்றை, தகவல்பெறும் உரிமைச் சட்ட இணையதளத்தில் பதியப்பட்டுள்ளது.

மக்களுக்குத் தேவைப்படும் தகவல்களை அளிக்க ஒவ்வொரு துறையிலும் பொதுத் தகவல் அலுவலர்கள் மற்றும் மேல்முறையீட்டு அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். தகவல் பெறுவதற்காக ஒவ்வொரு விண்ணப்பத்திற்கும் விண்ணப்பக் கட்டணம் 50 ரூபாயிலிருந்து 10 ரூபாயாகக் குறைக்கப்பட்டுள்ளது. மேலும், தகவல் பெறுவதற்கான 10 ரூபாய் விண்ணப்பக் கட்டணத்தைப் பணமாகவோ அல்லது நீதிமன்றக் கட்டண ஒட்டுவில்லையாகவோ அல்லது வங்கி வரைவோலையாகவோ அல்லது கேட்புக் காசோலையாகவோ அல்லது கருவூலச் செலுத்துச் சீட்டுமூலமாகவோ செலுத்த வழி வகை

[2007 ஏப்ரல் 2

செய்யப்பட்டுள்ளது. இச்சட்டத்தின்கீழ் வழக்கறிஞர்கள் சங்கங்கள், பொது மக்கள், அரசு ஊழியர்கள் மற்றும் ஓய்வூதியதாரர்கள் ஆகியோரிடமிருந்து இத்துறையில் இதுவரை 141 விண்ணப்பங்கள் பெறப்பட்டன. இவ்விண்ணப்பங்கள் பெரும்பாலும், அரசு ஆணைகள், அரசுக் கடிதங்கள், பணி விதிகளுக்கான விளக்கங்கள், தனி நபர் தொடர்பான பதவி உயர்வு, ஒழுங்கு நடவடிக்கைகள், நடத்தை விதிகள், விடுப்பு விதிகள் தொடர்பானவையாகும். இவ்விண்ணப்பதாரர்களுக்கு உரிய பதில்கள் அளிக்கப்பட்டுள்ளன. பொதுத் தகவல் அதிகாரிகள் அளித்த பதிலினால் மன நிறைவு அடையாத மனுதாரர் மேல்முறையீட்டு அலுவலரிடம் முறையீடு செய்யலாம். தகவல்பெறும் உரிமைச் சட்டத்தின்படி தமிழ்நாடு மாநிலத் தகவல் ஆணையத்திடம் இரண்டாவது மேல்முறையீடு செய்யலாம். மேல்முறையீடுகளுக்குக் கட்டணம் ஏதும் இல்லை. தமிழ்நாடு மாநிலத் தகவல் ஆணையம் தரும் பதில் மன நிறைவாக இல்லாத நிலையில் தகவல் வேண்டுவோர் உயர் நீதிமன்றத்தில் நீதிப் பேராணை வழக்குத் தொடரலாம்.

5. "2005 ஆம் ஆண்டு தகவல்பெறும் உரிமைச் சட்டத்தைக் கண்காணித்தல் மற்றும் செயல்படுத்துதல்" குறித்த பொருள் பொதுத் துறையிலிருந்து பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறைக்கு 21-11-2006 ஆம் நாளிலிருந்து மாற்றப்பட்டுள்ளது. தமிழ்நாடு மாநிலத் தகவல் ஆணையத்தின் பணியாளரமைப்பையும் இத்துறை கவனிக்கிறது. 2005 ஆம் ஆண்டு தகவல்பெறும் உரிமைச் சட்டம் குறித்த வழிகாட்டிக் கையேடு ஒன்றைப் பொது மக்களின் பயன்பாட்டிற்காக இத்துறை தயாரித்துள்ளது. தமிழ்நாடு சட்ட மன்றப் பேரவையில் வைப்பதற்காகத் தமிழ்நாடு அரசு அலுவலகங்கள் மற்றும் சார் அமைப்புகள் உள்ளடக்கிய ஓர் ஆண்டறிக்கையைத் தமிழ்நாடு மாநிலத் தகவல் ஆணையம் தயாரித்து வருகிறது.

## 14. தமிழ்நாடு நிருவாகத் தீர்ப்பாயம்

மைய அரசால் 17-2-2006 அன்று வெளியிடப்பட்ட அரசிதழ் அறிவிக்கையின்படி, தமிழ்நாடு நிருவாகத் தீர்ப்பாயம் கலைக்கப்பட்டது. இது தொடர்பான மைய அரசின் அறிவிக்கை 28-6-2006 நாளிட்ட தமிழ்நாடு அரசிதழிலும் வெளியிடப்பட்டது. தமிழ்நாடு நிருவாகத் தீர்ப்பாயம் கலைக்கப்பட்டபோது 20,340 மூல வழக்குகளும், 530 அவமதிப்பு விண்ணப்பங்களும், மொத்தம் 20,870 வழக்குகள் நிலுவையில் இருந்தன. அவை அனைத்தும் உயர் நீதிமன்றத்திற்கு



2007 ஏப்ரல் 2]

மாற்றப்பட்டுவிட்டன. அவ்வழக்குகள் உயர் நீதிமன்றத்தில் மேல் நடவடிக்கையில் உள்ளன.

## 15. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் அமைப்பும், பணிகளும்

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் தன்னாட்சி அமைப்புடன் தனது பணிகளைச் சுயமாகவும், சீராகவும், பாகுபாடு இன்றியும் செயல்படுத்தும் வகையில் இந்திய அரசியலமைப்புச் சட்டப் பிரிவுக் கூறு 315(1)-ன்கீழ் அமைக்கப்பட்டுள்ளது. இத்தேர்வாணையம் தலைவர் மற்றும் பதினோரு உறுப்பினர்களைக்கொண்டது. இத்தேர்வாணையத்தின் தலைவர், உறுப்பினர்கள் மற்றும் பணியாளர்கள் ஆகியோரின் பணி நிலைகள் 1954 ஆம் ஆண்டைய தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய ஒழுங்கு முறை விதிகளுக்கு உட்பட்டவையாகும்.

2. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் இந்திய அரசியலமைப்புச் சட்டப் பிரிவுக் கூறு 320-ல் கூறப்பட்டுள்ள கீழ்க்கண்ட கடமைகள் மற்றும் அலுவல்பணிகளை மேற்கொண்டு வருகிறது:—

(i) பணியாளர்களைத் தெரிவு செய்தல் இத்தேர்வாணையத்தின் தலையாய பணியாகும்.

(ii) பணியாளர்களைத் தெரிவு செய்தல் பற்றிய விதிகள் இயற்றுவது, பணி நியமனம், பதவி உயர்வுகள் அளித்தல், ஒரு பணியிலிருந்து மற்றொரு பணிக்கு மாற்றல் செய்தல் ஆகியவற்றில் பின்பற்றப்பட வேண்டிய நெறிகள், அரசுப் பணியாளர்களின் ஒழுங்குமுறை நடவடிக்கைகள்மீதான மேல்முறையீடு ஆகியன குறித்த எல்லாவற்றிலும் தேர்வாணையம் அரசுக்கு ஆலோசனை வழங்குகிறது.

(iii) அரசுப் பணியாளர்களுக்கான துறைத் தேர்வுகளைத் தேர்வாணையம் நடத்துகிறது.

(iv) டேராடூன் இந்தியப் பாதுகாப்புக் கல்லூரியில் நுழைவுத் தேர்வுகளை மத்திய அரசின் பாதுகாப்பு அமைச்சகத்தின் சார்பாகத் தேர்வாணையம் நடத்துகிறது.

3. சம்பளம், படிகள் மற்றும் ஓய்வூதியம் உட்பட தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் அனைத்துச் செலவினங்களும்

மாநில அரசுத் தொகுப்பு நிதியிலிருந்து செலவு செய்யப்படுகிறது. ஒவ்வொரு ஆண்டும் தேர்வாணையத்தின் ஆண்டு அறிக்கை, தேர்வாணையத்தின் கருத்துரையிலிருந்து மாறுபடும் இனங்கள் ஏதும் இருப்பின், அதற்கான விளக்கக் குறிப்புடன் சட்டமன்றப் பேரவை முன் வைக்கப்படுகிறது.

## 16. காலிப் பணியிடங்களை நிரப்பிடல்

இவ்வரசு 13-5-2006-ல் பதவி ஏற்றபின் அரசுத் துறைகளில் காலியாக உள்ள எல்லாப் பணியிடங்களையும் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் / ஆசிரியர் தேர்வு வாரியம் / சீருடைப் பணியாளர் தேர்வு வாரியம் / வேலைவாய்ப்பு அலுவலகம்மூலம் விரைந்து நிரப்பிடத் தேவையான பல்வேறு ஆணைகளை வெளியிட்டுள்ளது.

ஏனைய அலுவல்களுடன் காலிப் பணியிடங்களை ஒப்பளிக்கவென அமைக்கப்பட்ட அரசுத் தலைமைச் செயலாளர், நிதித் துறைச் செயலாளர், பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை, செயலாளர் மற்றும் தொடர்புடைய நிருவாகத் துறைச் செயலாளர் அடங்கிய பணியாளர் குழு நாளது வரை நேரடி நியமன முறையில் நியமனம் செய்ய 73,185 காலிப் பணியிடங்களுக்கு ஒப்புதலளித்துள்ளது. 13-5-2006 முதல் நாளது வரை 63,434 காலிப் பணியிடங்கள் பல்வேறு நியமன முறைகளின் மூலம் நிரப்பப்பட்டுள்ளன.

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் நேரடி நியமன முறை மூலம் ஆட்களெடுக்க, கீழ்க்கண்டவாறு பணியிடங்கட்கு அறிவிக்கைகள் வெளியிட்டு ஆட்களெடுக்கும் பணியினை மேற்கொண்டுள்ளது :

| | | |
|---|---|---|
| அ. | கிராம நிருவாக அலுவலர் (2007 ஜூன் 10 ஆம் நாள் தேர்வு நடைபெற உள்ளது.) | 2,500 |
| ஆ. | பல்வேறு அரசுத் துறைகளில் உதவிப் பொறியாளர் (25-2-2007-ல் தேர்வு நடைபெற்றுள்ளது) | 989 |
| இ. | ஒருங்கிணைந்த சார்நிலைப் பணிகளில் 1-உதவியாளர் (7-1-2007-ல் நடைபெற்றுள்ளது) | 311 |
| | 2-நேர்முக எழுத்தர் (7-1-2007-ல் நடைபெற்றுள்ளது) | 212 |
| ஈ. | உதவி மருத்துவர் (பல்) (10-12-2006-ல் தேர்வு நடைபெற்று 25-1-2007-ல் நேர்முகத் தேர்வும் நடைபெற்றுள்ளது) | 39 |



தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்மூலம் கீழ்க்கண்ட பணித் தொகுதி / பணியிடங்கட்கு ஆட்களெடுக்கும் பணி பெரும்படியாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

1. தொகுதி I

துணை ஆட்சியர், காவல் துறைத் துணைக் கண்காணிப்பாளர், வணிக வரி அலுவலர் போன்றவை.

2. ஒருங்கிணைந்த சார்நிலைப் பணி-I

செயலகத்தில் உதவிப் பிரிவு அலுவலா, அமைச்சுப் பணியில் உதவியாளர், நகராட்சி ஆணையர் நிலை-2, சார் பதிவாளர் நிலை-2, போன்றவை

3. ஒருங்கிணைந்த சார்நிலைப் பணி-II

இளநிலை ஆய்வாளர் (கூட்டுறவு), நிலையத் தீயணைப்பு அலுவலர், பண்டகக் காப்பாளர் போன்றவை

4. தொகுதி IV

இளநிலை உதவியாளர், தட்டச்சர், சுருக்கெழுத்துத் தட்டச்சர், போன்றவை

5. தொகுதி VII

இந்து சமய அறநிலையத் துறை, செயல் அலுவலர் நிலை-I

6. தொகுதி VII A

இந்து சமய அறநிலையத் துறை, செயல் அலுவலர் நிலை-III

7. தொகுதி VIII

இந்து சமய அறநிலையத் துறை, செயல் அலுவலர் நிலை-IV

8. உரிமையியல் நீதிபதி

9. பல் உதவி மருத்துவர்

10. உதவி மருத்துவ அலுவலர் (சித்தா/ஆயுர்வேத / யுனானி)

11. மாநில மற்றும் சார்நிலைப் பணித் தொகுதியில் தொழில்நுட்பப் பணியென வகைப்படுத்தப்பட்ட பணியிடங்கள்

[2007 ஏப்ரல் 2

ஆசிரியர் தேர்வு வாரியம்மூலம் பட்டதாரி ஆசிரியர்கள்/முதுநிலைப் பட்டதாரி ஆசிரியர்கள்/முதுநிலை விரிவுரையாளர்/விரிவுரையாளர் போன்ற பணியிடங்களில் மொத்தம் 4,119 காலிப் பணியிடங்களுக்கு ஆட்களெடுக்கும் பணி நிறைவுபெற்றுள்ளது.

ஆசிரியர் தேர்வு வாரியம்மூலம் வேலைவாய்ப்பக முதுநிலைப்படி மொத்தம் 7,979 பட்டதாரி ஆசிரியர்கள் தெரிவு செய்யப்பட உள்ளனர்.

சீருடைப் பணியாளர் தேர்வு வாரியம்மூலம் 582 தீயணைப்புப் பணியாளர்கள் நாளது வரை தெரிவு செய்யப்பட்டுள்ளனர். மேலும், 300 தீயணைப்புப் பணியாளர்கள், 4,543 காவலர் நிலை-II மற்றும் 682 சார் ஆய்வாளர் பணியிடங்களுக்கு ஆட்களெடுக்கும் பணி நடைபெற்று வருகிறது.

சமூக நலம் மற்றும் சத்துணவுத் துறையில் சமையலர் உள்ளிட்ட மதிய உணவு/ஊட்டச் சத்துப் பணியாளர்கள் மொத்தம் 29,773 நபர்கள் நியமனம் செய்ய ஆணைகளிடப்பட்டுள்ளன. அவர்களில் நாளது வரை 9,356 நபர்களுக்குப் பணி நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

2006-2007 ஆம் ஆண்டில் 1,477 மருத்துவ அலுவலர்கள் அரசுப் பணியாளர் தேர்வாணையம்மூலம் தெரிந்தெடுக்கப்பட்டுப் பணி நியமனம் வழங்கப்பட்டுள்ளது. ஒப்பந்த அடிப்படையில் உதவி மருத்துவ அலுவலர்/ஆலோசகர்களாகப் பணியாற்றிய 1,055 நபர்களின் பணியினை அரசுப் பணியாளர் தேர்வாணையம்மூலம் சிறப்புத் தகுதித் தேர்வு நடத்தி வரன்முறைப்படுத்த ஆணைகளிடப்பட்டுள்ளன. மேலும், 290 உதவி மருத்துவ அலுவலர்கள் மற்றும் 16 பல் உதவி மருத்துவ அலுவலர்கள் அரசுப் பணியாளர் தேர்வாணையம்மூலம் தெரிந்தெடுக்கப்படவும் ஆணைகளிடப்பட்டுள்ளன.

3,674 கிராம உதவியாளர்கள் மற்றும் 'டி' தொகுதியில் அலுவலக உதவியாளர் உள்ளிட்ட பணியிடங்களில் சுமார் 5,000 காலிப் பணியிடங்களை வேலைவாய்ப்பு அலுவலகம்மூலம் நிரப்பிட ஆணைகளிடப்பட்டுள்ளன. நேரடி மற்றும் ஏனைய நியமன முறைகளின்மூலம் காலிப் பணியிடங்களை விரைந்து நிரப்பிடுவதிலான முன்னேற்றத்தினைப் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்த்திருத்தத் துறை உன்னிப்பாகக் கண்காணித்து வருகிறது.

17. மாநில விழிப்புப் பணி ஆணையம், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு இயக்குநரகம், ஒழுங்கு நடவடிக்கைகள் தீர்ப்பாயங்கள், அண்ணா மேலாண்மை நிறுவனம், ஆய்வுப் பிரிவு, பயிற்சிப் பிரிவு



2007 ஏப்ரல் 2]

மற்றும் அமைப்பு மற்றும் செயல் முறைப் பிரிவு ஆகியவற்றின் நிருவாகம் தொடர்பான பணிகளைப் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்த்திருத்தத் (பயிற்சி) துறை கவனிக்கிறது.

## 18. மாநில விழிப்புப் பணி ஆணையம்

1964 ஆம் ஆண்டு மத்திய அரசால் ஏற்படுத்தப்பட்ட விழிப்புப் பணி ஆணையத்தை மாதிரியாகக்கொண்டு விழிப்புப் பணி ஆணையம் தமிழ்நாட்டில் 1965 ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்டது. பொதுவாக, பொதுப் பணிகளில் ஊழல் தடுப்பு தொடர்பான நடவடிக்கைகளில் ஏற்படும் நிருவாகச் சிக்கல்களிலும், அவ்வாணையத்தின் கவனத்திற்குக் கொண்டு வரப்படும் தனிப்பட்ட ஊழல் நேர்வுகளிலும் எவ்வாறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பது குறித்து அரசிற்கு அறிவுரைகளை இவ்வாணையம் வழங்குகிறது. இவ்விழிப்புப் பணி ஆணையம் தன் பொறுப்புகளை நிறைவேற்றுவதற்கு ஊழல் தடுப்புக் கண்காணிப்பு இயக்குனரகம் உதவி வருகிறது.

2. மாநிலத்தின் செயலாட்சி அதிகாரங்கள் எந்தெந்தப் பொருண்மையில் பரவியுள்ளதோ, அவற்றின்மீது மாநில விழிப்புப் பணி ஆணையத்தின் அதிகாரமும், அதிகார எல்லையும் விரிந்துள்ளன.

(i) பொது ஊழியர் ஒருவரின் நேர்மையற்ற செயல்பாடு அல்லது ஊழல் செயல்பாடு பற்றிய அவர்களின் நடவடிக்கைகள் அல்லது அவர்கள்மீது இந்தச் செயல்பாடு குறித்த ஐயங்கள்மீது விசாரணை நடத்துதல்.

(ii) ஒரு பொது ஊழியர் தன்னுடைய நேர்மையற்ற செயல்பாட்டிற்கு அல்லது ஊழல் செயல்பாட்டிற்குத் தன் அதிகாரத்தைத் தவறாகப் பயன்படுத்தியதாகவோ அல்லது உரிய அதிகாரத்தைப் பயன்படுத்தாமை பற்றியோ கூறப்பட்ட புகார்மீது விசாரணை அல்லது புலனாய்வு மேற்கொள்ளல்.

(iii) இத்தகைய தகவல்கள் மற்றும் புள்ளிவிவரங்களைத் தேவைப்படின் சேகரித்தல்.

(iv) தன் அதிகார வரம்பிற்குட்பட்ட செயல்பாடுகள் மற்றும் ஆணையத்தின் பரிந்துரைகளின்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பற்றிய விவரங்களை அரசுத் துறைகள் அல்லது அரசு நிறுவனங்கள் அல்லது பொது ஊழியரிடமிருந்து கேட்டுப் பெறுதல்.

[2007 ஏப்ரல் 2

## 19. ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு இயக்குனரகம்

பொது நிருவாகத்தில் ஊழலை ஒழிப்பதற்கென அமைப்புரீதியான நடவடிக்கையாக, அரசு 1964 ஆம் ஆண்டு ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை இயக்ககத்தைத் தனியொரு துறையாக உருவாக்கியது. தற்போது இவ்வியக்குனரகம் இந்தியக் காவல் பணியைச் சார்ந்த கூடுதல் காவல் துறை இயக்குநர் நிலையில் உள்ள அலுவலரை இயக்குநராகக்கொண்டு செயல்பட்டு வருகிறது. இயக்குநர் தனது பணிகளை நிறைவேற்ற அவருக்கு உதவியாகக் காவல் துறை அலுவலர்கள் மற்றும் சட்ட அலுவலர்கள் முறையே காவல் துறை மற்றும் குற்ற வழக்குத் தொடர்பு இயக்குனரகம் ஆகியவற்றிலிருந்து அழைக்கப்பட்டுப் பணிபுரிகின்றனர்.

2. ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு இயக்ககம், இலஞ்ச ஊழல் மற்றும் முறைகேடுகள் குறித்து நுண்ணறிவுத் தகவல்களைச் சேகரித்தல் மற்றும் 1988 ஆம் ஆண்டைய ஊழல் தடுப்புச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 49/1988) கீழ் வரும் குற்றச் செயல்களைக் குறித்துப் புலனாய்வு செய்தல் ஆகிய பணிகளை மேற்கொள்கிறது. மேலும் பொதுமக்கள், அரசு விழிப்புப் பணி ஆணையர் மற்றும் துறைத் தலைவர்களிடம் இருந்து பெறப்படும் பொது ஊழியர்கள்மீதான குற்றவியல், தவறான நடத்தை (இலஞ்சம் மற்றும் ஊழல்) குற்றவியல் கையாடல் மற்றும் குற்றவியல்புடைய நம்பிக்கை மோசடி தொடர்பான புகார்கள்மீது விசாரணை மேற்கொள்கிறது. மாவட்ட ஆய்வுக் குழு மற்றும் துறைத் தலைவர்களின் உதவியுடன் ஒவ்வொரு மாவட்டத்திலும் பல துறைகளில் உள்ள ஊழல் நடைபெற வாய்ப்புள்ள முக்கியமான இடங்களில் ஊழல் தடுப்பு நடவடிக்கையாகத் திடீர் ஆய்வுகளை மேற்கொள்கிறது.

3. முன்பு, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை 28 பிரிவு அலுவலகங்களைக்கொண்டு இயங்கி வந்தது. இவ்வரசு ஆகஸ்டு திங்கள் 2006-ல் இருந்து இவ்வியக்ககத்திற்கு ஐந்து புதிய பிரிவு அலுவலகங்களை விழுப்புரம் மற்றும் தேனி மாவட்டங்களில் முறையே ஒவ்வொரு பிரிவு அலுவலகமும், சென்னையில் மூன்று பிரிவு அலுவலகங்களையும், அதற்குண்டான பணியிடங்களுடன் மற்றும் உள் கட்டமைப்பு வசதிகளுடன் இம்மாவட்ட மக்களின் நலனுக்காக ஏற்படுத்தியுள்ளது.

4. ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு இயக்குனரகம் தனது புலனாய்வு அறிக்கைகளை மாநில விழிப்புப் பணி ஆணையத்திற்கு அனுப்பி வைக்கிறது. மாநில விழிப்புப் பணி ஆணையர் அவ்வறிக்கைகளை ஆய்வு செய்து, தேவைக்கேற்ப எவ்விதமான மேல்நடவடிக்கைகள் தொடரப்பட வேண்டும் என்ற அறிவுரையுடன் அரசு அலுவலர் சார்ந்துள்ள தலைமைச் செயலகத் துறைகளுக்கு அனுப்பி வைக்கப்படுகிறது.



2007 ஏப்ரல் 2]

## 20. ஒழுங்கு நடவடிக்கைகள் தீர்ப்பாயங்கள்

ஒழுங்கு நடவடிக்கைகள் தீர்ப்பாயங்கள் ஒவ்வொன்றும் நீதிமுறை சார்புடைய மன்றமாக இயங்கி வருகின்றன. இத்தீர்ப்பாயங்களில் இந்திய ஆட்சிப் பணி அதிகாரிகள் தலைமைப் பொறுப்பில் உள்ளனர். தமிழ்நாடு குடிமைப் பணிகள் (ஒழுங்கு நடவடிக்கைகள் தீர்ப்பாயம்) விதிகள், 1955-ன்கீழ் ஒழுங்கு நடவடிக்கைத் தீர்ப்பாயங்களுக்கு அரசால் அனுப்பப்படும் வழக்குகளை விசாரணை செய்து, அவ்விசாரணையில் குற்றங்கள் நிரூபிக்கப்பட்டன அல்லது நிரூபிக்கப்படவில்லை என்று கண்டறியப்பட்டு, அவ்வறிக்கைகள் அரசுக்கு அனுப்பப்படுகின்றன. சென்னை, வேலூர், சேலம், கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, மதுரை, திருநெல்வேலி மற்றும் நாகர்கோவில் ஆகிய எட்டு இடங்களில் ஒழுங்கு நடவடிக்கைத் தீர்ப்பாயங்கள் இயங்கி வருகின்றன.

## 21. பயிற்சி

அரசுப் பணியாளர்களது பொது அறிவுத் திறன் மற்றும் செயல் திறனைத் தொடர்ந்து உயர்த்தி, அவர்களது திறமைகளை மேம்படுத்துவதற்குப் 'பயிற்சி' ஒரு முக்கியப் பங்காற்றுகிறது. பொது மக்களின் பிரச்சினைகளைப் புரிந்துகொண்டு அரசின் சேவைகள் மக்களுக்கு முழுப் பயன் விளைவிக்கும் வகையில் சென்றடைய, அரசுப் பணியாளர்களுக்கு நிருவாக மேம்பாட்டுப் பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (பயிற்சி) துறையின் நிருவாகக் கட்டுப்பாட்டின்கீழ் கீழ்க்கண்ட ஐந்து பயிற்சி நிலையங்கள் இயங்கி வருகின்றன.

**(i) *தலைமைச் செயலகப் பயிற்சி நிலையம்:*** தலைமைச் செயலகத் துறைகளில் நேரடியாக நியமனம் செய்யப்பட்ட உதவிப் பிரிவு அலுவலர்கள், உதவியாளர்கள், நேர்முக எழுத்தர்கள், தட்டச்சர்கள் ஆகியோர் முழு நிறைவாகக் கோப்புகளைக் கையாளும்வண்ணம் அவர்களுக்குத் தலைமைச் செயலகப் பயிற்சி நிலையத்தில் பொது நிருவாக நடைமுறை மறறும் நிதி நிருவாக நடைமுறையில் 60 வேலைநாட்களுக்கு அடிப்படைப் பயிற்சி அளிக்கப்படுகிறது. இப்பயிற்சியின் முடிவில் நடத்தப்படும் தேர்வுகளில் வெற்றிபெறுதல்

நேரடி நியமனம் செய்யப்பட்ட உதவிப் பிரிவு அலுவலர்களின் தகுதிகாண் பருவத்தை அவர்கள் திருப்திகரமாக முடிப்பதற்கும், உதவியாளர்கள், நேர்முக எழுத்தர்கள், தட்டச்சர்கள் ஆகியோர் உதவிப் பிரிவு அலுவலர் பதவிக்கான தேர்ந்த பெயர், பட்டியலில் இடம்பெறுவதற்கும் உரிய முன் தகுதியாகும். தலைமைச் செயலக அலுவலர்கள் மற்றும் பணியாளர்களின் அறிவுத் திறன் மற்றும் ஆற்றலை இன்றைய நிலைக்கேற்ப உயர்த்தி ஒழுங்கு நடவடிக்கை குறித்த நிகழ்வுகளைக் கையாளுதல், நீதிமன்ற மற்றும் நடுவர் மன்ற நடவடிக்கைகள் தொடர்புடைய கோப்புகளைக் கையாளுதல் தொடர்பான நடைமுறைகள் குறித்த இதர பயிற்சிகளும் இப்பயிற்சி நிலையத்தில் அளிக்கப்படுகின்றன. இதுவரை 56 அணிகளுக்கு இப்பயிற்சி நிலையத்தில் அடிப்படைப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

**(ii) அண்ணா மேலாண்மை நிலையம்:** அண்ணா மேலாண்மை நிலையம் இம்மாநிலத்தின் முதன்மைப் பயிற்சி நிலையமாக விளங்குகிறது. தமிழ்நாடு அரசுச் சங்கங்களின் பதிவுச் சட்டம், 1975-ன்கீழ் இந்நிலையம் பதிவு செய்யப்பட்டு, 1981 ஆம் ஆண்டு முதல் இயங்கி வருகிறது. "மகிழம்பூ" என்ற புதிய கட்டட வளாகத்தில் அனைத்து நவீன உள்கட்டமைப்பு வசதிகளுடன் இந்நிலையம் இயங்கி வருகிறது. தலைமைச் செயல்ாளர் நிலையில் உள்ள இயக்குநர் இந்நிலையத்தை நிருவகிக்கிறார். மாண்புமிகு தமிழக மின்சாரத் துறை அமைச்சர் இந்நிலையத்தின் ஆளுமைக் குழுவின் தலைவர் ஆவார். இவ்வாளுமைக் குழுவில் அரசுத் தலைமைச் செயலாளர் அவர்கள் துணைத் தலைவராகவும் அண்ணா மேலாண்மை நிலைய இயக்குநர், உறுப்பினர் மற்றும் செயலாளராகவும் உள்ளனர். 13 உறுப்பினர்கள்கொண்ட ஆளுமைக் குழுவில், செயலாளர், பணியாளர் மற்றும் நிருவாக சீர்திருத்தத் (பயிற்சி) துறை, செயலாளர், நிதித் துறை, கல்வி மற்றும் மேலாண்மைத் துறைகளில் சிறந்தோர் உறுப்பினர்களாக உள்ளனர். அண்ணா மேலாண்மை நிலையம் அரசின் பயிற்சி ஆலோசகராகவும் விளங்குகிறது.

20-3-2007 அன்று நடைபெற்ற ஆளுமைக் குழுக் கூட்டத்தில் அண்ணா மேலாண்மை நிலையத்தை சிறப்புத் தகுதி வாய்ந்த மேலாண்மை நிறுவனமாக மேம்படுத்துவதற்கும், தற்போதுள்ள பயிற்சிப் பாடத் திட்டங்களின் தரத்தை உயர்த்தவும், வருங்காலத்தில் தன்னுடைய தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான நிதி ஆதாரங்களைப் பெருக்குவதற்கும் டீன் (கல்வி) (Dean-Academics) என்ற பெயரில் தொழில் நுட்ப இயக்குநர் பதவியை உருவாக்கத் தீர்மானிக்கப்பட்டது. சர்வதேச





மற்றும் தேசியப் புகழ் வாய்ந்த மேலாண்மை நிறுவனங்களுக்கு இணையாக அண்ணா மேலாண்மை நிலையத்தை உயர்த்துவதற்குத் தேவையான திட்டங்களை டீன் (கல்வி) வகுத்துக் கொடுப்பார். இந்த முயற்சியானது, தமிழ்நாட்டில் பணியாற்றி வரும் இந்திய ஆட்சிப் பணி அலுவலர்கள், இந்தியக் காவல் பணி அலுவலர்கள், இந்திய வனப் பணி அலுவலர்கள் மற்றும் உயர் நிலை அலுவலர்களுக்கு உரிய பயிற்சித் திட்டத்தினை அண்ணா மேலாண்மை நிலையம் உருவாக்க உறுதுணையாக அமையும்.

அண்ணா மேலாண்மை நிலையத்தின் வெள்ளி விழாவினை மிகச் சிறந்த முறையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையில் கொண்டாடலாம் எனத் தீர்மானிக்கப்பட்டது. இவ்விழாவில், தற்போது பணியாற்றும் பயிற்றுநர்கள் மற்றும் அலுவலர்கள், முன்னாள் அலுவலர்கள், பயிற்றுநர்கள் ஆகியோர்களின் பணியினைப் பாராட்டும் வண்ணம் சிறப்பிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

அண்ணா மேலாண்மை நிலையத்தில் தமிழக அரசு அதிகாரிகள், பிற மாநில அரசுத் துறை அதிகாரிகள், மைய அரசு மற்றும் மாநிலப் பொதுத் துறை நிறுவனங்களின் அதிகாரிகள் ஆகியோருக்குப் பல்வேறு மேலாண்மை வளர்ச்சி தொடர்பான பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. கடந்த 2006-2007 ஆம் ஆண்டில் இந்நிலையம் பொது நிருவாகம், செய்தி மற்றும் தொழில்நுட்பம், நிதி, நடத்தையியல் மேலாண்மை, தரம் காணும் மேலாண்மை ஆகிய தலைப்புகளில் 178 பயிற்சிகளை நடத்தி 4,130 பயிற்சியாளர்களுக்குப் பயிற்சி அளித்துள்ளது.

மைய அரசின் உள் துறை அமைச்சகத்தின் உதவியுடன் பேரிடர் மேலாண்மைப் பிரிவு என்ற தனிப் பிரிவு ஒன்று இந்நிலையத்தில் இயங்கி வருகிறது. இப்பிரிவின்மூலம் இயற்கைச் சீரழிவுகளை எவ்வாறு சமாளிப்பது என்பது குறித்த பேரிடர் மேலாண்மைப் பயிற்சிகள் நடத்தப்படுகின்றன. வெள்ளம் மற்றும் புயல் மேலாண்மை, பூமியதிர்ச்சி, நிலச் சரிவுகள், தொழிற்சாலைகள் பேரிடர், சுற்றுச்சூழல் குறித்த பேரிடர், சாலை விபத்து குறித்த பேரிடர்போன்ற தலைப்புகளில் 22 பயிற்சிகளை நடத்த வருவாய்த் துறையின் 23-5-2006 நாளிட்ட அரசு ஆணை (நிலை) எண் 340-ல் உரிய ஆணையும் வெளியிடப்பட்டு, அனைத்துப் பயிற்சிகளையும் நடத்தியுள்ளது. ரூ.72 இலட்சம் செலவினத்தில் கொள்முதல் நடைமுறை தொடர்பான 48 பயிற்சிகளை நடத்தும் பொறுப்பை நிதித் துறை, அண்ணா மேலாண்மை நிலையத்திடம் ஒப்படைத்துள்ளது. அண்ணா மேலாண்மை நிலையம் இதுவரை 38 பயிற்சிகளை நடத்தியுள்ளது.

(iii) **அனைத்திந்தியக் குடிமைப் பணிகள் தேர்வுப் பயிற்சி மையம், சென்னை:-** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 1999-2000 ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கையில் வெளியிட்ட அறிவிப்பின்படி, மத்திய அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின்மூலம் நடத்தப்படும் அகில இந்தியப் பணிகளுக்கான தேர்வுகளை எழுதுவோருக்கான ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான பயிற்சி நிலையம் மற்றும் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினருக்கான பயிற்சி நிலையம் ஆகிய இரு பயிற்சி நிலையங்களும் ஒருங்கிணைக்கப்பட்டு, சென்னை அண்ணா நகரில் அனைத்திந்தியக் குடிமைப் பணிகள் தேர்வுப் பயிற்சி மையம் என்ற புதிய பயிற்சி நிலையம் ஏற்படுத்தப்பட்டது. அகில இந்தியப் பணிகளுக்கான தேர்வுகளை எழுதுவோருக்கு அளிக்கப்படும் பயிற்சியின் தரத்தை உயர்த்துவதற்காகவும் இம்மாநிலத்திலிருந்து அகில இந்தியப் பணிகளுக்குத் தேர்ந்தெடுக்கப்படுவோரின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்காகவுமே இப்புதிய பயிற்சி நிலையம் உருவாக்கப்பட்டது. இப்பயிற்சி நிலையம் முதல்வர் மற்றும் பயிற்றுநர்களுடன் அண்ணா மேலாண்மை நிலைய இயக்குநர் மற்றும் பயிற்சித் துறை இயக்குநர் அவர்களின் ஒருமித்த நிருவாகக் கட்டுப்பாட்டின்கீழ் இயங்கி வருகிறது.

ஆதி திராவிடர், பழங்குடியினர், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சார்ந்த நபர்களுக்கு, உணவு, தங்கும் அறை, பயிற்சிக்குத் தேவையான புத்தகங்கள் மற்றும் கணினி வசதிகள் ஆகிய அனைத்தையும் ஒரே இடத்தில் அளித்து அவர்கள் இந்தியாவின் மிக உயர்ந்த குடிமைப் பணிகளில் நுழைவதற்கு இப்பயிற்சி நிலையத்தில் செறிவான பயிற்சி அளிக்கப்படுகிறது. ஒவ்வொரு ஆண்டும் தேர்ந்தெடுக்கப்பட்ட 300 மாணவர்களுக்கு மத்திய அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்படுகின்ற அகில இந்தியக் குடிமைப் பணிகளுக்கான பூர்வாங்கத் தேர்வு மற்றும் முதன்மைத் தேர்வுகளை எழுதுவதற்கு இப்பயிற்சி நிலையத்தில் பயிற்சி அளிக்கப்படுகிறது. மேலும், முதன்மைத் தேர்வில் தேர்ச்சிபெற்ற மாணவர்கள் அவர்களது நேர்காணலை நல்ல முறையில் சந்திக்க மாதிரி நேர்காணலும் இப்பயிற்சி நிலையத்தால் நடத்தப்படுகிறது.

அனைத்திந்தியக் குடிமைப் பணிகள் பயிற்சி நிலையம் தற்போது தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திற்குச் சொந்தமான கட்டடத்தில் ஆண்டு ஒன்றுக்கு வாடகையாக ரூ.2.35 இலட்சம் செலுத்தி இயங்கி வருகிறது. இந்நிலையத்திற்கென சொந்தமான நிலம் மற்றும் கட்டடம் இல்லாதபடியால், பயிற்சி பெறும் மாணவர்களுக்குத் தேவையான



கட்டமைப்பு வசதிகளை மேற்கொள்ள இயலாமல் உள்ளது. எனவே, அனைத்திந்தியக் குடிமைப் பணிகள் தேர்வுப் பயிற்சி மையத்தில் பயிற்சி பெறும் மாணவர்களுக்கு ஏற்றதொரு சூழலை ஏற்படுத்தும் பொருட்டு, தற்போது பயிற்சி நிலையம் இயங்கி வரும் இடம் மற்றும் கட்டடத்தை தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திடமிருந்து அண்ணா மேலாண்மை நிலையத்தின் பெயருக்கு மாற்றி, மேம்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது. 2007-2008 ஆம் ஆண்டிற்கான பகுதி-2 திட்டத்தில் வகுப்பறைகளுக்குப் புதிய நாற்காலிகள், உணவறைக்கு மேசைகள், நாற்காலிகள், நகலெடுக்கும் இயந்திரம், இன்வெர்ட்டர், HP லேசர் பிரிண்டர் மற்றும் தேவையான மின்னணு, மின் சாதனங்கள் மற்றும் தளவாடங்கள் ரூ. 10.00 இலட்சம் செலவில் வாங்கப்படவுள்ளது.

(iv) **அரசு அலுவலர் பயிற்சி நிலையம், பவானிசாகர்:** தமிழ்நாடு அமைச்சுப் பணியாளர்களுக்கு (இளநிலை உதவியாளர்) பல்வேறுபட்ட நிருவாக நடைமுறைகள் குறித்து 60 நாட்கள்கொண்ட அடிப்படைப் பயிற்சி அளிப்பதற்கென 1974 ஆம் ஆண்டு பவானிசாகர் அரசு அலுவலர் பயிற்சி நிலையம் துவக்கப்பட்டது. அவர்களுக்குத் தங்களுடைய தகுதிகாண் பருவத்தை நிறைவு செய்வதற்கு மேற்காண் அடிப்படைப் பயிற்சியின் முடிவில் நடத்தப்படும் தேர்வுகளில் வெற்றி பெற வேண்டுமென்பது உரிய முன் தகுதியாகும். துணை வட்டாட்சியர்களுக்குத் தங்களது அறிவுத் திறனை மேம்படுத்திக் கொள்ளும் வகையில் 28 நாட்கள்கொண்ட பணியிடைப் பயிற்சியும் இப்பயிற்சி நிலையத்தில் அளிக்கப்படுகிறது. ஒவ்வொரு ஆண்டும் ஏறத்தாழ 2,100 இளநிலை உதவியாளர்களுக்கும், 180 துணை வட்டாட்சியர்களுக்கும் பயிற்சி அளிக்கப்படுகிறது.

பவானிசாகர் அரசு அலுவலர் பயிற்சி நிலையத்தில் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும்பொருட்டு, மாநிலப் பிரிவு அலுவலர்கள் தங்கும் விடுதியைச் சுற்றி சுற்றுச் சுவர் கட்டுதல், பெண் பயிற்சியாளர்களுக்கான தங்கும் விடுதியில் கூடுதலாகக் குளியலறைகள் கட்டுதல், உடல் ஊனமுற்ற பயிற்சியாளர்களுக்கு மேற்கத்திய முறையிலான 6 கழிப்பறைகள் அமைத்தல், பயிற்சி நிலைய மனையியல் பகுதியைச் சுற்றிக் குறுக்குக் கம்பி வேலி அமைத்தல், பயிற்சி நிலையத் தங்கும் விடுதி அறைகளில் உள்ள கதவுகள், சன்னல்களை சிறப்புப் பழுது பார்த்தல் மற்றும் புதிய விடுதிக் கட்டடத்திற்கு வெள்ளை அடித்தல், வண்ணப் பூச்சுப் பூசுதல் மற்றும் வண்ணம் அடித்தல், புதிய நிகரி ஒன்று வாங்குதல், பயிற்சியாளர்களுக்குப் புதிய கை நாற்காலிகள் வாங்குதல், உணவகப் பயன்பாட்டிற்காகக் குளிர்பதனப்

பெட்டி ஒன்று வாங்குதல் ஆகியன ரூ. 23.66 இலட்சம் செலவில் 2007-2008 ஆம் ஆண்டிற்கான பகுதி-2 திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்படவுள்ளது.

(v) **'அ' மற்றும் 'ஆ' பிரிவு அலுவலர்கள் பயிற்சி நிலையம், சென்னை:** இப்பயிற்சி நிலையத்தில் நேரிடையாக நியமனம் செய்யப்பட்ட மற்றும் பல்வேறு துறைகளில் பதவி உயர்வின்மூலம் பணியமர்த்தப்பட்ட 'அ' மற்றும் 'ஆ' தொகுதி அலுவலர்களுக்கு அடிப்படைப் பயிற்சி அளிக்கப்படுகிறது. தொழில்நுட்பம் அல்லாத மிகுந்த நிருவாகப் பணிகளைக்கொண்ட 'அ' தொகுதி அலுவலர்களான துணை ஆட்சியர், மாவட்டப் பதிவாளர், வணிக வரி அலுவலர், காவல் துறைத் துணைக் கண்காணிப்பாளர், மாவட்டத் தீயணைப்பு மற்றும் மீட்பு அலுவலர், சிறைக் கண்காணிப்பாளர், உதவி வனப் பாதுகாவலர், நகர ஊரமைப்புத் துணை இயக்குநர், நில அளவை மற்றும் நில வரி உதவி இயக்குநர் ஆகியோருக்கு 5 வார கால அடிப்படைப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

நிருவாகப் பணிகளைவிடக் கூடுதலான தொழில்நுட்பப் பணிகளைக் கொண்ட "ஆ" தொகுதி அலுவலர்களான வேளாண்மை உதவி இயக்குநர், கால்நடை பராமரிப்பு உதவி இயக்குநர், மாவட்டக் கல்வி அலுவலர், மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர், மாவட்டத் தொழிற்பயிற்சி மைய முதல்வர், உதவிச் செயற்பொறியாளர், தொழிற்சாலைகள் ஆய்வாளர், மீன்வள உதவி இயக்குநர், இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை உதவி ஆணையர், தொழில் மற்றும் வணிகத் துறை உதவி இயக்குநர், உதவி மருத்துவர், மாவட்டச் சுகாதார அலுவலர், பணி மேலாளர், துணைப் பதிவாளர், மாவட்டப் புள்ளியியல் அலுவலர் ஆகியோருக்கு 3 வார கால அடிப்படைப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

'அ' தொகுதி அலுவலர்களுக்கு அலுவலக நிருவாகம், நிதி நிருவாகம், பொது நிருவாகம், சட்டம், பொருளாதாரம், திட்டம் மற்றும் வளர்ச்சி, பேரிடர் மேலாண்மை மற்றும் கணினி உபயோகம் ஆகிய பொருண்மைகளில் பயிற்சி அளிக்கப்படுகிறது. 'ஆ' தொகுதி அலுவலர்களுக்கு அலுவலக நிருவாகம், நிதி நிருவாகம், பொது நிருவாகம், சட்டம், பேரிடர் மேலாண்மை மற்றும் கணினி உபயோகம் ஆகிய பொருண்மைகளில் பயிற்சி அளிக்கப்படுகிறது. 2006-2007 ஆம் ஆண்டில் அண்ணா மேலாண்மை நிலைய 'அ' மற்றும் 'ஆ' தொகுதி அலுவலர் பயிற்சி நிலையம் 15 பயிற்சிகளை நடத்தி, 324 அலுவலர்களுக்குப் பயிற்சி அளித்துள்ளது.



'அ' மற்றும் 'ஆ' பிரிவு பயிற்சி மையம் தற்போது அண்ணா மேலாண்மை நிலையத்திற்கு அருகில் அமைந்துள்ள 'காஞ்சி' கட்டடத்தில் இயங்கி வருகிறது. இந்தக் கட்டடம் மிகப் பழைமையானதாக உள்ளதால், இக்கட்டடத்திற்கு சீரமைப்புப் பணிகளை மேற்கொள்ள, தலைமைப் பொறியாளர் (கட்டடம்), பொதுப் பணித் துறை அவர்களிடமிருந்து மதிப்பீட்டு அறிக்கையைப்பெற்று நடவடிக்கை மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

## 22. ஆய்வுப் பிரிவு

அரசு அலுவலகங்களின் நிருவாகத்தை சுமுகமாகவும் மற்றும் திறமையாகவும் நடத்துவதில் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்த்திருத்தத் துறையின் ஆய்வு அலகு முக்கியப் பங்கு வகிக்கிறது. துறைத் தலைமையகங்களின் நிருவாகத்தைச் செம்மைபடுத்துவதற்கென முறையான மற்றும் முழுமையான ஆய்வினைக் கால முறைப்படி மேற்கொள்ள துறைத் தலைமை அலுவலகங்களின் முதுநிலை அலுவலர்களைக்கொண்டு ஆய்வு செய்யும் திட்டத்தை அரசு 1959 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தியது. அதன்படி, 1959 ஆம் ஆண்டு ஆய்வு அலகானது 3 பிரிவுகளைக்கொண்டதாக ஏற்படுத்தப்பட்டது. ஆய்வு-I மற்றும் ஆய்வு-II பிரிவுகள் துணைச் செயலாளர் மற்றும் இணைச் செயலாளர் நிலையிலும், ஆய்வு-III பிரிவு மாவட்ட வருவாய் அலுவலர் நிலையிலும் உள்ள அதிகாரிகளின் மேற்பார்வையில் இயங்குகின்றன. ஒவ்வொரு ஆண்டும், ஆண்டு நிகழ்ச்சி நிரல்களை அடிப்படையாகக்கொண்டு, தலைமைச் செயலகத் துறைகள் உள்ளிட்ட 30 தலைமைத் துறைகளில் இம்மூன்று ஆய்வுப் பிரிவுகளும் ஆய்வு மேற்கொண்டு பூர்வாங்க அறிக்கை தயாரிக்கின்றது. அதனடிப்படையில், முதுநிலை இந்திய ஆட்சிப் பணி அலுவலர்களால் இறுதி ஆய்வு மேற்கொள்ளப்பட்டு, அரசுக்கு அறிக்கை அளிக்கப்படுகிறது.

## 23. மாவட்ட ஆய்வுக் குழுக்கள்

மாவட்ட அளவிலான அலுவலகங்களில் ஒட்டுமொத்தத் திறமையை மேம்படுத்துவதற்காக 1975 ஆம் ஆண்டு மாவட்ட ஆய்வுக் குழுக்கள் உருவாக்கப்பட்டன. இம்மாநிலத்தில் 11 மாவட்ட ஆய்வுக் குழுக்கள் இயங்குகின்றன. ஒவ்வொரு குழுவும் 7 பணியாளர்களைக் கொண்டுள்ளது. அவை மாவட்ட அலுவலர்களுக்கு நடைமுறை விதிகள் மற்றும் ஒழுங்குமுறை விதிகளை இன்றைய நிலைக்கேற்பத் தெரிந்துகொள்ளும்பொருட்டு, பயிற்சி அளிக்கின்றன.

பொதுமக்களின் புகார்களுக்குள்ளான மாவட்ட அளவிலான அலுவலகங்களில் ஆண்டுதோறும் ஆய்வு மற்றும் திடீர் ஆய்வுகளையும் மேற்கொள்வதோடு, மாவட்ட ஆட்சித் தலைவரின் வழிகாட்டுதலின்படி மாவட்ட விழிப்புப் பணி மற்றும் ஊழல் தடுப்புக் குழுவின் திடீர் ஆய்வுக்கும் இம்மாவட்ட ஆய்வுக் குழுக்கள் உதவி புரிகின்றன. ஆய்வுக் குழுக்கள் மேற்கொள்ளும் ஆய்வுப் பணிகள்மூலம் மாவட்ட நிருவாகத்தில் திறனை மேம்படுத்துவதுடன் தூய நிருவாகத்தையும் ஏற்படுத்துவதோடு, இக்குழுக்களால் நடத்தப்படும் புத்தாக்கப் பயிற்சிகள்/பயிற்சி வகுப்புகள்மூலம் மாநிலத்திலுள்ள அனைத்து அலுவலர்கள்/பணியாளர்கள், அலுவலக நிருவாகம் மற்றும் இன்றைய நிலையிலுள்ள பணி விதிகளைக் கையாளுதல் போன்றவைகளைத் தெரிந்துகொள்ளப் பெரிதும் உதவுகின்றன. இந்த 11 மாவட்ட ஆய்வுக் குழுக்களும் 2006-2007 ஆம் ஆண்டில் 72 விரிவான ஆய்வுகளையும், 1,765 திடீர் தணிக்கைகளையும், மாவட்ட ஆட்சித் தலைவரின் முன்னிலையில் விழிப்புக் குழு அலுவலர்களுடன் 69 இணைந்த கூட்டங்களையும் நடத்தியுள்ளன.

இரண்டு நாட்கள் ஒழுங்குமுறை குறித்த முன்னோடிப் பயிற்சியினையும் மற்றும் மூன்று நாட்கள் அலுவலக நடைமுறை குறித்த குறுகிய காலப் பயிற்சியினையும் மாவட்ட அளவிலான அலுவலர்களுக்கு ஆய்வுக் குழு திட்டமிட்டு, அனைத்து மாவட்ட ஆய்வுக் குழு அலுவலர்களுடன் இணைந்து நடத்துகிறது. 2006-2007 ஆம் ஆண்டில் 30 முன்னோடிப் பயிற்சியும், 30 குறுகிய கால பயிற்சியும் நடத்தப்பட்டுள்ளன.

## 24. அமைப்பு மற்றும் செயல் முறைப் பிரிவு

அரசு அலுவலகங்களில் பணியாளர்களின் பணியினை மதிப்பீடு செய்தல், தற்போது நடைமுறையில் உள்ள வழிமுறைகளைச் சீர் செய்தல், அரசு அலுவலகங்களில் பணியாளர்களின் திறமையையும், பணித் திறனையும் மேம்படுத்தும் வகையில், பணி அளவீட்டினை நிர்ணயித்தல் ஆகியவை குறித்தும் அமைப்பு மற்றும் செயல் முறைப் பிரிவு ஆராய்வு மேற்கொள்கிறது.

2. அமைப்பு மற்றும் செயல் முறைப் பிரிவில் இரண்டு நிருவாகக் குழுக்கள் இயங்கி வருகின்றன. ஒரு நிருவாகக் குழு, அமைப்பு மற்றும் செயல் முறை வல்லுநர் நிலை-I மற்றும் அரசுத் துணைச் செயலர் அவர்களின்கீழ் செயல்படுகிறது. மற்றொரு குழு, அரசுத் துணைச் செயலர் (அமைப்பு மற்றும் செயல் முறை) அவர்களின்கீழ்





செயல்படுகிறது. கண்காணிப்புக் குழு ஒன்று ஆராய்ச்சி அலுவலர் ஒருவரையும், உதவிப் பிரிவு அலுவலர் ஒருவரையும்கொண்டு செயல்பட்டு வருகிறது. இக்குழு இரு நிருவாகக் குழுக்களின் அறிக்கைகளின்மீது தொடர் நடவடிக்கைகள் எடுப்பது தொடர்பான பணியைக் கவனிப்பதோடு, இக்குழுவிற்குத் தேவையான அலுவலக நடைமுறைகளையும் மற்றும் வரவு-செலவுத் திட்டம் தயாரிக்கும் பணிகளையும் மேற்கொண்டு வருகிறது. துணைச் செயலர் (அமைப்பு மற்றும் செயல் முறை) அவர்கள் கண்காணிப்புக் குழு மற்றும் இரண்டு நிருவாகக் குழுக்கள் ஆகியவற்றின் ஒருங்கிணைப்பாளராகச் செயல்படுகிறார்.

3. கண்காணிப்புக் குழுவானது ஒவ்வொரு ஆண்டும் தலைமைச் செயலகத்திலுள்ள அனைத்துத் துறைகளையும், துறைத் தலைவர்களையும், அவர்களது துறைகளில் நிருவாகச் சிக்கல் எவையேனும் இருக்கிறதா என்றும், அவற்றிற்கு அமைப்பு மற்றும் செயல் முறைக் குழுவின் ஆராய்ச்சி தேவையா என்பது குறித்தும் தகவலளிக்குமாறு கோருகிறது. அவர்களின் கோரிக்கையின் அடிப்படையில் ஒரு செயல் திட்டம் தயாரிக்கப்பட்டு, ஒவ்வொரு நிருவாகக் குழுவிற்கும் ஆராய்வுப் பணி மேற்கொள்ளப் பகிர்ந்தளிக்கப்படுகிறது. வருடாந்திரச் செயல் திட்ட ஆராய்வுகளைத் தவிர, துறைகளின் அவசரக் கோரிக்கைகளின் அடிப்படையில் சிறப்புப் பணிகளும் மற்றும் ஆராய்வுகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தலைமைச் செயலகத் துறைகளுக்கும், துறைத் தலைமை அலுவலகங்களுக்கும் இடையே செயல்பாட்டில் உள்ள ஒற்றைக் கோப்பு முறையின்மீதான ஆராய்வுப் பணி இவ்வாண்டு சிறப்புப் பணியாக மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது.

## 25. 2007–2008 ஆம் ஆண்டுக்கான பகுதி–2 திட்டங்கள்

2007-2008 ஆம் ஆண்டில் கீழ்க்கண்ட பகுதி-2 திட்டங்கள் நிறைவேற்றப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளன:—

### 1. பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை—தலைமைச் செயலகம்

பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறையில் மின்னணு முறையில் கோப்புகளைக் கையாளும் முறையைச் செயல்படுத்த ஒரு சர்வர் மற்றும் 10 கணினிகள், மென்பொருட்கள் மற்றும் அதன் துணைப் பாகங்கள் வாங்கப்பட உள்ளன.

[2007 ஏப்ரல் 2

**2. ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு இயக்குனரகம்**

திண்டுக்கல் மாவட்டம், செட்டிநாயக்கன்பட்டி கிராமத்தில் திண்டுக்கல் பிரிவு அலுவலகக் கட்டடம் கட்டப்படவுள்ளது.

**3. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்**

பழைய மட்டடோர் வேனை மாற்றி புதிய டெம்போ டிராவலர் வாங்குவதற்கும், விண்ணப்பப் படிவம் மற்றும் விடைத்தாட்களை ஸ்கேனிங் செய்வதற்காக ஆப்டிகல் மார்க் ரீடர் ஒன்று வாங்குவதற்கும், ஆப்டிகல் மார்க் ரீடருக்கான மென்பொருள் வாங்குவதற்கும், பழைய கணினிப் பொறிகள் புதுப்பித்தல் மற்றும் லேன் வசதிக்கான தற்பொழுது நடைமுறையில் உள்ள புதிய 10 எண்ணிக்கை கணினிப் பொறிகள் வாங்குவதற்கும், புதிய லைன் மற்றும் உயர் நிலை லேசர் பிரின்டர் வாங்குவதற்கும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**4. அண்ணா மேலாண்மை நிறுவனம்**

கணினி வழி காட்சி விளக்கத்திற்கென (Power Point Presentation) வகுப்பறைக்கும், உள் அரங்கத்திற்கும் கணினிகள் வாங்குதல், கணிப்பொறி சர்வர் வாங்குதல், மின் நகல் பெருக்கி இரண்டு எண்ணிக்கை வாங்குதல், நூலகத்திற்குப் புத்தகங்கள் வாங்குதல், காஞ்சி விடுதி வளாக அறைகளுக்கு மெத்தை மற்றும் தலையணைகள் வாங்குதல், அண்ணா மேலாண்மை நிலையத்தில் கணினி வழிக் கலந்துரையாடல் வசதி ஏற்படுத்துதல்.

**5. 'அ' மற்றும் 'ஆ' தொகுதி அலுவலர்களின் பயிற்சி நிலையம், சென்னை**

காஞ்சிக் கட்டட வளாகத்தில் சிறப்புப் பழுது நீக்கம் செய்தல்.

**6. அரசு அலுவலர் பயிற்சி நிலையம், பவானிசாகர்**

மாநிலப் பிரிவு அலுவலர்கள் தங்கும் விடுதியைச் சுற்றி சுற்றுச் சுவர் கட்டுதல், பெண் பயிற்சியாளர்களுக்கான தங்கும் விடுதியில் கூடுதலாகக் குளியலறைகள் கட்டுதல், உடல் ஊனமுற்ற பயிற்சியாளர்களுக்கு மேற்கத்திய முறையிலான 6 கழிப்பறைகள் அமைத்தல், பயிற்சி நிலைய மனையியல் பகுதியைச் சுற்றிக் குறுக்குக் கம்பி வேலி அமைத்தல், பயிற்சி நிலையத் தங்கும் விடுதிக் குறுக்குக் உள்ள கதவுகள், சன்னல்களைச் சிறப்புப் பழுது பார்த்தல் மற்றும் புதிய விடுதிக் கட்டடத்திற்கு வெள்ளை அடித்தல், வண்ணப் பூச்சுப்



2007 ஏப்ரல் 2]

பூசுதல் மற்றும் வண்ணம் அடித்தல், புதிய நிகரி ஒன்று வாங்குதல், பயிற்சியாளர்களுக்குப் புதிய கை நாற்காலிகள் வாங்குதல், உணவகப் பயன்பாட்டிற்காகக் குளிர்பதனப் பெட்டி ஒன்று வாங்குதல்.

**7. அனைத்திந்தியக் குடிமைப் பணிகள் தேர்வுப் பயிற்சி மையம், அண்ணா நகர், சென்னை**

வகுப்பறைகளுக்குப் புதிய நாற்காலிகள், விரிவுரையாளர்களுக்கான நாற்காலிகள் மற்றும் உணவறைக்கு மேசைகள் மற்றும் நாற்காலிகள் வாங்குதல், நகலெடுக்கும் இயந்திரம், இன்வெர்ட்டர், HP லேசர் பிரின்டர், ஸ்கேனர், பிரின்டர் மற்றும் நிகரி வாங்குதல், தேர்வுப் பயிற்சி மையத்தின் வகுப்பறைக்கு ஒரு காற்றுப்பதனப் பெட்டியும் (சன்னல்), கணினி அறைக்கென ஒரு காற்றுப்பதனப் பெட்டியும் (ஸ்பிளிட்) மற்றும் வகுப்பறைகளுக்கு மின் விசிறிகள், புறம்போக்கி மின் விசிறிகள் ஆகியவையும், நூலகத்திற்கென இரும்பு அடுக்குகள், அலமாரிகள் மற்றும் மின் விசிறிகள், புறம்போக்கி மின் விசிறிகள் ஆகியவையும் வாங்குதல்.

தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
2275763
சென்னை-600 008

அரசு மைய அச்சகம், சென்னை — 600 079.